2

உ

ஸ்ரீ காமாக்ஷியம்மன் துணை.

சேக்கிழார் சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய
பெரியபுராணத்துள் கூறிய
63 நாயன்மார்களுள் ஒருவராகிய

# சிறுத்தொண்ட நாயனார் நாடகம்.

இஃது
சரித்திர உண்மையாக
அநேக புராணங்களை உபமானமாகப் புகுத்தி
தற்கால நாகரீகத்திற்கிணங்க பலவித ராகங்களுடைய,
திருப்புகழ், காவடிச்சிந்து, இந்துஸ்தானி முதலிய
பலவர்ணமெட்டுகளால்
செங்ககிரி அருகம் மாஜி மிட்டாதார்
மகா-ள-ள-ஸ்ரீ
வெங்கிடாஜலம் பிள்ளை அவர்கள் புத்திரராகிய
அரியலூர்

**இராமசாமி பிள்ளையால் இயற்றப்பட்டு**

பிர்மஸ்ரீ R. நரஸிம்மய்யங்கார் அவர்களால்
பார்வையிடப்பட்டு,

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 APR 1927
MADRAS

930
894

கும்பகோணம்,
ஆரியன் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.
முதற்பதிப்பு. 1000 காப்பிகள்.

இதன் விலை ரூ. 1-4-0]

[Copy Right Registered

1927

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

---

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இந்தச் "எருத்தொண்ட நாயனார் சரித்திரத்தின்" உண்மையறிந்து இதுவரை எவரும் வெளியிடாததால் நான் பல சாஸ்திர ஆராய்ச்சிசெய்து தற்கால நாகரீகத்திற்கிணங்க பல புராணங்களை உபமானமாகப்புகட்டி சாஸ்திரத்திற்கிணங்க, சமயோசிதமான கற்பனைகள் வரைந்து பல ராகங்களாலும், அநேக வர்ணமெட்டுகளாலும், என்னால் அமைத்து வெளியிட்டிருக்கும் இப்புஸ்தகத்தை என்னையன்றி எவரும் அச்சிடக்கூடாதென்று ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறபடியால் என்னால் அச்சிடப்பட்டு விற்பனைசெய்யப் படும் புஸ்தகங்கள் முன்னும் பின்னும் என் சுகஸ்த லிகிதமிருப்பதன்றி வேறு புஸ்தகத்தை என் கையெழுத்தன்றி விற்பவர்களையும் இந்த புஸ்தகத்திலுள்ள பாட்டுகளை தனியேயாவது சேர்த்தாவது அச்சிட்டு விற்பவர்களையும் சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமென்று பிரசித்தம் தெரிவிக்கலானேன்.

இப்படிக்கு,

வெ. ராமஸ்வாமி பிள்ளை,

அரியலூர்.

---

இப்புத்தகம் தேவையுள்ளவர்கள் அடியிற்கண்ட விலாசத்தார்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.—

மகா-ள-ள-ஸ்ரீ வ அள. வ. ராமசாமி செட்டியாரவர்கள் கடை
பெரியதெரு, கும்பகோணம்.

,, அரு ரும வெ சோமசுந்திரம் செட்டியாரவர்கள் கடை
உடையார்பாளையம்.

,, வெள்ளமுத்து உடையாரவர்கள்,
கண்ணனூர் கிராமம், லால்குடி தாலூகா.

,, திருவெங்கிட சேராரவர்கள்,
அக்கியூர் கிராமம், பெரம்பலூர் தாலூகா.

அடியில் கையொப்பமிட்ட நம்மிடமும் பெற்றுக்கொள்ளலாம்:—

வெ. ராமஸாமி பிள்ளை,

அரியலூர்.

---

குறிப்பு:—இப்புத்தகம் 1-முதல் 96-வது பக்கம்வரை லார்டு ரிப்பன் பிரசிலும், 97-முதல் கடைசிவரை ஆரியன் பிரசிலும் பதிப்பிக்க கொடுக்கப்பெற்றிருந்ததால் 97-வது பக்கத்தில் இதுமுதல் ஆரியன் பிரசில் பதிப்பிக்கப்பட்டது என்றும், லார்டு ரிப்பன் பிரஸ் தாம்செய்த ஒப்பந்தப்படி நடக்கத்தவறியதால் ஆரியன் பிரஸ் மூலமாய் முடிவுபெற்றதால் தலைப்பு பக்கம் எழுதியுள்ளது பிரஸ் தாமதத்தால் வெளிவர திவக்கப்பட்டதை அன்பர்கள் மன்னிக்கக்கோருகிறது. வெ. ரா.

# முன்னுரை.

OFFICE OF THE ... 25 APR 1927 ... MADRAS

ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகமா[illegible] சுடரொளியாய் எங்கும் தானாகி தன்மயமாய் விளங்கும் சோதியில் தோன்றிய பிரதிபிம்ப ஒளியில் பல அண்டங்களும் அவ்வண்டங்களில் ஆகாயமும், அவ்வாகாயத்தில்தோன்றிய காற்றும், காற்றில் தோன்றிய நெருப்பும், நெருப்பில்தோன்றிய நீரும், நீரில்தோன்றிய மண்ணும், பஞ்சபூதங்களாய் அண்டத்திலுள்ள சராசர பல்லுயிர் அனைத்தும் தோன்றிய சாத்வீகம், இராஜசம், தாமதமாகிய முக்குணத்தில் சாத்வீகம் இராஜசம் இதில் பிறந்தவர்கள் தேவர்களாயும், ஞானிகளாயும், தாமதகுணத்தில் விட்சேப ஆவரணசக்தியிடத்து தோன்றிய புல்லாதி நரர் வரை பிறந்த ஜன்மங்களில் நான்கறிவோடு பகுத்தறிவையும் படைத்த இந்த மானிடயாக்கையில் கூன், குருடு, செவிடு, ஊமை முதலிய அங்கவீனங்களின்றி பெண் ஜன்மம் நீக்கி ஆண்மைகுணம்வாய்ந்த மனிதன் பொறிவாகிய ஆறாவது அறிவைபடைந்து அறம், பொருள், இன்பம் அனுபவித்து அதினின்றுநீங்கி மோக்ஷவீட்டை அடைபவனாதலால் ஒவ்வொரு ஜன்மங்களாய் புல்லாய், பூண்டாய், மரமாய், பறவையாய், விலங்காய், பாம்பாய், கல்லாய் எத்தனையோ கோடி ஜன்மங்களாய் பிறந்து பிறந்து, இறந்து இறந்து, அனந்தங்கோடி புண்ணிய பரிபாகத்தினால் மானிட தேகம் கிடைத்து பகுத்தறிவுண்டாக்கிப் பரணடிசேரவேண்டி தவஞ்செய்து கர்ப்பத்தில்உதிராக்கினியால் வெந்து ஜலத்தால் மூழ்கி பிரசவக்காற்றால் தள்ளப்பட்டு யோனித்துவார ஆலையில்நெருக்குண்ட ஒவ்வொரு ஜன்மாவும்தான் வந்ததைமறந்து கஷ்டப்பட்டு பின்னால் ஒருமானிடப்பிறவி கிடைத்தது எத்தனையோ ஜன்மம் செய்த தவப்பலன்கள்சேர்ந்து கடலின் ஆழத்தில் படுத்திருந்த ஆமையானது தன்மூச்சைவிடவெளியே தன் தலையைநீட்டி வரும்போது கடலின் அலையிலகப்பட்டு நில்லாது ஓடி மறைந்துவருகிற நுகத்தடியிலுள்ள துவாரத்தில் ஆமையின் தலை நுழைவது எப்படிஅருமையோ அத்தகைப்போல் இப்போது நமக்குக்கிடைத்தது மானிட ஜென்மமென்றும் இது தப்பினால் எப்பிறவி கிடைக்குமோவென்றும் மெய்ஞானிகள் புலம்பியிருக்கிறதை கவனித்து, கிடைத்த இந்த மானிடயாக்கையில் அறம், பொருள், இன்பம், வீடு என்கிற சாதனங்கள் அடைய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படியிலேறி சாலோக

சாமீப, சாரூப, சாயுச்சியம் என்னும் பதமடையவேணும் அப்படிக்கில்லாமல் இந்தப்பூமியே நிலையானதென்றும், மண், பெண், பொன் என்ற மூவாசைகளில் சிக்கி, மாதர் போகமே சாயுச்சியமெனநினைத்து, அநேகவியாதிகளால் பிடிக்கப்பட்டு, அருமையாய் அநேக ஜன்மம் தவம்செய்துப்பெற்ற இந்த தேகத்தை நாய், நரி, பருந்து, காக்கை, மண், நெருப்பு இவைகளுக்கிரையாக்காமல் புகழுடம்புபெற்று, என்னும் அழியா சாயுச்சியம்பெற காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்ற பழமொழிப்படி இத்தேகம் அழியாதபோதே அறம்செய்து பொருள்தேடி இன்பத்தைச் சுகித்து மோக்ஷவீடடையவேண்டும். ஆனால் அறம் என்னவென்று கவனிக்குமளவில் தருமம் என்று பெயர் (நமது ஔவைபிராட்டியாரவர்களும் ஆத்திச்சூடியில்) அறம்செய விரும்பு எனப்புகட்டியிருக்கிறார்கள். ஆனால் அறம் என்பது இல்லறம் துறவறம் என இருவகைப்படும் இதில் எந்த அறத்தைச்செய்து முக்திபெறலாமென யோசிக்கில் நூலாராய்ச்சியாலும் யுக்தியாலும் அனுபவத்தாலும் கவனித்து செய்யவேண்டிய தவசியம். நூலாராய்ச்சியால் துறவறவாசிகள் துறவறம் மேலானதென்றும், இல்லறவாசிகள் இல்லறம்மேலானதென்றும் சொல்வதில் ஔவைப்பிராட்டியாரவர்கள் (இல்லறமல்லது நல்லறமன்று) என்று கூறியுளர்; துறவறஞானத்தைக்கூறும் கைவல்யம் வாசிட்டம் முதலிய நூல்களிலும் தெய்வப்புலமை வள்ளுவர்கூறிய திருக்குறளிலும் துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் துணை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் சுருதிப்பிரமாணம் அறத்தில் இல்லறம் கொள்ளவேண்டுமென்று தெரிகிறது. 2-வது யுக்தியால் விசாரிக்கவேண்டிய தவசியம்.

கடவுள் இயற்கையாயமைத்த பல்லுயிர்களைத்தான் ஆண் பெண்என இருவகையான உற்பத்தியுண்டாயிருக்கிறது இதனாலே கடவுள் நியமனம் ஆண் பெண் என்றவர்கள்கூடி இல்லறம் நடத்தி உலகவிருத்தி உண்டாக்கி பதம்பெற உற்பத்திசெய்திருக்கிறானென யூகிக்கவேண்டியிருப்பதோடு துறவறவாசிகள் நடத்தும் அறத்தில் தவறுவார்களேயாகில் பிராய்ச்சித்தம் ஒன்றின்றி கீழ்கடை ஜென்மங்களில் கொண்டுபோய் சேர்த்துவிடும் அப்படி அவர்களை போகாமல் தடுக்க எவ்விதமான புண்ணியமாவதுசெய்ய அவர்களுக்கு சந்ததியுமில்லை. இல்லறவாசிகள் தங்கள் அறத்தில் தவறிநடந்தால்

அவர்களைத்தகித்து ரட்சித்து மேல்போகச் செய்யக்கூடாமற் போனபோதிலும் கீழ்ஜென்மங்களில் சேரவொட்டாமல் அவர்களாலும் அவர்களுடைய சந்ததிகளாலும் அவர்களுக்காகச்செய்த தானதருமங்கள் காத்து தடுத்து கீழ்ஜென்மங்களில் போகாமல் அடுத்தப் பிறவியும் பானிடப்பிறவியாகப்பிறந்து விட்டகுறையிலிருந்து பக்தியுடன் தானதருமஞ்செய்து முத்தியடையச்செய்யும் என்று சுருதியை ஒட்டி யுக்தியும் தோன்றும் இதனால் சுருதி யுக்தி பிரமாணங்களால் இல்லறம் நடத்தி முக்தியடைவதே மேலானதென்று தோன்றும் ஆனால் கைவல்யக்காரர்கள் சொல்லியிருக்கிறபடி நூதனவிவேகியுள்ளம் நுழையாது நுழையுமாகில் பூகஜென்மங்கள்கோடி புனிதனும் என்று கூறியிருக்கிறது. ஆதலால் மானிடயாக்கை எடுத்த ஒவ்வொருவரும் பூர்வம் அவனவன்செய்த கர்மாவுக்குத்தக்கபடி எந்த குலத்தில் பிறந்தானோ அந்தந்த குலத்தொழிலைவிடாமற்செய்து இல்லறம் நடத்தி ப்ராரத்வத்தை அநுபவித்து கடவுளடி சேரவேண்டியது அவசியமெனத்தெரிகிறது. ஆனால் அநுபவத்தால் முக்தியடைந்தவர்களைக்கவனிக்கவேண்டிய அவசியம் அப்படிப்பார்க்குமளவில் எத்தனையோ பேர்கள் இல்லறம் நடத்தி முக்திபெற்றிருக்கிறார்கள் அவைகளில் ஔவைப்பிராட்டியாரருளிச்செய்த ஐயமிட்டுண் என்கிற வாக்கியத்தைக்கைகொண்டசிறுத்தொண்டநாயனார் சரித்திரத்தை இங்கனம்சொல்லப்புகுந்தோம். இச்சிறுத்தொண்ட நாயனார் சரித்திரத்தை பெரிய புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் காவியமாகவும், தஞ்சை ஸ்ரீனிவாசம்பிள்ளை தமிழ் வரலாறு கூறியதில் வசனமாகவும் ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் எழுதிய பல்லவ சரித்திரத்திலும் அவரவர்கள் தாங்கள்கொண்ட கருத்திற்கு வேண்டியமட்டில் எழுதியிருக்கிறார்களே தவிர எவர்களும் கதையின் சுருக்கத்தை ஆதியோடந்தமாக எழுதி வெளியிடவில்லை ஆனால் இதற்கு முன் நாடகரூபமாக எழுதிய நாவலர்கள் கதையின் ஆதியந்தம் சொல்லியிருக்கிறார்கள் அவைகளை நான் ஆராய்ச்சிசெய்தமட்டில் பெரும் பிழையும் மெத்த தவறுதலாகவிருக்கிறது. அதாவது காஞ்சியை அரசாண்ட 'காடவர்கோன்' என்ற பெயருடைய அரசனிடம் பரஞ்சோதியின் புத்திரன் சிறுத்தொண்டன் என்பவர் மந்திரியாயிருந்ததாயும் ராஜன் தேசத்தை மந்திரியிடம் ஒப்புவித்து காசிக்குச்சென்றதாயும் ராஜன் திரும்பிவந்து தேசத்தை

ஒப்புக்கொண்டபோது பொக்கிஷத்தில் ஏராளதிரவியமிருந்ததாயும் அதைக்கண்ணுற்ற அரசன் மந்திரியை வினவ அவை ஈஸ்வர கடாக்ஷத்தால் உண்டானதென்றுரைக்க அரசன் மந்திரியிடம் முனிவுற்று குடிகளை விசாரிக்க குடிகள் மாதம் மும்மாரி பொழிந்ததால் விளைபொருளில் ஆறிலொரு கடமையால் பொக்கிஷம் நிறைந்ததென்றுரைத்ததாயும் அந்தப்பொருளைக்கொண்டு தர்மம்செய்ய உத்திரவுகொடுத்ததாயும் அதைச் சிறுத்தொண்டர் திருச்செங்காட்டாங்குடியில் அன்னதானம் செய்ததாயும் அதைச் சோதிக்க வைரவராய கடவுள் ப்ராப்தமானபோது பள்ளியிலிருந்த பிள்ளை சொற்பனம் கண்டதுபோலவும் இன்னும் முன்னுக்குப் பின்னும் முந்தினசாஸ்திர புராணத்திற்கும் முரண்படும்படி எழுதிய நூலை உலகத்தார் பின்பற்றி நடக்கிவரும் அன்னதான புண்ணியவான்களுக்கும் அடியார்களின் மேல்பக்தியுள்ள பரமனடியார்களுக்கும் லோகோபகாரமாய் ஷ்டி சரித்திர உண்மையை வெளியிடக்கருதி மேற்சொல்லிய மூவர்கள் சொல்லியதை ஒன்றாயுணர்ந்து சிறுத்தொண்டரெனக் கொண்டாடும் பரஞ்சோதியார் வாதாபிநகருக்குப் புலிகேசிமேல் படைபெடுத்துப்போனவரைக் காணோமென்று காஞ்சிபதி விசாரணையிலிருந்து முடிவுவரை சாஸ்த்திரயுக்தமாயும் காலங்களைக்கண்டுபிடித்தும் தற்கால நாகரீகத்திற்கிணங்க முன்னுக்குப்பின் விரோதமின்றி உலகத்தார்கள் ஒப்பும் சில கற்பனைகளைச்சேர்த்து இதிகாச புராணங்களை உபமானங்களாகப்புகட்டி செந்தமிழ் வெள்ளைத்தமிழ்கூடிய பிள்ளைக் கவியாக நாடகரூபமாய் சிறுவர்கள் சிறுமியர்கள்முதல் யாவருக்கும் விளங்கும்படியாய் அநேக வர்ணமெட்டுகளுடன் மனோரஞ்சிதமாய் காண எழுதத்துணிந்தேன். சற்றறிந்தோர்கள் குற்றத்தை விலக்கிக்குணத்தைக் கிரகிப்பார்களென்னும் துணிவால் வெளியிடப்புகுந்தேன் சிற்றறிவுடைய அடியேன் கற்றவர்கள் பாதமலரைப்போற்றி ரக்தாக்ஷி ௵ மீனமாசம் 17௳ சோமவாரம் அரங்கேற்றி மண்டிலம் புகழ்ந்து பாவ வெளியிட்டேன்.

பெரியோர்கள் அடிமலரைப் பூசிக்கும் தொண்டன்,

வெ. இராமஸாமி

அரியலூர் வாசியான தமிழ்வித்வான் வெ. இராமசாமிபிள்ளை அவர்கள் இயற்றிய சிறுத்தொண்டநாயனார் நாடகம் என்றநாமம் புனைந்த ஓர் புத்தகம் என் பார்வைக்கு வந்தது நான் அந்நூலை ஆதியோடந்தமாய் முழுவதும் வாசித்துப்பார்த்தேன் வாசித்த வரை எனக்கு முற்றும் திருப்திகரமாயிருக்கிறது. கிரந்தத்தை வாசிக்குந்தோறும் ஆஸ்திக ஜனங்களுக்கு தெய்வபக்தியும் சிரத்தையும் மென்மேலும் அதிகரித்துவருமென்பதற்கு சந்தேகம் சிறிதுமில்லை. கல்வித்தேர்ச்சிமிகுதியுமில்லாத மக்கள்கூட எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய சுலபமான நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மேலும் சரித்திர சாஸ்திர ஆராய்ச்சிமிகுதியும் அடங்கியுள்ள இச்சிறு புஸ்தகம் தமிழ்மக்களுக்கு அளவிலா இன்பத்தைக்கொடுத்துவருமென்று நான் நம்புகிறேன்.

அரியலூர் }
4-4-26 }

T. S. வைத்தினாதய்யர்,
வக்கீல்.

அரியலூர் வெ. இராமசாமி பிள்ளை அவர்கள் மிகுதியான சரித்திர சாஸ்திர ஆராய்ச்சியை உருட்டி திரட்டி ஏற்படுத்தியிருக்கும் இவ்வருமையான சிறுத்தொண்டநாயனார் நாடகம் என்னும் நூல் யாவராலும் புகழ்ந்து நன்குமதிக்கக்கூடியதென்று நான் நற்சாக்ஷி கூறுகிறேன்.

அரியலூர், }
5-4-26. }

S. பாலகிருஷ்ணம் பிள்ளை,
உடையார்பாளையம் தாலூகாபோர்டு பிரசிடெண்டு.

அரியலூர் எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயரும் ஹார்மோனியம் உபாத்தியாயருமான மகா-ா-ஸ்ரீ N. கிருஷ்ணஸாமி அய்யங்காரவர்களியற்றிய சாற்றுக்கவி.

---

நிலவுலகில் நின்மலன்றன் னடியாரில் பரஞ்சோதி
நிகரிலாச் சரிதைதன்னை
பலர்புகழும்படி பலநூலாராட்சிசெய்து
பலபலராக தாளங்களாலும்
குலவுவதா யமைத்தளித்தான் கொடையாளன் வெங்கடா
சலவள்ளல் பெற்றபாலன்
மலர்தலைமா நிலம்புகழு மாண்புளான் ராமசாமி
மகிபன் திருவாளனன்னே.

பெரம்பலூர் தாலூகா அத்தியூர் மகா-ள-ஸ்ரீ நாலுகவி ஜோஸியம் ஸ்ரீரங்காச்சாரியவர்களாலியற்றிய சாற்றுக்கவி.

---

சீருலகில் சிறுத்தொண்டர் பான்மியற்றின் றாயதனை
    தேசதநீதார்கள்
தாருலகில் நாடகமாய் பாடுவதற்காமெனவே
    தானுமோர்ந்து
யாருமிந்தக் கண்டுமுப் பழக்கேதனென
    வனைந்தனர்காணரியலூர்வாழ்
நாரிலகும் திருவுடையோன் முத்தமிழ் ராமசாமிப்பெருமை
    நவில்வர் மாதோ.

உடையார்பாளையம் போர்டு மிடில் ஸ்கூல் தமிழ் பண்டிட் தஞ்சை ஜில்லா உபத்தூர் மகா-ள-ஸ்ரீ து. கோதண்டபாணி மூவனாயர் அவர்களாலியற்றிய சாற்றுக்கவி

---

சீராரும் நிலவுலகோர் செழுமறையென்றேத்த
    சேக்கிழாரெனும் பெரியோர்
பேராரும் கவிவாணர் பயன்பெறவே யருக்கவியாய்
    பெரியபுராணம் செய்தார்
காராரும் தமிழ்க்கொடையோன் ராமசாமிட்பெயரோன்
    நாடகமாய்க் கருணைகூர்ந்து
தேராரும் கற்றோரும் மற்றோரும் தெரியச்சொல்லிச்
    சிறப்பித்தானே.

---

நீராரும் கடலிலே வரைநாட்டித் தேவர்க்கமுதம்
    நிரைத்தோன்போல
தாராரும் திருத்தொண்டர்தொகையிற் சிறுத்தொண்டர்
    சரித்திரமே தக்கதென்று
ஏராரு மிதிகாச புராணமதிலிருங்கதையை வெகுவாக
    விசையச்செய்து
பாராரு மாந்தரெல்லாம் பயன்பெறவே நாடகமாய்ப்
    பகர்ந்திட்டானே.

---

உ. தா. அழகாபுரம் பிரம்மஸ்ரீ தா. ராமஸ்வாமி அய்யங்காரவர்கள் குமாரர் ஜோஸ்யமும், தமிழ்ப்புலமை வித்வசிரேஷ்டருமான பிரம்மஸ்ரீ நரசிம்மையங்காரவர்க ளியற்றிய சாற்றுக்கவி.

---

சீரிலகு பாணருளடைந்த பக்தர்செய்கை நவிலாகமத்தின்
சிருக்கெல்லாம்
தாரிலகு சிறுத்தொண்டர்சரிதை யிந்தத்தரணியி லனேக
மாகத் தழைத்திருந்தும்
நீரிலகுச் சுருதிமுறையுக்தமாக நிர்மலராமாயணத்தின்
நேர்மைபோலும்
பாரிலகுப் பலநூலின்பயிற்சியாலும் பக்திநேர்தி
வைராக்கிய யுறுதிகொண்டே. 1

அதிகவள மரியலூர் மேவிவாழு மக்கினிகுல வம்சத்தி
லறிஞனை
நிதியிருக்கும் ராமசாமிநாவால் நிகழ்த்து மிச்சரிதைதனை
நேர்த்தியாக
துதியிருங் கவிஞருரைதைக் களித்துநோக்க தூயதாய்
விருத்தமுடன் தருவதுமேன
பதிமிகு மாந்தரெல்லா மதிசயிக்கப் பண்ணினன்
இவத்தை மனமெண்ணினனே 2

பார்மலிந்த பாற்கடலை கடைந்தெடுத்த நவநீத
பான்மையென்ன
ஏர்மலிந்த நூற்கடலைகடைந்து சிறுத்தொண்ட
நாடகமெனப் பேர்ந்தனனை
சீர்மலிந்த வரியலூர்தன்னில்வாழ் ராமசாமியென் பேரோன்
சிரஞ்சீவியாக
பேர்மலிந்த யிச்சரிதையுடனவனுஞ் சிவனருள்
பெற்று வாழ்கமாதோ 3



---

அரியலூர் எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ா-ா ஸ்ரீ ரேங்கசாமிப்பிள்ளையவர்களாலியற்றிய சாற்றுக்கவிகள்.

விருத்தம்.

திருமலியரியபுரிதனில் ராமசாமியாந்திருப்பெயராளன்
அருமைபெறு பெருமையணிச் சிறுத்தொண்டர் அருங்கதையை நாடகமாய்
பெருகிய காண்டமாறதாய்வகுத்து பிடுறு கருவிருத்தங்களாய்
நெறியதாயலங்கரித்தனன் புவியில்நீள்புகழ் மன்னுகமாதோ.

சாற்றுத்தரு. இராகம்-கல்யாணி, தாளம்-சாப்பு

பல்லவி

அரியலூர் ராமசாமிபிள்ளை அமைத்தச் சிறுத்தொண்டர்நாடகம்
அருமையிலு மிகப்பெருமையே

அநுபல்லவி

சரித்திரத்தின் உண்மையும் சாஸ்திரத்தின் தன்மையும்
பொருத்தத்தின் வண்மையும் புரிந்ததின் நன்மையும் [அ]

சரணங்கள்

செங்ககிரி மிட்டாதார்மரபில் ஜெனித்த வன்னிகுலத்தில்சிறந்து
வெங்கிடாஜலம்பிள்ளை தவமே மேவிபுலரு காணப்பிறந்து
தங்கிவா ழரியலூரிலிருந்து சாஸ்திரம் பலகற்றுணர்ந்து
பொங்குஞ் சிவனருளோடறந்த புண்ணியத்தின் பலனைத்தெரிந்து

பாயிரம் காஞ்சிமகிழ்ச்சி பக்திகைலை முக்தியென
பகர்ந்தாராறு காண்டங்களாய் பாரில் மகிழடைவதற்கே
நேயரிதைப் பாடினது நிர்மல னருளேயென
நினைத்துத்தந்தேன் சாற்றுக்கவி நிலத்தில் புகழடைவதற்கே அ

பெரியபுராண மாதாரமாக போற்றிகொண்டாடி நோக்கி
அரியபல புராணங்களை அதற்குமேற்கோளாய் தாக்கி
விருத்தங்கள் பல்லவிகள் விரும்பும் வர்ணங்களாக்கி
கருத்தாய் படிப்போர்மனம் கசிந்துருக பொருள்தேக்கி அ

அங்காங்கு நாடகங்கள் அமைத்ததைப் பார்த்தேன்நானும்
சங்கீத வர்ணமெட்டுகளால் சமைந்தது உலகுகாணும
தங்கும் பரமபக்தி சார்ந்திட இதுவேதோணும்
ரெங்கஸாமிதாஸன் சொன்னேனிது நீடூழி வாழவேணும் அ

அரியலூர், 14-10-25 (ஒ) K. ரெங்கஸாமி பிள்ளை,
உபாத்தியாயன்,
E. B. School.

ஓம்

நமசிவாயநம :



## விநாயகர் காப்பு.

### அறுசீர் நெடிலாசிரிய விருத்தம்

சீருலவும் காஞ்சிபதி நரசிம்ம வர்மனிடசேனைகோன்
பரஞ்ஜோதிராயர்
பேருலகில் வாதாபிநகர் புலிகேசிமேல் படையெடுத்து
வென்ற பெரும்பொருளைக்கொண்டு
பாருலவும் சிறுத்தொண்டராய் செங்காட்டாங்குடியில்செய்
யன்னதானம்பரீக்ஷித்த பரமனார்க்கு
காருலகில் தன்மகனைக் கறிபடைத்துங்கதை நாடகமாய்ப்
புகழ கணபதிகாப்புத்தானே.

## வழிபடு கடவுள் வணக்கம்

ஆனைமுகனை யாறுமுகனை யைமுகனெடுமால் நான்முகனையமரர்கள் [தேவி
தேனைநுகர் வண்டுமொய்குழல்திகம்பரியும் திருமங்கைவாணியை
வானமுகத் தவர்களையும் மாதவ ரானவரை வணங்கிபல்லவ [யும்
சேனைகோன் பரஞ்ஜோதி பதமடைந்த செயலதை முத்தமிழால் [செப்புவோமே

## சுப்பிரமணியர் துதி

ஆரியமறை யாகமத்திற்கெட்டா ஞானதர சடாக்ஷரப் பொருளாகி
திருமாலின் மருகனாய் சிவசுப்பிரமணியனாயித் தொல்லுலகில்
ஆரியலூர் பெரியசடைத் தெருவமர்ந் தரசுபுரியும் ஆதியேயுனைச்
சிரம்வணங்கி கரங்குவித்துசேவித்து சிறுத்தொண்டர் கதையை [நாடகமாய்ச் சொல்லுவேனே.

## மகாவிஷ்ணு துதி

திருத்துழாயணிந்த மெய்யன் ஸ்ரீதேவிதனைமணந்த துய்யன்
கருங்கல்லாய்க்கிடந்த பெண்ணைக் காலடிவைத்துக் காத்தோன்
உருப்பிலேபத்தவதாரம் செய்து உலகத்தைரட்சிக்க வந்தோன்
அருப்பரன்தனை துதித் தறைந்திட்டேன் பரஞ்சோதிகாதை
[நாடகமாய் வரைந்திட்டேனே.

## கலைமகள் துதி

அண்டகோளம் துதிக்கநல் லக்ஷரப்பொருளுமாகி
கண்டமறை ஆகமபுராணத்திற் கலைமகள் நீயாதாரமாகி
கொண்டமுறையை யானிங்கொப்பியே தொழுதேன் தாயே
பண்டிதபரஞ்சோதி சரிதைபகரவே வருவாய்நீயே

## சப்தகன்னி துதி

பாரதனில் பெரியதுரை பட்டந்தாங்கிவீர
போர்தனில் தேசிங்குராஜனுக்கு புயவலிமையானசோழ
மாராம்விஜய ஒப்பிலாமழுவாரயர் குலதேவியான
தாரணி சப்தகன்னி ஒப்பில்லா தயாபரியைவணங்குவோமே.

## ஏற்புடைக்கடவுள் வணக்கம்

அண்டபிண்ட சராசரங்களுக்காதியாய் மூலஜோதியாய்
விண்டபிரதி பிம்பவெளியிலே மாயையொளியிலே
கண்டயிச்சைக் காமக்கடலிலே பாலைத்தடலிலே
உண்டசுகங் கனவெனவிடுத்தேனே பரஞ்சோதிகதை
[சொல்ல அடுத்தேனே.

ஆதியந்தமிலா அநாதியாகி அண்டபகிரண்டத்திற் கப்பாலாகி
சோதியாய்நின்ற ஓர்பொருளின் பிரதிபிம்பத் தோற்றத்தின்வெளி
[யுமாகி
மேதினியெனுமிந்த மாயப்பிரபஞ்சத்தை மெய்யென்று வீணடை
[ந்தோர்
பார்திமதியணிந்த் பாமனருளைப்பெற பாடுவேன்சிறுத்தொண்ட
[ரைக் கொண்டாடுவேனே.

இல்லறமல்லது நல்லறமல்லென இயம்பியவார்த்தையைக்கொண்டு
பல்லுயிரனைத்தும் ஆண்பெண்ணென்று வந்தவோர்பரிவதைக்
[கண்டு

தொல்லுலகதனில் மானிடயாக்கைவருவதே யரியதாமென்று
நல்லறஞானிசிறுத்தொண்டர்கதையை நாடகமாய்நவிலுவேனே.

மும்மலம்தாண்டி முப்பாலுக்கப்பாலே மொழிதரும்தேனை
தம்மையறிவோர்க்குத் தானாகிதானும்தன்னருளும்தனிப்பொரு
[ளாகி
இம்மையிலயன்மால் சிவமெனவேகமாகி எங்குமாய்நிறைந்து
நம்மைக்காப்போனைநாடுவேன் சிறுத்தொண்டர்கதையைப் பாடு
[வேனே

எண்ணரியபிறவியில் மானிடப்பிறவி எதிலுமரிதென இயம்பி
[னர்மேலோர்
தண்ணரிய அறம்பொருளின்பம் வீட்டைச்சாதிக்கவேண்டுமென்
[றார்சான்றோர்
மண்ணரிய அறம்வளர்த்துப் பதமடைந்தச் சிறுத்தொண்டர்மான்
[மியம்சொல்லி
விண்ணறியசெஞ்சடையோன் மலர்பதம்போற்ற வேண்டிட்டேன்
[ஆண்டிட்டேனே.

ஒளிவந்தாலிருளகலுமென் றெடுத்தோதினார் பெரியோர்ஞான
தெளிவந்தால்மாயையகலுமெனத் தேற்றியவிவரங்கொண்டு
களிவந்தவிவ்வுலகில் தவயோகம்கடக்க முடியாதெனநாடி
நலிவந்தவிப்பிறவிகடக்க நாடினேன்பரஞ்சோதி சரிதையைப்
[பாடினேனே.

## ஆக்கியோன் பெயர்

திங்களும்பணியுங் கொன்றைத் திருமுடிதனில்தரித்தோன்
நங்கையாம்வெண் காட்டம்மை நாயகன்பரஞ்சோதிக்கு
பொங்கிய அருள்புரிந்த புனிதமாம் கதையைக்கொண்டு
மங்கையாம்புமையாள் பாகன்மலரடி போற்றத்தானே
கங்கைசூழ் உலகெல்லாம் காருண்யம்கைக்கொண்டு
மங்களமாயன்னதானம் மானிலம் செய்யவேதான்
செங்ககிரிவெங்கிடாஜலம் பிள்ளைசேயனும் ராமசாமி
தங்கிய அரியலூரில் சாற்றினேன் நாடகமாய்போற்றினேனே

## ஆக்கியோன் நோக்கம்

### விருத்தம்

காடவர்குரிசில் கழற்பெருஞ் சிங்கன்தானும்
மாடப்புருவைப்போல் மங்கையருருவரோடு
தேடரிய ஆரூர்சென்று திருக்கோவில்வலம்வர
ஈடரியபுஷ்பமதை எடுத்தகை துணிந்தபோது
தோடுடையசெவி யோன்தோற்றி யாட்கொண்டிருக்க
நாடரியகாடவர் கோனுக்குநற் சிறுத்தொண்டரவரை
கூடியமந்திரியென்ற கொள்கையை யுலகில்மாற்றி
பாடுவேன்சிறுத்தொண்ட ரெனும்பரஞ்சோதி சரிதைதானே

சீர்புகழும்விஜய ஒப்பிலாமழவராயர் செந்நெல்விளைநாடு செழித்தோங்க
பேர்புகழும்சச்சி யுவரெங்கராசு பிரபலமாய்என்றென்றும் பெருத்தோங்க
வார்புகழுமரசு சிலையிட்ட விக்கினேஸ்வரனை வணங்கிபரஞ்சோதிவரிசைகாண
தார்புகழும்ரத்தாக்ஷிவருஷ மீனரவிதேதிபதினேழில் சாற்றினேன்நாடகத்
[தமிழாகவேற்றினேனே.

சிவமயம்

# சிறுத்தொண்ட நாயனார் நாடகம்.

## பாயிரம்.

### கணபதி ஸ்தோத்திரம்

விருத்தம்

சீர்புகழும் காஞ்சிநகர்க்கரசாய் ஜெனித்த நரசிம்மவர்மனுக்குச்
[சேனாதிபதியுமாகி
பேர்புகழும் திருச்செங்காட்டாங்குடியில் பெருமையுடனறம்
[செய்து பேரும்பெற்று
வார்புகழும் செஞ்சடையோன்வந்து பதமளிக்கவரிசைபெற்ற
[பரஞ்சோதிவருதிசொல்ல
பார்புகழும் பார்வதிதன்முகற்பாலன் பங்கயத்தாள்பாடுவோமே
[நாடகமாயாடுவோமே.

ஸ்ரீராகம் அடதாள சாப்பு

பல்லவி

துணைவந்தருள் புரிகுவாய் ஜெயஜெய கணபதி நீர்
தோன்ற என்முன்வருவாய்

அநுபல்லவி

அனைவோரும் ஒப்புக்கொள்ள அன்னதான பலன்விள்ள
இணையில்லா சிறுத்தொண்டர் இனியநாடகம் சொல்ல (து)

சரணங்கள்

அறிவில்லாதநாயேன் உனை தமிழால
முன்ஜென்ம வினைதீய மொழிந்தேனே நானைய
உன்கருணை பெறவைய உருகிசொல்லவந்தேனையா (து)

அஷ்டலட்சுமியும்வரும் உனைத்தொழுவோர்க்கு
அருமைகாரியம் கைபெறும்
இஷ்டசித்தியும்தரும் எண்ணிய பலனுமுறும்
கஷ்டமெல்லாம் பறக்கும் கருணைமிகவே சுரக்கும் (ஐ)

ஐயாக்கவலைகொண்டு உன்னருளைப்பெற
சேயாயிப்பணிபூண்டு
நாயேன்சொன்னேன்பண்டு நாவலருரையுண்டு
நேயாநீர் முன்னின்றென் வாயால் சொன்னதைக்கண்டு (ஐ)

உன்னைநான் மறவேன் உன் திருச்சொல்லை
உறுதியாயிங்கறிவேன்
என்னைநீர் சோதித்தாலும் என் மனம் பேதித்தாலும்
அன்னைபோலிருந்தாளும் ஆதரித்தென்னை நீரும் (ஐ)

## சுப்பிரமணியர் துதி

### விருத்தம்

ஐமுகர்க்கு புத்திரரா யாறுமுகத்தோடுவந்து
அய்யமறத்தந்தைக் குபதேசமாகும்படி செய்தநாதா
பையரவமணிந்தோனருளைப் பற்றிய சிறுத்தொண்டர்கதையை
வையகத்தில் நாடகமாய்ப்புகழவருகுவீர் நின்னருளைத்தருகுவீரே

### இராகம் பார்ஸி-செங்சுருட்டி ரூபகதாளம்

பல்லவி

தொண்டர்கள் கொண்டாடும் சுத்தனே
தோன்றி எனக்குன்னருள் தா கர்த்தனே

அநுபல்லவி

அண்டினோரைக் காக்கும்பாலா ஆறுமுகமானவேலா
தெண்டாயுதபாணியான தேவாதாவகூவநீவா (தொ)

சரணங்கள்

பந்தபாசமதை யறுக்கும் பக்தியோடருள் சுரக்கும்
சொந்தவுன்பதமலரை தேடநாட கூடபாட (தொ)
எண்டிசைபுகழும் சிறு தொண்டர் கதையின் கூறு
விண்டிடவேற்கவாநீ விரைவேதிருவேகுருவேமருவே()

செப்பு மரியனூர்பூமி சேர்ந்துவாழும் ராமசாமி
மெய்ப்பித்துச் சொன்னதமிழ் மிகவே தகவே ஜெகமே புகவே()
மலைமகளொடுக்கட்பெற்ற மந்திரதாளாக்கற்ற
நிலையினுல் சொன்னேனிதை நேர கார பார வசீராய் (தொ)
அன்று தந்தைக்குபதேசம் ஆகும்படி செய்தநேசம்
இன்றெனக்குத் தந்தருள வேணும் காணும் நாணும் பூணும்
சேவல்கொடி பிடித்தது ஐயா க்ஷேமமாயெனைக்கார்க்குமெய்யா
ஆவலுடன்சிறுத்தொண்டர்நாடகம் அறைய புசிய நிறைய தெரிய
என்னைப்போல் பிறந்ததாரு ஏழைமுகம் கண்ணுல்பாரு
அன்னைப்போல் வந்துகாரு ஆதி ஜோதி நீதி ஒதி (தொ)
பாண்டியன் மாண்டுப்பின்னே மீண்டுவந்து சென்மூர்முன்னே
வேண்டியெனைக் கார்க்கெனக்கு வேறு யாரு கூறு நேரு (தொ)
பாடுமடியார்கள்சிந்தை தேடுமதை ஈந்தார்தந்தை
வாடுமென்மனமகிழ வருவாய் குருவாய் கிரையாய் தருவாய்

## சரஸ்வதி ஸ்தோத்திரம்

### விருத்தம்

அருமறை ஆகமபுராண அக்ஷரவித்தியா மூலதாரி
வருமலர் குமுதமீதில் வசித்திடும் அயனின்பாரி
நறுமலர் மாலைசூடி நற்புலவர்க் குபகாரி
சிறுத்தொண்டர் நாடகம்சொல்ல சிந்தித்தே னுன்னைக்கோரி

இராகம்-சங்கராபரணம், தாளம்-ரூபகம்

### பல்லவி

தாயே சரஸ்வதியே நல்வாக்கு
தந்திட நீகெதியே

### அநுபல்லவி

நாயேனோர் சீரறியேன் நாடக இசையறியேன்
சேயேன் பரஞ்சோதிகதை செப்பிட இங்குவந்தேன் (தா)

### சரணங்கள்

மண்ணில் மானிடதேகமே அரிதாமென்று
மறையறையு மநேகமே
கண் ணுங்கருத்தி லுள்ள கர்த்தனை துதிக்கநல்ல
எண்ணமுடன் நான்சொல்ல இசைந்து வந்தேன்மெள்ள

பலவிதமாக பிர்மத்தை பற்றுவதற்கு
கலிகாலந்தி லாகாதத்தை
உலகத்தோடு சேர்ந்து ஒற்றுமையாயிருந்து
நிலம்புகழ கருத்திருந்து நேசஎன் நாவிலிருந்து (கா)
அப்பர் சம்மந்தர்ஏற்ற அடியாரை நான்
இப்புவியோர்கள் போற்ற
செப்பும்புராணப்படி தெரிந்துக்கொண்டதைநாடி
ஒப்பும்சில கற்பனைமூடி உவந்துசொன்னேன் மனம்கூடி

## விஷ்ணு துதி

கல்லங்குரிச்சி கலியப்பெருமாள்பேரில் விருத்தம்

சங்குசக்ராயுதந்தரித்த சர்வலோகரக்ஷகாநீ
மங்காம்படையாச்சி மாதவம்மானிலம் புகழவந்தவா
செங்காட்டாங்குடி சிறுத்தொண்டர்கதைதனைநாடகமாய்நான்
எங்கும்புகழ சொல்லவந்தேன் ஏற்பீர்எனையாண்டு காப்பீரே

இராகம் இந்துஸ்தான்தோடி, தாளம் ரூபகம்
(ராமாநீவா ரவிகுலந்தனில் வந்தசோமா நீவா என்றமெட்டு)

பல்லவி

கார்க்கநீவா கல்லங்குரிச்சிவளர் கலியுகவாதா (கா)

அநுபல்லவி

ஏற்கும் சிறுத்தொண்டர்நாடகம் . இசையுடன் நானபாட (கா)

சரணங்கள்

தூணில்பிரஹ்லாதனுக்காக தோன்றிய துய்யா
துருவனுமையழைக்க துலங்கியமெய்யா
காணவிதுரர்க்கஞ்சி காத்தசெங்கையா
கல்லங்குரிச்சியிலே கம்பமாநின்றய்யா (கா)

பாஞ்சாலிகூவமானம் பற்றியநாதா
பாரதப்போரில்பூமி பாரந்தீர்த்தசூதா
அஞ்சலமார்க்கிங் தயோத்திவந்தநீதா
ஆருமறியக்ம்பமா யமைந்திட்டவேதா (கா)

அகலிகைசாப மகற்றிட்ட உருவே
ஆயர்பாடியிலே வளர்ந்திட்டதிருவே
இகத்திலடியாரை ஏற்கவந்த தருவே
எட்டுரெண்டுமறியாரெனக் கிறங்கிவாகுருவே (கா)

பாரினும்மைப்போல பலிக்குந்தெய்வம்யாரு
பரஞ்சோதிநாடகம் பாடவந்தபாரு
அரியலூர்வாழ்ராமசாமி யறைந்ததைக்காரு
அகிலமென்னும்புகழ கின்னருள்தனைநேரு (௪௫)

## சங்கரர் துதி

### அபசாரக்ஷமை விருத்தம்

பெரியபுராணத்தை வேதமெனப்பெருமையுடன் ஓதிப்போர்க்கிவ் [வுலகில்
அரியதொன்றுமில்லையென அறைந்தனர்பெரியோரதைக்கொண்டு [நான்
சிறியதொண்டர்நாடகம் செப்பியேயுனைப்போற்றிசரணடையவே தான்
உரியதெனநான்கண்டுணர்ந்திட்டேன் நாடகமாய்ப்போற்றிவரைந் [திட்டேனே

### இராகம் சாவேரி அடதாள சாப்பு

பல்லவி

அய்யரே சங்கரரே என்சொல்
அபசாரமுபசாரமாக்கிக்கொள்வீரே

அநுபல்லவி

கையாலாகாதநா னேதேதுசொன்னாலும்
கார்க்கக்கடனென்பிழையை தீர்க்கக்கடனேதானாலும் (அ)

சரணங்கள்

எள்ளத்தனையும் குற்றம் இல்லாத சுபசத்தம்
தெள்ளத்தெளியேன் மொத்தம் செய்தேனிதுவேசத்தம்
வெள்ளைக்கவியென்றும் இதுசின்னப்பிள்ளைக்கவியென்றும்சொல் [வதல்லால்
விள்ளத்தகுமோ பழுதுகள் சொல்லத்தகுமோ திருவுளம்
கொள்ளத்தகுமோ சதாயென்னை தள்ளத்தகுமோ கருணையால் ()

நற்பொருள் கீதமும் நவரச பேதமும்
வைப்புள்ள நீதமும் வண்ணவினோதமும்
ஒப்புத்தெரிவேனே அதிலுள்ள தப்புத்தெரிவேனே இலக்கண
சொற்புக்கறியேன் உன்புகழ் கற்பிக்கறியேன் [செல்வி
மெய்ப்பிக்கறியேன் சதா வைப்பிக்கறியேன் ஏதானாலும் ()

உத்தமமாக முன்னம் உரைத்தப் பெரியபுராணம்
அத்தன் பரஞ்சோதி அறைந்தன்ன தானச்சேதி
ஒத்துலகப்கொள்ள நாடகமாய் ஓதினே னதிலுள்ள பெரும்
சத்து அறியாமலே தெரியா பித்தனுரைப்போல
கத்திச்சொல்லு மென்மேலேஉன் சித்தத்தின் இதத்தாலே (அ)

## சப்தகன்னி ஒப்பிலாதம்மன் துதி.

### விருத்தம்

பாரதனில் பெரியதுரையெனப் பட்டந்தாங்கிவீர
போரதனில் தேசிங்கராஜனுக்குப் புயவலிமை யானசோழ
மாராஜம்விஜய ஒப்பிலா மழவராயர் குலதேவியான
தாரணிசப்த கன்னிமாதா தயாபரியைவணங்கிட்டேனே.

### இராகம்-சங்கராபரணம், அடதாளசாப்பு

(அழுதுகொண்டிருமையனே என்ற மெட்டு)

### பல்லவி

அம்மா சப்தகன்னித்தாயே ஒப்பில்லாத
அம்மையே எனக்கருள்வாயே

### அநுபல்லவி

செம்மை வினையால்சிறுத் தொண்டர்கதை சொல்லவந்தேன்
உம்மையல்லா லெனக்கில் லொருவரில்லையெனப்புகுந்தேன் ( )

### சரணங்கள்

திருவாரூர்க்கா ளாண்ட செங்கோட்டு சோழன்மரபில்
பெரும் மழவராயரிடம் பெண்போல் வந்துசொன்னயே
அருங் கபிலவனத்தில் அம்மையேயுமைக் கண்டதினத்தில்
சொருபமாய் விளங்கிநின்று துரையாயரசு தந்தாயே (அ)
கன்னியரெழுவரும் பெரிய களிங்குரோனடயிலே
கண்டெவரை செட்டி வளையல் காம்பீட்டி யணிந்தீர
அண்ணன் மழவராயரிடம் அண்டிப்பணம் வாங்கிக்கொள்ள
நன்னய சிட்டுதந்த நாயகியென்முன் வருவீரே (அ)
மட்டில்லா ஆசையாலும் மகேஸ்வரனருளாலும்
சிட்டிப்பரஞ்சோதி சரிதை சொல்லவே மனந்துணிந்தேன்
எட்டும் இரண்டும் தெரியா தேழைநானுன் கருணையாலும்
கெட்டிக்காரனென்றெவரும்புகழக் கேட்டும் மடிபணிந்தேன் (அ)

## நூற்பெருமை

விருத்தம்.

சதிர்பெறும் சிறுத்தொண்டர்கதை சாற்றியபெரியபுராணத்திலே
அதிலேழர் பாசுரம்சொன்னால் அடைவினையகலுமென்ன [தாண
விதிகளையறிந்த மேலோர்விரும்பிய உறுதிகொண்டென்
மதியினுலறிந்தமட்டில் மகிழ்ந்து நாடகஞ்சொன்னேனே

இராகம் சாவேரி தாளம் ரூபகம்

பல்லவி

மகத்துமுள்ள சிறுத்தொண்டர்கதையிதுவே இல்லற
வாசிகள்கேட்க வேணுமிதுபொதுவே

அநுபல்லவி

தகுந்த புராண நூல்கள் தன்னைத்தான் புகழ்ந்துபேசும்
மிகுந்ததிவேற்றிப் பார்த்தால் வித்தியாசமின்றிபூசம் (ம)

சரணங்கள்

அறஞ்செய விரும்பென ஆத்திச்சூடியில் முன்னம்
அன்னை ஔவைபிராட்டி யறைந்தனளது திண்ணம்
முறையை பரஞ்சோதியார் முற்றிலும் தான்கைக்கொண்டு
முத்தியடைந்த கதையை மொழிந்தேன் நாடகமாய்விண்டு ()

எண்ணரிய பிறவியில் இந்தமானிடப்பிறவி
எதிலுமரிதென்றாமே யியற்றுமறையைமருவி
நண்ணும் கன்மம்வந்தாண்டு நாடிப்பதமடையதொண்டு
நாடும் ஜீவனதைக்கண்டு நாட்டில் காருண்யங்கொண்டு ()

தன்னில் நடனமிடும் சற்குருவின் பாதம்
பண்ணிபதமடைந்த பக்தர்சிறுத்தொண்டர்கீதம்
சொன்ன புராணம்பண்டு சுவையை எல்லோருமுண்டு
மண்ணில் கேட்டுக்கொண்டு மகிழ்ந்துபதம் பெறப்பூண்டு (ம)

அடியார்க் கடியரென அறைந்தார் பரமமூர்த்தி
உரையைக்கேட்டாலேயறிவு ஓங்கவேணுமே கீர்த்தி
படியாய் பெற்றிடமுத்தி பண்ணவேணுமறம்நத்தி
குறியையடையவே சுத்தி கொள்ளவேணுமருள் பத்தி (ம)

## அவையடக்கம்

விருத்தம்.

அரன்முடிமேல் கங்கையை பகீரதன்கொணர்ந்து
அன்றோன்செய் தற்பணத்தை இன்னுளித்த

நாருமந்தகங்கையிலே கற்பணத்தை
நடத்திமுத்தி பெறுகின்றாரதுபோலாதி
அறமிகும் சிறுத்தொண்டராகித் தன்னதானத்தை
அகிலமெல்லாம் செய்துபுகழடைகின்றாராதலாலே
உறமிகுமருள்பெற ராமசாமியுரைத்த இந்நாடகத்தில்
உ[illegible]ளபிழை பொருத்தென்னை ஒப்புவீர்பெருமைபட-
[செப்புவீர்

இராகம் மத்தியமாவதி அடதாள சாப்பு

பல்லவி

பிழைபொருக்கவேணும் பெரியோரே
பிள்ளையுமக்கு நான்காணும்

அநுபல்லவி

தழைத்தபுலகில்சிறுத் தொண்டர்கதையின்னை
தகைமையென்றறிந்து மறியாமலும் சொன்ன

சரணங்கள்

முன்னேபெரிய புராணம் மொழிந்தசேக்கிழார்சுவாமி
சொன்னதை என்னுள்ளம் சுறந்தேனே
பின்னே தஞ்சைநகர் பிள்ளை ஸ்ரீநிவாசன்
புரிந்ததமிழ் வரலாறு தெரிந்தேனே
வன்னிவம்ச பிரகாசிகை வரைந்த அர்த்தநாரீசன்
வகுத்தநூலால் ஜாதிவகை யறிந்தேனே
சென்னை பாடசாலை சிறுவர்கள் கற்குமிந்த
தேசசரித்திரத்தை உறிந்தேனே

தேவதேவ மகா தேவன்பதம் நாட
சிறுத்தொண்டர் சரிதையைஜெகமேகொண்டாட
பாவவினைகளது பயந்து பின்னோட
பக்தியாய் ராமசாமிபாமலைப்பாட

ஆதியில்மகாதேவன் சோதனை செய்துமகிழ்ந்து
அன்புள்ள பக்தனென்ன விதித்தாரே
பேதமில்லாமல் அப்பர் முதலானோர்
போற்றிக்கொண்டாடி மதித்தாரே
மேதினியோரவர் அன்னம் படைப்பை
மிகவேசெய்துலகில் துதித்தாரே

நீதியாம்காஞ்சி நிருபன் நரசிம்மவர்மன்
நிலைநாட்டிய கோவிலாலகமத்தோர் கதித்தாரே
ஆதலாலவர்சரிதை அகிலம்தெரிய மேலே
அறைந்தேன் சல்வெட் டரிக்கைமிகவாலே
நாதன் திருவருளை நாட பக்தியாலே
நாடகஇசையில் நானுரைத்தேனாசையாலே (மி)

திருந்தும்நாராயண நமச்சிவாய வென்று
செபிக்குமந்திரமிரண்டும் மெய்தானே
உரைக்குமந்திரமிரண்டினு முள்ளமகாதேவன்
ஒருவனைஎன்றுகீதை உரைத்ததுண்மைதானே
பொருத்தமென்றுநான் போற்றினேன்சிவனை
புகழாகக்கொள்ள பெரியோர்கடமைதானே
நிறைந்த சமுத்திரத்தில்கால்வா நீரோடிவிழுந்தால்
நீக்காமல்கொள்ளும் முறை நிலைமைபடிதானே
அர்த்தமில்லா சொல்லா லறைந்தாலும் தள்ள
ஆமோஉங்களாலாமே திருத்திக்கொள்ள
கர்த்தன்பதத்தை கற்றபடிப்பால் விள்ள
கவிஞர்முதலானோர் கேட்டென்மேல் களித்திதிலுள்ள(மி)



உ
சிவமயம்

# காஞ்சி காண்டம்.

## நரசிம்மவர்ம மகாராஜன் சபை

### கட்டியக்காரன் வருகிற விருத்தம்

சீர்கொண்ட காஞ்சிநகர்க்கரசாம் நரசிம்மவர்மமகாராஜன்
பேர்கொண்ட பல்லவகுலதிலகனும் பிரதாபமீறுகரன்
ஏர்கொண்ட அரண்மனைவாசல்காக்கும் இனியகுணஒய்யாரன்
சீர்கொண்ட பூமிபுகழ்கட்டியக்காரன் நிகழ்சபைவருகின்றனே

இராகம் ஸ்ரீராகம் ஆதிதாளம்

பல்லவி

கட்டியகாரனும் வந்தான் ஒய்யாரமாக
கட்டியகாரனும் வந்தான்

அநுபல்லவி

கட்டியகாரனும் வந்தான் கைதனில் பிரம்புங்கொண்டு
மட்டில்லா புகழ்படைத்த மன்னன் நரசிம்மன்வாசல் (க)

சரணங்கள்

தட்டி சல்லடம்கட்டி சரிகைத்தலைப்பாமாட்டி
மேட்டி நரசிம்மராஜன் மேம்பாடெடுத்துக்காட்டி (க)
வன்னிய க்ஷத்திரியர் வாழும் புகழைப்பேசி
நன்னய சிற்றரசர் நாடபராக்குவீசி (க)
பல்லவர்கள் குலம் பாரில் புகழோங்க
இல்லறச் செல்வர்கள் இயற்றும் தானந்தாங்க (க)
இந்தகமதமேற ஏறும்புற சமணமதமற
மூந்தவாலயம் கட்ட முயன்ற மகேந்திரபாலன்கிட்ட (க)

வசனம்.—ராஜராஜ மார்த்தாண்ட ராஜகோலாகல ராஜப்பிரதாப ராஜசிங்கார வன்னியகுலதீர வகுத்தநால்வகை சேனைக்கதிகார, திக்கெலாம்புகழும் ஜயப்பிரதாபன் சேர்ந்தவர்களைக் காக்கும் வீரன் உன்னத குலசூரன் உலகத்தில் அஸ்வமேதயாகம் செய்தோன் பேரன் நன்னய காஞ்சிநகர்க்கரசன் நாளும் பரஞ்சோதி பண்டிதரை சேனபதியாய்க் கொண்டதீரன் உலகத்தில் சமணமத

ஜயினமதம் ஒழிய அகமதம் நிலைநாட்ட குகைக்கோவிலைக் கட்டி, கடவுள் உண்டென்று காட்டியும், மகேந்திர வர்மராஜன் பெற்ற பாலன் தன் பெயர் உலகோங்க, சிம்மத்தின் சிரசில் கால் நிறுத்தி சிலாசாசனத்துடன் கோவில்கட்டி, உலகம் உய்ய, சிவ தொண்டு செய்யும் நரசிம்ம மகாராஜன் சபாமண்டபம் வரப்போகிறார். அதற்காக மதியூகி மந்திரிகள், பிரதானிகள் சபைக்கு வரப்போகிறார்கள். அரசன் வரவை எதிர்பாருங்கள். ஜாக்கிறதை சண்டை சச்சரவு போடாதீர்கள். ஜாக்கிறதை சத்தோ சத்து.

### ராஜன் வருகிற எச்சரிக்கை விருத்தம்.

திருவோங்கும் கச்சிநகர் தன்னில்வாழ் பல்லவர்கள்
  திருக்குலம் தனிலுதித்தோன்
திகழ்பரிதிமதி தனக்கொளிதந்த வன்னிதன்
  திவ்யவம்சத்தில் வந்தோன்
கருணைமிகு பரிமேதயாகம்பலசெய்த சிவஸ்கந்தன்
  கனமரபுதித்த வேந்தன்
கடல்சூழ்ந்த உலகதனில் ஜெயக்கொடிநாட்டிப்பகை
  கடிந்ததோர் மகேந்திரவர்மன்
அருமைபெறுபாலராம் அரியலூர் தன்னில்வளர்
  அணிமேலவீதி வாழும்
அன்புசேர் ராமசாமிக்கவியால் புகழ்ந்திட்ட
  அலங்கார வீரகுண
மருவுகமழ் மணமார்பன் மண்டலமதித்திடும்
  மகாராஜராஜ தீரன்
மன்னராம் நரசிம்மவர்ம பல்லவராஜன்
  மகிழ்ந்து கொலுவருகின்றாரே.

வசனம் —அழகுபொருந்திய காஞ்சிபுரத்தை ராஜதானியாக்கொண்டு அரசாண்ட பல்லவர் குலமாகிய அக்கினிகுல க்ஷத்திரிய ராஜவம்சத்தாராகிய பாபதேவ வம்சபரம்பரையில் கலிபிறந்த 3250-ம் ஆண்டில், கிரேதாயுகத்தில் ஸ்ரீராமபிரானும் துவாபர யுகத்தில் தர்மராஜாவாலும் செய்த அஸ்வமேதயாகப்படி அஸ்வ மேதயாகம் செய்த சிவஸ்கந்தனது மரபில்தோன்றி, சமண ஜயின மதங்கள் அழிவுறக் குகைக்கோவில்கள் கட்டியும், கல்ரதங்கள் செய்தும், பாமர ஜனங்களை அகமதத் கொள்கையைத் தழுவி கடவுளைத் தொழும்படி செய்தும், ஆழ்வாராதிகளுக்கும் சிவனடி

யசர்களுக்கும் ஏராள பொருளுதவி புரிந்து ஆங்காங்கு அகமத பிரசங்கம்செய்து, அகமதத்தை நிலைநாட்டிய மகேந்திர வர்மராஜனுக்கு புத்திரனாகியும், பாபதேவருக்கு 13-வது பேரனாகியும், பரஞ்சோதி பண்டிதனைச்சேனாதிபதியாயும்கொண்ட நரசிம்மவர்ம மகாராஜன் கொலுவுக்கு வரப்போகிறவிதம் காண்க.

## காஞ்சியை அரசாண்ட பல்லவ அரசர்கள் வம்சாவளி.

பாபதேவர்.
ஸ்கந்தவர்மன் 1
புத்தவர்மன் 1
புதயங்குறன்
விஷ்ணுகோபன் 1
ஸ்கந்தவர்மன் 2
குமாரவிஷ்ணு 1

- புத்தவர்மன் 2
  குமாரவிஷ்ணு 2
- ஸ்கந்தவர்மன் 3
  வீரவர்மன்
  ஸ்கந்தவர்மன் 4
  - சிம்மவர்மன் 1
    ஸ்கந்தவர்மன் 5
    நந்திவர்மன் 1
  - விஷ்ணுகோபன் 2 யுவராஜா
    சிம்மவர்மன் 2
    விஷ்ணுகோபன் 3
    சிம்மவர்மன் 3
    - சிம்மவிஷ்ணு
      மகேந்திரவர்மன் 1
      நரசிம்மவர்மன் 1
      மகேந்திரவர்மன் 2
      பரமேசுரவர்மன் 1
      நரசிம்மவர்மன் 2
      பரமேசுரவர்மன் 2
    - பீமவர்மன்
      புத்தவர்மன் 3
      ஆதித்யவர்மன்
      கோவிந்தவர்மன்
      இரணியவர்மன்
      நந்திவர்மன் 2
      தந்திவர்மன்
      நந்திவர்மன் 3
      நிருபதுங்கன்
      அபராஜிதன்

ஆக தலைமுறை 24

### இராகம் கல்யாணி தாளம் ரூபகம்

#### பல்லவி

ராஜராஜ நரசிம்மவர்மமகர் ராஜர்கொலுவில் வராரிதோ (ரா)

#### அநுபல்லவி

தேசத்தோர்புகழ் ராஜன் புலிகேசியைக்கொன்ற
தீரன் பரஞ்சோதியை சேனபதியாய்க்கொண்ட (ரா)

#### சரணங்கள்

சொல்லும் ரவிமதிக்கு சுடர்தந்த வன்னிவம்ச
பல்லவ குலமுதித்து படையாச்சியை தாங்கும்
வெல்லும் ஜெயக்கொடியை வடக்கே வாதாபிநாட்டில்
அல்லலறவே நாட்டி அரசாக்ஷிதனை ஒங்கும் (ரா)

கடல்கிழக்கு தெற்கு கரைபுரளும் வெள்ளாறு
குடதிசையில் காவேரி கொள்ளும் நர்மதைவடக்கு
படரும் எல்லையில்சிம்ம பரந்தகொடியை துதிக்க
இடரில்லா குடிகளை ஏற்று காவல்கதிக்க (ரா)

அந்தந்த ஜாதிகள் அத்துமீராமல் நிற்க
தந்தசெப்பேடு கல்லின் சாசனம் தாங்கிகர்க்க
முந்தி நம்மனுசொன்ன மொழிப்படி தானடக்க
வந்தமகேந்திரன் பெற்ற மன்னரா இருக்க (ரா)

ஆதிசிதம்பரத்தைப் பொன் னம்பலமாக்கித்தில்லை
அந்தணர்களால் சங்கு அபிஷேக முடிகொண்டு
ஞாதி இரண்யவர்மன் நாடிபிச்சபுரமிருந்து
தேடிச்சிவபணி செய்ய ஜெகத்தோர் மகிழக்கண்டு (ரா)

கலிபிறந்த நாளை கணக்கிட்டு பார்க்கையிலே
கடந்த ஆண்டுகள்மூன் றாயிரத்திற் கப்பாலே
எழுநூற்றி நாற்பத்திநாலில் எதிரிபுலிகேசிமேலேபடை
எடுத்துச்சென்ற பரஞ்சோதி இன்னும் வரக்காணுதேலே ()

இந்துதேச சரித்திரம் ஏற்ற பெரியபுராணம்
செந்தமிழ் புதுக்கோவை செப்பும் தமிழ்நூல்பெருமை
வந்தவன்னிப் பிரகாசி வகைசோதித்து பார்த்து
சிந்தைமகிழ் ராமசாமி சொன்னபுகழருமை (ரா)

## இராஜன் சபைக்கு வருகிற விருத்தம்

இந்தவிதம் காஞ்சிநகர்க் கரசாயிருந்த நரசிம்மவர்மன்
சந்ததருமமானடி மறவா தனஞ்செயனென தீரன்
சிந்தையில் பெரியோரைக்கொள்ளும் சிறந்தஞானப்பிரகாசன்
வந்தமகேந்திரன்பெற்ற மன்னநரசிம்மவர்மன் யானே.

ஸ்ரீராகம் ரூபகதாளம்

பல்லவி

தென்தமிழ்நாடு புகழும்சுந்தர தீரவீரநரசிம்மன்யானே

அநுபல்லவி

இந்நாட்டுக்கதிகாரன் அந்நாட்டுக்கதிசூரன்
விண்ணாட்டுக்குபகாரன் வன்னியகுலதீரன் (தெ)

சரணங்கள்

தேசத்திலறம் செய்திடும் பிரகாசன்
தேவிகாமாக்ஷியை சிந்திக்கும் குணநேசன்
வாசவரேற்றிடும் மண்டல குபேரன்
வணங்குவேன் சபையை வர்மசிவஸ்கந்தன்பேரன் (தெ)

சிம்மக்கொடி நாட்டிப்பகை ஜெயங்கொளும் சூரன்
சிம்மாசனமேற தேற்றும் குமாரன்
உம்பர்பதம் போற்றி உலகையாளும் வீரன்
உண்மைகற்பு மாதர்களை உள்ளமுற வணங்கும்தீரன் (தெ)

நன்மைதிமை யறிந்து நறுக்குவேன் தீயர்களை
நாட்டில் கதாணிய நாட்டுவேன் சுகிர்தத்தை
சன்மார்க்கமில்லா கள்குடி சண்டாளத் துரோகிகளை
சுடுதி யெமலோகம்செல்ல சாடுவேன் வாளாயுதத்தை (தெ)

அந்தணர் யோகியர் அனைவர்க்கும் நமஸ்காரம்
அன்னை தந்தைபோலென்னை ஆதரிப்போர்க்குபசாரம்
செந்திவம்ச மேலோரை செய்குவேனுபகாரம்
தேசசிம்மாசனமேற சேருவேன் இந்நேரம் (தெ)

வசனம்.—மந்திரி, நான ராஜசிம்மாசனம் இன்றைக்கமர்ந்திருப்பதால் வழக்கம்போல் அந்தணர், யாசகர், கவிஞர் முதலியோர்களுக்கு முறையே செய்யவேண்டிய தானதர்மங்கள் செய்வாய் மந்திரி.

மந்திரி வசனம்.—அப்படியே.

## நரசிம்மவர்ம மகாராஜன் கோலுவிருத்தல்

### விருத்தம்.

மகாராஜனும் மகேந்திரனீன்ற மகாராஜன் வன்னிகுலதீரன்
மிகராஜர்கொண்டாட காஞ்சிநகர்மிருந்த மன்னனுனசூரன்
தகமிகுமருள்கொண்ட தன்னையாரும் புகழுமாரன்
ஜெகமிகுதான தர்மம்செய்து சிம்மாசனமேறினனே.

### இராகம் சாவேரி திரிபுடைதாளம்

### பல்லவி

ராஜராஜர்க்கும் ராஜன் நரசிம்ம ராஜன்கொலுவிருந்தானே

### அநுபல்லவி

தேசதிலகன் காஞ்சி நகர்க்கொரு
திலகன் வன்னிகுல திலகன் ஆகவே (ரா)

### சரணங்கள்

மந்திரமும் தந்திரமும் நித்ய நைவேத்தியமும்
மகங்களும் தினம்தினம் செழிக்கவே
வன்புலியும் பசுவும் ஓர்துறையில் நீருண்டு
வரும்பயம் ஒழிக்கவே
இந்திர பதமும் குபேர தனங்களும்
இதற்கீடாகாதென பழிக்கவே
எங்கெங்கெங்கும் முப்போகம் விளையவே
திங்கள் மும்மாரியாலுலகு கொழிக்கவே (ரா)

நாலு வர்ணச்சிரமம் மனுசொன்ன
நடைபுரண்டு பரியாமலே
நரர்க்கும் வேறுள்ளஉயிருக்கும் வயதுகள்
நடுவிலே குறைந்து தேரியாமலே
கோலமாகிய மிருகமும் பறவையும்கூட
குறிகடந்து மேயாமலே
குடியிலாறிலோர் கடமை
கொண்டு செங்கோலின்முகம் சாயாமலே (ரா)

மறுமங்கையர்களும் மறுமன்னர்களும் தங்கள்
மார்பும் முதுகும் கொடாமலே
வளரும் அஷ்டலட்சுமிகள் தன்னரண்
மனையை விட் டகலாமலே
அறநாறுவருஷம் தன்குலத்தோராண்ட
அரசாக்ஷியை கை விடாமலே
யாரும் மனதில் விசாரமென்பதை
ஆராட்சிசெய்ய தொடாமலே (ரா)

ராஜன் வசனம்.—கேளும் மந்திரி, சர்வாந்திராமியாய் இருக்கப்பட்ட சாக்ஷாத் பரமசிவத்தினிட திருவிளையாட்டால் தோற்றிய இவ்வுலகத்தில் எண்ணரிய பிறவியில் மானிடராய் கூன்குருடு அங்கவீனமின்றி பெண் ஜென்மம் நீங்கி ஆண்ஜென்மம் கிடைப்பதரிதென்றும், அப்படிக்கிடைத்த ஜென்மத்திலும் கல்வி யறிவுடையவனாய் கொஞ்சக்கொஞ்சமாய் நூல்களாராய்ச்சிசெய்து, சற்குருகடாட்சமடைந்து யுக்தியனுபவத்தால் சிறந்து, பலஜென்மங்களாய் மானிடப்பிறவி பிறந்து பல புண்ணியங்களைச் செய்தும், பல ஜீவராசிகளின் காருண்யம் கைக்கொண்ட மனிதனே மானிடனென்பார்கள். அப்படி ஒவ்வொரு மானிடப்பிறவியிலும்செய்து புண்ணியங்கள் பல செய்தவன் ஓர் அரசனாகப் பிறக்கவேண்டும். அப்படி ஓர் அரசபட்டம் கிடைப்பது சாமான்யமல்ல. கேளும் மந்திரி, ஓர் நாடகம், கூத்து இவைகளில் வேஷதாரிகளாய் கூத்தாடிகளில்கூட இராஜன் என்கிற பட்டம் கிடைப்பதரிது. முன் தவப்பலனிருக்கவேண்டும். கேளும் மந்திரி, ஆதவன் புங்கவன் முதல் ஒன்பது ரிஷிகள்கூடி சொல்லிய ஜாதக சோதிடங்களில்

கவி

அரசே யெட்டொன்பது பத்தினிலணி ஜன்மத்தில் இரவிபுகர்
சிரசாயிருக்க பூபதியாம் சேரும் சனியும் சூரியனும்
கிறைசேர்ந்தொன்றாய் நலமாற்றினில் நிற்க கீர்த்திமானவான்
உரைசேர்ந்திவர்கள் மற்றோரிடத்திருக்கில்கூத்தாடியுமாவான்.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் அரசன் என்னும் பட்டம்பெற்ற சிம்மாசனம் ஏறுவதென்றால், என்ன புண்ணியம் செய்து கிடைக்கவேண்டும் பார் மந்திரி. நான் இந்த சிம்மாசனத்தில் ஏகச்சக்கிராதிபதியாய் வீற்றிருக்கவும், அறிவாளிகளாகிய உம்மைப்போல் பெரியவர்கள் மந்திரியாக விருக்கவும், இப்பட்டணமும் நமது செங்கோலின்கீழ் உள்ள மற்ற நாடுகளிலுமுள்ளவர்கள் என் புகழைப் பார்க்கவும், கேட்கவும் நேரிட்டது நான் செய்த புண்ணியமோ, என் பெரியோர்கள்செய்த தவமோ யோசித்துப்பாரும் மந்திரி.

மந்திரி வசனம்.—அதற்கென்ன ஆக்ஷேபம் மகாராஜ.

இராஜன் வசனம்.—கேளும் மந்திரி, அரசு என்ற பட்டத்தின் பெருமையைக் கூறினேம். ஆனல் அரசனுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைச் சீர்தூக்கிப் பார்த்தால் அரசனென்று பிறந்து ராஜ்யத்தைக் கைகொண்டு சிம்மாசனம் ஏறினல், குடிகளுக்கு மாதமும்மாரி பொழிய, தேவேந்திரனை திருப்திசெய்ய யாகாதிகளைச் செய்யவேண்டும். மழைபெய்து பூமியில் பயிர்கள் உற்பத்தியானல் காட்டு மிருகங்கள் அவைகளை அழிக்காமல் பாதுகாக்கவேண்டும். அகால மழையோ, காற்ருே வராமல் கார்க்கவேண்டும். விளைபொருள்களையும் உழவர்களிடமிருந்து கன்றுகாலி பண்டங்களை திருடர்பயமின்றிக் கார்க்கவேண்டும் ஒரு ஊரில் விளைந்த பண்டங்களை மற்ருேர் ஊருக்குக் கொண்டுபோய் விற்கவும், இந்த ஊரிலில்லாத பண்டங்களை அயலூரிலிருந்து வரவழைத்துக் கொடுக்கவும் வேண்டும். அவர்களுக்குத் திருடர் பயமின்றி கார்க்கவேண்டும். துஷ்டர்களால் சற்சனர்களுக்கு பங்கமில்லாமல் பாதுகார்க்கவேண்டும். வாந்திபேதி பெருவியாதிமுதலிய விஷரோகங்கள் பட்டணங்களில் வராமல் பாதுகார்க்கவேண்டும். குடிதண்ணீர் குளங்களும் ஸ்நானம்செய்ய வசதிகளும் வியாதியஸ்தர்களுக்கு வைத்தியசாலைகளும் வைத்துக்கொடுக்கவேண்டும். இன்னும் கேள் மந்திரி, ஆலயங்களுக்கு அறுகால பூஜைத்திட்டம், அரிதேசி பரதேசி யாத்திரைவாசிகள் தங்க ஆங்காங்கு சத்திரம் சாவடி கட்டிவைக்கவேண்டும். கல்விச்சாலை, தொழிற்சாலை அமைத்து வைக்கவேண்டும். இதுமாத்திரமா, பஞ்சகாலம் வந்தால் ஜீவர்களை அரசன் கார்ப்பாற்றவேண்டும். அநாதி பிரேதங்களை அரசன் புத்திரனுகயிருந்து அடக்கம் செய்யவேண்டும். ஆறிலொரு கடமைக்கு மேலதிகம் வாங்கினல் குடிகள் கொடுங்கோலரசென்று கூறுவார்கள். இது மட்டிலுமா பார் மந்திரி, ஒரு ஸ்திரீ கர்மாந்தகாரமாய் சோரம் போனல் அநியாய ராஜாங்கமென்பார். காட்டில் கரடி புலிகளைப் போல் நாட்டில் மனிதனைப் புசிக்கும் வட்டிக்குப்பணம் கொடுத்து கஷ்டப்படுத்தும் மட்டிகளால் வேளாளருக்கும், தொழிலாளருக்கும் பங்கமின்றி பாதுகாக்கவேண்டும். சங்கரஜாதிகள் மேலஜாதிகளுக்குச் செய்யவேண்டிய தொழில்முறைகளை தவருமல்செய்ய திட்டம் செய்யவேண்டும். பெற்ருேர்கள் புத்திரர்களையும், புத்திரர்கள் பெற்ருேர்களையும், கணவன் மனைவியையும் கைம்பெண்களையும் கார்ப்பாற்றவேண்டும். என் ராஜ்யத்தை நான் பாதுகாக்க

எண்ணிக்கைபற்ற ஜனங்களின் பாதுகாப்பில் நான் கண்ணுறங்கருந்துமாக இருந்துவிட்டால் வேற்றரசர் படையெடுத்து என்னை அதோகதி யாக்கிவிடுவார்கள். ஆதலால் உற்றுநோக்குங்கால் அரசனது வாழ்நாளானது கேவலம் பிச்சையெடுத்து ஜீவனம் செய்பவன் ஜீவனத்திலுங்கூட கேவல பரிதாப நிலைமையுடையதாயிருக்கிறது. மேற்சொல்லிய ராஜனது ஊழியங்களை கவனிக்கத் தவறிவிட்டால் குடிகள் கொடுங்கோலரசென்று கூறுவார்கள். அதோடு ரௌரவாதி நரகத்திற்காளாக்கி கீழ்கடைச்சென்மங்களில் கொண்டுபோய் விட்டுவிடும். அந்தந்த காரியங்களை நடத்த ஆங்காங்கு காரியஸ்தர்களை நியமித்து உம்மை மேல்பார்த்து எனக்குச் செங்கோல் பட்டமும் கொடுத்து நான் பரகதிபாக்கியமடைய கேட்டுக் கொண்டிருக்கிறேன் அல்லவா ?

மந்திரி வசனம்.—சமூகத்தின் உத்திரவுப்படி சகல காரியங்களையும் பார்த்து வந்திருக்கிறேன் மகராஜ.

இராஜன் வசனம்.—ஆனால் மந்திரி, தேசவிசாரணைசெய்ய இஷ்டப்படுகிறேன்.

இராஜன் தரு

அகிலப்பிரபஞ்சமு முன்னாலே யாளுண்டுவருகிறேன் மந்திரி
அதினாலல்லவோ இவ்வுலகம்புகழ் ஆனதெனக்கு தந்திரி.

மந்திரி தரு.

செப்புகிறேன்கேள் வேந்தரின்வேந்தே ஜெகத்திலுமது நாடு
சிராப்பதினேழு தலைமுறை ஜெயசெங்கோலும் மனங்கூடு

அரசன் வசனம்.—கேளும் மந்திரி கடல் கிழக்கெல்லையாகவும், வெள்ளாறு தெற்கெல்லையாகவும், காவேரி மேற்கெல்லையாகவும், நருமதை வடக்கெல்லையாகவும் உள்ள இந்த ராஜ்யமண்டலத்திலுள்ள சகல பிரஜைகளும் இந்த காஞ்சிபுரத்தை ராஜதானியாகக்கொண்டு வாழ்கின்ற என்னை செங்கோலரசனெனப்புகழ்ந்து வருவது உம்முடைய ராஜதந்திர முறையாலல்லவா? உம்மை நான் புகழ்ந்து மெச்சுகின்றேன்.

மந்திரி வசனம்.—கேளும் அரசே இந்தக் காஞ்சீபுர பட்டணத்தை உம்முடைய மூதாதையான பர்பதேவர்முதல் 17 தலைமுறையாக 600 வருஷங்களாக எவ்வளவோ மேம்பாடாய் அரச

புரிந்த தேவராஜ 12-வது பாட்டனார் சிவஸ்கந்த வர்மமகாராஜா அவர்கள் அரிய அஸ்வமேதயாகம் நடத்தியிருக்கிறார். ஆதலால் இந்தராஜ்ஜிய செங்கோலானது தேவரீருடைய குலப்பெருமையே யல்லாது என்னாலானதாக உறைத்த உத்திரவானது என்னை வீண் பெருமை படுத்தியதாகும். நான் சமுகத்தின் வேலைக்காரன் என்னாலான தொன்றுமில்லை துரையே.

அரசன் வசனம்—அப்படியா.

தரு.

தேவாலயங்கள் ஆறுகாலபூஜை சிறப்பாய்நடந்துவருகின்றதா
தேசத்திலுள்ள சிறுகோவில்பூஜை செவ்வையாய்புரிகின்றதா

மந்திரி வசனம்.—எந்தெந்த ஆலயங்களுக்கும், எந்தெந்த சிறுகோவில்களுக்கும் எந்தெந்தவிதமாய் கட்டளையிட்டு மானியங்கள் விட்டிருக்கிறோமோ, அந்தந்தப்படி திட்டமாய் நடந்துவருகிறது. அவைகளை கவனிக்க சிதம்பரத்தை இரண்ய மகாராஜாவும், திருமுட்டத்தை சச்சியுவரெங்கராஜாவும், மற்ற தேவாலயங்களை ஆங்காங்கு கிராமப் பஞ்சாயத்துகளும் மேல்பார்த்து சரியாய் நடந்துவருகிறது.

அரசன் தரு.

அந்தணர் யாக எக்யாதிகளை அனுதினம் செய்கின்றாரா
இந்திரனால் பருவமழை எங்கும் சீராய் இனிது பொழிகின்றதா

மந்திரி வசனம்—அந்தணர் யாக எக்யாதிகள் அனுதினம் காலந்தவறாமல் செய்து வேதபாராயணம் வாசித்துவருகிறார்கள். அதனால் இந்திரன் மகிழ்ந்து பருவமழை தவறாமல் பெய்துவருகிறது.

அரசன் தரு.

க்ஷத்திரியர் குலமுறை தவறாநடந்து சரியாயிருக்கின்றாரா
சங்கரஜாதியோடு கலந்தவர்கள் தர்மம் கடக்கின்றாரா

மந்திரி வசனம்.—க்ஷத்திரியர்கள் தங்கள் குலமுறைதவறாமல் சரியாய் நடந்து வருகிறார்கள்.

அரசன் தரு

வாணிபர்செட்டு வரிசையாய் செய்து வருதிக்குள் நடக்கின்றாரா.
தானியவிலைகளை தாறுமாறாய்விற்று சதிசெய்து வருகின்றாரா.

மந்திரி வசனம்.—வாணிபர்கள் தானியவிலைகள் கொண்டவிலைக்கு ஆழாக்குக்கு ஒழக்குலாபம் வைத்து குடிகளுக்கு திருப்தியாய் விற்றுவருகிறார்கள்.

இராஜன் தரு

வேளாண்மை செய்யும் வேளாளர் விருத்தியாய் வருகின்றாரா
தாளாண்மையாக பயிரிட அவர்கள் சங்கடப்படுகின்றாரா.

மந்திரி வசனம்---வேளாண்மை செய்யும் வெள்ளாழர்கள் விருப்பப்படிவேண்டியவிதைதான்யங்களும்விவசாயத்துக்கு வேண்டிய கருவிகளும் உணவுப் பொருள்களும் அரசாங்கத்திலிருந்து குடிகளுக்கு வட்டியின்றி கடன்கொடுத்து விளைபொருளில்எடுத்துக் கொண்டுவருகிறது மாதம் மும்மாரியால் விளைவு செழித்தோங்குகிறது கன்றையீன்றபசுக்கள் அபிரிமிதமாய் பால்கறக்கிறது அவர்கள் பிராமணர்களுக்கு தானமாகவும் வைசியர்களுக்கு பண்டமாற்றலாகவும் ஈந்து தேவ பிராம்மண ராஜ விசுவாசிகளாகவிருந்து வருகிறார்கள்.

இராஜன் தரு.

மங்கையர்கள் கற்பு வழுவாமல் நல்ல மார்க்கத்திலிருக்கிறாரா.
அல்லதுசங்கையில்லாமல்மிருகம்போல் நடந்துதவறதுசெய்கிறாரா.

மந்திரி வசனம்.—மங்கையர்களைப்பற்றிபேச ஆரம்பித்தாலோ நம் நாட்டு நாகரீகத்தை கண்ட என்னாட்டாரும் வியப்புறுவார்கள் தன் கணவனன்றி மற்றபிரமாதிசிவனானாலும் மதியார்கள் கைம்பெண்கள் தேகத்திலுள்ள ஜீவன் போகாமல் பாது காக்கமட்டுமே ஒரு வேளை உண்டு பலத்தைக்குறைத்து காலத்தை கழிப்பார்கள் கன்னிப்பெண்கள் கடவுளைத்தொழுவார்கள் அவர்களும்தேவரீரவர்களும் பிராமணர்களும் சத்தியம் தவராமல் நடந்து வருகிறார்களென்பதற்கு சாக்ஷியமாகத்தான் மாதம் மும்மாரிபெய்கின்றது மாதர் கற்புநிலை தப்பினால் பருவமழை பெய்யாது அரசே.

## இராஜன் தரு

சங்கரஜாதி அவரவர்களுக்குரிய ஜாதி தொழில் செய்கின்றார பங்கம்செய்து மேலோர்களை அசட்டையாய் பரிகாசம் செய்கின்றார.

மந்திரி வசனம்.—தொழில் ஜாதிகளனைவரும் அவர்களுக்குரிய ஜாதித்தொழில் நடந்து மேற் குலத்தாருக்கு கீழ்ப்படிந்து சேவித்து வருகிறார்கள்.

அரசன் வசனம்.—நாமிதுவரை தேசவிசாரணை செய்து சந்தோஷமானோம் இனி எனக்குள்ள சில சந்தேகங்களை நிவர்த்தி செய்யக்கேட்டுக் கொள்ளுகிறேன் உரைக்கவேண்டும் மந்திரி.

மந்திரி வசனம்.—அப்படியே அரசே.

இராஜன் வசனம்—மந்திரி எனது பாட்டன் ஸ்கந்தவர்ம மகாராஜனுக்கு சிவஸ்கந்த மகாராஜனெனப்பட்டம் வந்ததற்கு காரணமென்ன சொல்வீர் மந்திரி.

மந்திரி வசனம்.—திரேதாயுகத்தில் ஸ்ரீராமபிரானும் துவாபர யுகத்தில் தர்மராஜனும் செய்த அஸ்வமேத யாகத்தைப்போல் கலி யுகத்தில் உமது பாட்டனார் அரிய அஸ்வமேதயாகம் செய்ததால் இந்திரன்முதலான தேவர்கள் அவிர்ப்பாகம்பெற்று சிவபக்திசிறந்த அவருக்கு சிவனென்னும்பட்டம் கிடைத்ததால் சிவஸ்கந்த மகாராஜ னெனப்பட்டம் கிடைத்தது அரசே.

இராஜன் வசனம்.—என்பாட்டனார் சிவஸ்கந்தவர்மா. தேவ பக்தியில் அவ்வளவு சிறந்தவராகயிருக்க என் தகப்பனார் மகேந்திர வர்மா ராஜாவால் ஞாபகார்த்த மாய்உலகப்பிரசித்தியான ஏதாவது காரியம் செய்திருக்கின்றாரா மந்திரி.

மந்திரி வசனம்.—கங்கைக்கரைக்கு தெற்கிலுள்ள குடியேற்ற நாட்டுகளனைத்திலும் ஆரியர்களான பிராமணர்களனைவரும் ஒரே கட்டாக வேதங்களை படிப்பதும் சுவாமிதேவாராதனை முதலியவை யும் பிராமணர்களுக்கே புரித்தானதென்றும் மற்ற வருணத்தார் யாவர்களும்வேதம்வாசிக்கவும் பிராமணர்கள் வாசிப்பதை கேட்கவும்

கூடாதென்றும் தேவர்களை பிராமணர்கள் மட்டில் ஆராதிக்கவும் வணங்கவும் பாத்தியமுடையவர்களென்றும் இதராஜாதிகள் கடவுளை வணங்கக்கூடாததென்றும்பிராமணர்களை தெய்வமாகமற்றவருணத்தார் வணங்கவேண்டுமென்றும்வேதமெழுதிகட்டுப்படுத்தப்பட்டபடியால் ஜனங்கள்மூடர்களாய் போய்விட்டபடியால் அப்போது சமணமதமும் சைனமதமும் வேறூன்றி இந்தியாமுழுவதும் பரவிவந்ததால் நம் ராஜ்யத்தில் இந்து மதம் நிலைபெற குகை கோயில் கட்டி மூடர்களை அறிவாளசாக்கி விஷ்ணு சிவன் கோவில்கள் தங்கள் தகப்பனாரால்தான் கட்டப்பட்டு யிருக்கிறது.

இராஜன் வசனம் —இப்போது என்காலத்தில் செய்யவேண்டியதென்ன ?

மந்திரி வசனம்,—தங்கள் தகப்பனார் எடுத்துக்கொண்டவேலையை தேவரீர் கைகொண்டு. ஆங்காங்கு சிவன் விஷ்ணுகோவில்களை கட்டச்செய்து தேர்திருவிழா இயற்றச்செய்து பாமரஜனங்களை கும்பலாய்கூட உண்டுபண்ணி சிவனடியார்களைக்கொண்டு சிவபக்தி செய்யும் படி உபதேசிக்கவும் விஷ்ணுபக்தி யுடையவர்களை ஆழ்வாராக வெளிகிளம்பி உபதேசிக்கும்படி செய்து கடவுளின் அருளைக்கொண்டு சமண சைனமதத்தைக்ஷீணிக்கச்செய்து இந்துமதத்தை நிலை நிறுத்தவேண்டுமரசே.

இராஜன் வசனம்.—அப்படியானால் மந்திரி நம்ராஜ்ஜியத்தில் என் தகப்பனாரால் மலைகள் உள்ள இடங்களில் மட்டில் குகை கோவில் கட்டியிருப்பதால் உலகத்தில் சமணரை வென்று இந்து மதம் நிலை பெற ஜனங்கள் அறிவை விளக்குவது கஷ்டமாயிருக்குமாதலால் மலைகளை உடைத்து கொண்டுவந்து ஒவ்வொரு பெரிய பட்டணங்களிலும் ஒரு கல்லின்மேல் மற்றொரு கல்லை அடுக்கி உன்னத கோவில்களும் கோபுரங்களும் கட்டி சுவாமி பிரதிஷ்டை செய்து ஆங்காங்கு தேர் திருவிழா இயற்றச்செய்து அடியார்களாலும் ஆழ்வாராதிகளாலும் இந்து மதம் நிலைபெறப்பிரசங்கம் செய்யும்படிக்கும் அப்படி நம்மால் கட்டப்பட்ட கோவில்களுக்கு நம் [illegible] விளங்க ஒவ்வொரு கோவில் முகத்துவாரத்திலும் நாலுகால் மண்டபமியற்றி அந்த கால்களில் ஸ்தலமட்டத்துக்குமேல் ஒரு

முழத்தில் சிம்மமுகம் செய்து அச்சிம்மம் தூணைத்தாங்கியிருப்பது போல் செய்வாய்மந்திரி.

மந்திரி வசனம்.—அப்படியே மகாபாக்கியம் மகாராஜ.

இராஜன் வசனம்.—என்னிய குலத்தில் பிறந்த அரசர்கள் யார் யார்?

மந்திரி வசனம்.—சேர, சோழ, பாண்டிய, பல்லவ, சளுக்கிய அரசர்கள்.

இராஜன் வசனம்.—இவைகள் எந்தக்காலம் உற்பத்தி?

மந்திரி வசனம்—உலக உற்பத்திகாலமே.

இராஜன் வசனம்—நூலாதாரமுண்டோ?

மந்திரி வசனம்.—உண்டு துரோபதை மாலையிட்டசருக்கமும் உத்தரகாண்டம் இலங்கையழித்த படலத்திலும் பார்க்கலாம்.

இராஜன் வசனம்.—மேல் சொன்ன ஜாதியார்கள் தவிர க்ஷத்திரியஜாதி யென்று யாராவது சொல்லுவார்களா?

மந்திரி வசனம்.—இப்போது ஒருவரும் சொல்லமாட்டார்கள் இந்து ராஜாங்கம் கெட்டு நீசராஜாங்கமேற்படுமானால்; தாசி வேசி, சங்கரஜாதிகள் கூட க்ஷத்திரியர்கள் என்பார்கள்.

இராஜன் வசனம்—தாசி வேசி பிள்ளைகளை என்னஜாதி யென்றழைக்கப்படும்.

மந்திரி வசனம்:—அவர்களை சங்கர ஜாதிகளென்றழைக்கப் படும்.

ராஜன் வசனம்—சங்கரஜாதிகளில் பிரிவுண்டோ?

மந்திரி வசனம்—உண்டு அனுலோமன் 40 பிரதிலோமன் 6 அந்தரான் 14 ஆக 60.

இராஜன் வசனம்.—கள்குடிக்கும் ஜாதி எது?

மந்திரி வசனம்.—சண்டாள ஜாதியும் அந்தர ஜாதிகளுமாம்.

இராஜன் வசனம்.—உத்தம ஜாதிகள் குடிக்கமாட்டார்களா?

மந்திரி வசனம்.—குடிக்க மாட்டார்கள்

இராஜன் வசனம்.—ஏன் குடிக்கமாட்டார்கள்?

மந்திரி வசனம்.—கள் குடிப்பவர்களையும் அதை உற்பத்தி செய்பவர்களையும் சிவ பெருமான் திருக்கோவிலில் பிரவேசிக்க விட மாட்டார்கள்.

இராஜன் வசனம்.—ஏன் அப்படி பிரவேசிக்க விடுகிறதில்லை?

மந்திரி வசனம்.—சிவபெருமான் இயற்கையாய் உற்பத்தி செய்து இருக்கும் தென்னையில் அபிஷேகம் நைவேத்தியத்துக்கு உண்டாகும் இளநீர் தேங்காய்களை உண்டாகாமல் அதன் பாளையை கட்டியும் அடித்தும் அறுத்தும் அதன் ரசத்தை மாறுபாடாய்ப் பிழிந்து ஜனங்களின் அறிவை மயக்குவதாலும் வண்டு மலத்தை உண்டு தன் காலிலும் சிரசத்திலும் மலத்தை பூசிக்கொண்டு பாளையினிடம் சுரக்கும் கள்ளையுண்டு மயங்கி விழுந்து வரும் கள்ளை குடிப்பவர்கள் மலம் உண்ணும் பன்றிக்குச்சமானமென்று உள்ளேவிடமாட்டார்கள்.

இராஜன் வசனம்.—நான் சிம்மாசனமேறி வெகுநாழிகையாயிற்று ஞானதர்மங்களும் தேச விசாரணை செய்து முடிந்தது எனக்குள்ள சந்தேகங்களும் கேட்டு சந்தோஷமானேன் ஆனால் என்மனதில் ஆராத்துயரங்கொண்டிருக்கிறேன் கன்னோசிநாட்டையாண்ட ஹர்ஷவர்த்தனை முறியடித்த வாதாபிநகரத்தரசன் புலிகேசி நம் நாட்டுக்கு படையெடுக்க முயன்றதை கேள்வியுற்ற என் உரிமை சேனாதிபதியான பரஞ்சோதி பண்டிதர் என்னை நீக்கி தனியே வடபுரத்து வாதாபி மன்னன்மேல் படையெடுத்து போனவர் சேதி ஒரு வாரமாய் தெரியாததால் என்ன நிலைமையோ எப்போவருவாரோ அறிகிலேன்.

மத்திரி வசனம்.—அடிக்கடி தூதர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் ஜயத்துடன் வரப்போகிறார் விசாரம் வேண்டாம் மன்னனே

## நரசிம்ம வர்ம மகாராஜன் பறஞ்சோதி வராமைக்கு வருந்துதல்.

விருத்தம்,

இருந்த நரசிம்ம வர்ம நானெடுநாளா யிப்புவியாண்டேன் திருந்தவிப்புவியை யாண்டோர் சிந்தனைபொன் றுங்காணேன் வருந்தும் புலிகேசிமேல் படையெடுத்துச்சென்ற பரஞ்சோதி வரவுங்காணேன் பொருந்துமென்னமைச்சர்களே யிந்தபொல்லாங்குக் கென்செய்வேனே.

இராகம்—எதுகுலகாம்போதி, தாளம்—அடதாளசாப்பு.

(இன்னம் வரக்காணேன் மன்னன் ராஜகோபாலன் என்ற வர்னமெட்டு).

பல்லவி

இன்னும்வரக்காணேனே போர்க்கு சென்ற பறஞ்சோதி
இன்னும்வரக்காணேனே.

அநுபல்லவி

தன்னலங்கருதாது என்னலம் மேலோங்க
விண்ணப்பம்செய்துபோன கண்ணியன்வந்துதலங்க (இன்னும்)

சரணங்கள்

(1.) மறுவில்லாவன்னிவம்சம் வளரும்வம்மிசமாச்சே.
மறுதேசமன்னரா லென்ன வருமோஅபவாதப்பேச்சே.
அறுநாறுவருஷம்பல்லவர் ஆட்சி மேம் பாடாச்சே.
அருகில் பரஞ் சோதியைக்காண ஆவல்கொள்ளவுமாச்சே.
(இன்னும)

(2.) எத்தனை அமைச்சர்களெனக் கிருந்தென்னபுண்ணியன்
உத்தமசேனபதியா யென் உயிரைக்காக்கும்கண்ணியன்
சித்தசன்போ லென்சபையில் சிறந்திடும் தண்ணியன்
குத்தமில்லாமல்ஜெய சேதி கொண்டுவருவானோ நண்ணயன்
(இன்னும்)

(3) சின்னம் சிறுவயதி லென்னை சிங்காசனத்தி லேற்றி.
குன்ன மில்லாமல் சிம்ம கொடிஙயைப்பறக்கச் சாற்றி.
கன்ன லென்ப தெனக்கு காட்டாமல் காப்பாற்றி.
மன்னர் மன்ன ரென்றென்னை மகுடம்சூட்டியவர் தேற்றி
(இன்னும்)

அரசன் வசனம்.

என்செய்வேன் எந்தகப்பனர் இறந்தபிறகு என்னைச்சிம்மாசனாதிபதியாக்கி, எவ்விதகஷ்டங்களும் எனக்குக்காட்டாமல் காப்பாற்றி என் செங்கோலை நிலைநாட்டி என்னரசுமேல் படையெடுக்க நினைத்த வாதாபிநாட்டின் மன்னன் மேலென்னையிங்கிருத்தி போர்க்குச்சென்ற பரஞ்சோதி இன்னும் வரவில்லையே ஜெயசேதி இன்னதென்றறியேன் திருவுளம் எதுவோ என் செய்வேன் அமைச்சர்களா.

நரசிம்ம வர்மமகாராஜனுக்கு அமைச்சர் திடம் கூறல்.

விருத்தம்

மனதினிலிந்தப்படியாய் வருந்திடு மரசன்முன்னே
கனகமணி மண்டபத்திருந்த கருத்துள்ள மந்திரிதானும்போர்
முனைக்கு சென்றோர்பெருமையின் முறைதனை உரைப்பேனென்று
தினகரனுதித்தால் போலெழுந்து தேற்றுவான் போற்றுவானே.

இராகம்—சங்கராபரணம், தாளம்—ரூபகம், சுருட்டியிலும்பாட
(அமுதுகொண்டிருமையனே என்ற வர்ணமெட்டு.)

பல்லவி

ஆர் என்றெண்ணமலே நீரும் அவர் அதிசயங்களைசொல்வேன்
பாரும்

அநுபல்லவி

சூராதி சூரன் பரஞ் சோதி எனும்தீரன்
சுகுணகுண தீரன்சொல்லும்வேதகுலமாரன் (அவரை ஆர்என்றெ)

சரணங்கள்.

1. ஆதியில் துருவாசர் தந்தமந்திரத்தை
அநுஷ்டிக்க குந்திதேவி கொடுத்தார்
பேதமில்லாமல் கதிரோன் வந்து பெற்ற
பிள்ளையைக்கடலிலே விடுத்தார்
சோதித்தன் திருபுரத் தேர்ப்பாகனதை
சுரர்தந்த அமுதென எடுத்தார்
காதலால்வளர்த்தந்த காணும்மதலைக்கு
கர்ணனெனப்பேர் கொடுத்தார் அவரை(ஆர்)

2. அரசாம் திரியோதிர னவனை தனக்குகந்த
அன்பனெனவே மிக அறிந்தான்
திரமான கல்விபோர் வித்தைபயின்று பின்னர்
தேவி பொன்னுருவியைமணம் புரிந்தான்
பேர்பெருமரவக்கொடியோனுக் கோர் தோழனுகி
பெருவாரிசெல்வத்தை அறமா சொறிந்தான்
தேர்மீதேரி பாண்டவர் தனக்கு
சிறந்த சகோதரனெனத்தெரிந்துபோர்வரிந்தான் அவரை
(ஆர்)

3. ஆயனருளால்போரில் அவன்மெய்மிகச்சலித்தும்
அறம்தாங்கி உயிரது தழைக்க
ஆயர்பாடியோன் கிழ மறையவனாய்வந்து
அவனறம் தானம்வாங்கி ஒழிக்க
நேயனுயிரிழந்து பெருங்கருணையோடிப்போ
நீங்காமல்வந்துன் பகை அழிக்க
ஓயாக்கவலைகொண்டு போனபரஞ்சோதியும்
உள்ளஜெயத்தோடு வருவாருன்நாடுசெழிக்க அவரை(ஆர்)

வசனம்

குந்தளதேச ராஜனிடம் துருவாசமகாரிஷி ஓர்காலம் விருந்
ன்ன வந்தபோது அவருக்குப் பணிவிடை செய்ய வேலைக்காரர்
ளை வைத்தால் அலட்சியம் செய்து விடுவார்களென்றும் அப்
போது ரிஷி கோபத்தால் சாபம் விடுத்துவிடுவார் என்றும் அரசன்
யந்து தன் கன்னிப்பெண்ணை (குந்தியம்மாளை) பணிவிடைசெய்ய

நியமிக்க அச்சிறு பெண் செய்த பணிவிடைக்கு ரிஷி மகிழ்ந்து ஐந்துமாத்திரைக்கல் கொடுத்து நீ இதை எந்தஸமயத்தில் உனக்கு இச்சையான பொழுது எந்த தேவதையைக்குறித்து ஒரு காய் உருட்டினால் அந்ததேவன் உனக்கு நாயகனாக வருவான் என்று மந்திரமும் சொல்லிக்கொடுத்து போயினர் அந்தப்பெண் மங்கைப் பருவமடையாத கன்னிப்பெண்ணாதலால் காலத்தை கவனியாமல் ஓர்தினம் ராத்திரி பரிக்ஷார்த்தமாய்ப் படுக்கையறையில் சூரியமந்திரத்தைஉச்சரித்து ஓர்பாச்சிகையைஉருட்ட சூரியன் பிரசன்னமாகி கன்னியை மங்கையாக்கி அவள் கோரியபடி நாயகனாய்ச்சேர தேவபிண்டமாதலால் உடனே குழந்தைபிறக்க குந்திதேவி பயந்து உலகத்தோர் வசை சொல்வார்களென சூரியன் தன் தேவப்பெருமையால் அவளை பழயபடி கன்னியாக்கி அவள்கட்டியிருந்த வஸ்திரத்தை ஓர் பேழையில் வைத்து அதில் குழந்தையைக்கிடத்தி கடலில் விட அது அலையால் அஸ்தினபுரம் போய்ச்சேர்ந்து தேர்ப்பாகனால் கண்டெடுக்கப்பட்டு கர்ணன் என்றுபேர்தந்து வளர்ந்து துரியோதனனுக்கு உயிர்த்தோழனாகி பொன்னுருவி என்னும் மாதை மணம்புரிந்து அன்னதானம்நீங்கலாக சகலதானமும்செய்து பாரத யுத்தத்தில் பகைவனை அர்ச்சுனனைக்கொல்லவளர்ந்த நாகஸ்திரத்தை அர்ச்சுனன்மேல் விடாதிருக்க குந்தியம்மாளைக்கொண்டு தாய் என்றும் பாண்டவர்கள் தனக்குச் சகோதரர்களெனக் காட்டியும் சத்தியம்விடாமல் போர்புரிந்து அவன் மெய்சலித்தும் அவனுயிர் விடாததை கிருஷ்ணன் கண்டு கிழப்பிராமணனாகவடிவெடுத்து அவனிடம்சென்று அவன் தர்மத்தைத்தானம்வாங்கி அவனுக்குக்காட்சி கொடுத்து அவனுயிரிழக்க அந்தக்கர்ணனே இப்போது பரஞ்சோதியாய் வேதகுலத்திற்பிறந்து உமக்கு சேனாதிபதியாய் சிவனுக்குப் பரமதொண்டனாய் உமது பகையை அழிக்க சிவபெருமானைத் துணையாகக்கொண்டு போருக்குப் போயிருப்பவர் உமக்கு ஜெயம் கொண்டுவராமல் அபஜெயமடைவாரோ அவரை இன்னாரென்றறியாமல் உம்முடைய சேனாதிபதியென்றும் உம்முடைய வேலைக்காரரென்றும் எண்ணலாமோ அவரை பூசிப்பதும் சிவனைப் பூசிப்பதும் சமனாகும் அவரை ஆரென்றெண்ணமலே நீரும் அவர் அதிசயங்களை தெரியாமலும் கவலைப்படவேண்டாமரசே தினம் தினம் ஜெயமடைந்ததாக தூதர் வந்துகொண்டேயிருக்கிறார்கள்.

அரசன்வசனம்

ஆ! அப்படியா இதுவரையிலிதை எனக்குளடுத்துச்சொல்லாமல் விட்டு விட்டீர்களே மெந்த பாதகனுகி நானவரை என் கீழிருத்தி வேலைவாங்கினேனே என்செய்வேன் அவருக்கு என்னகுற்றம்செய்தேனோ அவரென்ன நினைந்தாரோ தெய்வமே சிவமே சிவமே.

## இராஜன் கண்ணிகள்

அரிச்சந்திரநாடக வர்னமெட்டு.

மாலையணிந்தேமன மகிழ்ந்து மறையவரை
மன்னனுயவர் பணி கொண்டேனே சிவமே அந்த
நூலை யுணர்ந்தோர் நினைவுக்கெதிராக
வேலை யென்ன நான் விதித்தேனே சிவமே
சிவதொண்ட ரென்றவரை தெரியாத பாவிநான்
அவமானமாக அறைந்தேனே சிவமே
தவமிகும் பரஞ்சோதி தானிங்கு வந்தாலே
தாள்பணிந்தவரை க்ஷமைகேட்பேன் சிவமே

மந்திரி வசனம்.

இராஜராஜேஜஸ்வரா கவலைப்படாதீர்கள் பரஞ்சோதி பண்டிதருக்கு எவ்விததீங்கும் தேவரீர் நினைத்துவிடவில்லை தங்களை ராஜாவாகவும் என்னைமந்திரியாகவும் வைத்து இந்த ராஜ்ஜியத்தை ஏக சக்கிராதிபதியாய் அவராசாண்டாரே தவிர அவருக்குத் தேவரீராவது தேவரீர் செங்கோலின்கீழ் உள்ள யாவரும் எவ்வித குற்றமும் செய்துகொள்ளவில்லை, தவிர இப்போதும் தூதர்கள் ஜெயசேதி கொண்டு வந்திருக்கிறுர்கள் வாதாபி பட்டணத்தில் புலிகேசியைக் கொன்று பட்டணத்தைத் தகர்த்துத் தூளாக்கி தமது ஜெயக் கொடியை நாட்டி நாட்டைக் காவல்புரிய கோவிந்தவர்ம யுவராஜாவை 2-கடகம் யானையும் 144 குதிரை படைகளையும் 1000காலாட்படையுமங்கிருத்தி அவ்விடமுள்ள மூலப் பொன் பொருள் குவியலுடன் திரும்பி வருவதாய் திருமுகம்கொண்டு தூதர்கள்வந்திருக்கிறுர்கள்.

அரசன் வசனம்.

ஆ! அப்படியா சந்தோஷம் பட்டணத்தை அலங்காரம் செய்து வையுங்கள் பரஞ்சோதியார் வரவை எதிர்ப்பாருங்கள்.

மந்திரி வசனம்.

கட்டியனே பரஞ்சோதியார் ஜெயத்துடன் வரப்போகிறார் பட்டணத்தை அலங்காரம் செய்யப்பறைசாற்றிவைப்பாய்.

கட்டியன் வசனம்:—அப்படியே மகாபாக்கியம் சுவாமி.

## பரஞ்சோதி சேனைதளங்களோடு வருதல்

விருத்தம்.

சிந்தைமகிழ் காஞ்சிநகர்க் கரசாயிருந்த சீமானைநோக்கி
தந்திரத்தால் தெரிந்துரைக்கும் தார்வேந்தர் மந்திரியில்மூத்தோன் சொல்ல
சிந்தைமகிழ்ந்தீசன் பதம்நாடி தேசவிசாரணை செய்யும்போது
அந்திவண்ணனருள்பெற்றபரஞ்சோதி யானை சேனைதளங்களோடு வருகின்றாரே.

இராகம்—செஞ்சுருட்டி தாளம்—ரூபகம்.

பல்லவி.

சுந்திரமான சுகிர்தகுணபரஞ் சோதியும் வந்தாரே.

அநுபல்லவி.

செந்தாமரை முகத்தில் திலர்தம்தளத வென
திருமார்பில் கலவைபூசி ஜெயக்கொடி தனைவீசி
(சுந்திரமா

சரணங்கள்

1. முந்திஜென்மத்தில்செய்த முறையுள்ள அறமுண்டு
குந்தள நாட்டரசன் கொள்ளும் கர்வத்தைக்கண்டு
சொந்த பல்லவரசனுக்கு துன்பமணுகாமல் தொண்டு
செந்தீவம்சத்தோரை சேர்த்துத்திரட்டிக் கொண்டு
வாதாபி பட்டணத்தை மேதாவியா யாண்ட
சூதன்புலிகேசியை நாதனருளால்கொன்ற(சுந்திரமான)
மன்னர் மன்னர் பூசிக்கும் உன்னத குலமடுத்து
பண்ணும்வேதம் படித்து பாரில்கை வில்லெடுத்து
என்றும்ப ல்லவருக்கு இடரில்லாமல் தடுத்து
கண்ணுங் கருத்துள்ளபோதே கணபதீசுரனை அடுத்த
ஒழியாப்பிறவியினி வழியே வராமல்நிற்க
அழியாசாயுச்சியம் நிலையாய்பெற்றிருக்க (சுந்திரமான)

3. முப்பிறவியின் குணத்தால் இப்போதெடுத்தவில்லை
அப்பிரார்த்த வினை அகன்றதின்றோடு தொல்லை
செப்புமகாராஜன் வாக்கால் செய்பதிருத்தொண்டு சொல்லை
தப்பாது நடந்துபதம் தரணியோரறிய எல்லை
மண்ணுள்ளளவுமேல் விண்ணுள்ளளவு வேத
பண்ணுள்ளளவும்மனித எண்ணுள்ளளவும் பெற
(சுந்திரமான)

மந்திரி வசனம்:—சரணம் சரணம் சுவாமி சேனையர்கோனே.

பரஞ். வசனம்:—நமஸ்காரம்மந்திரியாரே ராஜசமுகம்எப்படி?

மந்திரி வசனம்:—அரசர் தம்முடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார் தெரிவிக்கிறேன்.

அரசே பாஞ்சோதியார் ஜெயக்கொடிவீசி நிதிக்குவியலுடன் ஆசாரத்திலிருக்கிறார்.

அரசன் வசனம்:—ஆ! அப்படியா வரத் தடையென்ன நான் எதிர்கொண்டழைப்பேன்.

## வந்த பரஞ்சோதியாரை அரசன்கண்டு கட்டித்தழுவி ஜெயச்சேதிவினவ பரஞ்சோதி சொல்லல்

### விருத்தம்.

வந்த பரஞ்சோதியாரைராஜன் மகிழ்வுடன் கட்டித்தழுவி
சுந்திரமாய் போரில் வென்ற சுகமதை கேட்க நானே
சிந்தை கொண்டேனெனவுரைக்க சேனாதிபதியுமங்கே
விந்தையாய் போரில்வென்ற விபரத்தைச் சொல்லுவாரே.

### இராகம்—புன்னாகவராளி ஆதி—தாளம்.

பல்லவி

சொல்லுவேன் கேளும் துரையே அந்த
சோதியருளால் வென்ற சேதியை மேன்மேலும் சொல்லுவேன்

அநுபல்லவி

நல்லவாரம்திதி நட்சத்திரங்கூடியே
நான் போருக்கு சென்றேன் நர்தனருள்நாடியே (சொ)

சரணங்கள்

1. குணசம்பிரம தீரா          காஞ்சிநகர்செங்
கோல் படைத்த மாரா          உம்மை
மனமாரடுத்தவர்க்கு          மாறுதல் நாடுமோ
க்ஷணமாகிலும் விட்டு          பிரியவும் கூடுமோ (சொ)

2. சத்துரு புலிகேசியை துடைத்தேன்          விசுவாச
பத்தரடியை          அடுத்தேன்          வெகு
வெற்றி மருவும்கீர்த்தி          மேவிய குணசீலா
பத்தி பெருங்காஞ்சி          பதியின்ராஜகோலா (சொ)

3. முன்னே விஷ்ணுவர்த்தன் முடிந்தான்          எனதம்பால்
பின்னே புலிகேசிகர்த்தன் மடிந்தான்          அதுவல்லாமல்
வன்னவாதாபிநகரை          பின்னமதாய் தகர்த்து
பொன்பொருளுள்ளதெல்லாம்புரட்டிவந்தேன்நகர்த்து (சொ)

4. அலைவாய் துரும்பென்னவே          நித்தம்நித்தம்
மலைபோல் விசாரம்துன்னவே          மெத்த மெத்த
பலநாளிலும்பட்ட          பாடெல்லாம் விட்டோமே
சுலபமாய் புலிகேசியை          துன்பமறசுட்டோமே (சொ)

5. ராஜ ராஜ மூர்த்தாண்டா          பலபல
யோசனைபண்ணவேண்டாம்          அருள்தரும்,
ஈசனுமதுபங்கில்          இருந்தானே அதுகண்டு
பூசனைபுரிந்துபொன்னை          பொக்கிஷஞ்சேருமதென்று (சொ)

6. என்னாலானதொன்றில்லை          பரமசிவன்
எண்ணத்தைத்தடுப்பாரில்லை          ஈசன்
நன்னயமாய் என்னுடன்          நாடிவந்தார்மன்னனே
என்னம்பால் புலிகேசி இறந்தான்பார் சொன்னேனே

(சொல்லுவேன்)

அரசன் வசனம்,

ஆ! என் ஆண்டவா உம்மை யிதுவரையில் நான் தெரியாமல் என் கீழிருத்தி பணிகொண்டேன் என்னைபொருட்டாக மன்னர் மன்னனாக இந்தகாஞ்சிநகருக்கு மகுடம் சூட்டிவைத்த துரையே

என்னால் செய்த குற்றங்களை பொருக்கவேணும் சோதியினருளை பெற்ற சுந்தர மாணிக்கமே.

இராகம்—சுருட்டி, தாளம்—ரூபகம்

மாற்றறியாத செழும் பசும் பொன்னே
மாமறைகுலத்தின்மா மணியான ஒளியே
கூற்றறியாதும்மைகொண்டு பணியேற்றேன்
கொள்ளரிதாய் கிடைத்த தெள்ளரு மருந்தே
வேற்றறியாத உம்மை வேண்டிக்கை தொழுதேன
விண்ணப்ப மதையேற்று எண்ணிக்கார் நிதியே
சாற்றறியாத நான் சாற்றும் உபசாரம்
தன்னைகேட்டாட்கொள்ளும் சாமி பரஞ்சோதியே.

பரஞ்சோதி வசனம்.

ஆ! ஆ! அரசே இதென்ன ஆச்சரியம்! உலகத்தை அரசாளும் ராஜர்கள் விஷ்ணு அம்சமாகும் க்ஷ அரசர்களை பிராமணர்களும் ரிஷிகளும், ராஜேஸ்வரன் என்று கொள்ளத்தகும் ஒவ்வொரு ராஜர்களிடமும் வேதியர்கள் மந்திரிகளாகவும் பொக்கிஷதாரிகளாகவும் சேனாதிபதியுமாயிருப்பது உலக சம்மதம், அவரவர்கள் வேலையை அவரவர்கள் கட்டளைப்படி நடக்க கடமைப்பட்டவர்கள் தேவரீரிடம் சம்பளம் வாங்கி உப்பும் நீரும் சாப்பிட்டபடி வேலை செய்யவேண்டியவர்களல்லவா? ஆகலால்உம்முடைய சேனைக்காவலனாய் நான் வாதாபிநாட்டின்மேல் படையெடுத்து அதனரசன் புலிகேசியைக்கொன்று அந்த நாட்டின் மூலப் பொருள் நிதிக்குவியல் கொண்டுவந்திருக்கிறேன் நான்சொல்லும் நீதிகேட்டு ஒப்புக்கொள்ளுமரசே.

## இராஜனுக்கு பரஞ்சோதி சொல்லல்

விருத்தம்.

முன்னொருநா ளத்திரிமுனி தவமேக பெண்டீர்க்கு மொழியவம் மாதுரைத்த
பொன்னதைத்தேடவயோத்திபதி தைரியன்புரிந்திடும் யாகமேவி
பொன்னுலகோ னயன்மால் புராரியுநீரெனவவரை புகழவன்னாள்
பின்னமாயுரைத்தகௌதமர்க்குஜனகாதி அரசுரிமைபோதித்தாரே

வசனம்:—அரசேகேள் முன்னொருகாலம் அத்திரிமுனி அநேகம் பிள்ளைகளைப்பெற்று, கௌமாரப்பருவமடைந்து தவத்துக்குப்போக தன்மனைவியைப்பார்த்து நான் தவமேகப் போகிறேன் நீ என்னுடன் கூடவந்து பனி, மழை, வெய்யல், காற்றால் வருந்தி பருக்கை கற்களும் முட்களும் பாதமழுந்த நடந்து கந்தமூலாதிகளை புசித்து திரேகமிளைத்து எனக்குபசாரம் செய்து பதமடைகிறாயா? அல்லது இந்தவீட்டிலேயிருந்து உன்மக்களைப் பார்த்து இஷ்டான்ன போஜனம் புசித்து மகிழ்ந்து பதமடைகிறாயா? என்று கேட்க கற்பையே ஆபரணமாக பூண்டவம்மாது கணவனை நோக்கி மனையும் மக்களையும் பொருட்டாயெண்ணேன் தம்முடன் கூடி தமக்குபசாரப் பணிவிடை புரிந்து பதமடைவேனென்றாலும் மக்களைப்பெற்ற மாதா பிதா பிள்ளைகளை ரட்சிக்கப் பொருப்பேற்றவர்கள் மேல்கண்ட குழந்தைகளை காப்பாற்றாமல் விட்டுப்போனல் அவர்கள் கதியற்று பரதவிக்க நம் தவமும் ஈடேறாது பாவமும் வந்து சம்பவிக்கும் அவர்கள் ஆதரணைக்கு வேண்டிய பொருள் சம்பாதித்து வைத்து நாம் தவமேகுவதே மேலாகும் இதனாலல்லவோ அகஸ்தியமகாமுனிவை மணந்த லோபாமுத்திரையென்னும் பெண் காவலன் குறிப்பைகடந்து பொருள்தேடி சுகித்தார்கள் ஆதலால் நம்குழந்தைகள்பசியால்வருந்தாமல் பாதுகாக்கபொருள்தேடி கொண்டு வருவீர்களானல் அதை வகை செய்து தவமேகலாமென ஞாயமென்று ஒப்புக்கொண்ட சாஸ்திர ஆராய்ச்சிமிகுந்த அத்திரி முனிஅப்போது அயோத்தியை அரசாண்ட சூரியகுலவம்ச தைரியராஜன்செய்திடும் அநேகரிஷிகள் முனிவர்கள் நிறைந்தயாகத்தில் பொருள் தேடிவர யெண்ணி அங்குசென்று யாகம் முடிந்து ரிஷிகளுக்கு தானமளிக்கும் ஸமயம் அரசனை அத்திரிமுனி பார்த்து தேவேந்திரனும்பிர்மாவும்விஷ்ணுவும் சங்கரனும் நீரென அவரைப் புகழ அக்கூட்டத்திலிருந்த கௌதம ரிஷி மனம்நொந்து பொருளை நாடி இச்சகம்பேசினல் எம்மட்டும் பேசலாமோ அம்மட்டும் பேசவேண்டும் பூவுலகில் நரமனிதனையும் அதிலும் நம்குலத்திற்கு தாழ்ந்த க்ஷத்திரியனை இந்திரனும் முக்கடவுளுமென உரைத்தால் நாமெல்லோரும் எதுக்காக சந்தியாவந்தனம் ஜெபதவம் யாகாதியெல்லாம் கடவுளைக்கோரிசெய்யவேண்டும் இந்த அரசனைக்கோரி செய்யலாமே இந்தவரசனும் இந்தயாகத்தை வேறுகடவுளைக்கோரி ஏன் செய்ய வேண்டும்? இவ்வரசன் நம்மை நமஸ்கரிப்பதும் நாம்

ஆசீர்வாதம் செய்வானேன் இவைகளையோஜிக்குமிடத்தில் பிராமணனுக்குள்ள குலகுற்றத்தையும் மானக்கேட்டையும் காட்டுகிறது. நாம் பிறனை சொல்வானேனென்று வருந்த இச்சந்தேகத்தைத் தீர்க்க ஜனகாதிகளிடம் சொல்ல ஜனக்குமாரர் ராஜஉரிமை சொல்லியிருப்பதை அறியவில்லையா அரசே.

இராஜன் வசனம்:— அறியேன் சுவாமி என்னசொன்னார்.

## பரஞ்சோதி இராஜனிடப்பெருமைகூறல்.

### விருத்தம்.

போதிக்கும் நான்மறையை வேதியர் புகன்றிட
புரந்தரனால் விண்மாரி பூசெழிக்க பொழிந்திடுதல்
பாதிக்கும் வழக்கறுத்து நீதி பகர்ந்திடுதல்
பசுக்கள் கன்றீந்து மிக பால்தனை சொரிந்திடுதல்
மாதர்கள் கற்புநிலை வழுவாமல் நடந்திடுதல்
மன்னவர்கள் செங்கோலின் மகத்துவமென்றறிந்தவனை
காதலால் முக்கடவுளென கழறலாமென்றுரைத்தார்
கல்லாலின்கீழிருந்த கடவுளுரைகேட்டமேலோர்.

இராஜன் வசனம்:— சுவாமி அப்படிக் கிருந்தாலும் அந்தக் காலம் திரேதாயுகத்தின் முற்காலம் இக்கலிகாலத்தில் அப்படி ஏற்றுக்கொள்வார்களா? சுவாமி

## பரஞ்சோதி இராஜனுக்கு சந்தேகநிவர்த்தி செய்தல்

### விருத்தம்

எல்லையிலா நிதிபடைத்த காஞ்சிபதியிறைவாகேள் நானின்னம் சொல்வேன்
தில்லைவாழந்தணர்கள் பிச்சபுரம் துரையிரண்யவர்மாவை யின்னும்
பல்லவகுல வள்ளலென பஞ்சாக்ஷரப் படியில்வைத் தபிஷேகம் [செய்தார்
வல்லவா நின்பணியைநானேற்க வகையுண்டோ சொல்வீர்மன்னர் [மன்னா.

வசனம்:—துவாபர யுகத்தில் அஸ்தினாபுரத்தை அரசாண்ட துரியோதன மகாராஜன் தன்குருவையும் மற்ற பிராமணர்களையும் ஏவலாளியாகக் கொண்டிருக்கிறான். இக்கலியில் உன் குலத்தில்

பிறக்குமிச்சபுரமிருக்கும் இரண்யவர்மாவுக்குலகமுழுதும்பூலோக கைலாசமெனக்கொண்டாடும் சிதம்பரத்தை பொன்னம்பலமாக்கி தில்லை மூவாயிரவர்களால் நடராஜருக்கு அபிஷேகமாகும் பஞ்சாக்ஷரப்படியில்வைத்து சங்காபிஷேகம்செய்துவருகிறார்கள் அப்படியிருக்க உலககர்த்தாவாகிய உம்முடைய ஏவல்நான்கேட்க என்ன தடை. உமக்காளாய் வாதாபிநாட்டில் போருக்குச்சென்று ஜெயித்துக்கொண்டுவந்த அதின் மூலப்பொருள்களை ஒப்புக் கொள்வீரரசே.

## பரஞ்சோதியார் வந்தபொருளை ஒப்புக்கொள்ளகூறல்.

### விருத்தம்.

விளம்பிய பரஞ்சோதிதானும் வேந்தனைப்பார்த்து முன்னே
தளம்பிய மமதைகொண்ட சளுக்கியபுலி கேசிதன்னை
களமிகும் நமனூர்நாட்டிற் கனுப்பிநம் கொடிநாட்டிப்பின்
வளமிகு வாதாபிநாட்டின் வண்ணபொருள் கொள்ளுவீரே.

### இராகம்—புன்னாகவராளி, தாளம்—ரூபகம்.

பல்லவி.

ஒப்புக்கொள்ளுமரசே வாதாபி நிதியை நீர்
ஒப்புக்கொள்ளும் அரசே.

அநுபல்லவி.

செப்பிய ராஜமுறை தவறிடாமல் நானே
ஜெயக்கொடிதனைநாட்டி திரட்டியபொருள்தானே (ஒப்பு)

சரணங்கள்

1. செப்பாரும்ஹர்ஷவர்த்தனைஜெயித்தோமென்றமமதையாலே
ஒப்பாருமில்லையென்று ஓங்கி கர்வமடைந்ததாலே
தப்பாதிவனிருந்தால் நமக்குபயமகலாதாலே
அப்பாலவனை பதமாக்கி அடைந்தபொருளை கொள்ளமேலே
(ஒப்புக்)
2. குந்தளநாட்டை நம்நாடாய் கொடிகட்டிவைத்தேன்யானே
சந்ததமுமக்கினி சத்துருவில்லை யென்று காணே
முந்தி வாதாபிநாட்டின் மூலப்பொருளிது தானே
சந்தேகமில்லாமலுனதாய் தான்சேர்ப்பாய்பூமானே (ஒப்புக்)

3. வடக்கே தண்டெடுத்து வர்தாபிககரைத் தகர்த்தூளாக்கி
இடுக்கமென்பதில்லாமல் இறைபுலிகேசியை யதமாக்கி
எடுத்த சேனாபதி பட்டம் எங்குந்தெரிய புகழாக்கி
அடுத்த உமக்குத்தாழநான் அளித்த பொருளுமதாக்கி (ஒப்)

4 எல்லாஞ்செய் வல்லசித்தர் ஈசன் தன் கிருபையாலே
நல்லகாலமுமக்கு நாடியயிக் காலையிலே
பொல்லா சத்துரு புலிகேசி பூண்டோடற்றுபோனதாலே
சொல்லாலெவரும் போற்ற துரைத்தனம் செய்யிப்பாலே (ஒ)

## பரஞ்சோதி ஒப்புவித்தபொருளை அரசன் மறுத்தல்

### விருத்தம்.

ஐயரே மாதவரே சுவாமிஎன்மேல் அன்புள்ள பூசுரரே
பையரவமணிந்தோன் தன்னை பணிந்திடும் திருவேபோற்றி
செய்யவேதாகம தேகத்தை பெற்றசீலனே நான்
உய்யவேநீறம்வளர்க்க உண்மையேகொள்வீர் போற்றி.

### இராகம்—தேசிகதோடி, ஏகதாளம்.

### கண்ணிகள்.

1 சாமி நமஸ்காரம் சாமி நமஸ்காரம் சத்தியமாதவரே இந்த
பூமியில் உத்தமவானே நமஸ்காரம் புண்ணியமாதவரே
2 நீயே என்சாமி உன் கைக்கும் வில்லுக்குமின்னேரம்மாதவரே
ஆயிரம்புலிகேசி வந்தெதிர்த்தாலும் பற்றாது மாதவரே.
3 உந்தன் பிறவியுஞ்சிவதொண்டுமிதுவரை உண்ணேனே மாதவரே
எந்தனின் கீழுமை யிருத்தி வேலைஎற்றேனே மாதவரே
4 இவனுக்கு தொண்டுசெய் திடும்பேர்கள்சீர்பாதம்பணிவேனே அந்த
பவனருள்பெற்ற பக்தரென்றெண்ணுமல் பணிகொண்டேன் மாதவரே
5 முக்தியுமக்குத்தவறுகவேனுன்மொழிந்திருந்தாலும்மாதவரே
எந்தனையாட்கொண்டுக்ஷமைசெய்யகையேந்தினேன்மாதவரே
6 என்னாலுமும்மாலும்புலிகேசியைவெல்ல வாகுமோ மாதவரே
அன்னாள்முப்புரமெரித்த ஆதியி னருளல்லவோ மாதவரே

7 வாதாபிநாட்டைத்தகர்த்து தாளாக்கிவந்தபொருள் மாதவரே
வேதாந்தின்மேலே விளங்குவோன் திருவிளையாட்டுபொருளே
மாதவரே
8 நாதாநீரதையும்நம் நாட்டில் மானியம்நலமாகத்தான்கொண்டு
போதாயனர்முதல் மாதவர் பரங்களுக்குப்புண்ணியம் செய்
பின்றாகண்டு
9 காஞ்சிமுதல் பல்லவராட்சி காணுமிடந்தனில் மாதவரே
வாஞ்சைபாயுமதிஷ்டப்படியறம் வளர்த்திட வணங்கினேன்
மாதவரே

வசனம்.

சர்க்ஷாத்காரமாய் அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சோதி சொரூபமாய் நித்தியசைதன்னியநிலையாய் சமரசசன்மார்க்கப் பொருளின் அருள் பூண்டபுண்ணியா நின்பெருமையை யறியாது இதுவரை மோசம் போனேன் சிவக்கொழுந்தே இகத்தில் அருள் கொண்ட இன்பமே எனை கரைபேற்றவந்த கனியே பூமியிலுள்ள பயிர்கள்மேகத்தின் பலனடையகாத்திருக்கும் மேகம் பூமியின் பிரதிப்லன் நாடாது அதுபோல என் இடுக்கண் தீர்த்த இறைவா இறைவன் செயலல்லால் புலிகேசியை ஜெயிக்கமுடியுமா அது அந்த வித்தகன் பொருளாய் கொண்டேன் நானதைக்கொள்ளேன் அந்தப்பொருளையும் இந்நாட்டிலுள்ள இதர பொருள்களையும் மானியமும்கைக்கொண்டு உமக்குஇஷ்டமான இடத்தில் அறம்ஓங்கி சிவதொண்டு புரிவீர், செல்வரே என்னை உம்தொண்டனாக எற்பீர் பாதம்பணிந்தேன் பரஞ்சோதியாரே.

## நரசிம்மவர்ம ராஜனிடம் பரஞ்சோதி முறையிடல்

### விருத்தம்.

போற்றியே பணிந்து நின்ற பூமானை பரஞ்சோதி நோக்கி
ஆற்றியே முடிதரித்த அரசனே சொல்லக்கேளாய்
மாற்றியேயுனைப்பிரிந்து மருதேசம் தனிலேசென்று
தேற்றியே அறங்கள் செய்யத் துணிவேனே சொல்வீர்கோவே.

இராகம்—நாதநாமக்கிரியை, தாளம்—ரூபகம்.

பல்லவி

வையகம்தனிலுந்தனைப் பிரிந்து, உய்யவும் அறம்
செய்யவுமாமோ அரசே.

அநுபல்லவி.

வையகமாளுகின்றோன் மெய்யருளுண்ட
பல்லாருல வள்ளலேகண்ட (வையகம்)

சரணங்கள்.

சொல்லும் வேத புராணம் எல்லாமறிந்த சாக்ஷரே
வெல்லும் ஜெயமதை அள்ளிவந்தேனே நேசரே நான்
அல்லல்படவும் கொள்ளமறந்து
தள்ளிவிடவும் விள்ளத்தகுமோ (வையகம்)

2 இத்தரையில் சந்திரகுலம் நத்தியான் வந்தேனே
பத்தியாவுந்தன்மன புத்திபடி நடந்தேனே
சித்தத்திலெந்தனை நத்திப்பாருமலே
பித்தனுக்குதொண்டுஉத்தமா செய்யவே (வையகம்)

3 நாதா உன்தன் நீதத்துக்குமாறாய்
சூதா நடந்தீரே ஓதுவாய் நேராய்
வேதத்தின் மூலநாதனைத்தேடிட
ஆதாரமாயும்பொருள் வாதேநான் கொண்டிட (வையகம்)

வசனம்.

நாதா என்னை மனம் துணிந்து நல்லவார்த்தை சொல்லித் தள்ளிவிட நீதியோ நான் இந்த ராஜ்யத்தில் சேனாதிபதி பட்டம் பெற்று உமக்குத் தோழனென்று மெச்ச பேர்வாங்கி உம்முடைய பகைகளைக்களைந்து அள்ளிவந்தபொருளை என்னைக்கொண்டு தனியே உம்மைப் பிரிந்துபோ வென்றால் எப்படி மனம் துணியும் மகாராஜனே.

பரஞ்சோதிக்கு ராஜன் திடம் கூறல்

விருத்தம்.

சொல்லொணுத்துயரமுற்றபரஞ் சோதிக்குத் தோன்றல் தானும்
நல்லதோரறஞ்செய்ய இந்த நாட்டிலே ஒப்பக்கேளும்
தெள்ளவேயென் மாயின் முன்னோர் தெய்வயாகாதி செய்தார்
உள்ளவேயதன்படி செய்ய நானுரைத்ததை மறுக்கலாமோ,

இராகம் கமாஸ் ஆதிதாளம்.

பல்லவி.

எனிந்தப்படி மனம்கலங்குகிறீர் சுவாமி உமக்
கேற்றவுதவிசெய்ய பாத்திரன் நானிருக்க (எனிந்த)

அநுபல்லவி.

மீனிலந்தனில் மறைமுறை அறந்தானிருக்க
வேணதுசெய்ய நரசிம்ம வேந்தன் தானிருக்க (ஏனிந்த)

சரணங்கள்

1 செலுத்துஞ்செங்கோல்காஞ்சியில் சேர்ந்தபல்லவராட்சியில்
ஜெனித்தபாபதேவர்முதல் சென்ற தலைமுறை பதினேழில்
வலுத்த ஆட்சிவருஷம் வரை எழுநூற்றிநாற்பத்தேழில்
நினைத்த அன்னதானமீய நியமித்துமக்குச் சொன்னால்
(ஏனிந்தப்படி)

2 முன்பின் யோஜியாமலும் மூதூர்சென்று தானம் விள்ள
அன்பாய் நான் சொன்னபடி ஆதரிக்க என்ன தொல்லை
நன்மனதினோடு நீரும் நானுரைத்தபடி நிலலை
நாதனைக்கணபதீசரத்தில் நத்திப்பணிய என்ன சள்ளை
(ஏனிந்தப்படி)

3 இந்நிலந்தனில் நீர் என்கீழ் பணியமிண்டு
உண்மையாய்பர சிவபக்தி உருகிபண்ணித் தொண்டு
அண்ணலே உமக் காகுங்காலம் வந்ததென்று
பின்னமின்றிநான்சொன்னால் பேதமறசெய்யபயின்று
(ஏனிந்தப்படி)

வசனம்.

கேளும் சுவாமி பரஞ்சோதி பண்டிதரே சோதிச்சுடரின் பிரதிபிம்பத் தோற்றத்திலுண்டாகிய புல்லாதி ஜன்மங் களாய்ப் பிறந்து இயற்கையா யுண்டான புண்ணிய வசத்தால் கிடைத்த மானிட ஜென்மத்தில் பிர்மகுலத்திலுதித்து பூர்வஜென்மபாக்கியத் தால் இந்த ஜென்மத்தில் யானைஏற்றத்தில் சிறந்து கையில் வில்லெ டுத்து எனக்குச் சேனாதிபதியாய் வடபுலத்து வாதாபி நகர் மன் னனைக்கொன்று என்பகையைகளைந்தமட்டில் தம்முடையபூர்வீக வினை முடிந்து விட்டதென்றும் இனி உம்முடைய பிறவிக்குறிய பிர்மஞானத்தை அடைந்து இருவினை பற்றற்று பரமபதமடைய பக்குவம் வந்ததென்றும் அதற்கு சிவபெருமான் ஒத்திருக்கிற தென்றும் சுருதியுக்தி யனுபவத்தாலும் விசாரணையாலும் தெரிந் தும் என்பிதா எடுத்த காரியத்தை நான் கைகொண்டு சமணரை ஜெயித்து சைவவைஷ்ணவமதம் நிலைபெற உத்தேசித் திருப்பதால் அதற்கு அனுகுணமாக அறஞ்செய்யச் சொன்னால்(ஏனிந்தப்படி)

### திருப்புகழ்

நீரழிவு குட்டமீளை வாதமோடுபித்தமூல
நீர்குளிர்வெதும்பு நீவறு மூலநோய்கள்
நேராறுபுழுக்கள்கூடு நான்முகனெடுத்தவீடு
நீடியவிரத்தவெண்பு தசைதோல்சி
பாரறியநவத்துவார நாருமும்மலத்திலாறு
பாய்பிணியற்றபாவை நரிநாய்பேய்
பாரொடுகழுகுகூகை தாமிவைபுசிப்பதான
பாழுடலெடுத்துவிணி ஊழல்வதோ
நாரணியறத்தினாரி யாறுசமயத்திபூத
நாயகரிடத்துகாம மகமாயி
நாடகநடத்திகோல நீலவருணத்திவேத
நாயகியுமைச்சிநீலி திரிசூலி
வாரணிமுலைச்சிஞான பூரணிகலைச்சியேக
வாகினியளித்தவீர மயிலோனே
மாடமீதில்முத்துமேடை கோபுரமணத்தசோலை
வாகுள [illegible]றட்டிமேவு பெருமானே.-

### வசனம்,

இரத்தம், சீ, ஈளை, நிணம், மலம் நிறைந்த ஒன்பது பெரிய துவாரமும் முப்பத்தமூன்றுகோடி ரோமத்துவாரமுமுடைய நான்முகனால் செய்யப்பட்ட கூட்டில் மலமும் புழுவும் நிறைந்த திரேகத்தை நீரழிவு, குட்டம், க்ஷயம், குளிர், காய்ச்சலென்னும் வாத பித்த சிலேஷ்மத்துக்குள்பட்ட வியாதிகளால் பீடிக்கப்பட்டு மரணத்திற்குள்ளாகி நரி, நாய், பேய், கழுகு, காக்கை இவைகள் தாம்தின்னசொந்தமென்னும் மண், அக்கினி தாம்தின்ன சொந்தமென்னும், இதையறியாது மாய்கையில்மூழ்கி மாதர் இச்சையை நாடி மண், பெண், பொன்மேலாசைகொண்டு ஓயாப்பிறவி வந்துழல்வதை அறிவாளிகளறிந்து அன்போடு பசியால்வருந்தி உண்ண எடுக்கும் பாத்திரம் கைசுட்டால் பசியைநோக்காது கைவிடுதல் போல மாயைக்குக்காரணவித்தாகிய திரிசூலியின் பாதாரவிந்தத்தைப்பணிந்து மாயையைவென்று அவளுக்கு அர்த்தபாகம்தந்த சிவபெருமானைப்பூசித்து ஒழியாப்பிறவியை ஒழித்து சாயுச்சியம் பெற பிர்ம்மஞானமடைவார்கள். அப்படி விப்பிரகுலத்தில் பிற

ங்க தாம் பூர்வஜென்மத்தில் எனக்கு செய்யவேண்டிய பாக்கி உக விகுலை தனக்கு சேனாதிபதியாயிருந்து செய்து பரமதொண்டு புரிந்து பாமன் உனக்குத் தன்டுடன் கூடவந்து ஜெயம் தந்திருப்பதால் என்கீழ் உட்மையிருத்தி இனியும் உம்பணிசெய்கேனு. ஒருக்கால் இந்தஅரசில் தமக்கு விருப்பமிருக்குமாகில் இந்தராஜ்யத்தை தாம் அரசாகவிருந்து ஏற்றுக்கொள்ளும். உம்கீழிருந்து நான் ஏவல் புரிவேன், இல்லையாகில் நான் சொன்னபடி அறம்ஏற்பீர்சுவாமி.

## பரஞ்சோதி ராஜனுக்குக்கூறல்.

(திருப்புகழ் வர்ணமெட்டு.)

கருவினுருவாகிவந்து வயதளவிலேவளர்ந்து
கரியேற்றத்திலே சிறந்த அதனாலே
கனத்துரையாமுமது மனதின்படியேநடந்து
கருத்தனடிதான்பணிந்து மிகவாலே
வெறுத்தமுறுபுலிகேசி செறுத்தப்பகையைக்களைந்து
வேண்டியேவந்தேனிந்த புவிமேலே
பொருத்தமுடனேயுமிடம் பெருத்தவாஞ்சையாலேயு மை
பிரியமனம்கூடவில்லை மயலாலே
அருமறைமேல் முதியோனை சரவணனைப்பெற்றோனை
அண்டிமனம்கொண்டேந்தன் பரிவாலே
தருமநிறையபுரிய பெருமையுடனீருரைத்த
தனைசமைப்படியேசெய்ய மதியாலே
திருச்செங்காட்டாங்குடியில் சேருவேனுமதுமனம்
சிதையாமலே காவல்செய்யுன் உறவாலே
மறைதன்பலவேபோற்றும் உரிமையானசிவபதத்தை
மகிழ்ந்துபாடுமெ ராமசாமி தயவோனே.

## வசனம்.

கேளுமரசே, தாம்சொல்லிய வாக்கியங்களையும் நூல்கள் கூவும் உண்மையுள்ளதென்று கண்ணாடியில்கண்ட பொருள்போல் தெரிந்தும் உம்மைவிட்டு தனியேபோக மனம்வரவில்லை. மதியால் சித்தத்தைவென்று உமதிஷ்டப்படியே அறம்செய்ய திருச்செங்காட்டாங்குடி செல்லுகிறேன். நீர் மனதில் எவ்விதகிலேசமும் கொள்ளாமல் உம்முடையதேசத்தையாண்டு சுகமாயிருப்பீர் வேந்தே.

## நரசிம்மராஜனிடமிருந்து பரஞ்சோதி விடைபெறல்

### விருத்தம்.

இந்தவிதம் ராஜனொடு இயம்பியே யேகுவேனென்றுசொல்லி
சந்ததமுமெனைமறவா திருக்கத் தனஞ்செயனை யிருப்பீரென்று
பந்தமுள்ள வாஞ்சையாலே பரிவதன் பிரிவுக்கஞ்சியேதான்
சிந்தைமகிழ் நரசிம்மவர்ம ராஜனிடம் தேங்குவான் விடைபெற
ஏங்குவானே.

இராகம்—ஆனந்தபைரவி, தாளம்—ரூபகம்
(வழிவிடப்போன அத்திரி என்ற வர்னமெட்டு.)

பல்லவி

பட்சம்தவராதீர் மன்னனே நான்போய் வாரேன்
இச்சைமறவாதீர் நான் சொன்னேனே.

அநுபல்லவி.

கச்சிநகர்தனக்கு உச்சிதபூமானே
மெச்சிய கீர்த்திநாட்டி அச்சமறவாழ்கோனே (பட்)

சரணங்கள்.

1. [illegible]று முனைமறவேன் என்றூதூர்சென்று
[illegible]ற பணிபுரிவேன்
தோன்றும் கணபதீசன் துணையைநான் கைக்கொண்டு
மாற்றமில்லா அறம் புரிவேன் மன்னுநின்புவியை ஆண்டு(பட்)
2. உம்வாக்குதன்னைக்கேட்டேன் வினையால்வந்த
உலக இச்சையை மறப்பேன்
நம்மைநாமுமறிய நாடி அறம்புரிய
செம்மை வினைதெரிய செய்வேனுமக்குரிய (பட்)
3. சரிதை கிரியை யோக சாரும் மெய்ஞானமோங்க
சற்கதியடையயேக
பரமபதமடைய பண்ணுவேனென்னுடைய
மணந்துரிசிலையயடைய மாட்டுவேனும்முடைய (பட்)
4. அண்டபிண்டத்தை ஏற்ற மூலஜோதியால்
விண்ட உருவெளித்தோற்ற
தொண்டரவரைப்போற்ற கண்டவர்பூமாரிதூற்ற
அண்டிநேர்தனைக்காத்த அண்ணலடிமலர்சாற்ற (பட்)

வசனம்.

அக்கினிகுலக்ஷத்திரியராய் பல்லவகுலமாமணியாய் பரமதேவ வம்சபரம்பரையாய் வந்து காஞ்சிபதியாய் அகிலமெங்கும் அநீதி மீராமல் காத்து அஸ்வமேதயாகம்புரிந்த அண்ணல் சிவஸ்கந்தவர்மா பேர்ஓங்க மகேந்திரவர்மாவுக்குப் பதவியளிக்க வந்தபாலனே உம செங்கோல்சாயாமல் ராஜ்யத்தைஆண்டு இந்துமதம் சீர்குலையாமல் காப்பாய் அரசனே, நான்போய்வருகிறேன் ஆசீர்வாதம்.

## விடைபெறும் பரஞ்சோதிக்கு ராசன் தன்மனநிலை கூறல்,

(இருண்டமேகம் சாமளவர்ணம் என்ற வர்னமெட்டு.)

1. அண்ணலையுமை மண்ணினில்விட்டு என்னமாஉய்வேனோ
பண்ணவேயறம் சொன்னதுநல்ல புண்ணியம்தானே
2 மண்ணிலுதித்த உன்னதப்பிறவி மானிடர்கானே
உண்மையறிய எண்ணிப்பார்த்தால் கண்ணியர் நீ தானே
3. முன்னமேஉம்மிட ஜென்மத்தைபார்க்கில்உன்னதகுலந்தானே
சொன்னவமைச்சர் வண்ணத்தைக்கேட்டு விண்ணப்பம்
செய் தமனே
4. விண்ணவர்போற்றும் பொன்னவரேற்றும் நன்னயமகானே
என்னவிதமாய் உன்னைப்பிரிந்து மண்ணிலிருப்பேனே
5. தன்னறிமாலயன் எண்ணித்தேடியும் கண்ணில் காணேனே
உன்னை தேடி மண்ணுளோர்போற்ற நன்மை பெருவோனே
6. அன்னமீதேரும் வண்ணவிநோதன் எனைபடைத்தோனே
இன்னிலமதில் உன்னுடன்வர முன்னெழுதானேனோ
7. அண்ணலடியுமக்கு என்றுவருமோ மன்னநான்பார்ப்பேனோ
என்னையுமப்போ உன்னிதயம்கொள்ள கன்மம்படைப்பேனோ
8 சொன்னபுராணம் உண்மையறிந்து பண்ணியடித்தோனே
அன்னையாயிருந்து அன்புராமசாமிக் கருள்தாசிமானே.

வசனம்.

சோதி சுடரொளியினருளைப்பூண்ட சுவாமி, உன்னைப்பிரிந்தென்னவிதமா யிந்தமண்ணையாள்வேன். உமக்குத்தொண்டு புரிந்து உம்முடன்கூடவிருக்க அன்றுபிரமன் எழுதாக்குறைக் கென் செய்வேன், சம்போ.

## பரஞ்சோதிக்கு அரசன் விடைகூறல்

### விருத்தம்.

உருகுது எந்தன் திரேகம் உரைத்திடும் வார்த்தைகேட்டு
அருமனதாகுதெந்தன் ஐயனே அடியேன்நெஞ்சம்
பெருந்தர்மம்செய்பநீரும் பிரிந்துமேபோகக்கேட்டால்
தாமுடனுனும்சொல்ல தானுமோவித்தை தனிலே

இராகம்—தன்யாஸி, ஆதி—தாளம்.

பல்லவி.

எங்கேயிருந்தாலும் என்மேலேபட்சம்
இருக்கவேணுமையா சுவாமி.

அநுபல்லவி

மங்கைகாமாட்சிபாகன் மறலியை யுதைத்தோனருளா
தங்கியடைந்தஉந்தன் தாள்பணிந்தேன் மெய்ப்பொருளே (எங்கே)

சரணங்கள்.

1. நன்னயகாஞ்சியில் நானாசாயிருந்து
உண்மைதெரியாமலே உன்பணிகொண்டேன் மறந்து
நன்மையடையபோராடி நாடிவந்த யுமைத்துறந்து
பண்ணியவினையறிந்து பாகதியடையதெரிந்து நீர் (எங்கே)
2. மண்ணில் மானிடப்பிறவி வருவதரிதென்றுநமக்கு
மறைகளறைந்த மார்க்கம் தெரிந்துமக்கு
தனனில்மணி நடனமிடும் சற்குருவின் பாதத்துக்கு
சொந்தமாவீரென்று சொன்னேனுன் சித்தத்துக்கு (எங்கே)
3. வேதகுலமுதித்த விப்பராயுனையறிய
ஆவேனுயென்சித்தத்தால் அதனால் நின்னருள்புரிய
சூதனேனுமும்மை சேர்ந்தபலன்தெரிய
நீதாவின் மனம்கறந்து நித்தியமும் கருணைசொரிய (எங்கே)
4 வாதாபி நன்னாட்டின் மன்னன்மேல்வாதாடி
மேதாவியாயென்னை மேன்மையாய் கொண்டாடி
நாதாவென்னைக்காத்த நற்பாதம் மலர்சூடி
காதலாலுன்புகழ்பாடி காப்பேனும் அறம்நாடி நீர் (எங்கே)

வசனம்

சோதி சுடரொளியின் தூய்மையறிந்த மகானுபாவா, தேவ
ரீரை போமென்றுசொல்லவும, இருவென்றுசொல்லவும் கூடாதவ

னாக யிருக்கிறேன். தேவரீர் எங்கிருந்தாலும் என்றும் நெஞ்சில் மறவாமலிருக்கவேண்டும் தவிர நான் இகத்தில் அரசனாக விருப்பதற்குப் பகையில்லாமல் எவராலும் ஜெயிக்கவரிதான புலிகேசியை ஜெயித்து எனை மேம்பாடுசெய்துவைத்த தெய்வ அருட்கடலே இவ்வுலகவாழ்வை நீக்கி பரலோகம் சேரும்போது இடரில்லாமல் பரகதியடைய பாக்கியம் தந்தருளவேணும் குருவே.

பரஞ்சோதியார் வசனம்.

அரசே கேளும், பூர்வஜென்மத்தில் செய்த புண்ணியவசத்தால் இந்த ஜென்மத்தில் மாமத்திய பிருமணகுலத்தில் பிறந்தும் பூர்வஜென்மத்தில் செய்யவேண்டிய பாதகவினை தீராமல் ஒருதரம் விட்ட நாகாஸ்திரம் மறுமுறைவேண்டியும் நான் தொடாததால் உத்தமகுலத்தில் பிறந்தும் க்ஷத்திரியற்குறிய யானைஎற்றத்தில் சிறந்தவனாய் கையில்வில்லெடுத்து அர்ச்சுனனம்சமாய் இக்கலியுகத்தில் பிறந்த புலிகேசியைக்கொன்று பாக்கிவினை தீர்ந்துவிட்டபடியால் உம்முடையவாக்கால் எனைவற்புறுத்தி வேதகுலத்திற்குறிய கடனைச்செய்ய தூண்டியபடி ஒப்புக்கொண்டு செல்லுகிறேன். நான் எங்குசென்றாலும் என்ன நன்மையடைந்தாலும் உம்மைமறந்தடைவேனோ அப்படிமறந்தவன் சத்தியம் தவறியவனாகமாட்டானோ. எத்தனைகோடி புண்ணியமும் தவமும்செய்தாலும் சத்தியம் தவரினவற்கு பலன் கிட்டாது. ஒருநாளும் உம்மை மறவேன். இப்போது நான் செய்யும் தொண்டுவேலைக்கு நீரே மூலபுருஷராயிருந்து தூண்டி விடுகிறபடியால் இத்தொண்டுவேலையில் கடவுளடி எனக்குக்கிடைப்பது நிச்சயம். அப்படி கடவுளடி கிடைக்கும்போது முந்தி யுமக்குப்பதம்கேட்டு பின்னால் நானபதமடைவேன். அது இந்த பூமியுள்ளவரையில் என்னை துதிப்போர்கள் முன்னுமைச்சிந்தித்து பின்னெனைப்புகழ்வார்கள். உம்மை என்னாளும் மறவேன். இது சத்தியம்.

அரசன் வசனம்.

சுவாமி, கிருதார்த்தனானேன். நான் இகத்தில் சிம்மாசனம் தாங்க. மெத்த பிரயாசையுடன் புலிகேசியைவென்றுவந்த புகழுக்காகவும் எனக்கு பரத்தில் கதிதேட தொண்டுபுரியப்போவதாலும் இந்தகாஞ்சிபட்டணமும் இதைச்சேர்ந்த நகரங்களும் ஜெயப்பிரதாப சந்தோஷமடைய நானே பட்டணலங்காரம்செய்வித்து ஆல

யங்களுக்கு நூதன அபிஷேக அர்ச்சனைகள்செய்து அந்தணர், யாசகர், கவிஞர், முறைமேய அன்னதானம்செய்து போருக்கு தேவரீருடன் உதவியாய்வந்த சேனைக்காவலர்கள் அதிரதர் மகாரதர் யானை குதிரைப்படைகளுக்கு தாங்களிருந்து அவரவர்களுக்குச் செய்யவேண்டிய சன்மானம் செய்துபோகவேணுமையா சுவாமி.

பரஞ்சோதி வசனம்.

ஆஹா அப்படியே, அது நியாயமானகாரியம். யுத்தத்தை நடத்தினவன் நானானதால் அவரவர்கள் வீரம்தெரிந்து செய்யவேண்டிய தவசியம் அப்படியேசெய்வோம். இப்போது திருச்செங்காட்டாங்குடியில் என்பத்தினி என்வரவைஎதிர்பார்த்து தவித்துக் கொண்டிருப்பாள் என்னுடையவரவை அவளுக்கு தெரிவிக்க தூதர்களை அனுப்ப எண்ணங்கொள்ளுகிறேன்.

அரசன் வசனம் :—ஆஹா அதற்கென்னதடை. தூதர்காள் நமது சேனைகோன் ஆக்ஞையை எதிர்பார்ப்பீர்களாக.

தூதர்கள் வசனம் :—சித்தம் உத்திரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

பரஞ்சோதி வசனம் :—நாம் போருக்குச்சென்று இதுவரையில் நடந்துவந்த விவாதத்தை திருச்செங்காட்டாங்குடிக்கி அதிக விரைவாய்ச்சென்று நமதுபாரியாள் நங்கைக்குச்சொல்லவேண்டும் தூதர்களே.

## பரஞ்சோதி தூதர்களுக்குச் சொல்லல்.

### விருத்தம்.

சொன்னமொழிதவாத தூதர்களே சொல்லக்கேளீர்
நன்னகர் திருச்செங்காட்டாங்குடி நாடியேநீங்கள்போய்
உண்மையாமென் மனது உகந்திடும் நங்கைசிந்தை
தன்னிலேகளிக்க ஜெயசேதி சாற்றுவீர் என்னுரை ஏற்றுவீரே.

இராகம்—சாவேரி சுருள், தாளம்—ரூபகம்.

பல்லவி.

சொன்னார் உன்நாதனென்று என் நங்கைமுன்னேசென்று
சொல்வீர் சுகதூதர்களே.

அநுபல்லவி.

செந்நெல் வளர்காஞ்சி ஜெயநரசிம்மராஜன்
சேனாதிபதியான சிவனடி பரஞ்சோதி (சொன்னார்,

சரணங்கள்

1 வடபுலத்து வாதாபி மன்னன் புலிகேசி மேலே
படையெடுத்துசென்ற பரஞ்சோதியர் முன்னாலே
திடமாகவேசசனை சிந்தித்துப் போனதாலே
அடைந்தார் ஜெயமென்று அறைவாய் நீமேன்மேலே
விடையேருவியலனை வேண்டியருள் துளிக்க
உடையென்வாளால் புலிகேசி உருண்டானென்று களிக்க
(சொன்னார்)

2 மண்டல அரசரும் எண்டிசை அதிபரும்
அண்டத்திலவனுடைய தண்டுவகை சேனையும்
கொண்ட தம்பி விஷ்ணு வர்த்தனும் பலரும்
அண்டையிலேயிருந்தும் பண்டுவினை முடிந்தும்
மண்டிகளிரியிடு சண்டையிலெனது வாளால்
கண்டங்கண்டமாய் துண்டமானனென்று (சொன்னார்)

வசனம்.

கேளும் தூதர்களே வாதாபி நகர்மேல் சண்டைக்குச் சென்ற உம்நாதன் ஜயத்துடன் காஞ்சிபட்டணம் வந்திருக்கிறு ரென்றும் நாளையதினம் ரதகஜதுரகபதாதிகளுக்கு சன்மானம் செய்து களித்து உடனே ஆவலுடனும்மை பார்க்கக் கருதியிருக் கிறுரென்றும் சந்தோஷம் தெரிவிப்பீர்கள் தூதர்காள்.

தூதர்கள் வசனம்:— அப்படியே மகாபாக்கியம் சுவாமி

இராசன் வசனம்:— வாதாபி நகர் மன்னன் புலிகேசிமேல் படையெடுத்துஜெயம் பெற்றுவந்த பரஞ்சோதியாரை புகழ்ந்து கொண்டாடகமது பட்டணத்திலுள்ள சகலதேவாலயங்களுக்கும் அபிஷேகாதி செய்து பட்டணமலங்காரம் செய்து அந்தணர் யாசகர் முதலானவர்களுக்கு அன்னதானம் செய்ய நியமிப்பாய் மந்திரி.

பரஞ்ஜோதியாரே நமது பொக்கிஷமிருந்து போர்வீரர் களுக்கு உமதிஷ்டப்படி வெகுமதியளிக்கச் சொருகிறேன்.

மந்திரி வாதராசி நாட்டிலிருந்து வந்த பொற் குவியல்களை சேனைகோனோடு கூடயிருந்து கணக்கிட்டு பரஞ்சோதியார் முத்திரையுடன் திருச்சங்காட்டாங்குடிக்கு அனுப்புவீர் மந்திரி.

மந்திரிவசனம்:— அப்படியே.

இராஜன் வசனம்:— சுவாமி பரஞ்சோதியாரே தேவசந்நிதானம்போய் வரலாமோ?

பரஞ்சோதி வசனம்:— அப்படியே.

## காமாட்சியம்மன் சந்நதியில் பரஞ்சோதிவேண்டல்

### லாவணிவர்ணமெட்டு.

1 தேவியே நாதன் திருவுளம்மகிழ்ந்திடும்
தெய்வகாமாட்சி தாயே எனக்கு வரம்
செய்யாம் கடாட்சிப்பாயே.
2 கூவியேஎன்னை கொண்டு தொண்டுசெய்ய
கூறாரூர் மன்னனும் அதற்கு
மாறின்றி சொன்னேனனும்.
3 உந்தன் மனமுவந்து எந்தனை காத்து
…ருதியைத்தாருமம்மா அன்பனை
கருதியே காருமம்மா.
4 செந்தாமறைமுகம் தெரிசிக்க நான் வந்தேன்
சிருவனைப்பாருமம்மா அருள் தா
பெருமனம் கூறுமம்மா.
5 கச்சிநகர்தனக்கு மெச்சிப் பிறந்திட்ட
கருணைகரவ்கியே உந்தனை நான்
சரணம் செய்தேன் நிதியே
6 பட்சம்வைத்தெந்தனை ரட்சித்தின்னேரம் பரி
பாலிக்கவேணுமே எண்ணுமரம்
படைக்கவே தோணுமே.
7 நிக்ஷபமாக நீயும் இக்ஷண மருள்புரிந்து
சக்ஷிநாணந்தம் தாருமே அட்டியன்றி
மெச்சியே யெனக்காருமே.
8 குளத்திலழுத குழந்தைக்கி கிண்ணம்
கொண்டு பால் தறவில்லையா நானென்ன
சொண்டனு பாவ தொல்லையா

9 நிலத்தில் பிறந்து நின் கருணையில்லாமல்
கிற்பதிலென்ன பாரம் தந்பெருமை
எற்பதி லென்ன சாரம்

10 ராமசாமி போன்ற நல்லடியார் துதி எந்
நாளும் கேட்டதாயே என்சொல் கேட்டு
மேலும் காப்பாய் நீயே.

### பரஞ்சோதி வசனம்

கேளும் சபையோர்களே பூர்வஜென்ம புண்ணியத்தால் மர்மத்திய பிர்மகுலத்திலுதித்து பிரார்த்த பாக்கியினை தீர க்ஷத்திரியகுலத்திலடுத்து கையில் வில்லேலடுத்து அம்பு தொடடு யானை எற்றத்தில் தேர்ந்து அநேக உயிர்களைக் கொன்று பூர்வ ஜென்ம பாக்கிதீர்ந்துவிட்டபடியால் என் சொந்தகுலமாகியபிராமணர்க்குரிய பிர்மஞானம்கைப்பற்ற சிவதொண்டுபுரிய திருச்செங்காட்டாங்குடி போகிறேன் நானிதுவரை இந்த பட்டணத்து சேனாதிபதியாயிருந்து பழகியிருந்தமைக்கு நான் உங்களிடம் சொல்லிக்கொண்டு விடைபெற்று போக வேண்டியதவசிய மாகையால் ஒவ்வொரு வீடு தோரும் சென்று சொல்லிக்கொள்வது கஷ்டமும் காலதாமத[illegible]மாகையால் இத்தெய்வ சன்னிதானத்தில் நிறைந்த ச[illegible]ர்களில் பெரியோர்கள் யாவருக்கும் என்சிறம்வணங்கி கைகூப்பி தொழுது நானின்று முதல் சிவதொண்டுபுரிய திருச்செங்காட்டாங்குடி போகிறேன் நானிதுவரைஎன்ன தவரு செய் திருந்தாலும் அன்னை தந்தைபோலிருந்து ஆதரிக்கக் கோருகிறேன்.

### பரஞ்சோதி சபை வணக்கம்

சேந்தமிழுலகினில் என்ற வர்ணமெட்டு

இந்தசபைதனில் வந்திட்ட பெரியோர்கள்
செந்தாமரை பொற்பாதமே மணப்பூர்வமாக
சிந்தித்தேன் உண்மை நீதமே
செப்பிய மொழியில் தப்பிதமிருந்தாலும்
ஒப்பியேஎன்னை மெய்பித்தெனக்கு
தேருதல் சொல்ல வேணுமே காஞ்சிகாண்டம்
சென்றதிதோடு காணுமே.

காஞ்சிகாண்டம் முற்றிற்று.

சிவமயம்.

# மகிழ்ச்சி காண்டம்.

## வெண்காட்டுநங்கை வருகிற விருத்தம்:

மிஞ்சிய திருச்செங்காட்டாங்குடியில் மேவிய ஒளியாய் மின்னும்
செஞ்சிறு தொண்டனார்தன் தேன்மொழி மாதுதானும்
கொஞ்சிய கிளிமொழியும் கோவைவாய் பல்லொளியும்
உஞ்சித நடையுமன்ன உயர்ந்தநல் பார்வையோடும்
சஞ்சித வினையறவே தண்டைகள் சிலம்புகொஞ்ச
நெஞ்சினில் கணவர்பாதம் நினைத்துமே துதித்துக்கொண்டு
அஞ்சியே யிருக்கும்நல்ல அன்புள்ள தாதியோடு
வஞ்சியும் சிவனைப்பாடி வருகிறாள் சபைக்குத்தானே.

## இராகம் மத்திமாவதி ஆதிதாளம்.

### பல்லவி.

அன்னை நங்கையும் வந்தாளே வெகு அற்புதமான கற்புக்காரி
அன்னை நங்கையும் வந்தாளே.

### அநுபல்லவி.

தன்னை பாலித்திடும் சந்தனத்தாதிகூடி
மன்னர்பரஞ்சோதி வாவை எதிர்நாடி (அன்னைநங்)

### சரணங்கள்.

மங்கையர் எனும்பேராய் மனதில் சிவனைநேராய்
மருவும் பக்தியே கூறாய் மாநிலம் புகழ்சீராய்
மந்தா மருமலர்க்குகந்த மலர்ந்த அரவிந்தா
அலர்ந்திருந்த செந்தா மறையைப் போலுகந்த
திருநுதலிலணிந்த திலகத்தில் கலந்த
திவ்ய கஸ்தூரிபுனைந்த தேமல் மார்பையடைந்த
தேவிக்குதேவியிவளேஜோடு மூவரும்புகழுமிவள்மேம்பாடு
ஆவிபரஞ்சோதிமேல்கூடு அருந்ததிஅனுசூயைஇவளுக்கீடு
(அன்னை நங்கை.)

காவிவிழிமுகத்தை கண்டோர்கள் தெரிசிக்க
காதிலணிந்த காப்பு கங்கணம் பிரகாசிக்க

கண்டு மானிடர் பயங்கொண்டு அஞ்ஞானமதுவிண்டு
செய்யவே அறமுண்டு ஜென்மம் வந்ததேபண்டு
வினையறிந்து தொண்டு வேண்டிப் புரியும் பெண்டு
மன்னன் மகிழ் பூச்செண்டு மாறில்லா கல்கண்டு
செந்திருமாதைத்தேவர்கள் ஏற்க திகம்பரிமுதல்யாவரும்பார்க்க
மந்திர வேலன் மங்கையர் நோக்க மாது நங்கை கற்பனைதகார்க்க

(அன்னை நங்கை.)

வடபுலத்து வாதாபி மன்னன் புலிகேசி மீதே
படையெடுத்து போனநாதன் பட்சம் மறவாதகோதே
ஏது இவளைப்போல மாது பூமியிலிருக்காது
பதிவார்த்தைதக்கு வாது பகர்ந்திடாள் நிமைப்போது
நீதமுள்ள பூங்கோது நினையாளெவர்க்கும் நீது
நங்கை யிவளிப்போது நாடும் கடவுளடிமீது
அஷ்டலட்சுமி யாவருங்கூட அமறரை யேற்றிடும்சம்பைகள்பாட
இஷ்டப்படி எண்ணியதுநாட இணையில்லா இவள் ஈசனைத்தேட

(அன்னை நங்கை.)

சீவிய கூந்தலின்மேலே செண்பகப்பூ நடுவே
ஜெனித்த சந்திரன்போலே திகழும்பிறை ஒளியாலே
மாட்டி லாகிடி முடிசூட்டி பின்னல் ஜடையை நாட்டி
மாணிக்கத்தோடு பூட்டி வைறபதக்கம் காட்டி
பொன்னூலணிந்த மேட்டி பொற்சரிகை துட்டி
புனை ஒட்டியாணமீட்டி பொற்பாத சதங்கைகூட்டி
இந்திரனவந்து ஏற்றிடும்நாரி இமயகிரிதனிலே அமர்ந்தஒய்யாரி
சந்திர சூரியர் துந்துமிவிரி சற்குண பாண்டியராஜகுமாரி
மெச்சும் (அன்னை நங்கை)

வசனம்.

எந்தனன்புக்குரிய விஸ்வாச சந்தனத்தாதியே என்னை உன்னிடமிருந்து தினம் தினம் கணபதீஸ்வரனை தெரிசனம் செய்திருவென்று நமது அரசன் நரசிம்மவர்மனிட நன்மையை நாடி வாதாபி நகர் மன்னன் புலிகேசிமேல் படையெடுத்துப் போன என்நாதன் அடிக்கடி தூதர்கள்மூலமாய் சமாச்சாரம் அனுப்பிக்கொண்டிருந்தார் கடைசியாய் வந்த சமாச்சாரத்தில் உலகத்தில் போரில் புலிகேசியைப்போல் சமர்த்தனை பார்ப்பதரி

தென்றும் அதனால்தான் கன்னோஜி நாட்டை பரிபாலித்த ஹர்ஷ வர்த்தனை முறியடித்தானென்றும், அவன் தம்பி விஷ்ணு வர்த்தனை என்னை அம்பால்முடித்துவிட்டேன் யென்றும் சண்டை நெருக்கடி சமையமென்றும் ஒருவாரத்தில் ஜெயாப ஜெயம் தெரியுமென்றும் சேதிவந்து இன்றைக்கி ஒரு வாரத்துக்கு மேலாகியும் எவ்வித சேதியும் தெரியவில்லை. ஜெயாப ஜெயம் கணபதீஸ்வரன் செயல் இன்னதென்றறியேன் என்செய்வேன் பாங்கி.

## விருத்தம்.

வந்தவென்காட்டு டம்மைதானும் வரிசையுள்ள தாதியோடுகூடி
எந்தன் மன்னன் வாதாபி நாட்டிற் கேகிவெருநாளாச்சு தென்று
சிந்தைமிக நொந்தங்கம்வாடி செப்பொணாதுயரத்தோடுமனதில்
அந்தி வண்ணனருளைப் போற்றி ஆற்றுவாள் தாதியுடன் சாற்று
வாளே

இராகம். செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

### பல்லவி.

எப்ப வருவாரோ எந்தனிட நாதன் எப்போ வருவாரோ

### அனுபல்லவி.

செப்பிய காஞ்சி நகர் ஸ்ரீமான் அரசோங்க
தப்பிய புலிகேசியை வென்று தன் ஜெயமே லோங்க (எப்பவரு

### சரணங்கள்.

வடபுலத்து வாதாபி நாட்டின் மன்னன் புலி கேசிமேலே
படையெடுத்து போன நாதன் பார்வதி தன்னருளாலே
நடையில் பல்லவர் குலம் நாட்டில் ஓங்க மென்மேலே
திடமாகணபதீசரன் ஜெயம் தந்தென் முன்னாலே (எப்ப)
மன்ன நரசிம்ம வர்ம ராஜனுக்காக
என்னை செங்காட்டாங்குடி இனித்திருக்க நேங்கி
தன்னை உலகோர்புகழ சாதிப்பதற்காகச் சென்ற
கண்யனை பார்க்க எந்தன் கண்கள்தேடுதே பாங்கி (எப்ப)
செய்யப் போர் புகுந்தால் ஜெயாப ஜெயங்கள் தானும்
தெய்வ சம்மதியாமே திருவருளை யானறியேன்
பையரவமணிந்த பரமனருளி தென்று
ஐய மறத்தெரியவென் அன்பர் வரும் ரீதியேன் (எப்ப)

## வெங்காட்டு நங்கை வருந்தியதற்கு சந்தனத்தாள் தேற்றல்.

### விருத்தம்.

சார்ந்திய வெண்காட்டு நங்கையை சந்தனத்தாள் தானும் நோக்கி
மாற்றியே விடுவா யுந்தன் மனதுள கவலை யெல்லாம்
போற்றிய கணபதி சுதனருளால பூவையே உன்கணவன்
தேற்றியஜெயத்தோடு வருவாரென்று தேற்றுவாள் ஆற்றுவானே

இராகம். மோகனம். ஆதிதாளம்.

### பல்லவி.

இத்தனை ஐயம் ஏதம்மா பரமனருள் கொண்டவர்க்கு
எடுத்தகாரியம் வீண்போகுமா

### அனுபல்லவி

கர்த்தன் மூவருக்கும் கர்த்த னென்றிருப்பானேன்
காட்டுப்புருவுக்குசதையரிந்த கதையைநாம்கேட்டானே (இ)

### சரணங்கள்.

மட்டில்லாமமதை கொண்ட வாதாபி நாட்டின் மன்னன்
அட்டியில்லாமல் காஞ்சிக்கு அணி வகுத்தானே முன்னம்
கெட்டியாயவனை வெல்ல கேட்டராஜனுக்கு பின்னம்
திட்டிசொல்லாமல்சிவன் துணைபோடுசென்றவர்க்கின்னம்
(இத்தனை)

கத்தி கத்தி சொன்னாலும் கர்த்தன் புகழ் சொலக்கூடுமோ
பத்தினியுன் பார்த்தாவின் பலத்தை தடுக்க நாடுமோ
எத்திசையும் துதிக்கும் ஈசனம்புக்கெதிர் போடுமோ
சத்திவேல் காமாக்ஷிகூட தான் செல்ல ஜெயம் வாடுமோ
(இத்தனை)

எனக்கு வயதாச்சு தென்று இகமா இரும் நீரும்
தனக்கு ஜெயமென்று தான் தூது வரும் பாரும்
மணக்கும் கணபதிசுதனை மன்னனேறி தொழ நேரும்
இணக்கமுள உன்கணவர் இப்போ வருவார் தேரும் (இ)

### வசனம்.

அம்மணிதாயே அன்றனில்சிபிச்சக்கரவர்த்திவேடன் அம்பு
பட்ட காட்டுப்புரு மடியில்வந்துவிழ தன்னை யடைந்த புறவைக்

கர்ப்பாற்ற அம்பெய்த வேடனுக்கு புறாவின் கறி இடை தன் சரீரத்தை அறிந்துகொடுக்க ஒப்புக்கொண்டு திராசில் வைத்து அரசன் திரேகத்திலுள்ள மாமிசம் புறாவும் கொஞ்சம் கொஞ்சமா யறுத்து வைத்து திராசு சரியாகாததால் தலையறுத்து வைக்க ஆரம்பித்தகாலம் கடவுள் பிரசன்னமாகி காட்சி கொடுக்க வில்லையா அப்படி கடவுளின் செயல் இல்லாவிடில் அந்த கதையை எதுக்காக நாம் கேட்கவேணும் கர்த்தன் புகழை பேச ஆரம்பித்தால் ஆயிரம் நாவைப்படைத்த ஆதி சேஷனுலுமாகுமோ கன்னேஜி அரசனை ஜெயிக்கதோ மென்ற மமதை கொண்டபுலி கேசி காஞ்சி நாட்டிற்கு படையெடுக்க தயாராயிருந்ததை தெரிந்த அரசன் நம்நாதனைக் கேட்டால் அவன் உப்பும் தண்ணீரும் சாப்பிட்டு சமையம் வந்த காலம்பின் வாங்கலாமோ ஜெயம் செய்து வருகிறேன் யென்று போருக்கு புறப்பட்ட நாதனுக்கு துணைசத்திவேல் காமாக்ஷிபோயிருக்கும்போது அவர் ஜெயம்வாடுமோ ஜெயத்துடன் உன்னை தேடியநாதன் வருவார் தூதர்கள் இப்போதேவருவார்கள் சிந்தனை செய்யவேண்டாம் தாயே.

## வெண்காட்டு நங்கைக்கும் சந்தனத்தாளுக்கும் வாதம்

திருப்புகழ் மலடி வயற்து மகன் என்ற வர்ணமெட்டு.

நங்—சந்தனத்தாளே நான் தானே சம்மா நீ
சொல்வதை கேட்டு உய்வேனே என்
மன்னவன் வர தடையறியேனே அதை குறியேனே
சந்—வெண்காட்டு நங்கையே வாடாதே ஒரு
பகைமும் வந்து கூடாதே அந்த
வன்புலி கேசி மடிவானே இது இடம் தானே
நங்—பாவி புலிகேசி மடிந்தானே அவன்
ஆவிபோகாமலிருந்தானே நாதன்
மேவிடயிங்கு நான் பார்ப்பேனே குறைதீர்ப்பேனே
படு
சந்—தேவி உன் சஞ்சலம் மாறிடவே உன்னை
பாவியைக் கொன்று கூறிடவே தந்திடுவார்.
தேடிய நாதனும் வந்திடுவார் மகிழ்

## பரஞ்சோதியார் அனுப்பிய தூதர் நங்கையிடம்வருதல்

விருத்தம்.

சொல்லரிய பரஞ்சோதிசொன்ன சுபவார்த்தை தன்னைக்கொண்டு
கள்ளமறியா தூதர் காடுமலை யெல்லாம் கடந்து வந்து
வின்னறிதாம் கற்புடைமை மேவியவெண்காட்டு நங்கையைநோக்கி
உள்ளறிய அன்னையென நினைந்துஉரைத்திட்டார் சுபச்சேதி
நிறைத்திட்டாரே

இராகம். மத்மாவதி. ஆதிதாளம்.

பல்லவி.

சுப வார்த்தை சொல்ல வந்தேன் அம்மா நரசிம்மராஜன்
தூதன் சேவகன் நான் அம்மா

சரணங்கள்.

தவம் தனில் மிகுந்த தாயே முந்த முந்த
சாமிகாரியம் ஜெயம் கேள் நீயே அந்த (சுபவார்த்தை)
சாமி விடும் ஓர் அம்பு பட்டு புலிகேசி உயிர் விட்டு
தானே பூமியில் விழுந்தானே சிவபதமடைந்தானே
சுப வார்த்தை
தபஜெயம் செய்வோர் முன்போல் சாதித்திருக்க தயவாலே
அவனி மீதில் அனைவோரும் அச்சந்தீர்ந்திருப்பதாலே(சுப)
மந்திரி ராஜர் மகிழ்ந்து கொண்டாட வானவராசீர் வாதம்பாட
சந்ததம் புகழஇவரைக்கூட சகலருமேற்றிசுவாமியைவாழ்த்திட
[இந்தசேதி]

வசனம்.

சரணம் சரணமம்மா தாயே நாங்கள் காஞ்சி புரத்தை அர சாளும் நரசிம்ம வர்ம மகாராஜாவின் தூதர்கள் ஜெய சேதி கொண்டு வந்தோம் நமது ஆண்டவர் பரஞ்சோதியார் வடபுலத்து வாதாபிபட்டணத்துக்குபோருக்குப்போய்நாளது ஆவணிமீ 17உ ஆதிவாரம் பகல் 12 நாழிகைக்கு புலிகேசி மன்னனை கொன்று அவ்விடம் மூலாதாரப் பொருள்பொன் குவியல் முதலியவைகளை கைக்கொண்டு அப்பட்டணத்தை நம் நாடாய் கொடிகட்டி பட்டணத்தை காக்க பரிவாரங்கள் வைத்து 25ம் தேதி திங்கள் கிழமை பகல் 20 நாழிகைக்கு காஞ்சிபுரம் வந்து சேர்ந்தார்

ஜெய பிரதாபம் கொண்டாடி சன்மானமளித்து ரதகஜ துரகபதாதி சேனைகளுடன் 29ம் தேதி மாலை 17 நாழிகைக்கு புறப்பட்டு வருகிறார் இந்த சேதி தெரிவிக்க வந்தோம் அம்மா தாயே

நங்கை வசனம்—சந்தோஷம் என்னுளும் வாழி நாதன் வருமளவும்இவ்விடமே இருப்பீர்களாக.

சந்தனத்தாளே வந்த தூதர்களுக்கு பசி யாற்றி வைப்பாய் இது முதல் அடிக்கடி நம்மைத் தேடி ஜனங்கள் வந்து கொண்டிருப்பார்கள் அன்ன கட்டுதல் இல்லாமல் அருசுவை உண்டிகையில்எப்போதும் தயாராய் இருக்கும்படி சுயம்பாகிகளுக்கு எச்சரிக்கை செய்து வை.

சந்தனத்தாள் வசனம்—அப்படியே அம்மணி

## திருச்செங்காட்டாங்குடியில் தங்கை பரஞ்சோதியைக்காணல்.

### விருத்தம்.

நாட்டியே யிந்த வண்ணம் பரஞ்சோதி சென்று வந்த
நற்குறியெல்லாம் தூதர் சொல்லக் கேட்டு
மேட்டியே சந்தனத்தாளிடம் விருந்தன்னம் செய்யச்சொல்லி
விழியாலே நாதனை கரண விருக்கும்போது
ஆட்டிவிடும் பசியால் விழுவோர் கையில்
அண்டருலகத்தமுதம் விழுந்தாற்போல
நீட்டிய சேல்விழியாள் நாதனைக்கண்டாள்
நிஜம் கொண்டாள் நங்கை பரவசமுண்டாளே.

### சங்கராபரணம் அடதாள சாப்பு.

பல்லவி.

கண்டாளே நாதனை நங்கை விண்டாளே மனது சங்கை

அனுபல்லவி.

தென்றிசை தமிழ்நாட்டில் திருச்செங்காட்டாங்குடியில் (கண்டா)

சரணங்கள்.

கந்தமலர்மேலே கைகூடி கண்ணுக்கு கலந்தண்ணீர்விட்டு
கர்த்தனருள் தானே கூடி கண்டேனென்று குறைபட்டு
சுந்தர பரஞ்சோதி பாதத்திலே சொர்ணவாய்முகம்தொட்டு
அணைத்து முலைமேல் இணைத்து உம்பிலே
அடங்கா மகிழ்ச்சிகொண்டடிக்கடி முத்தமிட்டு (கண்)

சிறந்தகுலம் விண்டேனே உன் திருமுகம் காணவெனதோற்றி
தியபாவி புலிகேசி ஊர்போய் தேடிவந்தாயே யென்மனம்தேற்றி
தருவதென்னவென் சிவனே தந்தாயே எனக்கெதிர் மாற்றி
தாயுந் தந்தையும் சகலமும் நீயே எனகணவனே தொழுதேற்றி

(கண்டாளே நாதனை)

வசனம்.

நாதர் தாங்கள் போருக்குச்சென்று வருமளவும் தங்கள் உருவை மனதில் சிந்தித்துக்கொண்டே கணபதீஸ்வரனை தியானித்துக்கொண்டிருந்தேன். ஆனால் தாங்கள் கடிதக்குறைவால் வெகு விசாரமுற்றேன். அதே தினத்தில் தூதர்கள் சுபவார்த்தை கேட்டு சந்தோஷமடைந்தேன். ஆனால் யுத்த சமாசாரம் முழுதும் கேட்க ஆவலுடையவளாயிருக்கிறேன். இப்போது சாவகாசமல்ல சாவகாசமாய் தெரிந்துக்கொள்ளுகிறேன். ஆனாலும் தேவரீர் வந்த இளைப்புதிர தாகசாந்திசெய்துகொள்ள பிரார்த்திக்கிறேன் சுவாமி.

காவடிச்சிந்து சந்தம்.

1 போரில் யானையேறி அமர் நடத்தி ஜெயம்பெற்றுவந்த
சூரரே அழகுமாரரே புகழ் சிங்காரரே நான்போற்றி
சொல்வதை கேளதிகாரரே
போர் நடத்திவந்த இளைப்பு ஆறுகடந்துவந்த களைப்பு
போகதாகம் புசிப்பீரே தேகபலத்தை மதிப்பீரே.

2 தேருதல் உண்டாக நான் செய்த சிற்றுண்டியை மேலும்
பசும்பாலும் சொல்லக்கேளும் சோகம் தீர்ந்திட இன்றளும்
தோல்நீக்கிய முந்திரிச்சாரை துய்ய பாதாமிசீனிச்சர்க்கரை
சேர்த்து காய்ச்சிய திரட்டுப்பாலை உண்ண
சித்தேசன்போலிருக்கலாமிக்காலை.

3 காலையிலுண்ணும் காப்பி யென்று சொல்வாரிது தானே
சீமானே என்கோனே களைதீர உண்ணவேணும் காணே
மேலே உப்புமா தோசையுடன் வேண்டிப் புசிக்க ஆசை
மேவுவேன் சொல்வதை கேளீர் காவியம் ராமசாமி
சீரைப் பாரீர்.

## பரஞ்சோதி தங்கைக்கு பதிலுரைத்தல்
## மேற்படி வர்ணமெட்டு.

1 வர்ணக்கிளி மொழிமானே செழுந்தேனே விழிமீனே
அதை மாறிச் சொல்லுவேனோ நானே
மயிலே சூடாமலே தயவே நீ தவறாமலே கொண்டு
வருவாயலங்கார பெண்ணே கண் நேராகவே எந்தன்
முன்னே

2 எத்தனை கோடிபேரென்ன வன்னிமன்னர் யிதை யுண்ண
நான் இசைந்து பார்த்தேனே முன்னம்
இன்பம் பேசுமொழியாளே பொன்புனைந்த யுடையாளே
இங்கே நீகொண்டுவா மானே நீ சங்கைபேன் செய்குறாய்
தேனே

3 என்பசியறிந்து நீ கண்டு மனமுண்டு இல பண்டு அதை
எடுத்துக்கொண்டு வருவாயின்று
இன்பமான பக்ஷணவகைகள் அன்பான காப்பி மு
தலைகள் இன்னும்
மனதிற்கிசைந்ததை கொண்டுவாராய் அந்த மானன்
ராமசாமி சொன்ன சீராய்

நங்கை வசனம்.

சுவாமி சிற்றுண்டி, பால், பாயசம் தயாரித்திருக்கிறது. அருந்த உள்ளே யெழுந்தருளவேணும் சுவாமி.

பரஞ்சோதி வசனம்.

அப்படியே உள்ளேபோய் தாகசாந்தி செய்கிறார்கள். வெண்காட்டுநங்கை வெளியே வருகிருள்.

வசனம்.— சேனைக்காவலர்களே தங்கள் சேனைகளுக்கு சுவாகு னைக்குயென்ன யேற்பாடு செய்திருக்கிறீர்கள் ?

சே. காவலன் வசனம் —அம்மணி வழக்கம்போல் திட்டம் செய் யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிய கவலை தங்களுக்கு வேண்டியதில்லை அம்மணி !

வெ. நங்கைவசனம்—சக்தனத்தாளே நாதன்சிற்றுண்டி அருந்தி சோகவிடாய்தீர சயனித்திருக்கிறார். நான் உபசாரத்துக் காகச்செல்லுகிறேன். வெத்த சீக்கிறத்தில் அதுகளை உண்டி, பச்சடி, பாயாசம், சித்தம் செய்வாய். தவிரவும் அவாணிந்துவந்த வஸ்திரங்கள் இண்டலாணபடி

யால் நம்வண்ணாத்தியை வரவழைத்து கணக்கிட்டுபோட்டு சலவை செய்யவேண்டியவைகளை சலவைக்கும் மடிக்கு உபயோகமுள்ளவைகளை துவைத்து சாக்ஷடன்கொண்டு வந்து உலர்வைக்க ஏற்பாடும் செய்வாய். சீக்கிறம் சமயல் சித்தமாகட்டும்.

சங். பெ-ம்.— அப்படியே அம்மணி!

சேவகா! நீ அதி சீக்கிறம் வண்ணான் வீட்டிற்குச்சென்று வண்ணானையும் வண்ணாத்தியையும் அழைத்துவருவாய்.

சேவு. வ-ம்.— அப்படியேஅம்மணி!

## வண்ணாத்தி வருகிற விருத்தம்.

செந்திற அக்கினியை சேவிக்கும் குலத்தில் தோன்றி
இன்னிலமாசகல இருந்திடும் அழுக்கை போக்கி
உன்னத ஒப்பிலா உயர்தர ரசகன்பாரி [வருகின்றாளே.
கன்னியாம் நங்கைவிட்டு கருத்த வண்ணாத்தி

## இராகம் மத்திமாவதி ஆதிதாளம்.

பல்லவி.

வண்ணாத்தியும் வந்தாளே வண்ணா சின்னானோட
பொண்ணாச்சியும் வந்தாளே.

அனுபல்லவி.

அண்ணாத்தைமார்களெல்லாம் ஆச்சரியத்துடன் பார்க்க
கிண்ணார ஒயில்பேசி வேடிக்கையாய் கைவீசி (வண்)

சரணங்கள்.

செந்தாமரை முகத்தில் திலகம் தளதளென்ன
சந்த களபம்பூசி கண்டவர் கவறப்பேசி
சொந்த காதில் ஒலிமிக்கி சிங்காரமாய் குலுக்கி
அந்த மாரனால் மயக்கி அவனியுள்ளோரை இயக்கி
சொந்தமாக நங்கை வந்த குடிபங்கை
சொகுசாய் வெளுக்க வெகுசாய்தளுக்க
தாமத் திடதகஜம் தகணம்தனுத்த
திஹஜித்தா ஜித்கா ஜீஹ ஜீஹங்கு
டங்கு டங்கு தைய தைய
தக்கிடகிடகதாய் திக்கிடகிடகதை.
தரிக்கிணதோமென (வண்)

சங். வ-ம்.— வண்ணாத்தி மகளே! எஜமானவர்கள் வந்திருக்கின்றார். வஸ்திரங்கள் திண்டலாக மூட்டைகட்டியிருக்கிறது.

மூட்டையை அவிழ்த்து எண்ணி சேவகனிடம் எழுதி வைத்து சலவை வஸ்திரங்களை சலவைசெய்தும் மடிவஸ்திரங்களை துவைத்து சாத்துடன் இங்கு கொண்டுவந்து உணர்த்துவாயாக.

வண். வ-ம்.—அப்படியே மகாபாக்கியமம்மா தாயே! எஜமாங்கோ வந்திருப்பதால் சாதம் பலகாரம் போடுங்கோ!

சங். வம்—இப்போதுதான் யெஜமான்கோ வந்தார் சாயந்திரம் மடிவேஷ்டி துவைத்து எடுத்துக்கொண்டுவா வாங்கிப் போகலாம்.

குறிப்பு:- மாலை 25 நாழிகை பரஞ்சோதி நங்கை சந்தனத்தாள் சேவகன் ஆசாரத்திலிருத்தல்.

பரஞ்சோதி வம்.—பெண்ணே நங்கை! நான் வடபுலத்துவாதாபி நகர் மன்னன் புலிகேசிமேல் படையெடுத்துச்சென்று அவனைக்கொன்று அவன்நகரத்தை தகர்த்து தூளாக்கி அவ்விடம் ஷ்ரேஷ்டமானமூலப்பொருள் பொன்குவியல் யேராளமாய் கொண்டுவந்தபோது நான் சிவதொண்டுபுரிபவனென்பதை அமைச்சர்களால் அரசன் தெரிந்துக்கொண்டு இதுவரை தன்கீழ்சேனாதிபதியாகக்கொண்ட குற்றத்தை பொருத்து கோடிநிதிக்குவியல்களை என்னையெடுத்து சிவதொண்டுபுரிய அறைந்ததை நான் எவ்வளவோ தடுத்தும் ஒப்புக்கொள்ளாமல் இரதகஜதுரகபதாதிகளுடன் நமக்கு அனுப்பிய சைனியங்கள் காத்துக்கொண்டிருப்பதாலும் நாம் கணபதீசுரன் சன்னிதானம் அடைந்து பணிந்து பொருள் குவியல்களை ஈஸ்வரனது சேமத்தில் வைத்துக்கொண்டு சேனைகளை காஞ்சிபுரம அனுப்பவேண்டியிருப்பதாலும் இல்லறம் நடத்தும் ஒவ்வொருவருக்கும் புத்திரனில்லாவிடில் எத்தனை கோடி புண்ணியம் செய்தாலும் புத்தென்னும் நரகத்தை கடந்து மோட்சமடைந்து அனுபவிக்கமுடியாதென்று வேதம் சொல்லியிருப்பதாலும் அளவிடக்கூடாத திரவியம் நமக்கு சொந்தமாய் இருப்பதாலும் நமக்குப்பின்னால் கோடிசொத்துக்களை காப்பாற்றவும் நமக்குபின்னால் சிவதொண்டு புரிய புத்திரனில்லாதபடியால் கணபதீசுரன் சன்னிதானத்தில் நாம் புத்திரபாக்கியம் அருள்புரிய ஸ்தோத்திரம் செய்யப்போகவேணும். சித்தம் செய்வாய்.

நங்கை வ-ம்.—மகா பாக்கியமையா சுவாமி! சந்தோஷம். இது விஷயம் வெகுகாலம் நமக்கு புத்திரனில்லாக்குறையை தேவரீருக்கு தெரிவிக்க கருதினேன் சுவாமி.

ஐயையோ நானொருபெண் பிறந்த என்ற வர்ணமெட்டு.

## இராகம் நீலாம்புரி ஆதிதாளம்.

### கண்ணிகள்.

1 மைந்தனில்லாக் குறையால் மனதில்மிக நொந்து
பைந்தொடியாள் உம்முன் சொல்ல பயந்தேனே சுவாமி
2 பிள்ளையில்லா பாவியென பேசுமுலகமென்று
பேதைமனந் தளர்ந்து பின்னடைந்தேன் சுவாமி
3 வெள்ளை விடையோன் விமலனருளீதென்று
உள்ளமறியாமல் நின்று உருகி வாடினேன் சுவாமி
4 வாழையடி வாழையாக வந்துபேர் சொல்லப்பிள்ளை
பேழை வயிற்றோனைப் பெற்ற பெருமான்கொடா
தேனோ சுவாமி
5 அன்னை பிதா செய்தபாவம் அணுகினதோ அல்லால் நாம்
முன்னாள் செய்தவினை மூண்டதுவோ சுவாமி
6 என்ன குறை செய்தாலும் ஈசனருளிருந்தால்
தன்னயமான பிள்ளை நமக்குத் தாலாகாதோ சுவாமி

பரஞ்சோதி வசனம்— பெண்ணே நீ யாதொன்றுக்கும் கவலைப் படவேண்டாம். ஈசனருளிருக்குமானால் பிராரத்த சஞ்சித ஆகாமிய வினைகளும் பறந்தோடிப்போகும். சாக்ஷாத் சர்வேஸ்வரரான ஆதிமூர்த்தியான கணபதீசுரனை தெரிசித்து நம் குறையகற்றுவோம் பெண்ணே.

## பரஞ்சோதி நங்கையை கோவிலுக்கு அழைத்துச் செல்லல்.

### விருத்தம்.

இந்த விதம் நங்கைசொல்ல ஏங்கிய பரஞ்சோதி தாமும்
செந்திரு வெண்காட்டுநங்கை திருமுகம் தன்னை நோக்கி
பந்த பாசமதை யறுக்கும் பரமனருளைப்பெறவேநாமும்
முந்த கணபதீசரனை தொழ மொழிந்திட்டாரே.

## இராகம் மத்தியமாவதி தாளம் ரூபகம்

### பல்லவி.

நடந்துவா மயிலே நங்கையெனும் குயிலே நடந்துவா மயிலே

அனுபல்லவி.

படர்ந்த கணபதீசுரன் பாதத்தை தேடிட
பத்திபெற நடந்து முத்தியை நாடிட (நடந்துவா)

சரணங்கள்.

ஜென்ம ஜென்மத்தில் செய்த தவத்தினாலே
ஜெனித்த மானிடப்பிறவி சேர்ந்ததை நாம் உய்ய
மண்ணிலிப்பிறவி மாரிவாராதிருக்க
மகத்துவம் உள்ள பரமனை மகிழ்ந்து பத்திசெய்ய (நடந்)
வாழையடி வாழையாய் வந்து நம்பேர் சொல்ல
வணக்க மறிவுள்ள மகனை நமக்கு புல்ல
தழைக்கும் பதம் சேர்க்க சாஸ்திர ஆராட்சியுள்ள
குழந்தை யொன்று நமக்கு கோதே பத்திக்கொள்ள (நட)
வாதாபி காட்டியிருந்து வந்த பொருளைபவமக்க
நாதன் திருவாலய நற்சமத்தில் சேர்க்க
நீதன் திருவடியை நினைந்து முத்தினை வைக்க
பாதத்தாலே நடந்து பத்தினி யுன்னுருதி தைக்க (நடந்து)

(பொது வசனம்.)

இவ்விதமாய் நங்கை மாதுக்கு பரஞ்சோதி சொல்லி பரஞ்சோதிமுன்னும்நங்கைநடுவிலும்சந்தனத்தாள்பின்னுமாகநடந்து கணபதீசுரன் கோவில் கோபுர தெரிசனம் செய்து திருவாலயம் முக்காலும் வலம்வந்து கணபதீசுரனை பணிகிற விதங்காண்க

ஸ்தோத்திரம்.

திருஞான சம்மந்தர் பாடல்.

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்பநாடோறு
முறை கொண்டு நின்னடியார் முட்டாமே பணிசெய்ய
சிறைகொண்டவண்டறையுஞ் செங்காட்டாங்குடியதனுட்
கறை கொண்டகண்டத்தான் கணபதீசுரத்தானே.
தொங்கலும் கமிழ் சாந்தும கிற்புகையு தொண்டர் கொண்
டங்கையால் தொழுதேற்ற அருச்சுனர்க்கன்றருள் செய்தான்
செங்கயல் பாய வயலுடுத்த செங்காட்டாங் குடியதனுட்
கங்கை சேர்வார் சடையான் கணபதீசுரத்தானே.

பண்.

பைங்கோட்டு மலர் புன்னைப் பறவைகாள் பயப்பூர
சங்கட்டந்தவிர்த் தென்னை தவிராநோய்தந்தானை
செங்காட்டாங்குடிமேய சிறுதொண்டர் பணிசெய்ய
வெங்காட்டுனன லேந்தி விளையாடும் பெருமானே.

(திருநாவுக்கரசு நாயினர் தாண்டவம்.)

சந்த மலர் கொன்றையணி சடையானை கதிர் விடுமாமணி பிறக்கும்
கனகச்சோதி சந்தமலர் தெரிவையொரு பாகத்தானை
சராசர நற்றுணை நாயேன் முன்னைபந்த மறுத்தானை
பணிகொண்டங்கே பண்ணிய நூற்றமிழ் மாலை பாடுவித்தென்
சிந்தைமயக்கறுத்த திருவருளினானை செங்காட்டங்குடியதனிற்
கண்டேன் நானே.

ஆரென்றெண்ணும்மேலே நீரும் யெனறவர்ணை மெட்டு.

தரு. இராகம் சங்கராபரணம் தாளம் ரூபகம்

பல்லவி.

பிள்ளை யொன்று நாவேணும் அறனே யென்
பேர் சொல்ல மகனுக்காகும்

அனுபல்லவி.

வள்ளலே உமக்கு தொண்டு வர்ேணுர் புகழ நாளுமே
உள்ள பக்தி செய்தாலும் உயரப்போகமகன் வேணுமே (பிள்ளை

சரணங்கள்.

தெள்ளிய ஞானம் வந்தாலும் திருப்பதம் சேருதற்கு
புள்ளியாய் ஒரு மகனை பெருதாரை தள்ளுவாரே
நல்ல குலத்தில் பிறந்து நாளுந்தன் பணிகொண்டேன்
செல்ல மகனை தந்து சீர்பாதம் கொள்ளுவீரே (பிள்ளை)
இல்லறம் தனை நடத்த இருக்கும் மானிடரெவர்க்கும்
சொல்லும் புத்திரர் அவசியம் தோன்றவேதான் வேணுமே
எல்லாருமறிய உன்னை ஈசா நான் பூசித்தும்
புல்லொணு புத்தென்னும் பூமியை சேராக்காணுமே (பிள்ளை)
ஆசதீரவுடையோனும் அங்க வீனமில்லானும்
பாசநீய பெற்றோர்களை பரகெதி சேர்ப்போனும்
நீசநெஞ்சடையோனும் தீர்க்க தரிசியுமாய்
பேருலகிலுனைப்போற்ற புத்திரனெனக்கு மகனும் (பிள்ளை)

உன்னை பூசிப்போருக்கு உலகிலறி தொன்று மில்லை
என்னைப் பெற்றோருக்குப் பின் எள்ளுநீரிறைப்பாரில்லை
கண் முன்னுமெடுத்து கண்ணே யென மகனில்லை
என்ன பாவம் செய்தேனோ ஈசா நீர் கொடாதொல்லை (பிள்ளை)

வசனம்.

ஆண்டவனே உம்பெரும் புகழை பேச என்னால் கூடுமோ உம்மை தொழுவோருக்கு உலகிலறி தொன்றில்லை உம்மை மன மாறப் பூசிக்கும் யெனக்கு புத்திர பாக்கியம் நீங்க மற்றயாவும் குறைவில்லை உத்தமகுண லெக்ஷணமமைந்த புத்திரனளிக்க வேணும் சோதியே சுடரே ஆண்டா விளக்கே.

குறிப்பு: பரஞ்சோதி வெண்காட்டு நங்கை இருவர் காதிற்குமட்டில் கேட்கும்படியாய் அசரீரிவாக்குரைத்தல்.

விருத்தம்

அஞ்சேல் அஞ்சேல் அரும் பரஞ்சோதி கேளாய்
சஞ்சித ஆகாமியம் சாரும் பிராரத்தம் நீங்கவேங்கும்
மிஞ்சிய அம்ச மேனியும் கற்பம்வந்து
குஞ்சித பாதம் கொள்ள கோதி அன்னதானம் செய்வீரே

பரஞ்சோதி வசனம்.

மாது கேட்டினையோ ஞாபகத்திலிருக்கட்டும் தேவரகசியம் பிறரறிய வொண்ணாது

நங்கை வசனம்--அறிந்தேன் சுவாமி ஆண்டவனருளை யாரறிவார் அறிவார் அறிவார் அருளின் பெருமை அருட்பெருஞ்சோதியே

பரமசிவன்பேரில் பண் வடவலூர் திருவருட்பா.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலம் கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே
என்னரசே யான்புகலு மிசையுமணிந்தருளே (சேவித்தல்.)

பரஞ்சோதி வசனம்.

பெண்ணே நாம் கோரிவந்த காரியம் எல்லாம் பூர்த்தியாய் விட்டது பொருள்களை ஆண்டவன்சமதத்தில் வைத்துவிட்டோம் புத்திரபாக்கியமும் பெற்ரோம் இரவு நாழிகையையும் பத்தாய்விட்டது வீட்டுக்கு செல்லுவோம்

நங்கைவசனம்.—அப்படியே

பொது வசனம்—இவ்விதமாய் பரஞ்சோதியாரும் மனையாளும் வீட்டுக்கு வந்தார்கள்

மறுநாள், பரஞ்சோதி வசனம்.—சேனைகாவலர்களே நாமிதுவரையில் சகோதரபாகமாக என்வருதிக்குள் நீங்கள் நடந்துவந்ததால் எனக்கு நல்ல பெயர்கிடைத்தது புலிகேசியை வென்று ஏராளதிரவியங்களுடையவனாய் சிவதொண்டுபுரிய என் ஜென்மவூராகிய இத்திருச்செங்காட்டங்குடி வந்து சேர்ந்தேன் நீங்களும் விஸ்வாசமாய் என்னுடன்கூடவும் எனக்கு முந்தியும் வந்திருப்பீர்கள் காலதாமதமாகிறது நீங்கள் ராஜசேவைக்கு செல்லவேண்டியதவசியம் என் உத்தியோக முறையிலுங்களை இகழ்ந்திருந்தாலும் ஒருவரைவிட்டோருவரை புகழ்ந்திருந்தாலும் நீங்களெல்லோரும் என்னை சந்தோஷமாய் எற்றுக்கொள்வீர்களென நம்புகிறேன் இதோ உங்களிடம் கொடுக்கும் கடிதத்தை ராஜசமுகத்தில் சேர்ப்பித்து என் ஆசிர்வாதம் சொல்வீர்களாக.

சேனைக்காவலர்கள் வசனம்.

சுவாமி நமஸ்காரம் நாங்களிதுவரை அடைந்த ஆனந்தமும் சந்தோஷமுமினி எங்களுக்கிருக்குமா என்று சந்தேகிக்கிரோம். தேவரீரடைந்த சிவதொண்டுவேலையைபற்றி பேரானந்தமடைந்தாலும்கூட எங்களைக்காப்பாற்ற தங்களைப்போலொத்த துரை கிடைக்கார்ளென்று விசாரமடைகிரோம் அவ்விடம் ஆசிர்வாதமும் அருளும் என்றும் மறவாதிருக்கவேண்டுகிரோம் நமஸ்காரம் போய்வருகிரோம் சுவாமி.

அம்மணி தாயே தங்கள் குழந்தைகளாகிய எங்கள்மீது எப்போதும் பட்சம்மறவாதிருக்கவேணும் தாயே போய்வருகிரோம்.

பறஞ்சோதி நங்கை வசனம்—ஆசிர்வாதம் எப்போதும் க்ஷேமமாக வாழி போய் வாருங்கள்.

## பரஞ்சோதியார் கடவுள் பூஜைசெய்துக்கொண்டு நங்கையிடம் கூறல்.

### விருத்தம்.

அன்னமே கிளியே எந்தனன்புள்ள மாதேகேளாய்
பன்னக பூஷணனமக்கு பகர்ந்தநல் வார்த்தைதக்கொண்டு
இன்னிலம் தன்னில்யாரும் ஏற்கவே யொருமனதாய்
அன்னதானம்செய்ய மடம்கட்டி ஆக்குவோம் தேக்குவோமே.

வசனம்:—கேளும் நங்கைமாதே பரமன்அருளிய அசரீரிவாக்கின்படி நாம் மடம்கட்டி அன்னதானம் செய்வோம். உன்கருத்தென்ன தெரிவிப்பாய் மானே.

### நங்கைசொல் விருத்தம்.

முக்திதானடைய முன்னோர்கள் மொழிந்திட்ட முறைப்படியே
பக்திநெறியல்லாது வேறுவழி பாரிலில்லை பந்தாவேயுமது
சித்தத்தில் நினைந்ததைச் செய்யதேவரீர் கொண்டலைவக்குநான்
நத்தியே அமைந்து நண்ணுவேன் வேறாக எண்ணுவேனோ.

வசனம்:—சுவாமி! தேவரீர் வாக்குக்கு பதிலுரைப்பேனோ கணவன் மனதறிந்து இசைந்துநடவாத பெண்ஜென்மம் பூமியிலிருக்குமா? அப்படியிருந்தாலது பேய்ஜென்மம். ஆனால் எனக்கோர் சங்கையுண்டு. அதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். அன்னதானத்தின் பலனை தெரிவிக்கவேண்டுமைய்யா சுவாமி.

பரஞ்சோதி வசனம்:— அன்னதானத்தின் பலனை அறைவதென்றால் ஆதிசேஷனாலுமாகாது ஆனாலும் [illegible] தமட்டிலுனக்கு தெரிவிக்கிறேன் மாதே.

மார்கழிமாதம் திருவாய் திருநாள் என்ற வர்ணமெட்டு.

### கண்ணிகள்.

கன்னியேகேளந்த அன்னதானபலனை கழறுவேனென்தன்மட மானே
மண்ணில்மானிடர் உண்ணுமதன்னம் மாறுண்டோஅறிநீ தானே
நண்ணும்ஜீவர்கள் பண்ணும்கருமத்திற்கு எண்ணிடில்தேகங் காணுமே
அண்ணலேதேகத்தில் வைத்துயோற்றிட அன்னம் வேணுமே

மண்ணிலிருந்துவேத உண்மையறிவோர்க்கு மதியும்பசியால் வாடுமே
புண்ணியத்தி லன்னதானத்தைவிட பெருதலில்லை நாடுமே
மோட்சவீடடைய ஜீவகாருண்யமின்றி மொழியவழி யில்லையே
தாட்சண்யந்தயை தானமில்லார்க்கு தர்மங்கிட்டாது தொல்லையே
எத்தனை தானங்க ளிரந்தோர்க்கீந்தாலும் இன்னமும் வேணு மென்பாரே
முத்திக்கு வித்தான அன்னதானத்தை முறைப்படி உண்பாரே
விருந்தாககஞ்சியை விதூரர்கிருஷ்ணனுக்கு வீந்ததை அறியாயோ
அருந்தகனி ராமர்க்கு அன்னத்துகாகச்சபரி யளித்தது தெரியாயோ
அன்னதானபலன் இந்நிலத்தில் செய்தசிபி உண்மைநா லலையுதே
புண்ணியகபீர் முன்னம்செய்ததை பண்ணிய நாவினால் தெரியுதே
என்னஉனக்குநான் இன்னம்சொல்லவேணும் எந்திழை கிளி மொழியே
அன்னதானம்செய்யென்று அசரீரி நமக்கு அரைந்ததே மீன் விழியே.

நங்கை வசனம்:— சுவாமி! அன்னதானப்பலனறிந்தேன். இனி கொஞ்சம்கூட காலதாமதம் செய்யக்கூடாது. ஈசான்ய திக்கிலிருக்கும் நமது புதிய கட்டடத்தை மடமாக உபயோகித்துக்கொண்டு அன்னக்கொடியும் ஆராட்சிமணியும்கட்டி மதவாரியாய் உற்றார், உறவினர், பெற்றோர், பிறந்தோரொன்றில்லாமலும் இல்லையென்பதில்லாமலும் இச்சாபோஜனம் செய்வித்து உண்டவர்கள்மகிழ, உலகம்புகழ, அருள்கமிழ பரமபதமடையவேண்டும் சுவாமி.

பரஞ்சோதி வசனம்:—மெத்தச் சந்தோஷம். சதியும் பதியும் ஒத்து இல்லறதர்மம் நடத்துதலே மேலான தர்மமாகும். இவ்வளவு அதிதீவிர பக்குவம் உண்டாகி எனக்கு எடுத்துக் கூறியதற்கு மெத்தச் சந்தோஷப்படுகிறேன். ஆனால் முற்றிலுமிதை வைத்து நடத்தவேணுமாதே.

நங்கை வசனம்:— தவறேன் சுவாமி.

பரஞ்சோதி வசனம்:— கேளும் சேவகா! இன்று காலை 7½-நாழிகைக்கு வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் பொருந்தியிருப்பதால் ஈசான்ய திக்கிலிருக்கும் நம் புதிய கட்டட முகத்துவாரத்தில் ஆராட்சிமணியும் அன்னக்கொடியும் கட்டி பேரிகைமூலமாய் நாம் அன்னதானம் செய்யும் விபரம் தெரிவித்து அமுதுண்ண எல்லோரையும் அழையும் பிள்ளாய்.

சேவகன் வசனம்:—அப்படியே சுவாமி!

## கட்டியக்காரன் பறை சாற்றுவித்தல்.

ஆறுமுகவடிவேலவனே என்ற காவடிச்சிந்து வர்ணமெட்டு.

1 அன்னக்கொடிநாட்டி ஆசாட்சிமணிகட்டி
அமுதுபடைப்பார்களே நீங்கள்
அனைவரும்வந்துண்டு ஆனந்தம்தான்கொண்டு
அன்பாய் மகிழ்வீர்களே

2 பூர்வஜென்மத்தின் பிரார்த்தவினையால்
புகழொணுக்கீர்த்திக்கொண்டு பரஞ்சோதி
புண்ணியத்தில்மிருந்த அன்னதானத்தைக்கண்டு
புகழ்வீர் விருந்தையுண்டு

3 திருச்செங்காட்டாங்குடி செய்தநற்றவத்தால்
ஜென்மித்த நங்கைமாது விண்
தேவரும்மகிழ்ந்திட யாவரும்புகழ்ந்திட
திருந்த வருவீரிப்போது

4 வடிசல்பொங்கல் வன்னச்சித்திரான்னங்களும்
வரிசையாய்செய்திருக்கு அடியார்
வந்துஅமுதுண்டு வாழஆசீர்வாதம்
வழங்குவீ ருத்தமர்க்கு

5 மண்ணில்பிறந்த மானிடர்யாருக்கும்
மாற்றின்றிசெய்யுந்தொண்டு நீர்
கண்ணினுல்கண்டு காயும்பசிவிண்டு
களிப்பீரமுதுஉண்டு

6 எண்ணரியபிறவியில் எடுத்தமானிடப்பிறவி
ஏற்கும்காரியம்நட்டு இனி
எப்பிறவியுவாராமல் ஏறசாயுச்சயம்தொட்டு
ஏற்றூர்பணிவிட்டு

7 தப்பிலாதடியார் தன்னைவணங்கிடும்
சாமிபரஞ்சோதி கொடி இப்போ
இப்பாரிலென்னுளும் இசைந்துவழங்கிட
ஏற்றினுரின்றுகெடி

8 ஒப்பிலாமழவராயன் உன்னதகுலமாறன்
உயிர்களைக்காக்கும்வீரன் அரிய
ஊரில்தங்கியிருந்தா உரைத்தராமசாமி
உரைப்படிசொன்னேன்தீரன்.

## மடத்திலன்னமளித்தல்.

மடத்தில் சாப்பிட்டுப்போகிறவர் பேசிக்கொள்ளுகிற விதங்காண்க.

ராமாசாஸ்திரி:—என்ன குப்பையரே! ஆகாயத்தைப் பார்த்த படியே வருகிறீர். பூமியை பார்க்கக்கூடவில்லையோ.

குப்பையர்:—ஆம்! உமக்கென்ன பொறுமையோ. நீர் சிறுத்தொண்டர் அன்னமடத்துக்கு போஜனத்துக்கு வரவில்லையோ. அதிருக்கட்டும் நம்காலில் பாதரட்சையிருக்கிறதா பார்த்து சொல்லும்.

ராமாசாஸ்திரி:—காலில் பாதரட்சையிருக்கிறது. நான் ஒருகாரியார்த்தமாக ஒரு கிராமத்திற்கு போய்விட்டேன். காலதாமதமாய்விட்டது. அகாலமாய்விட்டதே.

குப்பையர்:—ஓய்! என்னங்காணும் பைத்தியம்பிடித்த சாஸ்திரியாரே எப்போதுபோனாலும் இல்லையென்னாது சாப்பிடலாம்

ராமாசாஸ்திரி:—எதேஷ்டமாகவா.

குப்பையர்:—ஓய்! அதேன் கேட்கிறீர். நாம் மாத்திரமா. வேண்டியபடி ஓயாது என்னேரமும் சாப்பிடலாம்.

ராமாசாஸ்திரி:—சாப்பாடு எப்படி. உட்காருங்காணும் சொல்லுமையா.

குப்பையர்:—ஆ! அப்பாடா! இந்தா கையைப்பிடியும் காணும்.

குப்பையர் தெருவில் ஓர் திண்ணையிலுட்கார்ந்து சிறுத்தொண்டர் அன்னதானச் சிறப்புகூறல்.

### விருத்தம்.

கேளுமே ராமர்சாஸ்திரி கிளிமொழி நங்கையோடு
காளுமே சிவதொண்டுசெய்யும் நண்பனும் பரஞ்சோதிபண்டிதர்
மீளவே அன்னதானம் மேன்மையாய் செய்ததையான்
சாலவே உமக்குச்சொல்வேன் சற்குண கேளும்சுவாமி.

இராகம் சாவேரி. தாளம்-ரூபகம்.

### பல்லவி.

இந்தபந்திக்கிணையானபந்திகள் எங்கெங்கும்
கண்டதுண்டா கேளும்சாஸ்திரி எங்கெங்குங்கண்டதுண்டோ

அனுபல்லவி.

செந்திருசெங் காட்டாங்குடி தனில்
தேவிநங்கையும் சிறுத்தொண்டருஞ்செய்த (இந்)

சரணங்கள்.

வரிசையாகபடைத்த அன்னம் வெள்ளி
மலையைப்போலுயர்ந்திருக்கும் அன்ன
மலைக்குமேலிட்டபருப்பொரு தங்க
மலையைப்போல்குவிந்திருக்கும் சில
பொரியலும்பலகரிகளும் மணம்
பூரித்திடவேருசித்திருக்கும் ஜீனி
போட்டுகலந்திட்டபாயசம் இந்திரன்
பூமிமட்டும்இனித்திருக்கும் மலை
அருவிபாய்வதுபோய் புத்துருக்குநெய்
யாவருக்கும்விட்ட அருமையென்சொல்வேன்
கருவிழிகண்மணி காரிகைநங்கையாள்
கருத்தையறிந்தவர்க்கு தரித்திரமேஇல்லை (இந்)

கத்தரிக்காயின்புளிக்கறி எழு
கடலுக்கப்பால்மணம்காட்டும் அந்த
கரியின்வல்லபமென்னசொல்வேன் பத்து
கலஅரிசிசோருட்டும் மேலே
வைத்தபறங்கிகாய்கூட்டுகறி நாவில்
வைக்குமுன்பசியைவாட்டும் அந்த
வாழைக்காயின்கரிக்காசைப் பட்டு
வானுலகம்கையைநீட்டும்
எத்தனைமெய்த்தவம் செய்துபிறந்தோமே
இதுகிடைப்பதற் கென்றெவரும்சொல்ல
வைத்தபிலாச்சுளை யுண்டவர்க்கினி
மறுபிறப்பிலும் தித்திக்குமக்கனி (இந்த)

இட்டகருணைகிழங்குகரியைப்போல்
இவ்வுலகில்கண்டதாரு நாவிற்
கின்பம்கொடுக்கும் அப்பளத்துக்கெதை
எடுத்துச்சொல்லலாம் நேரு
தட்டிசுட்டவடையிலேயிலெடுத்து
வைப்பவர்தொண் ணூராயிரம்பேரு

தாகத்துக்குகொடுப்பதுபத்தரைமாத்து
சொர்னச்சொம்புகொண்ட மோரு
தொட்டகையாயிரம் வருடம்மணக்க
சோலையில்பழுத்து தானேஉதிர்ந்த
கட்டுமாங்கனியும் வாழைக்கனியும்
கலந்துமதுரம் பெருகபடைத்த (இந்த)

இந்தஅமுதள்ளிபுசித்தபேருக்கு
எழுபிறப்பும்பசிக்காது தொன்னையில்
இட்டமிளகுநீர்உண்டவர்க்கினி
என்றென்றைக்கும்நரைக்காது வெள்ளை
சந்திரன்மேனிநிறமுமிங்கேவிட்ட
தயிர்நிறத்துக்கொவ்வாது அள்ளி
சாப்பிடசாப்பிடபூசனிக்காய்பச்சடி
எவர்க்குமேதிகட்டாது நெய்யில்
வெந்தஅதிரசம் கைபிலெடுக்குமுன்
விண்ணுலகத்துள்ள தேவர்களும்வந்து
இந்தஅதிரசம் வேணுமென்பார்
இதற்கீடாயமுது தாரோமென்பார் (இந்த)

நன்னயபல்லவராசர்க்குராச
நரசிம்ம மகாராசன் நாடு
நாளும்தழைத்திடசேனைக்கதிகாரம்
நடத்தியஉல்லாசன் கன
அன்னதானம்செய்ய அருள்
ஆகிவந்த பிரகாசன் பூரி
அந்தணருக்கும்யாசகருக்கும்முறை
அளித்திடும்விஸ்வாசன் தெய்வ
கன்னிகாமாக்ஷி யிருந்தாசுசெய்யும்
காஞ்சிநகரைக்கார்க்கும் நரசிம்ம
மன்னவன்சொல்படி மடம்கட்டி அன்னதானம்
மரியாதையாகவே சகலருக்கும்செய்த (இந்த)

பொது வசனம்.

இந்தவிதமாக பரஞ்சோதியார் கணபதீசுரனுக்கு சிவத்தொண்டுபுரிந்து வரும்நாளில் சிறுத்தொண்டரென காரணப்பெயர்வகித்து புத்திர சந்தானமுண்டாக வரம் கேட்க அசரீரி

வசக்கால் மடம்கட்டி அன்னதானம் செய்துவரும்நாளில் நங்கை கற்பவதியாகி நாளொருமேனியாய் இருந்து ஒன்றுடன் எட்டு மாதமுமாய் ஒன்பதுமாதமுடிந்து பத்தாவதுமாதம் ஆரம்பிக்க கற்பவேதனையுண்டானதை சந்தனத்தாதி சிறுத்தொண்டருக்கு தெரிவிக்கிற விதங்காண்க.

## நங்கை கற்பவேதனையை சிறுத்தொண்டருக்கு சந்தனத்தாள் கூறல்.

### விருத்தம்.

இந்தவிதம் சிறுத்தொண்ட ரன்னதானம் இயற்றிவரும்நாளில்
செந்திருநங்கைமாதும் சீருள்ள கற்பம்தாங்கி சிறப்பாயோங்கி
மூந்திய திங்களொன்பதும் முடிந்துமாதம் பத்திலேதான்
தந்திடும் வேதனையை சந்தனத்தாளறிந்து சாற்றுவாள் தொண்
டருக்கு போற்றுவாளே.

ராகமாலிகை. தாளம்-ரூபகம்.

எதுகுலகாம்போதி.

வேண்டித்தவமிருந்து வெகுவிரதம்புரிந்து
விரும்பிக்கொண்டவரத்தால் நங்கைவேதனைகொண்டாள்சாமி
பாண்டியனுமைப்பெண்ணை பரிந்துபேசவைத்தசிவன்
பாலனைவெளிவர பட்சம்வைத்தார் சுவாமி.

சங்கராபரணம்.

காலகாலஉணவை கழித்துஒளிமயங்கி
கடுந்தவம்மாதுசெய்து களித்திருந்தாள்சுவாமி
ஆலம்வதங்கிகுறிதோன்ற மாதுகண்டுமனம்
துயரம்மிககொண்டதை துரையேசொல்லவந்தேன் சுவாமி.

ஆனந்தபைரவி.

ஒன்றுடன்எட்டும்தள்ளி ஒன்பதில்நாளையெண்ணி
ஓகோமதலைவர உள்ளபடிகாத்தோம்சுவாமி
நன்றான திங்கட்பத்தில் நாடிமதலைவர
நங்கைபடும்வேதனையை நான்சொல்லவந்தேன் சுவாமி.

வசனம்:—சுவாமி! தேவரீர் ஈசுவரனுக்கு செய்துவரும் சிவத்தொண்டு பரிசுத்தத்தாலும், அன்னதான பலத்தாலும், பூர்வ புண்ணியவசத்தாலும் நங்கை கற்பம்தாங்கி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாய் வளர்ந்துவந்து ஒன்பதுமாதமுமாகி பத்தான திங்களிலே பாலனைப் பிரசவிக்க மெத்த வேதனைப்படுகிறாள். தெரிவிக்கவந்தேன் சுவாமி.

சிறுத்தொண்டர் வசனம்:—வேண்டியபடி மடத்துப்பெண்களும் மருத்திவச்சி முதலானோர்களும் தயாருக இருக்கிறார்களா?

சந்தனத்தாள் வசனம்:—யாதொரு குறைவுமில்லை. மடத்துப்பெண்களும், பட்டணத்திலுள்ள நம் பிராமணகுலப்பெண்களும் சதா கூடயிருக்கிறார்கள். ஏற்கனவே வாங்கி வைத்திருக்கும் மருந்துவகைகளும், கஸ்தூரி வகைகளையும் முன்னடி எடுத்து தயாருக வைத்திருக்கிறேன். விதை தானமளிக்க நெல் மூட்டைகளை முன்னடி எடுத்துவைக்கச் செய்திருக்கிறேன். ஜோதிடக்காரர்களை அழைத்துவையுங்கள் சுவாமி.

சிறுத்தொண்டர் வ-ம்:—சேவகா! நம் வீட்டில் பிரசவகாலமென்றும் பஞ்சாங்கத்துடன் புரோகிதரை அழைத்துவாரும் பிள்ளாய்.

சேவகன் வ-ம்:—அப்படியே மகா பாக்கியமையா சுவாமி!

போது விருத்தம்.

வேதகுல முதித்த விப்பிரர்க் குவாத்தியாராய்
ஜாதகங்கள் தான்கணிக்கும் சதுர்வேத பண்டிதராய்
பூதலத்திலறிஞர் கற்றோர் போற்றும் புகழ்சோதிடராய்
ஆதாரமறை நூலறிந்த அந்தணர் மகிழ்வுடன் வந்தனரே.

பரஞ்சோதியார் வசனம்:—நமஸ்காரம் சுவாமி! நம்க்கு இன்று இருபத்தெட்டு நாழிகையளவில் புருஷக்குழந்தை ஜெனனமாயிருக்கிறது. ஜாதகன்மம் செய்துவைக்கவேண்டும் சுவாமி.

ஜோதிஷர் வசனம்:—அப்படியே சுபமஸ்து.

விருத்தம்.

சீர்புகழும் கலியுகம் செனித்த பிரபவாதி
சென்றசுத் தருபத்தி ரெண்டிற் கப்பால்
சேரும் நந்தனத்தில் மகரரவி தேதிபதி
னேழில் செவ்வாய் செல்கடிகை எழுநான்கில்
வார்புகழும் ரோகணி நட்சத்திரம் செல்போக
வந்த மூன்றும் பாதத்திலே தான்
வரிசைபெரு லக்கினம் கடகத்தில் சேய்
வரவுமதி சில்வுசனி மால்கும்பம் மீனமன்னன்
பார்புகழும் பரிதியேழ் பிருகாறு கரும்
பாம்புராகு கேதுபத்து பரிந்து நிற்க

பண்பானசந்திர திசைசெல்போக வருஷம் நாலு
மாதமெட்டுடன் நாள்நாலேழுபாக்கிிற்க
பேர்புகழும்மாமத்திய பிராமணகுல
பாஞ்சோதிபண்டிதர் செய்புண்ணியத்தால்
பெருமையாய்வானோர் பூமாரிதூற்ற
பிள்ளைசீராளன்வந்த புகழதைச்சொன்னேனே.

| | | | |
|---|---|---|---|
| வி. | கேது | மதி | சனி |
| பு. | இராசி சக்கிரம். | | ல. செ. |
| சூ. | | | |
| சு. | | ராகு. | |

ஜெனனிஜென்மசௌக்கியானும் வர்த்தனிகுலசம்பதாம்
பதவிபூர்வபுண்ணியனும் லிக்யதேஜென்மபத்திரிஹா.

சுவஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 567 கலியுகாதி வருஷம் 3746 இதின்மேல் செல்லாநின்ற நந்தனஞ௵ தைமீ 17உ மங்களவாரம் உதயாதி நாழிகை இருபத்திஎட்டு அளவில் ரோகணி நக்ஷத்திரம் மூன்றாம்பாதத்தில் கடகலக்கினத்தில் அதில் செவ்வாயும், நாலில்ராகு, ஆறில்பிருகு, ஏழில்ரவி, எட்டில்மால், ஒன்பதில் குருவும், பத்தில் கேதுவும், பதினொன்றில் சந்திரனும், பனிரெண்டில் சனியுமாய் நவக்கோள்நிற்க, ஜனனகாலத்தில் வந்த சந்திரமகாதிசையில் மாதுருகற்பத்தில் செல்லுபோக பாக்கி செல்லவேண்டிய ௵ 4, மீ 3, நாள் 27 ஆக வந்த புதல்வனென்றறிக. தீர்க்காயுஷ்யமஸ்து.

இராகம்-புன்னாகவராளி. ஆதிதாளம்.
சங்கராபரணம், ரூபகத்திலும் பாடலாம்.

பல்லவி.

அவதாரம்வந்தாரே கணபதீஸ்வரன்உமக்கு
சிவதானம்தந்தாரே

அனுபல்லவி.

பவமெனும்பொய்யிருள் பயந்துபின்னோட
பரமனடியருள் பங்கயம்நீட (அவதா)

சரணங்கள்.

1 வயறுவாய்த்திகல்கை மாதவம்பலிக்க
வானோர்மகிழறம் மானிலம்செலிக்க
விழலேநோக்கி நபி ளேந்திழைசெலிக்க
வேதகோஷங்கள் எங்கனும்மொலிக்க (அவ)

2 கன்னிபாகனருள் கலந்துமெய்த்தங்க
காணும்வேதநெறி கடந்தவர்மங்க
பண்ணும்தவநெறி பழுத்தெங்கும்தொங்க
பார்மடக்கைதவ பண்புதுலங்க (அவதா)

3 மறைமுறைபக்தி மார்க்கம்புவிமேவ
மகிழ்வொடுதருமமிம் மண்ணிலுலாவ
நிறைபெருமடியார் நெய்விழாதாவ
நிகாமொடமரர் கற்பகமலர்தூவ (அவதாரம்)

4 மாதம்மகரத்தில் வளர்சசிபாரியானில்
தேதிபதினேழில் செவ்வாய்வாரமதில்
உதயமெழுநான்கில் உற்றகடகலக்கினத்தில்
பதிவிலுமைசேர்க்கசற் பாலனும்கற்பத்தில்(அவதா)

சிறுத்தொண்டர் வசனம்:—சந்தோஷம் சாஸ்திரிகளே! ஜாத கர்மம் செய்வித்து விதை தானங்களும் செய்யவேணுமே சுவாமி.

சாஸ்திரிகள் வ-ம்:—அப்படியே.

சிறுத்தொண்டர் வ-ம்:—தாதி சந்தனத்தாளே! ஜாதகன்மம் கம் செய்யவும், விதை தானம்செய்யவும் மற்றபடி சர்க்கரை தாம்பூலங்கள் வினியோகத்திற்கும் சித்தம்செய்வாய்.

சந்தனத்தாள் வ-ம்:—எல்லாம் தயாராயிருக்கிறது சுவாமி.

சிறுத்தொண்டர் வ-ம்:—சுவாமி ஆரம்பிக்கலாமே

சாஸ்திரிகள் வ-ம்:—ஸ்நானமாகி மடியாய்விட்டதோ.

சிறுத்தொண்டர் வ-ம்:—ஆயிற்று.

சாஸ்திரிகள் சிறுத்தொண்டரை உட்கார்ச்செய்து வேதோக்தமாக ஜாதகன்மம் செய்துவைத்தல்.

போது வசனம்.

சிறுத்தொண்டர் சீராடி ஜாதகன்மம் செய்துவைத்த பிராமணர்களுக்கும், பிராமண ஸ்திரீகளுக்கும் சந்தனம், தக்ஷிணை,

தாம்பூலம், விதைநெல்தானம், சர்க்கரை முதலானதுமீந்து மற்ற மூன்று வருணத்தாருக்கும் சர்க்கரை தாம்பூலங்கொடுத்து வண்டியில் சர்க்கரையேற்றி வீதிதோறும் கொடுக்கும்படிச்செய்து பிரசவமான நங்கைக்கு பெருங்காயமும் தேனும் முன்னால்கொடுத்து பிரசவமருந்து வகையறாக்களும் கொடுத்து வாதபித்த சிலேத்மங்கள் மாறுபடாதிருக்க வைத்தியர்களால் இருத்தி பத்து நாளும்சென்று பதினோராம்நாளில் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களினால் ஸ்நானஞ்செய்வித்து மந்திர புண்ணியஸ்நானமும் செய்வித்து குழந்தையை தொட்டிலில்விட்டு தாலாட்டுகிற விதங்காண்க.

### ஆரிரரி ராரிரரோ ரரராரோ ராரிரரோ.

1 சீரான வேதகுலம் செழிக்கவந்த திரவியமே
பேரான கணபதீசன் பெம்மானருள் கனியே
ஊரா ருறவினர்கள் உற்றபல பேர்களும்
பாரோரறிய பரிந்துவந்த தவக்கனியே

2 தந்தைதாய் செய்தன்ன தானபலன் கேட்கப்போன
மைந்தனுக்கு மாகொடுத்த மகத்துவத்தை யறிந்தோமே
இந்திரனும் சந்திரனும் இருந்தந்த ஊரைவிட்டு
சந்திரமகனாய் பதம் சேர்க்கவந்த திரவியமே

3 அருமறை யாகமங்க ளனைத்துக்கு மெட்டாத
இருவுருவா யெங்களுக்கு ஜெனித்துவந்த புத்திரனே
பருவத்தி லுன்தந்தை பகர்ந்தன்ன தானபலன்
உருவமா யெங்களுக்கு உண்ணவந்த ருத்திரனே

4 தரைதனில் மடலென்னும் சாலோகதடை புத்தென்னும்
திரைகடலைத் தாண்டவந்த தெப்பமான சித்திரமே
நறைதிரை மூப்புவந்து நாங்கள் நலியாமலிப்போ
மறைகளுரை மார்க்கம் மகிழ்விக்கும் பத்திரமே

5 பத்திபெறும் காஞ்சி பார்மன்ன நரசிம்மவர்மன்
முத்திபெற சொன்னபுத்தி மொழிரசமே கண்வளராய்
இத்தரையில் சிறுத்தொண்டர் இனியநங்கை பேர்விளங்க
முத்திரையர் ராமசாமி மொழியோத கண்வளராய்.

## சிறுத்தொண்டர் குழந்தைக்கு நாமகரணம் சூட்டல்.

விருத்தம்.

பண்புள நங்கைமாதும் பாலனைக் கையிலேந்தி
அன்புடன் தொண்டனார்க் கருகினில் நிற்கும்போது
நண்புடன் காதிலேந்தி நாவினாற் சீராளனென்று
இன்பமாய் பேருதந்து இனியமுத்தம் தந்திட்டாரே.

வசனம்:—இவ்வித குழந்தைபிறந்து புண்ணிய ஸ்நானம் செய்து காப்பிட்டு ஜாதகன்மம் நாமகரணம்செய்து சீராளனென்று பெயரிட்டு காதலோடு குழந்தையை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவரும்நாளில் குழந்தை சீராளன் குப்புற புரண்டு தத்தி குந்தி எழுந்து நடந்து தெருவில் விளையாட ஆரம்பித்தான்.

விருத்தம்.

சுருளுமயிரும் நுதற்சுட்டி துலக்காதின் மணிக்குதம்பை
மருவும் திருக்கண்டநாண் மார்பிலும் படைக்கையிற்
பொருவில் வயிரச்சரிகள் பொன்னரைஞான் புனைசதங்கை
தெருவிலொளி விளங்கவளர் திருவிளையாட்டி லமர்ந்தான்.

வசனம்:—இந்தவிதமாய் குழந்தைக்கு விளையாட்டுப்பருவம் வாய்ந்தபோது சுருண்டமயிரும், நெத்திச்சுட்டியும், காதில் மணிக்குதம்பையும் கழுத்திலிருக்கும் பொன்னூலிலங்கிய ஐந்துவித ரத்தினங்களாலிழைத்த பதக்கம் மார்பில் ஜொலிக்க கையிற் காப்புக் கொலுசும், இடையில் பொன்னரைஞாணும் துலங்க, காலில் சதங்கை கொஞ்ச, வீதியில் தேக ஒளிவீச தெருவில் விளையாட ஆரம்பித்தார்.

பெரியபுராணம் செய்யுள். 22-வது விருத்தம்.

வந்துவளர் மூவாண்டின் மயிர்வினை மங்கலஞ்செய்து
தந்தையாரும் பயின்ற தாயாரும் தனிச்சிறுவர்
சிந்தைமலர் சொற்றெளிவிற் செழுங்கலைகள் பயிலத்தம்
பந்தமற வந்தவரை பள்ளியி லிருத்தினான்.

இராகம் மோகனம். ஆதிதாளம்

பல்லவி.

மைந்தன்சீராளன்வந்தானே வெகுமாட்சிமையுடன்
தாழ்ச்சியில்லாமலே (மைந்தன்)

### அனுபல்லவி.

பந்தவினைகளது — தஞ்சம்தஞ்சமென்றோட
பயின்றமாதாபிதா — பார்த்துக்களிகொண்டாட (மைந்)

### சரணங்கள்.

1 மங்களவாத்தியம் — எங்கும்ஜொலிக்க
மயிர்வினைமங்கலம் — மகிழ்ந்துசெய்விக்க
நங்கைமாதுதவம் — நாடிப்பிரகாசிக்க
நாட்டிலன்னதானம் — நால்வருமதிசயிக்க
வேதநாலும்பள்ளியிலோதியுணர இரு
பாதம்பணியபெற்றோர்நீதியாயணைக்க (மைந்)

2 மண்ணுயிர்களிக்கடல் — தன்னில்குளிக்க
வானவர்கற்பக — மாரிதுளிக்க
மின்னுமாசிர்வாதம் — வேதியர்அளிக்க
வேஷம்பூண்ட — பாசாண்டிகள்ஒளிக்க
காயமாமிது மாயுமுன்னமே
தீய்வினைகள் போயகலவே (மைந்தன்)

3 சுருளுமயிர்சீவி — சேர்நுதற்சுட்டிதாவி
புருவவிழிமைமேவி — பூகாதிற்குதம்பைகூடி
அரைஞாணிடைசூடி — அணிசதங்கையாடி
தரும்சற்குருவைநாடி — சந்தமோகனம்பாடி
மொழியசின்மய வழியீதென
பழியாமிப்பிறவி ஒழியபெற்றோர்முன் (மைந்)

### சீராளன் சொல் விருத்தம்.

தந்தையே தாயேநீங்கள் சந்தோஷமாகவேதான்
பந்தமுற எந்தனையிப்போ பரிந்துமே அழைத்தசேதி
அந்தமா யெந்தனுக்கு அன்புட னறைவீரென்று
சிந்தையு மகிழ்ந்துபாலன் சேவடி போற்றினனே.

வசனம்:— என்னை அன்புடன்பெற்று வளர்த்தாதரிக்கும் அன்னை தந்தையர்களே, தங்கள் மனசந்தோஷத்துடனழைத்த சேதி தெரிவிக்க சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தேன். தாய் தந்தையர்களே

### சிறுத்தொண்டர் விருத்தம்.

மலரடி தொழுதுபோற்றும் மைந்தனே சீராளாகேளாய்
இலகிய பாதம்விட்டு எழுந்திருமகனே கண்ணே

உலகில் வேதாகம மன்னதபுராணம் உபநிடதம்மற்ற
பலபலகாரிகை படிக்க பள்ளியில் வைக்கத்தானே.

வசனம்:—கல்யாண்மைந்தா! உமக்கு வயது மூன்று பூர்த்தி யாகி மயிர்வினைமங்கலம் செய்தாகிவிட்டபடியால் உலகில் வேதாகம புராண உபநிடதம்மற்று நடக்க வித்தியாப்பியாசம்செய்ய பள்ளிக்கூடத்தில் வைக்க யோஜித்தோம் அதற்கு உம்மிஷ்டம் தெரிந்துக்கொள்ளத்தான் பாலா. உமதிஷ்டம் என்ன தெரிவிப்பாய் கண்மணி.

சீராளன் வசனம்:—ஆண்டவா என்ன ஆச்சரியம்! பூர்வ ஜென்மவினையால் இக்குலத்திலவதரித்த இந்த மானிட ஜென்மத்துக்கு ஞானமார்க்கம் தெரிந்தனுசரிக்க நூலாராட்சி அவசியம். அந்நூலாராட்சிக்கு அவசியம் கல்விவேண்டும். கல்வியில்லர்தார்க்கு அறிவு விளங்காது. கல்வியற்ற மானிடதேகம் மிருகத்திக்குச் சமமாகும். மானிடதேகம் எடுத்து பகுத்தறிவை யடைந்து பாகுபடுத்த கல்வியில்லாது எத்தனைகோடி செல்வத்தைதயடைந்தாலும் அவன்வாழ்வு அற்பவாழ்வே. அப்படிக் கல்வி செல்வத்தையடைய தவம்செய்து நல்ல மாதா பிதாக்களை யடைதல்வேண்டும். மாதா பிதாக்கள் தடித்த மகனையும் தன் வசப்படுத்தி கல்விகற்பித்தலவரின் கடமையாகும், அதைப்பற்றி என்னைக்கேழ்ப்பதும் முறையோ. என்னைப்பெற்று பாலூட்டி வளர்த்து சிங்காரம்செய்து கண்ணுக்கழகாக பார்த்து களிப்புற்றபோது என்னைக்கேட்டா செய்தீர்கள். தங்கள் கடமையை தாங்கள் செய்யவும், அதற்கு நான் கட்டுப்படவும் அவசியம் தானே. நான் தயாராகயிருக்கிறேன். நான் தாயாரிடம் பால் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே அம்மா படிப்பு சொல்லச் சொல்லக்கேட்டு நான் தங்களிடம் சொல்லியிருக்கிறேனே. என்னையேன் கேட்கவேணும் நான் சித்தமாயிருக்கிறேன். தந்தையே.

சிறுத்தொண்டர் வசனம்:—கேளும் சேவகா! கம்புத்திரனை பள்ளியில்வைக்க வேண்டியிருப்பதால் உபாத்தியாயரை அழைத்துவருவாய்.

சேவகன் வ-ம்:—அப்படியே! மகா பாக்கியமையா சுவாமி.

பொது விருத்தம்.

சிறுத்தொண்டர் பாலனை சீராளன் தனக்குயிப்போ
கருத்துடன் வேதசாஸ்திரம் கவனமா யோதிவைக்க
தரித்திடும் நீரணிந்து தன்கையில் பிரம்புங்கொண்டு
விரித்திடும் சாஸ்திரத்தோடு வாத்தியார் வருகின்றாரே.

மாத்தாட பாரதேனோ என்ற வர்னமெட்டு.

தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாத்தியார் வருகின்றாரே குரு குல விப் பிர
வாத்தியார் வருகின்றாரே

அனுபல்லவி.

சாத்திரமாறுங்கற்று சன்மார்க்கமுறைபடுத்து (வாத்)

சரணங்கள்.

1 நெத்தியில்நீரணிந்து நீர்காவிமடியுடுத்தி
பத்திபெரும்சிறுதொண்டர் பணிமனமுள்ளிருத்தி (வா)

2 நத்திவரும்பிள்ளைகளை நாடிகல்வி திருத்தி
எத்திசையும்புகழ் இணையிலிவனெனநிருத்தி ()

3 பஞ்சகச்சஉடைதரித்து பாரில்தன்குருவைநினைத்து
அஞ்செழுத்தைஉள்ளிருத்தி அணிருத்திராக்ஷம்தரித்து()

4 நெஞ்சில்சந்தேகமில்லா நிலையாம்கல்விபடித்து
சஞ்சலமில்லாராம சாமிபதம்தொடுத்து (வா)

வாத்தியார் வசனம்:—நமஸ்காரம்! பண்டித தொண்டரே! அடியேனை அழைத்தவிதம் தெரிவிக்கவேணுமையா சுவாமி.

சிறுத்தொண்டர் விருத்தம்.

அய்யரே சொல்லக்கேளீர் அகத்தினில் சிசுவில்லாமல்
செய்யவே யன்னதானம் செல்வனும் பிறந்தான்சுவாமி
வையகம்தனில் மேலாய் வாசிக்க வேதம்நாலும்
பையனும் சீராளனுக்கு படித்துமே கொடுப்பீர்நாதா.

வசனம்:—சுவாமி நமஸ்காரம்! எனக்கு நீண்டகாலமாய் புத்திரனில்லாமல் கணபதீஸ்வரனருளாலும், அன்னதான பலத்தாலும், குழந்தை சீராளன் உற்பத்தியாகி பிறந்து ஆண்டுமூன்று

பூர்த்தியாய் மயிர்வினைமங்கலம் செய்துவிட்டபடியாலும பூர்வ வாசனை பழக்கத்தால் இப்போதே வேதத்தின் சுவையை உண்ணக்கூடிய பக்குவமிருப்பதாலும் தேவரீர்மூலமாய் கல்வி கற்பித்துக்கொடுக்க பிரார்த்திக்கிறேன் சுவாமி.

வாத்தியார் வசனம்:—ஆஹா! அதற்கென்ன ஆக்ஷேபம்? நான் இதற்குமுன்னமே செல்வனிடம் பழகியிருக்கிறேன். அவர் தேவாம்சம் அவருக்கு கல்வி கற்பித்துக்கொடுக்கநான் குருவாய் வரவும், தேவரீரந்த அலுவலை எனக்குத்தரவும் நான் செய்த தவமே. சித்தப்படி நடக்க தயாராயிருக்கிறேன். இன்று வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம், தாராபலம், சந்திர பலம் ஒத்திருப்பதாலும் இன்றே அக்ஷராப்பியாசம் செய்துவிடலாம் சுவாமி.

சிறுத்தொண்டர் வ-ம்:—அப்படியே. சேவகா! உபாத்தியாயர் சொல்லுகிறபடி திட்டம் செய்வாயாக.

சிறுத்தொண்டர் மடத்தில் மெழுகி சுத்தம்செய்து அலங்கார அழகுகோலம்தீட்டி மஞ்சள் பிள்ளையார்நிறுத்தி சீராளனை கிழக்குமுகமாய் உட்காரச்செய்து வாத்தியார் வடக்குமுகமாய் பள்ளிக்கூட பிள்ளைகளை சுற்றிலுமுட்காரச்செய்து வேதகுலத்தோர்சூழ வாத்தியார் சீராளனுக்கு வித்தியாப்பியாசஞ்செய்கிற விதம்காண்க.

ஹரிஹோம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

ஹ ரி ந மொ த் து சி ந் த ம்.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

உடல்மேல் உயிர்வந்து உயிர்மெய் எழுத்துகள் 216 ஆகுக

ஆத்திசூடி. அறஞ்செய விரும்பு.

ஐயமிட்டுண்.

கொன்றைவேந்தன். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

மகிழ்ச்சிகாண்டம்

முற்றிற்று.

உ

ஓம் நமசிவாயநம:



# கைலைகாண்டம்.

## கைலையில் பார்வதி பரமசிவன் தர்க்கம்.

### விருத்தம்.

செந்திரு கைலைதனில் ஜெகமதையளித்தா தரிக்குமீசன்
நந்திமுதல் தேவகணங்களும் நாரதர் முதலோர் புடைசூழ
பந்திபந்தியா யமரர்பணிய பரிந்துகொலு விருக்குங்கால்
சொந்ததேவி பார்வதியெழுந்து தோத்தரிப்பாள்கவலை உத்தரிப்
[பாளே.

[இராகம்—சங்கராபரணம். தாளம்—ரூபகம்]

### பல்லவி.

பரப்பிர்ம சொருபமே காணும் — என் சந்தேகத்தை
பரிகாரம்செய்யவேணும்.

### அனுபல்லவி.

அறம்பொருளின்பம்வீட்டை அளித்தாதரிக்கும்நாத
அரனேஉமதுதிரேகம் அழகிடும்மகிமை ஏதோ. (பரப்)

### சரணங்கள்.

என்னுரு முமதுமேனி ஈசாநான் பார்த்துவந்தேன்
சின்னாளாய் பார்த்துபார்த்து ஜொலிகண்டுமனமகிழ்ந்தேன்
என்னகாரணமீதென எனக்குத்தெரியாமல்நொந்தேன்
மன்னுனைதக்கேட்க என்சிந்தைதெளியப்புகுந்தேன். (பரப்)

இதுமுதல் ஆரியன் பிரஸில், பதிப்பிக்கப்பட்டது.

பன்னகபூஷணாதம்மடி பணிந்தும்மைக்கேட்டேன்
பாதகம்தோற்றினாலும் பந்தத்தால்விடமாட்டேன்
இன்னிலமதையறிய எம்பிரானேஆசைபட்டேன்
கன்னயமாயெனக்கருள நாதாஎன்சங்கைவிட்டேன். (பரப்)

உந்தன்மனதிலுற்ற உயர்பெரும்பாக்கியத்தை
எந்தனுடனேசேர்ந்து ஏற்கவேணுமச்சிலாக்கியத்தை
சொந்தமென்னுரிமையால் தோற்றேனென் யோக்கியத்தை
மைந்தன்ராமசாமிமன மகிழருளும் வாக்கியத்தை. (பரப்)

வசனம்:— சுவாமி தேவரீர் திரேகத்தைச் சிலநாளாய்க் கண்ணுறும்போது என்கண்ணுக்கு வெகு அழகான தேஜஸ்துலங்கிகாண சந்தோஷமானேன். என்றாலும் அதன் காரண மீதென தோன்றாமல்நொந்தேன் அந்தமரபைப் பரிஷ்கரித்து என் உளம் களிக்கச்செய்ய தேவரீரது கடமையாதலால் வேறொருவரிடமிதை வினவுவது வேதமுறைக்கு மாறுபடுமாதலாலும் தேவரீரிடமேதெரிந்துக்கொள்ள ஆசைப்பட்டேன் அருட்பெருஞ்ஜோதி அடியாள் மனமகிழ திருவுளம் கிருபைபுரிய பிரார்த்திக்தேன் தேவதேவமகானுபாவா.

## பரமசிவம் பார்வதிக் கருள்செய்தல்.

### விருத்தம்.

நன்னயம்வேண்டிக்கேட்ட நாராயணிசொல்லக்கேளாய்
மண்ணில்செங்காட்டாங்குடிவாழ் மறையவர்குலத்துதித்த
உண்மையாம்சிறுத்தொண்டர் உகந்தன்னதானம்செய்யும்
நன்மையின்குணத்தால்மேனி நாடியவாறிவாய்பெண்ணே

(பாலா என்ன காலம்வந்ததடா என்ற வர்ணமெட்டில் மேலடியை மூன்றாய் குவித்து மன்மதநாடக இசையில் பாடியது)

## பரமசிவத்துக்கும் பார்வதிக்கும் தர்க்கம்.

எந்தனாசைக்கிசைந்திடும்பெண் பாவாய்
அந்தப்பூமியில்வந்த பரஞ்சோதிமாதும் கூடி
அந்தணர்யோகியர்முனிவர்பரங்களைத் தேடி
என்னும்திருப்தியாய் அன்னதானம்செய்ய
அன்னவர்மகிழவே என்தேகம்ஜொலித்தது. (எந்)

பார்வதி.

மதியும்புனல் சடையில்தாங்கும் பிராண பதியே
நிதியைவேண்டி அறம்செய்வோரை நாம் நாடி
மதியினில்வேண்டும் வரம்கொட அவரிடம் ஓடி என்
வாக்குத்தள்ளாமலே சீக்கிரமாகப்போய்
பாக்கியமளித்து நோக்கிடவேண்டும். (மதியு)

பரமசிவம்.

பாக்கியமளிக்க வேண்டுமென்றாய் பெண் பாவாய் அந்த
யோக்கியனுலக பாசத்தைவிட்ட சீலன் வேத
வாக்கினைதவறா சிலாக்கியனானு கூலன் நான்
சொன்னவனுக்கு அவ்விலம்தனில்
இன்னதுவேணுமென விண்ணப்பம் செய்யானே (எந்த)

பார்வதி.

மாசற்றமதி நேசமுள்ளோன் தனை நேசா
வாசனையாய்நம்மை பூசிக்குந்தொண்டனை நேசா
மோசமில்லாநற் காட்சிதர வில் வாசா
உண்மையாகநாம் அன்னவர்மனது
நன்மையடைய பண்ணவேபோவோம். (மதியும்)

பரமசிவன்.

போவோமென்று சொல்லவந்தாய்பெண் பாவாய்
போனாலங்கவரை சோதிக்கவேணும் நம்மை மூடி
பூவையேயுன்மனம் மேசதிக்குமங்கேயே வாடி அப்போ
பொன்னுலகத்தோர்கள் உன்மனம்நோகாமல்
என்னைத்துதிப்பார்கள் பின்னம்வந்துசேரும். (எந்த)

பார்வதி.

பின்னம்வருமென்றுசொன்னீர் பிராண பதியே
என்ன துன்பங்கள் பண்ணச்செய்வீரோ பாடி
சொன்னநங்கைமனம் கன்னல்கொட தேகம் ஆடி
சின்னம்சிறுமியவள் ஒன்றுமறியாதாள்
மன்னன்மனம்நொந்தால் கன்னிதவிப்பாளே. (மதியும்)

பரமசிவம்.

தவிப்பாளென்றுசொல்லவந்தாய்பெண் மாதே
தவத்தில்சிறந்த எல்லோருக் நம்மை படைய

பலத்தின்மார்பை விண்டுபேரின்பம் உடைய
தாம்கொண்டபோர்களை நாம்கண்டுசேர்க்க
ஆமென்றதைப்ப காண்பிக்கவேண்டும் (எந்த

பார்வதி.

காண்பிக்கவேண்டுமென்று சொன்னீர்பிராண பதியே
நோன்பினிலுயர்ந்த பான்மை அனுகூலை முன்னம்
ஆண்மையினல்சோதித்து மானமிழந்தது திண்ணம்
மூவகைகுழந்தையாய் கூவவேசெய்தாலோ
தேவாபறிந்தின்னம் கோபத்தைகாட்டவோ. (மதியு)

பரமசிவம்.

கோபத்தைக்காட்டாதேயென்றுசொல்லவந்தாய்பெண்ணே
சாபத்தைதந்தாலும் நாமேற்கவேண்டுமே கண்ணே
பாபத்தை சேராத பரிசுத்த னெனக்காட்டு முன்னே
பக்குவகுணத்திலவர் தக்கவரெனத்தெரிய
அக்குவலயம்காண கக்கிஷம்காட்டவேண்டும் (எந்த)

பார்வதி.

அக்குஷம்காட்டவேண்டுமென்று சொன்னீர் சுவாமி
பொக்கிஷபொருமை தக்கருணமுள்ள மானே
நக்கலவளிடம்வைக்க ஒண்ணாது காணே
நங்கையவள்மனம் பங்கம்வராமல்கார்க்க
சங்கராயென்மேலாணை கங்காதராசொன்னேன் (மதியு)

## நந்திகேஸ்வரருக்கு பரமசிவம் ஆக்கினையிடல்.

விருத்தம்.

இந்தவிதம் பார்வதியா ளியம்பிடும் வார்த்தைக்கேட்டு
அந்தவிதம் செய்வேனென்ன அபிமானம் கொண்டசிவன்
சந்ததமும் தனைப்பிரியா சாத்விக நந்திதன்னை
முந்தவேசெங் காட்டாங்குடி மேவ மொழிகுவார்மொழிகுவாரே.

[இராகம்-மோகனம். தாளம்-ஆதி]

பல்லவி.

நந்தியே சிறுத்தொண்டரைச்சோதிக்க செல்வாய் முந்தியே

அனுபல்லவி.

அந்தரத்திலுள்ள யாவருமகிழ்ந்திட
விந்தையாயவர்செய்யும் விருந்தழைதைகொண்டாட (நந்)

சரணங்கள்.

எடுப்பானும் யாவருக்கன்னம்கொடுப்பானும் வந்துகுட்சியில்
அடுப்பானும் மகிழத்தொண்டு தொடுப்பானும் அவனை பா
ராட்டுவோம் கதியைகாட்டுவோம் உலகில் சாட்டையில்லாபம்ப
ரம்போ, லாட்டுவோம் அவன்மகிமையறிய (நந்தியே)

உள்ளசராசரமெல்லாம் வள்ளலா ரென்றிருக்கும்
நல்லமனதுடையவர் பிள்ளை கறிசமைக்க
சொல்லுவோ மவனுறுதி தெள்ளுவோம்
அல்லவென்றாலவனை தள்ளுவோ மதையறிய (நந்தியே)

வேதத்தின்மேலே வேதாந்த கீதத்தில் ஞானிகள்
போதத்தின்மேலே விளங்கும் பாதத்தைப்பெற
யோக்கியனு அவன் சிலாக்கியனு சுருதிசொல்
வாக்கியனு நமது பாக்கியமடைய (நந்தியே)

முந்தி பூமியில்வந்து முறையே தானம்செய்து
இந்த ஜென்மம் தந்தன்ன தானம் கொள்ள
ஞாயமோ இதென்ன மாயமோ சேற்றில்
மேயும் பிள்ளைபூச்சிபோல தோயும் தோயாதவனையறிய (நந்தி)

கரும்பை ஆலையிலிட்டு கசக்கிரசமெடுத்தாப்போல
விரும்பிப் பாலைகாய்ச்சி வெண்ணை உருக்கினுப்போ
லாக்குவோ மவரை தேக்குவோம் வினை
போக்குவோம் நமதடியாக்குவோ மதையறிய (நந்தியே)

வசனம்:—நந்தியே பூமண்டலத்திலே அகஸ்தியமகாமுனிவரால் வெளியிடப்பட்ட தமிழ்தேசத்திலே சோழமண்டலத்திலே காவேரிநதிபாயும் திருச்செங்காட்டாங்குடியில் மாமாத்திய பிர்மகுலத்திலவதரித்து சிவதொண்டுபுரியும் பரஞ்சோதி என்பவர் புரியும் அன்னதானத்தின் பெருமை இவ்வுலகத்தேவர்களுக்கு அடங்காமகிழ்ச்சியும், ஆனந்தத்தையும் கொடுத்திருப்பதால் அவர்செய்யும் அறத்துக்கு மாறுபாடின்றி இல்லறவாழ்வு குன்றாமல் அவர் மனைவி நங்கையும், தாதி சந்தனத்தாளும் நம்மைக் கோரி நடத்திவருவதாலும், நம்முடைய சிவகணங்களிலொருவர் அவருக்கு புத்திரராய் போயிருப்பதாலும் அவர்களை நாமேற்றுக்கொள்ளவேண்டியதவசியம். அதை அம்மண்ணுலகத்தோர்

கண்டு அறம் ஓங்கிச்செய்யுமாறு அவரை சோதிக்க வைரவவேவ டம்கொண்டு நாளை வரப்போகிறோம். நீர் முன்னடி அவ்விடம் சென்று அந்த ஊர் எல்லையில் ஒரு அடியாராவது பரதேசி முதலியவர்களும்வந்து அவர் கண்ணுக்குத்தோற்றமல் செய்வித்து நமக்குதவியாய் நாம் நினைக்கும்போதுதோன்ற அவ்வூர் மேலைத் தெருவிலிருக்கும் கல்மண்டபத்தில் அரூபியாயிருப்பாயாக.

நந்தி வசனம்:—அப்படியே மகாபாக்கியம் சுவாமி.

பரமசிவம் வசனம்:— நாராயணி நாம் போய்வருகிறோம் விடையளிப்பாய்.

பார்வதி வசனம்:— அடியாளவர்களை அவ்விடம் பார்க்க எப்போது கடாக்ஷிப்பீர்களோ.

பரமர் வசனம்:— காட்சி கொடுக்கும் சமயம் அழைத்துச்செல்வோம்.

பார்வதி வசனம்:—சுவாமி தேவரீர் எடுத்துச்செல்லும்வேடத்தை பார்த்து மகிழ ஆசைப்படுகிறேன்.

பரமசிவம்:—இதோ காட்டுகிறேன் தெரிசிப்பாய்.

## பரமசிவம் வைரவ வேடம்கொள்ளல்.

### விருத்தம்.

பேர்விளங்குமண்ணில்கலிபிறந்த முப்பத்தெட்டாம் நூற்றாண்டில்
ஏர்விளம்பிவருஷ மேஷாவிதேதி எண்ணிக்கை பதின்மூன்றிலே
பார்விளங்கும் பரணியோடாதிவாரம் பருதிமதிசேர்ந்தநாளில்
சீர்விளங்கும் சிறுத்தொண்டரைச் சோதிக்க சிவனுமே வைர
[வராய்புறப்பட்டாரே.

### ஆநந்தக் களிப்பு.

வெள்ளியங்கிரி தனில் வாசன்-சொல்லும்
வேதத்திற்கெட்டாத மூலசர் வேசன்
நல்லறம் செய்வோர்க்கு நேசன்-பூவில்
நற்காட்சித்தரப் புறப்பட்டா ரீசன்

நரியை பரியாக்கிய நாதன்-திரு
ஞானசம்மந்தர்க்கமு தூட்டியவள் போதகன்
இரிமரபில்லாவேத நீதன்-திரு
செங்காட்டாங்குடிக்குப்புறப்பட்டபாதன்

செங்காட்டாங்குடியெனும் ஊரில்-பரஞ்சோதி
செய்யறம் தன்னைசோதிக்கவே பாரில்
நங்கை மாதுசெய்யும் சோரில்-வெகு
நாளாகவே இச்சை கொண்டுமே நேரில்

மதிரவியை குண்டல மாக்கி-திரு
மாலருத்திராட்ச மாலையாய் தூக்கி
பதியில்மலை மகளிருந்திட தேக்கி-அடி
பாதக்குரடாக மாயை தா ழாக்கி

முகத்திலட்சுமி போற்றி ஜொலிக்க-அந்த
முதியவர் நாவிலே சரஸ்வதி கெலிக்க
சுகமான பிர்மா தெண்டமா யிருக்க-அங்கே
சோதியும்புறப்பட்டார்தள்ளாமைமே லிருக்க

அகஸ்திய முனிசொன்ன பாஷை-தமிழ்
ஆதி உற்பத்தியென்னும் பிர காசை
[illegible]த்திலாகரா வென்ற ஓசை-கொண்டு
எழுந்தாரேவைரவவேஷங்கொண் டாசை

சித்திரை தேதிபதி மூன்று-அதில்
சேர்ந்தபரணி ஆதி வாரமு மின்று
பத்தியுள அமாவாசை பட்சமுடி வென்று-சிவன்
பழுத்தகிழவனர்போல்தள்ளாடி நின்று

கோதிகுழல்முடியில்கொன்றையை சூடி-நல்ல
குற்றமிலாநற்றவத்தோர் கொள்ளமனம் கூடி
சோதி பரப்பிர்ம மோடி-மாயையாம்
தொல்லுலகை தேடிசெல்லவே நாடி

அரியலூர் வாழ் ராம சாமி-சொன்ன
ஆனந்த களிப்பதைபாடச் சிவ காமி
பூரித்துடல் மகிழ இந்த பூமி-என்றும்
புகழக்கீர்த்தி விடைதந்தாளே வாமி

பூமண்டலம் தனை தேடி-அங்கே
புண்ணியம்செய்வோரை மிகவேகொண் டாடி
ராமசாமி களிப்பதை பாடி-சொந்த
நாராயணி மனம் மகிழவே ஆடி (வெள்ளி)

வசனம்:—இத்தியாதி வைபவங்களுடன் சிவன் விண்ணுலகமிருந்து மண்ணுலகம்வா சிறுத்தொண்டர் நித்திய விதி பூஜைநடத்திக்கொண்டிருக்கிற விதங்காண்க.

கைலைகாண்டம் முற்றிற்று.

# பக்தி காண்டம்.

—•—

## விருத்தம்.

சித்திரைமாதம் தேதி பதிமூன்று சேர்ந்தமேதா ராதிவாரம்
சுத்தப்பரணி சோமன்பரி சேர்ந்துதைய முன்னே
பத்தியாய் சிறுத்தொண்டர் பிரார்த்தகாலம் பரசிவ பூஜைசெய்ய
சித்தத்தில் பத்தியாய் நங்கையும் சிவபூஜை வணங்கிஞரே.

இராகம்-செஞ்சுருட்டி. ஆதிதாளம்.

சிதம்பரம் போகாமலிருப்பேனே என்ற வர்ணமெட்டு.

### பல்லவி.

பூஜையிலமர்ந்தாரே சிறுத்தொண்டரவர்
நேசனையறிந்தாரே.

### அனுபல்லவி.

வாசித்தொடருமன மறிந்துளேநாட
நேசமிகுவுீட குஞ்சிதபாதம் (பூஜை)

### சரணங்கள்.

மஞ்சனம்பொன்னுடை மருமலராம்
விஞ்சவளித்துவராம் குஞ்சிதபாதம் (பூஜை)

நற்சுவையூண்கனி நரும்புகையூட்டி
கற்பூரவொளிகாட்டி குஞ்சிதபாதம் (பூஜை)

நள்ளுமணப்பாகுடன் வெள்ளிலைநல்கி
உள்ளுமுதயமொல்கி குஞ்சிதபாதம் (பூஜை)

ஸ்தோத்திரம். இராமலிங்கசுவாமி அருட்பா.

தடித்தவோர் மகனைத்தந்தை தந்தைவந்தடித்தால் தாயணைப்பாள் தாயடித்தால், பிடித்தொரு தந்தையணைப்பன் ஈங்கெனக்குப்பேசிய தந்தையுந்தாயும், பொடித்திருமேனி யம்பலத்தாடும் புனித நீயாதலாலென்னை, அடித்ததுபோதுமினி யணைத்திடல் வேண்டு மம்மையப்பா யினியாற்றேன்.

வசனம்:— பூஜைமுடிந்து சுவாமிக்கர்ச்சித்த புஷ்பத்தில் ஒரு புஷ்பம் எடுத்து கண்களில் ஒத்தி சிரசில் சிறுத்தொண்டர் தரித்துக்கொண்டு மற்றொரு புஷ்பம் எடுத்து பெண்சாதிக்குக் கொடுக்க நங்கை இரு கறததாலும் வாங்கி சிறசில் தரித்துக்கொள்ள மற்றோர் புஷ்பமெடுத்து சீராளனுக்கு கொடென தொண்டர்கொடுக்க நங்கை கைநீட்டிவாங்கிய புஷ்பம் கைதவறி கீழே விழ நங்கை மனம்வருந்தி சுவாமி என்னகாரணமீதென ஏக்கங் கொள்ள சிறுத்தொண்டர் எல்லாம் ஈசன்செயலெனத்தேறி மறுபடியும் பூமியில் விழுந்த புஷ்பத்தை தொண்டரெடுத்து நங்கை கையிற் கொடுக்க வாங்கிய நங்கை சுவாமி என்னிருகண்களும் துடிக்கிறதென அவனன்றி ஓரணுவுமசையாதென பதிலளித்து பூஜையிடம்விட்டு நீங்கி பெண்சாதியைப்பார்த்து சிறுத்தொண்டர் சொல்லுகிறவிதம் காண்க.

## சிறுத்தோண்டர் வசனம்.

பெண்ணே நங்கை என்ன ஆச்சரியமாயிருக்கிறது. நான் பிராத்தகாலையிலெழுந்து ஸ்நானம்செய்து பூஜைக்கு ஆரம்பிக்கும்போது நம்மடத்திற்கு அமுதுண்ணவரும் பரங்கள் என்னுடன்கூடவே நூத்துக்கணக்காக பரங்கள் ஸ்நானம்செய்து பூஜை முடித்து காலை நொய்யரிசி கஞ்சியுண்ண காத்திருப்பார்கள் மேலும்மேலும் பரங்கள் வந்துகொண்டேயிருப்பார்கள் இன்று நான் பூஜைசெய்யும்போது ஒரு பரங்களையும் பார்க்கவில்லை வேறு பரங்களும் மேமேல வரவும்காணேன் இப்போது சூரியோதயமாகி நாழி இரண்டுக்குமேலாகியும் உடனுண்ண ஒரு பரமும் காணோம் காரணம் தெரியவில்லை எல்லாம் சிவன்செயலாகும் இருக்கட்டும் பார்ப்போம் என்ன மடத்தில் சமையல்பாகம் தயாராகி வருகிறதா.

நங்கை வசனம்:— சுவாமி நாம் ஸ்நானத்துக்கு ஆரம்பிக்கு முன்னமே மடத்து சுயம்பாகி வேலைக்காரர்கள் ஸ்நானம்செய்து அவரவர்கள் வழக்கம்போல் சமையல் தயாராகிவருகிறது இன்னும் இரண்டு நாழிகைக்குள் சமையல் தயாராகிவிடும் 5 நாழிகைக்கு பந்திவைக்க சித்தமாயிருக்கும்.

சிறுத்தொண்டர் வசனம்:— என்னகாரணம் சிவபெருமான் சோதனையோ பிறருடைய கற்பனையோ (மனதுக்குள் ஆலோசித்தல்).

சந்தனத்தாள் வசனம்:- மடத்தில் சமையல் இட்டமாயிற்று இலேபோடலாம் சுவாமி.

சிறுத்தொண்டர் வசனம்:— என்னசெய்வோம் பெண்ணே (என்று மடத்தைவிட்டு அன்னக்கொடி கட்டியிருக்கும் இடம் வரை வெளியில்வந்து பார்த்துவிட்டு உள்ளேபோகிறார்) பெண்ணே வீதியில்போய் பார்த்தேன் ஒருவரும் தென்படவில்லை நான் தெருக்களில்போய் பார்த்து வறவா.

நங்கை வசனம்:— ஆண்டவா, அவ்விடமறியாத காரியத்துக்கு நான் என்ன யோசனை சொல்லப்போகிறேன் ஆண்டவனுக்கு என்ன அபசாரம் செய்தோமோ அறியோமே சாமி.

## சிறுத்தொண்டர் அடியாரைக் காணமல் துக்கித்தல்.

### விருத்தம்

புண்ணியத்தி லன்னதானம் பெரிதெனபுகலு மனைக்கொண்டு
நண்ணியடியார்க் கமுதளிக்க நான்விரதம் கொண்டுவந்தேன்
பண்ணினான் பெய்ததவப் பலனதனைக் கூடாமலன்னம்
உண்ணவே அடியார் ஒருவரையுங்காணே னென்செயலேதோ.

[இராகம்-முகாரி. தாளம்-ரூபகம்]

### கண்ணிகள்.

1. சங்கராகங்காதரா ஓம்சிவனே சகல்புவனலோக ரட்சகனே
மங்கையோர்பாகம்வைத்தாய் ஓம்சிவனே மதியும்புனலும்
[கொன்றை சடையில்வைத்தாய்

2. எள்ளுக்குள்ளெண்ணெயைப்போல் எங்கெங்குந்தானுகி யிருப்பவனே
கல்லுக்குள் ஜோதியைப்போல் கலந்து நிறைந்துநின்றதாணனே

3. அரனேஉந்தனைகோரி அனுதினம்பரவகருக்கன்னமீந்தேன
ஒருவரும் மடத்திலுண்ண உதவவராத தாலென் மனங்
[கொதிக்கின்

4. திருவருள்செயலேதோஎன்ன தீவினைசெய்தேனோஅறியேன்
[னேயா
வரும்நம் திருவடியார் மடத்துக்கு வாராத காரணம் தெரி
[யவில்லை

5. நறுமலர் மாலைசூடி அரனை நாதனை மடத்திலென் னமு
[துண்ண
பெருமன அடியாரை நான் பெருமலிருந்துயிர் சதமென்ன

6. ஒருவரும் வறக்காணேன்சிவமே உன்செயலேதோ யானறி
[யேன்
பெருமையாய் செய்ததவம் இன்றோடு போக நினைத்ததான்
[னருளறியேன்

7. ஆவியை நான் விட்டிடுவேன் சுவாமி அடியாரையிப்போ
[தேடிப்போறேன்
கூவியுமடியார் கிடைக்காவிடில் என் கூர்வாளுக்கிரையாக
[வாறேன்

8. காவியேயெனை யேற்றுக்கொள்ளும் உம்தாளடி தந்தெனைக்
[காருமையா
காவியம் ராமசாமி போற்றும் கடவுளே நின்னடி தாருமை
[ய்யா (சங்கரா)

வசனம்:—பெண்ணே நங்கையென்ன செய்வேன் தினந் தோறும் நம்மடத்துக்கு அமுதுண்ண அடியார் திரைதிரையாக வந்துக்கொண்டிருப்பார்களே யாருக்கென்ன அபசாரம் செய் தோமோ அரன்செயல் நமக்கிம்மட்டிந்தானோ என் செய்வேன் கண்ணே.

## சிறுத்தொண்டர் அடியார் வராததால் மனைவியோடு கிலேசித்தல்.

### விருத்தம்.

சிந்தையும் கலங்குதிப்போ செய்வகையறியேன் பெண்ணே
வந்திட்ட பெரியோர் மனம் வருத்தமுற செய்தோமோ நாம்
எந்தனுல்மனுமுறைக் கிடர்பட எண்ணினேனோவென்றுதன்
பத்தமுள்ள மனைவியோடு பதருவான் மனம் நொந்தகதருகுவர்
[னே

இராகம்-சக்கிரவாளம். தாளம்-ரூபகம்.

பல்லவி.

பெண்ணே என்னசெய்வேன் நானே     என்
கண்ணே நீ சொல்வாய் மானே

அநுபல்லவி.

அன்னமுண்ண வருமடியார் தன்னையிப்போ காண்கிலேனே
உண்கிலேனே (பெ)
முன்னாள்செய்தவினை பின்னதோ தான

சரணங்கள்.

பத்தனடியார்கள் தினம்
பித்தனருள் வேடத்துடன்
சுத்தமனம் தன்னை நீக்கி
அத்தனடிகள் மனம்கசந்து

எத்தனைபேர்வந்திருந்து
புசித்திருந்துபோவார்களே
ஆகாசநாம்கடந்தோமா
அகன்றெனைக்காவார்களோ (பெ)

நித்தியவிதிநெறியில்நான்
சத்தியம்பிசகிநடக்கும்
பத்தினிமார்கள்மனம்
புத்தியில்லாகள்குடி

நேமக்குறைநடந்தேனோ
சண்டாளரைத்துடந்தேனோ
பதறநெறிகடந்தேனோ
போக்கிரிநேசமடைந்தேனோ ()

பசித்தபேர்வந்திருக்க
நசித்தவர்பொருள்பறித்து
குஷியாயிருந்தோர்களோ
திசியிலுறங்கவந்தோர்க்கு

புசித்துநேசம்கொண்டேனோ
நாடிவட்டிஉண்டேனோ
கோட்சொல்லிபழிப்புண்டேனோ
நில்லாதிடம்விண்டேனோ (பெண்)

வசனம்:—பெண்ணே நாமென்ன செய்வோம். இப்பிறவியில் மனமற எவ்வித கெடுதியும் பாவமும் நாம் செய்ததில்லை. முற்பிறப்பில் செய்த தவக்குறையோ. பசித்தவர்கள் பார்த்திருக்க புசித்தேனோ, பருவமங்கைகள் மனம்நாண பாராக்குறியைபார்த்தேனோ, இரவில் படுத்துறங்க வந்தவர்க்கிடமில்லை யென்றேனோ, என்ன தீங்கிழைத்தேனோ, கடவுள் இன்றைக்கென்னைஉடனுண்ண பரங்கள் கிட்டாமல் பட்டினியாய் கிடைக்க செய்தார் திருவருளை நோவானேன். திருவருளின் நோக்கம் எவ்வாறறிவேன் எது எப்படியிருந்தாலுமிருக்கட்டும். நானிந்த ஊரைச்சுற்றிப்பார்த்து பரங்களெங்கிருந்தாலுமழைத்து வருகிறேனிதற்குள் எந்த அரிதேசி பரதேசியாராவது மடத்துக்குவந்தால் என்னை எதிர்பாராமல் உபசரித்து அன்புடனன்னமளித்து காதியோடிருப்பாய் நான் பரங்களைத் தேடிப்போகிறேன்.

நங்கை வசனம்.

சுவாமி விசாரம்வேண்டாம். அன்றளித்த ஈசன் இன்றைக்கில்லையோ அந்தந்தகாலம் எதெது எப்படி கிடைக்குமோ அப்படியே நடக்கும். இல்லறம் நடத்துவோர்க்கு நாம்செய்யும் காரியங்களில் அடிக்கடி சங்கடம் நேருவதியல்பே. வருந்துவதில் பலனில்லை. கடவுள் சோதனை என்பது நிச்சயம். அடியார்களைத்தேடி சீக்கிரமழைத்து வருவீர் சுவாமி.

## சிறுத்தொண்டர் தங்கைக்கு சொல்லுதல்.

### விருத்தம்.

ஓதுகின்ற நங்கைமாதை உண்மைச் சிறுத்தொண்டர் நோக்கி
நீதின்றி மடத்திலுண்ண சிறந்திடும் பெரியோர் வந்தால்
பேதையே வணங்கியேயும் புசித்திட சொல்லெனச்சொல்லி
காதலாலடியாரைத்தேடி கருத்துடன் மடம்விட்டு புறப்பட்டாரே

இராகம்-எதுகுலகாம்போதி. தாளம்-ரூபகம்.

### பல்லவி.

தேடித்தேடித்திரிந்தேனே அடியார்களைக்காணாமல்
இளைத்துமனம்நொந்தேனே.

### அநுபல்லவி

நாடி அடியார்க்கமுதூட்டி நானும்புசித்தமனம்வாடி
தேடி திருச்செங்காட்டாங்குடி தெருகாலுவீதியும்கூடி ()

### சரணங்கள்.

பட்டணமுமதைச்சேர்ந்த வட்டமெல்லாம்திரிந்து
பாதைகளும்சாலைகளும் பந்தல்சாவடிகளும்
கொட்டகைகளும்குதிரைலாய கட்டடங்களுமதைச்சேர்ந்த
பட்டறைகளும்கோவில் முட்டரைகளும்தோடிகளும் ()

தண்ணீர்பந்தலும்தர்ம சத்திரம்சாவடிகளிலும்
சாஸ்திரம்புராணம்படிக்கும் சாதுவேதியர்வீடுகளிலும்
மன்னில்மறந்தோப்புகளிலும்வண்ணியர்வீட்டுவாசல்களிலும்
திண்ணைத்தெருக்களிலும் வண்ணவிநோதசபைகளிலும் ()

ஆத்துமாநிழல்களிலும் சூத்திராஜாதிவீடுகளிலும்
அந்தணர்யாகசாலை சுந்தரதாசிவீடுகளிலும்
நேத்திபானசோலைகளிலும்பாத்திரம்செய்குயவர்வீடுகளிலும்
தோத்திரம்செய்மேடைகளிலும் துரைத்தனகச்சேரிகளிலும் ()

சத்துவதேகமேல்வேர்வை முத்துமுத்தாயாடிய
சாக்ஷாத்கடவுளடி தன்மனதிலேபாடிய
கர்த்தர்சோதனையால் காலோய்ந்துகாணக்கொடிய
காலவெய்யலின்கொடுமை கண்களில்நீர்வடிய (தேடி)

### போது வசனம்.

இந்தவிதமாக அடியார்களைத்தேட சிறுத்தொண்டர் புறப்

பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் நங்கைமாது சந்த தாதியுடன் விசாரத்துடன் மடத்திலிருக்கையில் ஷெ சிறுத்தொ ண்டரை சோதிக்க முந்தியே நந்தியை அனுப்பி பாங்க காணுமல்மறைத்து நங்கையைவிட்டுசிறுத்தொண்டரைப் பிரி செய்து நங்கையின் மனேபாவத்தை தெரியவும், நங்கை உலகோர் கொண்டாடி பின்பற்றவும் வைரவ வேடம் கொண் ஸ்ரீகைலேநாதர் நங்கைக்கு தெரிசனம் கொடுக்கவருகிற வி காண்க:—

### வைரவமூர்த்தி திருச்செங்காட்டாங்குடி வீதியில் வருதல்.

### விருத்தம்.

காதில் குண்டலம்தரித்து கனத்ததோர் முடிமுடித்து
பாதி மதியணிந்த பாமனர் பாதேசியைப் போலவேதான்
ஜாதி பேதமற்ற சாது சங்கமர் வேஷங்கொண்டு [ரு
நீதில்லா திருச்செங்காட்டாங்குடி தேடியே பிட்சைக்கு வருகி

### நொண்டிச்சிந்து.

அன்னையே தந்தைமாரே-என்னே-யாதரிப்பவருமிங்கிலேயோ
சொன்னர்கள்வெகுதூரத்தில்-இந்த-சோழமண்டலம்வெகுசீலமென்
கம்பீனனிங்குவந்தேன்-வெகு-நாளாகவேயெனக்குசோரில்லாமல்
வெம்பிஉடல்மெலிந்தேன்-பசி-வேதனையாலென்உளம்கரைந்து
ஆவியைவைத்திருந்தேன்-ஒரு-அன்பரைக்கண்டுபுசிக்கவேண்டி
கூவியேயகத்திவாரேன்-என்ன-கொடுமையோயொருவருமழைக்காதே
தர்மம்முப்பத்திரெண்டில்-வேதம்-சாற்றிடுமன்னதானமென்று [
மர்மம்தெரியாமலே-நீங்கள்-மறைந்துபோயிருப்பதுஞாயமோதான்
கண்களிருளுதையோ-எந்தன்-கால்களும்பின்னித்தடுமாருதையோ
அன்னமிடுவோர்க்கு-சிவன்-அடையனேசாயுட்சம்தனைகொடுப்பார்
ஓர்பிடிசாதமெடுத்து-அடியார்-உண்ணவேநடந்துவந்துகொடுத்தால்
நீர்உள்ளளவுமடுத்து-கைலே-நிலேயிலேவதிற்கசிவன்உகந்தளிப்பார்
என்பசியறிந்துவந்து-அன்பாய்-எனக்கமுதளித்துஉண்பீராகில்
கண்ணியமாயிவ்வுலகில்-ஈசன்-கழலடிபோற்றிசுகமடைவீர்
அன்னம்படைப்பதற்கு-தக்கபடி-அளிக்காதபாவிகள் அடைவார்நரகம்
இன்பமாய்கொடுத்தவர்கள்-இவ்வுலகில்- இறைவன்போலிருந்துசுகமடை
அஷ்டலட்சுமிகளும்-அவரை-அகலாமலருகில்தானிருப்பார் [வா
கஷ்டமேவாராது-அவருக்கு-கடவுளடிகிட்டேநெருங்கிவரும்
உத்தமமாகமுன்னம்-வேதம்-உரைத்தநூல்களாராய்ந்துக்கொண்டு
சித்தத்தில்தெளிவுகொண்டு-ராமசாமி-செப்பியபடிநான்ஒப்பிச்சொன்
தானன தனன்னனு தன்னு தானன தனனு தானனனு [னேன்

வசனம்:—அரகரா சம்போ! இவ்வூரில் முற்பிறவி மானிட தேகமெடுத்து பசி, தாகம், தயை தாக்ஷிண்யம் முதலிய குணங்களை பாகுபடுத்தி அறிந்தவர் இப்பிறவியில் மானிடதேகமெடுத்து கருதி, சொல்லடுத்து, யுக்தியால் தொடுத்து, அனுபவத்தில் கொடுத்துதவும் மானிடரிங்கில்லையோ அவர் வந்துதவவில்லையோ.

## பரதேசி குரலோசைக்கேட்டு நங்கை சந்தனத்தாளை அழைக்கச்சொல்லல்.

மதகு வயிற்று மகன்போலே என்ற திருப்புகழ் வர்ணமெட்டு.

நங்:- சந்தனமாதே யார்தானோ சத்தம் சங்கராவெனக் கேட்டேனே
முந்தபரங்கொண்டு வந்தாரோ மகிழ் தந்தாரோ [நாதன்

சந்:- எந்தன் காதிலும் தைத்ததே அது ஈசன்மொழிபோ லொலித்ததே
என்றுமிங்கே வருவாரே மடம் அறிவாரே [அடியார்

நங்:-மைந்தர்வார்த்தையா யிருக்குமோ சிவ மங்கைபாகனும் பொருக்கு
சந்தேகமறப் பார்த்துவருவாயே சுகம் தருவாயே [மோ அதை

சந்.- அன்னையே யிதோபோறேனே அந்த அடியாரைக் கண்டுவாரேனே
உண்புகழ்க்கழைத்து வருவேனே இது முறைதானே. [இருந்தால்

சந்தனம் வசனம்:—வெளியே போய்பார்த்து அடியாரிருந்தாலழைத்து வருகிறேனம்மணி.

## சாமியார் தரு.

தில்லையம்பல ஸ்தலமொன்றிருக்குதாம் என்ற வர்ணமெட்டு.

திருச்செங்காட்டாங்குடி திருநகரிலே அங்கேசிறு
தொண்டர்மனையென்றோர் மடமுமிருக்குது
வருமடியார்க்கமுது கொடுக்கிறார் திருப்தியாக
வந்தபசிதீர உண்ணலா மென்றாரே.
அந்தச்சொல்லைக்கேட்டு இங்குவந்தேனே எனைஎங்கொருவரும்
ஆரென்றுகேட்க இன்றிநொந்தேனே
எந்தன்பசிதீர வந்துகொடுத்தானே அவன் சந்ததமும்
இகத்தில்புகழோடு பதத்தை அடுப்பானே
இல்லறம்நடத்தும் வல்லவர்யாருமே அடியாரைக்கண்டு
இச்சையுடன்வந்து ரட்சித்தால்பாருமே
கள்ளமில்லாநற் கதியைச்சேருமே பொல்லாமாயக்கடலை
கடந்துபோக வழியும்சேருமே

தொண்டர்மடத்தை அன்பாய்காட்டுங்கள் அங்கேயிருக்கும்
சோதிமென்பர் யாரோகாட்டுங்கள்
வண்டர்என்போரை வாரமேலாட்டுங்கள் இப்போயெனக்கு
வந்தபசியை வென்றுவாட்டுங்கள்

வசனம்:—அரகராசிவனே என்னை அழைப்பாரில்லையோ, அன்னங்கொடுக்கும் அன்பரில்லையோ, என் பசிதணிக்க பக்தர்களில்லையோ.

சந்தனத்தாதி அடியாரைக்கண்டு தெரிசித்தல்.

சரணகமலாலயத்தே அரைநிமிஷ நேரமட்டுமென்ற வர்ணமெட்டு

சரணகமலாலயத்தோர் உறவெனவே நினைக்குமுந்தன்
நம்மடியை யான்பணிந்தேன் பெரியோரே
தருமநிறைவேயொரு உருவமதாய் புவியில்வந்த
சாஹனனை பெற்றேனருள் உறவோரே
அரும்பெரிய செரியதனில் அன்னதானமியற்றும்
அன்பர் சிறுத்தொண்டரவர் மறையோரே
உறமறிய அறம்புரிய உற்ற அன்னதானத்தில்
உண்ணவர வேணுமுதிர் சடையோரே
சிரமமது பெருகிவற தேவிஎன்நங்கைபதி
தேடிச்சென்ற கலக்கம்திர வந்திரே
திருச்செங் காட்டாங்குடி புரிந்த நற்றவத்தால்வந்த
திக்கெல்லாம் துதிக்குமன்பர் பதத்தோரே
நரைதிரையு முப்புவந்து நாங்கள் நலியாமலிப்போ
நாடியருள் புரியவந்த இதத்தோரே
தாமுட னுமைக்கருதும் தாஸன் ராமசாமிமனம்
சந்தோஷமாய் சொல்லும்துதி கேட்பீரே.

வசனம்:— சரணம் சரணமையா சுவாமி! எங்கும் புகழ் பெற்ற சிறுத்தொண்டர் அன்னதான மடத்தில் சாப்பிட வரவேணும் சுவாமி.

சந்தனத்தாதி பின்னும் மன்றாடி வேண்டல்.

அய்யா பழனிமலை வேலா என்ற வர்ணமெட்டு.

அய்யாபெரியவரே சுவாமி எம்மையாதரித்திடவந்தநேமி
மெய்பாககைதொழுதேன் வாமி இங்கேயேவிவரக்கத்தாளும்பூமி

தொண்டர்மனையுமிதுதானே அன்பாய் சோறிடுமடமிதுகாணே
கண்டாளவந்தபூமானே உன் கழலடிபோற்றினேன்நானே

இங்கேவந்தமுதுண்ணவேணும் தாமும் இளைப்பாறிபின்செல்லகாணும்
தங்கியமுதுண்டாலேதோணும் பொல்லா சதிசெய்யும்பசியதுநாணும்

அன்னம்கொடுக்கமனம்நாடி இங்கு அமைத்தமடமிதுவேகூடி
இன்னும்மென்கிற்குறீர்தள்ளாடி வந்து ஏந்திழைபணிந்துமேமேறோடி

ப[illegible]குமமுதால்பரதேசி நாளும் பலரிங்குவருவார்நல்வாசி
[illegible]ட்டாயின்றுவாராமக்கூசி நின்ற சங்கடத்தைதீர்க்கவந்தநேசி

கற்பகத்தருவைப்போல்வந்தீர் உங்கள் காட்சிஎங்களுக்குதந்தீர்
[illegible]சலைபதேவன்போல்நடந்தீர் திருச்சேவைகொடுத்திடயுகந்தீர்

எங்கள்மடத்தில்நீருமுண்டு வந்த இளைப்பாறிபசிதீரக்கண்டு
மங்கும்வினைகளெல்லாம்பண்டு ஓடி மாயச்செய்வீருளம்கொண்டு

சரணம்சரணமேற்பீர்சீலா ராம சாமிசொல்லைவெகுமேலா
கருத்தில்நினைந்துவெகுகாலாநான்காத்திருந்தேன்வாமறைமூலா

## வைரவருக்கும் சந்தனதாதிக்கும் சம்வாதம்.

### பாளைவாய் கமுகில் வந்தூர் என்ற காவடிச்சிந்து.

1 காலவேளையிலேவந்து சிலமாயமழைத்திடும்
கன்னியேநீயாரெனக்கு சொல்லுமே உன்
வண்ணத்தைவிபரமாக விள்ளுமே
வேளையோவிடிந்து ஐந்துநாழியாச்சு யமுதுண்ண
விரும்பியழைக்கவந்தேன் புண்ணியா கூறும்
அருமறைமொழிபோலொத்த கண்ணியா

2 ஆரோநீயுன்பேரென்ன அரிவையேயுந்தனூரும்
அறைகுவாநீயெந்தனுக்கு முன்னமே உந்தன்
மர்மத்தைவிபரமாக அன்னமே
பாரிலே யாராட்சிகட்டி பரிந்தன்னதானம் செய்யும்
பக்தர்சிறுத்தொண்டர்பாரி தாதி அந்த
பாவையழைப்பாரெனைசந்தனமென் றோதி

3 உந்தன்ராணி செந்திருவிருக்க எந்தனை வந்தழைத்த
உண்மையது தெரியவெனக்கு புரிவாயே அந்த
வண்மையறியாமல்வாரேன் அறிவாயே
சந்தன்மா துகந்துயெனை உங்களை யழைத்துவா[ர]
ஏவினதால்நானும்வந்தேன் நன்மையே [எ]ன்
ஈசனிஞல்பொய்யுரையேனிது உண்மையே

4 அன்னமிடும் கன்னியர்கள் என்னை வந்தழைத்த[ல]ன்றி
அன்னியர்கள்வந்தழைத்தால் வாரேனே இ[ங்]க
புண்ணியமாய்சொல்லிவிடு போவேனே
மண்ணில்வந்த தண்ணியரே கன்னியமாய் நில்லுமெ[illegible]ன்
அன்னைமாரையழைத்துவாரேன் நானுமே இது
உண்மைசாமசாமிசொல்லேலே காணுமே

வசனம்:—சுவாமி கோபம்வேண்டாம்! தேவரீர் கருத்தி[ன்]படி என் மாது நங்கையம்மாளுக்கு தெரிவித்து அழைத்துவாரேன். இவ்விடமே இருக்கவேணும் சுவாமி.

## பொது வசனம்.

கேளும் சபையோர்களே! இந்தவிதம் சந்தனத்தாதியும் வைரவரும் தர்க்கித்துக்கொண்டிருக்கையில் மடத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த நங்கைமாது வெளியில்வந்து வைரவரை தெரிசித்து சொல்லுகிற விதங்காண்க.

## வைரவரை நங்கை தெரிசித்து வேண்டல்.

### விருத்தம்.

இந்தவிதம் சந்தனத்தாளோடு வைரவர் இறைந்திடும் வார்த்தைக்கேட்டு, பந்தமது மேல்கொண்டு பார்த்திருந்த நங்கை பரபரப்புடனேவந்து, சிந்தையில் களிகொண்டு தேவாதிதேவனை மதித்து சிறம்வணங்கி, எந்தையேயெனைக் காக்கவேண்டுமென இணங்கினாள் கைதொழுது வணங்கினாளே.

[இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.]

பல்லவி.

சரணம் சரணம் தம்பிரானே எனை
தற்காத்தருளவேணும் எம்பிரானே

அநுபல்லவி.

கிரிகடல்பூமியில்வந்தஉன் திருவடிச்சேர்க்கஎன்
மேலென்ன அபசாரம் ஆயிரம்நமஸ்காரம் (சர)

சரணங்கள்.

மடத்திலமுதுண்ண மகான்கள்வருவாரென்று
வழிபார்த்துநானிருந்து வரச்சொன்னேனறிந்து
அடுக்குமமுதுண்ணயிருந்து ஆபாசமொழிதெரிந்து
இழைக்குமருள்சுரந்து ஏற்றுக்கொள்வீர்வினைதுறந்து (சர)
இக்குவேறில்லையுந்தன் பக்கத்திலேயுகந்தேன்
சேர்த்துகதிகொடுக்க செய்யமுதுதந்தேன்
தங்கபணிவிடைபுரிய தாளடிநான்புகுந்தேன்
சாமிதடையில்லாமல் தான்வருவீரென்றுவந்தேன் (சர)
[illegible]ம்பலமில்லாமல் இந்தமானிடஜாதி
இறந்ததோர்க்கியாமல் யிருந்தென்னபுகழ்நீதி
நீதுநல்லதிதென தெளிவிக்குமுலகநீதி
தெரியாதவரைப்போல் சேர்வேனோ அருட்ஜோதி. (சரண)

வசனம் — சரணம் சரணம் ஆயிரம் நமஸ்காரம் சுவாமி தேவரீரைப்போலொத்த மகான்கள் மடத்திற்கு வருவோரை உபசரிக்க யிருந்து தாதி சந்தனத்தாளை தேவரீரை அழைத்து வர அனுப்பினேன் கோபம்வேண்டாமென்னைஏற்று மடத்திற்கு எழுந்தருள வேணுமையோ சுவாமி.

## வைரவரை மடத்திலமுதுண்ண நங்கைவேண்டல்.

விருத்தம்.

நலந்தரும் வைரவரை நாடிபணிந்து பெரியோரை
பெலந்தரு மமுதுண்டு பசிதீர வருவீரென்று
குலமுறை தவாநங்கை கைகூப்பியேவணங்கினின்று [னே.
நிலமுற மகிழ்ந்தாண்டிட்டாள் பெரியோரை வேண்டிட்டா

இராகம்-சங்கராபரணம். தாளம்-ரூபகம்.

பல்லவி.

இங்கேவரவேணும் மடத்திலமுதுண்ண எழுந்தருளநாளும்

அநுபல்லவி.

நங்கையென்னாயகரும் நாளுமிங்கேஉய்ய
நாடியருள் வரமெய்யா நலமாயமுதுண்ணமெய்யா (இங்)

சரணங்கள்.

பூவுண்டுகாயுண்டு கனியுண்டுதேனுண்டு
புதுமடிவுடைகளும் பூஜைக்குகந்ததுண்டு
தாவுண்டுதடமுண்டு காவேரிஜலமுமுண்டு
தான்வேணபட்சணம்கொண்டு நான்படைக்கும்லட்சணம்கண்டு ()

நித்தியமடியார்க்கு சற்றும்குறைவின்றி நாளும்
நின்றுஉபசரிப்பேன் நிர்மலாநீர்வரவேணும்
முற்றிலும்நிறைதிங்கள் போலேவிளங்குமுங்கள்
முகங்கண்டால்வினைபோமே முத்திமோட்சமுண்டாமே (இங்)

இழையதிட்டியசம்பா இனியவடிசல்களும்
அழையவெந்தபருப்பும் ஆவின்நெய்உண்டிகளும்
தழைத்தஇலைக்கறியும் சாம்பார்மோர்குழம்புகளும்
அழைத்துஎன்றுல்படைக்கும் அமுதன்னதாங்களும் (இங்)

வசனம்:—எங்கள் மடத்தில்வந்து இன்பமான போஜன வகைகளையுண்டு களைப்பாறி காட்சிகொடுக்க வரவேணும் சுவாமி.

## வைரவருக்கும் நங்கைக்கும் தர்க்கம்.

விருத்தம்.

கன்னியாம் மீனாட்சிபாகன் கர்த்தரின் பதத்தைநாடி
இன்னில மன்னதானம் இயற்றும் நல்நங்கை தாயேயுன்
மன்னவனின்றி நீயும் வந்தழைக்க நேர்ந்தசேதி
என்னவோ யதையெனக்கு இன்பமாய் சொல்லாயம்மா.

இராகம்-நீலாம்புரி தாளம்-ஆதி.

கண்ணிகள்.

1 செம்பவள இதழுடைய சுந்தரமே நீதனியாய் வந்த
சேதியென்ன சொல்வாய் தாயே
கும்பிட்டு வணங்கி நந்தமுது செய்திட
கோரியழைக்க வந்தேன் சுவாமி

2 சொந்தபதியை உள்ளிருத்தி சந்தோஷமாய் வெளிவற
தோகையற் கழகோ சொல்வாய் தாயே
எந்தன் நாதன் மனையி லில்லாத காரணத்தால்
எந்திழையும் அழைக்கவந்தேன் சுவாமி

3 உன்னாத னில்லாமல்நீ தன்மையி லிருக்கும்போது
அன்னியரை யழைக்கலாமோ — தாயே
கன்னி வீசரைப்போல் காணுமுமை யழைக்க
கபடமே நினைக்கவேண்டும் — சுவாமி

4 கற்புடைய சீதை கண்டுசன்யாசியை யழைத்த
கதையைநீ கேட்டதில்லையோ — தாயே
நற்குண லட்சுமணனை நாடிககர்று சொன்ன
துர்புத்தி யால்வந்தது — சுவாமி

5 சித்தத்தி லெத்தனை சுத்தமானாலும் பெண்கள்
நத்திவெளி வரலாமோ — தாயே
முத்திக்கு வித்தாக மொழியுமுமைக் கண்டுநான்
பத்தியாயழைத்திய பாபமேன் — சுவாமி

6 உத்தமபெண்கள் உற்றகணவ னன்றி மற்றோரை
சுத்தசிவனானாலும் பாராரே — தாயே
எத்திசை யறிவோரும் சத்திய பதிக்கிணங்கி
சித்திபெற செய்வாரே — சுவாமி

7 இத்தரையி லுன்கணவனுன் னில்லத்தை விட்டுப்போக
ஏற்றசதி யென்னசொல்வாய் — தாயே
நத்திமடத்தி லுன்னை நாடிவரு மடியார்கள்
இத்ததிவாராததால் ஏகினர் — சுவாமி

8 இல்லறம் நடத்துவோர்கள் இறப்பவர்க் கீவதல்லா
லேன்தேடி போகவேணும் — தாயே
பிள்ளைவரம் கேட்கசிவ பெருமா னுரைத்தபடி
புரிந்ததைச் சொல்லக்கேளும் — சுவாமி.

வசனம்:— என்நாதன் என்னைவிட்டு நீங்கிய விவரமும் நான் தேவரீரை தனியாய்வந்தழைக்க நேரிட்ட விவரமும் சொல்லிவருகிறேன் கேளும் சுவாமி.

### வைரவருக்கு நங்கை கணவன் பிரிவை எடுத்துக் கூறல்.

நொண்டிச்சிந்து.

அய்யரே பெரியவரே-ஏழை-அடியாள்முறை சொல்லக் கேளும்
வையகமதிலுள்ள-வெண்காட்டில்-மறையவர்குலத்திலேயான் பி
[றந்தேன்

செந்நெல்விளைநாடு-திரு-செங்காட்டுகுடிதனில்பிறந்த
பண்டிதபரஞ்சோதிஐயர்-பாணிக்கிரகணம்செய்துக்கொண்டார்
யானையேற்றத்திலே-எனதன்பர்-அகிலமெலாப்புக ழுடைந்ததா
சேனைக்கோனாகை-காஞ்சி-ஜெகத்ததிபதிநர சிம்மராஜன் [லே
கொண்டுபோய்வைத்தார்-அங்கே-குறைவின்றிநாங்களிருக்கும்
[போது

பண்டுவினைமிகுந்த-கன்னேசிநாட்டை-பரிபாலித்த ஹர்ஸவர்த்தனையே
தண்டுமுறியடித்து-வாதாபிநகர்-தனையாண்டபுலிகேசிமமதையாலே
கொண்டசேனைபலத்தால்-கச்சி-கொத்தளங்களத்தனையும் பத்திக்கொள்ள
எண்ணம்கொண்டதை-எனதையர்-ஈசனருளாலறிந்துகொண்டு [த்தை
முன்னமேசிவனருளை-கைகொண்டு-முற்றுகைபோட்டுவாதாபி பட்டண
தோற்கபுலிகேசியை-கொன்றங்கே-சொர்ணங்களுள்ளதெல்லாமே
ஏற்கவைக்கொண்டு-நரசிம்மனிடம்-எடுத்துவந்தபொருளை ஒப்புவைக்க
கண்ட அரசனவர்-இப்பொருள்-கலைகண்டவனருளால்வந்ததென்று
தொண்டுபுரிவதற்கு-எனதையரை-தோன்றலும்கொண்டுபோவெனவே
அண்டிதடுத்துரைத்தோம்-கேளாமல்-அரனடிதொழபோயெனவே
கண்டுஇங்கடுத்தோம்-கணபதீசன்-கழலடிபணிந்துசுகமிருந்தோம்
மண்டலவாழ்க்கையிலே-இல்லறத்தில்-மக்களடைவதுதக்கதென்று
பெண்டுயென்மனக்குறையால்-கணபதீசனை-பிள்ளைவரமொன்றுவின்
[ளைக்கேட்க
சொன்னவேஅசரீரிவாக்கால்-அன்னதானம்-கொடிகட்டிபடையெனச்
[செய்ய

கல்வேதார்பிள்ளைபிறந்து-வயதைந்தில்-நாடியேபள்ளியிலோதிவாரான்
தினமதுதவராமலே-மடத்துக்கு-தேடியேஆயிரம்பரங்கள்வந்து
அன்னமதுண்டுபோவார்-என்ன-அநியாயம்செய்தோமோயதியோமையா
இன்றைக்கிதுவரையில்-ஒருவரும்-இன்பமாயமுதுண்ணவாராததால் என்
அன்புள்ளதொண்டனும்-பரங்களை-அழைத்துவருவேனென்று களைப்பு
ஏகிவெகுநேரமாச்சு-நாங்கள்-ஏங்கியேமடந்தனிலிருக்கும்போது [டனே
பாகிகைலாசவாசன்-அவரிட-பக்தராமுமைக்கண்டோடிவந்தோம்
எங்கள்மடத்திலேதான்-தாங்கள்-எழுந்தருளிபூஜைசெய்யவேணும்
திங்கள்சடைதரித்தோன்-இப்போ-தேவாதிதேவன்தாமேயென்று
எண்ணிமனமுவந்தேன்-சுவாமி-எங்களையாட்கொள்ளயிது தருணம்
வண்ணமாயருசுவையின்-உண்டிகள்-வடைபாயாசமும்பால்தயிரும்
ஆயத்தமாயிருக்கு-ஆண்டவனே-அன்புடனீர்வந்துண்ணவேணும்
ஆய்த்தகலையுணர்ந்த-அண்ணலே-அடிகளின்மலர்பாதம்போற்றிகின்றேன்
பூமிதனிலுயர்ந்த-பெரிய-புராணத்துடன்பலநூல்படித்து
சாமியுமையழைக்க-ராமசாமி-சாற்றியபதத்தாலழைத்தேன்வாரும்.

(ஐயரே பெரியவரே)

வசனம்:— தேவரீர் காலதாமதஞ்செய்யாது மடத்திலுள் எழுந்தருளி அமுதன்னை அருள்பூணவேணும் சுவாமி.

## நங்கைக்கு வைரவர் கூறல்.

### விருத்தம்.

அன்னம் புசிக்கக்கேட்ட அன்புள்ள மாதேகேளாய்
தன்னலம் கோபம்லோபம் தனைவிட்டு தபசியானோர்
மன்னவ ரில்லாவீட்டில் வந்துமே யமுதுகொள்ளார்
கன்னிகையாளேயுந்தன் கணவன்வந்தழைத்தால்வருவேன்

1 பத்தியாய்பெண்பாதம் பணிந்தழைத்திடும் தாயே அம்மா
உத்தமியுன்புகழ் புலோகங்க வாழ்வாய் நீயே
2 கொஞ்சுங்கிளிமொழி வஞ்சியரிற்சிறந்த மாதே நீ
அஞ்சேலெதர்க்குழன் சஞ்சிதவழ்தீரும் கோதே
3 மாமறைகுலத்திற்கு மாமணியாய்விளங்கு மானே உனக்கு
சோமனைதரித்தோ னேமமாயருள்வார் கானே
4 தாமரையில்வாழ் சதுர்முகன்செய்திடும் வேதம் உலகில்
பாமரர்முதலினோர் பற்றிநடப்பதுவே நீதம்
5 பத்தாயில்லாமனையில் பற்றலாகாதென மொழியே இது
சித்தாந்தின்ரசம் தேவருமொப்புவார்மீன் விழியே
6 ஆணும்பெண்ணுமா யயனமைத்தானிப்பிர பஞ்சம் அதில்
ஐமலர்க்கணையோனு லரிவழிந்ததைகேள் கொஞ்சம்
7 பாலன்தந்தையானாலும் பாவையர்மனது பற்றுமேமாயை
[வஞ்சம் என்று
பாஞ்சாலிசெல்வி பழம்பொருந்துங்காலை பகர்ந்தாளே மாத
[ர்நெஞ்சம்
8 சிற்றன்னைவீடென்று சென்றிட்டசாரங்க ராசன் ஒரு
குற்றமுமறியாமல் குறைப்பட்டான்கைகாலரி நேசன்
9 அத்திரிபாரி அனுசூயை பெற்றிட்ட சோமன் குரு
பத்தினிசொல்கேட்டு பழிப்புண்டான்சுளகு வாமன்
10 அனுசூயைவீட்டிற் கமுதன்னசென்றிட்ட மூவர் தங்கள்
அருமைபெருமைவிட் டழுதிட்டார்குழந்தையாய் தேவர்

11 வாசவன்ரதி வசிஷ்டசுக்கிரீவனும் கூடி பெண்
பாசத்தால்தாரத்தருண்ட பழியால்வந்தார்புவி தேடி

12 வாணவர்சடைகங்கை வந்தவோர்குற்றத்தி னாலே உலகு
காணஊர்வசியாய் கலந்துசந்தனனைகாங்கேயனைபெற்றளே

13 அருந்ததிசீங்க மற்றருவரும்கார்த்திகை யாக இந்த
பெருநிலம்வருந்த பழியைசுமந்தார்வீ ணாக

14 இந்திராணிகலிகை தனியிருந்துபேசிய தாலேகௌத
தந்தசாபத்தா லிந்திரன்மேனிபங்கமாச்சுமுன் னாலே [மர்

15 கன்னிகுந்திஅழைக்க கதிரோன்களித்துமுன் வந்து பெற்ற
காதல்மதலையை கடலில்விடுத்துகலங்கினார்மனம் நொந்து

16 உத்தமியென்றுனைவுலகம்புகழ்வதையுணர்வேனானல்வேதம்
உரைத்ததைமீறி உன்னில்லமடுத்தால் உம்பர்பழிப்பாரென்
[வானுள்

17 ஆணவம்மாயை காமியமற்றுவந்தேன்பர தேசி இப்போ
தானவர்தவத்தோர்பழிக்க தான்வரமாட்டேனுலக நேசி

18 கணபதீசுரமிருக்கும்காட்டாத்திமறத்தடிநானே அமர்ந்தென்
மணவாளன்வர வழிபார்த்திருப்பேன் தானே

19 மந்திரத்திமுன் னுனைமணந்தவரழைத்தால்வருவேனே இதந்த
நந்திடாகன்பெற்ற கந்தன்மேலாணைசொன் னேனே.

வசனம்:— அம்மணி உனக்கு நீ நினைத்தபலன் கைகூடும் புருஷனில்லாமல் தனித்திருக்கும் பெண்களை நாடி தாம்புசிக்க சற்சனர் நினைக்கார்கள் நமக்கு மெத்த பசியால் உடல் சோருது உன் பர்த்தா வந்தால் சீக்கிரம் கணபதீசுரமிருக்கும் காட்டாத்தி மறத்தடியில் நம்மைக்காண வரச்சொல் வந்தழைத்தால் உன் கையமுதுண்ண வருவேன். இது சத்தியம் தவரேன்.

### வைரவருக்கு நங்கை சமாதானங்கூறல்.

விருத்தம்.

அரிஅயன் சிவனுமுந்தன் அமைப்பதைக் கண்டபோதே
திருவவதாரமாக யெனக்கு தெரிசிக்க தந்தாயென்று
உறுதியாயெந்த னுள்ளத்தில் தோன்று திப்போநான்
தருமமுதுண்டு களிக்கத் தயாபரா வேண்டிட்டேனே.

இராகம்-காம்போதி. தாளம்-ஆதி.
(ஆறென்று மிரட்டுகிறீர் சாமி என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

எப்படி துணிந்துசொன்னீர் சுவாமி புருஷனில்லாமனையில்
புசிப்பதுபாபமென்று ஏலற்குமோஇந்த பூமி

அனுபல்லவி.

கைப்பிடிநாயகன் காணாமல்தானிருக்க
ஒப்பியேஈசனும்மாலும் உட்கார்ந்துபுசித்திருக்க (எப்படி)

சரணங்கள்.

திங்கள்சூடியும்மாலும் நான்முகனும்நீரேயென்று
திருஷ்டிக்குதோற்றுதே தெவிட்டாளன் தவக்கனியே
மங்கைவாணிச்சிக்காக வைகையடைத்தஈசன்
வாங்கிதின்றார்பிட்டு மன்னனில்லாமல்தனியே (எப்படி)

தன்னந்தனியேயிருந்த தையலாம்செட்டிப்பெண்ணவள்
மன்னனில்லாவேளைபார்த்து உண்ணப்புகுந்தார்தனியே
கன்னல்கொண்டவள்கணவன் கூன்ளமாபேசும்போது
கன்னிக்கிகாரைக்காலில் இன்னக்கொடுத்தார்மாங்கனியே (எ)

தருமசீலராமயோத்தி தசரதராசன்மகனும்
மனுநீதிதன்னைக்காக்க வந்தார்புவியில்மாலே
பெருங்கானகத்தில்சென்று பெண்ணைத்தேடிபோனபோது
உறம்சொல்லிசபரிதந்த உற்றகனிதின்றதாலே (எப்படி)

செங்ககிரியில்வாழும் சென்னகேசவனைப்போற்றும்
வெங்கிடாஜலம்பிள்ளை மேவும்வரப்புத்திரன்பூமி
தங்குமரியனூரில் தாஸன்ராமசாமிசாற்றும்
இங்கிதம்கேட்டுமின்னம் ஏற்றுக்கொள்ளவாதேன்சாமி (எ)

நங்கைக்கு வைரவர் மறுமொழியுரைத்தல்.

விருத்தம்.

அன்னமே சொல்லக்கேளாய் அன்புள்ள நங்கைமாதே
இன்னிலம் தனிலடியார் இன்பமாய் புசிக்கச்சொந்த
மன்னனில்லா மனையில் மகிழ்ந்துமே புகுவமோதான்
சொன்னசொல் தட்டியென்னை துன்பத்தில் மூழ்க்காதேயம்மா

[இராகம்-சுருட்டி. தாளம்-ரூபகம்.]
மாற்றரியாத என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

இன்னம்சிறுபிள்ளை போலென்னையழைக்கிறாய்
என்னசொல்வேன்நங்கை பெண்ணின்மணியே.

அநுபல்லவி

மன்னவன்சொல்தனை தன்மமெனமதித்தாயே
என்சொல்தனைமாத்திரம் எடுத்தெறிந்துவிடுத்தாயே (இன்)

சரணங்கள்.

என்னைக்கண்டவுடன் ஈசன்போலிருந்ததென்று
எடுத்துரைத்ததுவும்என்ன தொல்லையா நீ
சொன்னபடியிருந்தாலும் அவரவர்களுக்கேற்ற
நின்னயப்படிவர வில்லையா
உன்னைப்போல்பெண்மணிகள் தன்மனதிலேநினைக்
துற்றபடி தோற்றுமென அல்லையா
சின்மயம்காட்டிய கடவுளே தான்வகுத்த
சொல்மாரிநடக்கவும் எல்லையா
இப்படிச்சொல்லுதல்தப்பிதமல்லவோ
ஒப்பிடில்வேதம்எப்படிமெய்க்குமோ (இன்னம் சிறு)

முன்னாலேயுனக்குன் மன்னன்வந்தால்வருவேனென்று
முறையாலேசொன்னேனென்னுரை பொய்யாமல்
என்னைநானுன் மன்னனோடுவருவேனென்று
இதமாகச்சொன்னேனுன்மனம் நொய்யாமல்
சின்னப்பின்னங்களாக உன்மனதைச்சேதித்து
சிவனார்நடந்ததைநீ வசையாமல்
கன்னவில்லாமல் நன்விடைத்தாரும்
களைப்பால்மெலிந்தென்னுடல் நையாமல்
அத்தன்திருவடிநித்தம்பணிகுவாய்
கர்த்தன்மனமகிழ்ந்தத்தமியேவருவார் (இன்னம்சிறு)

## வைரவருக்கு நங்கை பதில்கூறி போற்றல்.

விருத்தம்.

கர்த்தரே உமதுவாக்கால் கனிந்துமே யென்தன்பேரை
விர்த்தமே நீர்மொழிந்தால் மேன்மையாம் பதமடைந்தேனென்

பர்த்தாவும் வந்தென்னை பரிந்துமே கேட்டால்யானும்
விர்த்தாந்தம் தன்னையுரைக்க விரும்பியே உரைசெய்வீரே.

[இராகம்-சங்கராபரணம். தாளம்-ரூபகம்.]

பல்லவி.

நங்கையெனவென்பேரும் நாவில்வந்தபோதே
நானடைந்தேன்பதயோகம்

அனுபல்லவி.

மங்கை அன்புமிக மதலையழுப்பால்விம்மமேலே
அங்கம்பூரித்துப்பிள்ளை பேர்சொல்லியழைத்தால்போல ()

சரணங்கள்.

பட்டமரம்துளிர்க்கும் பழமோரும்வசனத்தாலே
பட்சமாகவெந்தன்பேரை பகரபயமுண்டோசமேலே
வெட்டெனக்காய்ந்திடும் வெய்யலின்கொடுமையாலே
வெதும்பும்பயிருக்கு மேகம்பொழிந்தாப்போலே (நங்)
படைக்குமமுதன்னை தடுக்குமூமைக்கண்டு
பதைக்கிறோம்தாமரைமேல் பட்டஜலம்போல்புரண்டு
அடைக்கலம்தந்தாண்டால் அனந்தம்புண்ணியமுண்டு
ஆர்க்குக்கிடைக்குமுங்கள் அருமைக்கனிவாய்க்கொண்டு ()
பலமிகுமமுதன்னை பாலில்லாக்காலையிலே
உலையெழுகாய்மனம் உருகிடும்நிலையிலே
மலையிற்றுமாயிரிலே தொக்குகிறவேளையிலே
வந்தீரேஎன்னதவம் செய்தோம்முன்னாளையிலே (நங்)
உறம்கண்டுபிடிக்க வந்தீரெதென்னசங்கை
உண்டெனகளையாண்டு கொள்வதுமதுபங்கே
ஆர்வந்ததென்றுநாதன் அன்புடன்கேட்டால்நங்கை
அடியாளவருக்குச்சொல்ல அறையவேணுமிங்கே (நங்கை)

வசனம்:—சுவாமி சோதிச்சுடரே திருமேனிக்கொண்டெழுந்து தெளிவுற வந்த தேவா நாங்கள் கோரிய தவம் குறைவுறாமல் கார்க்கவந்த குணப்பெருங் குன்றே எனைக் கொண்டகணவர் வந்துக்கேட்டால் கோதைகூற அருள்புரியும் குலக்குருவே கொழுநன் மனங்களிக்க கூசாமல் உண்டு யாட்கொள்ளவேணும் சிவக்கொழுந்தே. மறையாதி புராணமெல்லாம் மகிழ்ந்துன்னைக்கூறியிருக்கிறதே தேவா அடியாள் கோரியபடி உண்ணவேணும் சுவாமி.

## நங்கைக்கு வைரவர் நீதி கூறல்.

### விருத்தம்.

முன்னமே யுமக்குநாமும் மொழிந்திட்ட வார்த்தையாவும்
பின்னமே செய்தெம்மை போற்றியே யழைக்குந்தாயே
கண்ணில்பர தேசிப்போல காணுமெந்தனை நீரும்
இன்றென் றறியாமல் இயம்புதல்நலமோ அரிவாயே.

இராகம்-ஆநந்தபைரவி. தாளம்-ரூபகம்.

### பல்லவி.

ஆரென்று நீரென்னை எண்ணினீரோ யம்மா
ஆகமங்களறிந்தும் அறைந்தீரோ ஏன் சும்மா.

### அனுபல்லவி.

ஏராதவார்த்தையிது இக்காலத்திற்கேற்குமோ
இசைந்தமுதுதனிநீர் இட்டால்ருசிக்குமோ (ஆரெ)

### சரணங்கள்.

1 விந்தையாகநீர்சொன்ன வெகுளிவார்த்தையைக்கேட்டு
உந்தன்நாதனில்லாமல் உகந்தென்பசியாறிட்டு
அந்தவேதனார்சொன்ன ஆணைதனைமீறிட்டு
இந்தகலிதனிலே என்னொழுக்கத்தைவிட்டு
நடப்பேனோ தர்மம் கடப்பேனோ பழி
அடுப்பேனோ முறை கெடுப்பேனோ (ஆரெ)

2 ஆதிமூர்த்தியைப்போல யாரும் நடக்கலாமோ
அறிந்தும்பெண்புத்தியாலுன் அறிவுயிப்படியாமோ
ஓதும்நீதிகளெல்லாம் உமக்குதெரியாதேமோ
உலகக்காரணர்செயலை ஒத்துநடக்கலாமோ அப்போ
மந்திரமென்ன ஒரு தந்திரமென்ன வானில்
இந்திரன் கறிப்பானு சந்திரனுறிப்பானே (ஆரெ)

3 அன்றளில்பரசுராமன் அன்னையைவெட்டினுப்போல
இன்றளில்நாம்செய்ய எண்ணலாமோமேலே
முன்றளில்நடந்த முறையைப்போலெவ்வாதாலோ
முற்றுமுன்சொல்தடுத்து மொழிந்திட்டேன்பலகாலே
உவமை சொல்வது நலமதல்லவே
தவம் கெட்டிடில் பவமதல்லவோ (ஆரெ)

4 அடியார்க்கடியரென அழைகுவாரெனதுபேரை
அமர்ந்துக்குடியில்லா அநாதியாமென்னூரே
வடக்கேயிருந்துக்கேட்டு வந்தயென்பசியின்சீரை
வரைந்துவாடிப்போனரென்று வந்தவுடனவரை
வாலாயமாகச்சொல்லி மேலாகயிராமல்
வேளைத்தவறாம லாளை வரச்சொல்வீர் (ஆசெ)

வசனம்:— கேளும் நங்கைமாதே இனி என்னை எந்தவிதமான இம்சையும் செய்யக்கூடாது. என் வார்த்தையை தட்டக்கூடாது உனக்கு சொன்னவார்த்தை தவறேன். இது சத்தியம் நம் ஊர் பேர்கேட்டால் ஊரும் பேருமில்லா அநாதியென்றும், ஆனால் உலகோரென்னை அடியார்க்கடியாரென அழைப்பாரென்றும், வடக்கேயிருந்து வந்தேனென்றும், பசியால் களைத்துப்போனேனென்றும், கிழக்கு திக்கிலுள்ள கணபதீஸ்வரமிருக்கும் காட்டாத்திமரத்தடியில் உன்நாதன் வருமளவும் காத்திருப்பேனென்றும் சொல்லிப்போனரென்று சொல்லிவிடு. நான் போய்வருகிறேன் என்னை தடுக்காதே.

## நங்கை வைரவரை வணங்கி விடைகொடுத்துருதிவாங்கல்

செந்தமிழுலகினில் வந்திட்ட சுந்தரா உன்
செந்தாமரைப் பொற்பாதமே திக்கல்லால்வேறு
செல்வழியில்லைநீதமே சிறு
தொண்டரவரை கண்டவுடனேயும் அண்டையிலேவர [உண்டுபண்ணுவேன்
சிக்கிரம்வாவேணுமே வராவிடிலோ என்
சீவனைவிடுவேன்நானுமே

வைரவர்.

தென்றிசைத்தமிழ்நாட்டில் திருச்செங்காட்டான்குடியில்
சேர்ந்திட்டமாமறை குலமே புகழோங்க
ஜென்மித்தநங்கை நலமே உன்
சித்தத்திலையம் சற்றும்வையாதேயுன் பத்தாவந்தாலே [உத்தமிபோவாரேன்
தேவிவருந்தாதே தாயே எந்தன்வாக்கை
திறப்பாய்நம்புவாய்நீயே

நங்கை.

தளர்ந்தவயதினிலே மெலிந்தவுடம்போடு நீரும்
தள்ளாடிபோவீரோ சாமி அடியாள்மனம்
கொள்ளாதேஇந்தப் பூமி
சாமிநீர்சற்றே மேவியேயிருந்தால் கூவியேயெந்தன்
[ஆவியாம்கணவர்
சீக்கிரம்வருவார்பாருமே மடத்திலன்னம்
சாப்பிட்டேகலாம்நீருமே

வைரவர்.

எத்தனைவிதமாக மெத்தச்சொல்லியும் உந்தன்
சித்தத்தில்வைக்க விலையே பெண்புத்தியின்
தத்துவசுபாப நிலையே
செப்பிடும்வேதம் ஒப்பிடும்மொழியை தப்பிதமில்லாமல்
[கற்பித்திருந்தும்
தேவிநீதடுக்கலாகுமோ பிள்ளைாமசாமி
சொல்லுக்கெதிர்வி்ள்ளப்போகுமோ

வசனம்:—தாயே உமது கற்புநிலைமைக்கும், பக்திநலத்திற்கும் அஞ்சி நீரெத்தனைவிதமாக நம்வார்த்தையை தடுத்தும், உமக்கு சமாதானம் சொல்லியும் இனிதடுக்காதே என்றுசொல்லிக்கொண்டு புறப்படும்போது உம்முடைய காரியத்தை எப்படியாவது சாதித்துக்கொள்ளலாமென்று என்வார்த்தையை கவனியாமல் தடுக்கிறீர் என்னை தடுப்பதால் எனக்கு கோபம்வந்தால் தடுக்கவும் அடக்கவும் முடியாது. அப்போது உன்கோரிக்கையும், என்சத்தியமும் கெட்டுப்போகும். புஷ்பவாசனையை கசக்கி முகர்ந்தால் போலாகும். என்னுடைய இளைப்பும், களைப்பும் நீர் சொல்வதையும்கேட்டால் வேதத்திற்கு விரோதமாகும். முப்புரத்தார்களும் நகைப்பார்கள். எந்தவிதம் சொன்னாலும் உம் கணவரின்றி உம் இல்லத்திலே புசியேன். நான் போய்வருகிறேன். உன் கணவர்வந்தால் உடனே வரச்சொல்லும். உமக்கு கொடுத்த வாக்குத் தப்பாமல் காப்பாற்றுவேன். உமக்கு சகலமும் உண்டாக. போய்வருகிறேன்.

நங்கை வசனம்:—அப்படியே மகாபாக்கியம் சுவாமி.

### கணபதீசுரமிருக்கும் காட்டாத்திற்கு போக புறப்படும் வைரவர் அரூபியாயிருக்கும் நந்தியிடமும், தேவருக்கும் தெரிவிக்கிற விதங்காண்க.

அருணாஜலக்கவி பெருஞ்சண்டை கேளீர் என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-அடதாளம்.

பல்லவி.

அற்புதம்பாரீர் நான்வந்த அதிசயம்தேரீர்

அனுபல்லவி.

சொற்புவிதன்னில் கற்பிக்கரியநல்ல
ஒப்பும்நல்லறங்கள் முப்பத்திரெண்டில்
எப்புவியோரும்ஏற்க தப்பிலாதன்னதானம்
செப்பியமுறைசெய்தநற் சிறுத்தொண்டருக்காவந்த

சரணங்கள்.

உத்திரத்திலெநதன் பத்தினியாளோடு
சித்தத்திற்கினியதாக சத்தித்திருக்கையிலே
அத்தாவுமதுமேனி மெத்ததேஜஸ்ஸாக
நத்தியடைந்தனிதம் சித்தம்தயைச்செய்யென
உத்தமிகோரி னந்தனைகேட்க
சத்தியம்தேறி அவருக்கு

எண்டிசைஉயிரும் பண்டுவினைதீரும் பூ
மண்டலசெங்காட்டாங்குடி அண்டிய அடியாருக்கு
பண்டிதபரஞ்சோதி பெண்டுநங்கையாளோடு
உண்டிஉதவிவந்த கண்டந்தமகிழ்ச்சியால்
அன்பர்கள்களிக்க அதுகண்டு
என்தேகம்ஜொலிக்க எனக்கேட்டு

மாதுவளம்குளிர்ந்து வாதுசெய்யாமலவனுக்கு
ஏதும்குறைவின்றி நாதஅருள்புரியபொற்
பாதாரம்போய் ஆதின்றிகாக்கவே
வேதவாவென காதலவனைத்தள்ளி
சோதிக்கவந்தேன் பண்டுவினைகள்
பாதிக்கத்தந்தேன்

அன்பரொருவரை தன்பதிசேர்க்கவென்றால்
முன்னமவர்நிலை உண்மைஉலகோரறிய
பண்ணவேனுமதால் சின்னஞ்சிறுநங்கையை
தன்னந்தனியாக்கி முன்னம்வினைக்காணவந்த (அ

பெண்ணாள்நங்கையைப்போல விண்ணிலேபார்த்திலேன்
முன்னமேயென்மாது விண்ணப்பம்செய்தபடி
கண்ணிலென்னைக்கண்டு சொன்னாளீசனென்று
பண்ணுமறைமொழியால் உண்ணத்தடுத்துநான்
எண்ணியேபயந்தேன் அவளை
வண்ணமாநயந்தேன் அவளுக்கு

குணதிசைதனிலே கணபதீச்சுரத்திலே
மணமாத்தியடியிலே கணமாயிருப்பேன்மேலே
மணவாளனழைத்தாலே கணத்தில்வருவேனென்றும்
மனமதுவருந்தாமல் சினமிகக்கொள்ளாமல்
சொல்லியேவந்தேன் அவளை
தள்ளியேநொந்தேன் நான்

எண்ணிவந்தபடியவளுக்கு கன்னலேதந்திட்டால்
புண்ணியவதிமனது என்னவாகுமோஎன்றும்
சின்னம்சிறுமியவள் கன்னிமனங்கலங்கி
முன்னம்அனுசூயைப்போல் பண்ணியேவிட்டால்
நானென்னசெய்வேன் மனங்கலங்கி
வீணெண்ணமுய்வேன் இப்போது சிறு

தொண்டரவருமெனை கண்டிடத்தேடியென்
அண்டையிலேவரட்டும் மிண்டுகள்செய்தவன்
பண்டுவினையெல்லாம் எண்டிசையோர்காண
விண்டுபரமபதம் கொண்டுபோய்ச்சேர்க்கவந்த

உத்தமிநங்கையவள் பர்த்தாவைக்காணேனென்று
சித்தம்கலங்கதேவி மெத்தவழுகுவாள்
அத்திசந்தனத்தாதி புத்திமதிகள்சொல்லி
நத்திகணவனைக்காண சித்திரபாவையாளிருக்க
அப்போபரஞ்ஜோதி அடியாரைக்காணாமல்
கப்பமனவியாதி திரு

செங்காட்டாங்குடியிலடியார் தங்குமிடமெல்லாம்
எங்கெங்குஞ்சுற்றி பங்கமேகத்தி
திங்களைத்தரித்தோனருள் சங்கற்பமீறிதனைவத்தி
நங்கைகடனைத்தேடி சங்கடத்துயர்தீறி
எண்ணியேவருவான் விசாரம்
பண்ணியேவெருவான் அப்போ

ஈசனைப்போல்பா தேசிகன்வந்தானென்றும்
பூசனைபுரிந்தவரை நேசித்துன்னைக்கேட்டேன்
யாசித்தவனெனையுன் விசுவாசனெனக்கேயென
வாசித்துநேர்ந்த ஆசனைசொன்னேனவர்
உண்ணவேமறுத்தார் அழுது
இன்னவேவெறுத்தார் எனச்சொல்லவன்

மானேஎன்விரதம் வினைசெய்தாயென்றும்
ஊனைவெறுத்தென்னை காணவேவருவானதற்குள்
ஈனேகணபதீசுரம் தானேபோவேனிப்போ
மானன்வந்தழைப்பான் வேணபடிசோதித்தடி சேர்க்க
வந்த (அற்புதம்)

வசனம்—கேளும்சபையோர்களே! அன்பனொருவனை தன் பதி சேர்க்க முன்னமவர்கில் உண்மை உலகோரறியப் பண்ண வேணுமாதலால் எனைத்தேடிவரும்சிறுத்தொண்டனைச்சோதிக்க அவன் வருவதற்குள் கணபதீசுரமிருக்கும் காட்டாத்திமரத்தடியில் வீற்றிருக்கப்போகிறேன்.

## ஸ்வரவர் தவத்துக்கேகுதல்.

### விருத்தம்.

என்னருமாதைவிண்டு இனியநங்கை மாதைக்கண்டு
முன்னமேயவள்நிதானம் முற்றுமே யறிந்துக்கொண்டு
பன்னுவே தாகமபுராணம் படியதா செய்யும்தொண்டு
உன்னவே சிறுதொண்டனைக்காண உளம்கொள்வேன் ஆத்தி
[யடி நிழல்கொள்வேனே.

இராகம்-நாட்டக்குரிஞ்சி. தாளம்-அடதாளசாப்பு.

### பல்லவி.

நடப்போமாத்தியடி கணபதீஸ்புரம்தேடி
நடப்போமாத்தியடி.

அனுபல்லவி.

நடப்போமாத்தியடி அடுப்போம்கணபதீசுரம்தேடி
விடுப்போம்வினைமுடி கொடுப்போம்நம்பதவடி (நட)

சரணங்கள்.

1 மங்கைபெண்ணைவிட்டு வைரவவேடம்தொட்டு
மங்கும்பந்தங்கள்கெட்டு மானிலம்புகழ்நட்டு (நட)

2 நங்கைமாதுமனம்பதைக்க நாயகன்வந்துசுத்தளிக்க
எங்கும்புகழ்தான்சொலிக்க என்னைகண்டருள்சுளிக்க (ந)

3 உலகிலன்னதானமோங்க ஒண்டியாயுண்போர்மங்க
நலமதுபெருகித்தேங்க நலிவதுலகுநீங்க (நடப்)

போது வசனம்.

இந்தவிதம் கணபதீசுரமிருக்கும் ஆத்தியடி தேடி வைரவர் சென்றபின்பு மடத்திலிருந்த நங்கை தன் கணவர் வரவுகாணாது துக்கிக்கிற விதங்காண்க.

## அடியார்களைத் தேடிச்சென்ற நாதனைக்காணாது நங்கை துக்கித்தல்.

விருத்தம்.

அன்னமே தோழியெந்த னன்புள்ள சந்தனத்தாளேயென்
மன்னவ ரிதுவரையில் மடத்திற்கு வரவேகாணேன்
உன்னத பெரியோரிங்கு உண்ணமல் போய்விட்டாரே
என்னநான் செய்வேனம்மா இக்கதிக் காளானேனே.

இராகம்-எதுகுலகாம்போதி தாளம்-ஆதி.

இன்னம் வரக்காணேன் மன்னன் ராஜகோபாலன் என்ற மெட்டு.

பல்லவி.

என்னநான்செய்குவேன் ஏதுநான்செய்குவேன்
அன்னமேசந்தன நங்கையேஎன்தோழி

அனுபல்லவி.

விண்ணவர்கள்சோதனையோ முன்னவர்கள்கற்பனையோ என்
மன்னன்செய்த்வூழ்வினையோ அண்ணலடி போனதையோ

### சரணங்கள்.

1 அன்னம்புசிக்கவொரு அடியாரைக்காணேனென்று
கன்னல்கொண்டநம்முன் காட்சிதந்தருசனின்று என்
மன்னர்வருமளவும் மகிழ்ந்தங்கிருப்பாரோ
அன்னவர்வருமுன்னே அகன்றுபோய்விடுவாரோ (என்)

2 எருழுதோவென்செய்வான் ஏற்றுப்பானைப்பிடித்தவள்
எய்தபாக்கியம் என்பார்உலகோரே
பூருவம்நான்செய்தவினை புகன்றதோஎன்னிஷ்டம்
பூண்டஎன்னுயகருக்கு ·பொழிந்ததோ இக்கஷ்டம் (எ)

3 அடியாரைஉடன்வைத்து அமுதுண்ணுமெனநண்பர்
விடியற்காலமுதலாய் வேண்டிக் கிட்டாசிவ அன்பர்
முடிசடைபிறைதரித்த மூர்த்திபோல்நம்முன்வந்ததை
உடனேஅவர்தெரிய ஒருவழியும்காணேன்நடந்ததை ()

அரிச்சந்திர நாடகம் ஆர்போய் சொல்லுவார் என்ற வர்னமெட்டு.

### பல்லவி.

யார்போய்சொல்லுவார் என்னன்பருக்கு (யார்போய்)

1 பாராண்டசேனைகோன் பரனடியாரைத்தேடி
கூட்டிவருவேனென்று கூவியேபோனவர்க்கு (யார்)

2 தேவாதிதேவன்போல தெரிசனம்தந்தென்னை
ஆவலுடன்பசிதீர அன்னம்கேட்டாரென (யார்)

3 அன்புடனாளித்த அமுதைபுசியேனென்றும்
தென்புடன்தொண்டரை தேடிவரச்சொன்னாரென்றும்()

4 ஆதவன் திக்கிலுள்ள ஆத்திமின்கிழிருப்பேனென்றும்
போதவேதொண்டரை போற்றிவாச்சொன்னாரென்றும்()

5 கார்த்திகேயனையளித்த நேர்த்தியனைஒப்பவென்று
வார்த்திகைதிசையில் பசியாறவந்துபோனாரென்று ()

சந்தனத்தாள் வசனம்:—அம்மணி என்ன ஆச்சரியம் ஒவ்வொரு காரியம் சித்திபெறவேண்டுமானல் எத்தனையோ இடையூறுகள் உண்டாகும். அவைகளைப்பொறுத்து ஆனந்தப்படுவதே தர்மமாகும். ஒவ்வொருகாரியம் சித்திபெற ஒவ்வொருவரும் எவ்வளவோ கஷ்டப்பட்டு சுகமடைந்திருக்கிறார்கள். சொல்லுகிறேன் கேளும் தாயே.

## சந்தனத்தாள் நங்கைக்கு நீதிகூறல்.

விருத்தம்.

அம்மணி தாயே யெந்தனறிவையே சொல்லக்கேளாய்
செம்மையில் நாம்செய்த சிறப்பதுபோலவாகும்
இம்மையிலநேகம்பேர்கள் எத்தனையோ பாடுபட்டு
தம்மனக்கோரிக்கை சாதித்தார் மனம்பொருந்தாதரித்தாரே.

[இராகம்-மோகனம்-ஆதிதாளம்.]

பல்லவி.

இத்தனை துக்கமும் நல்லாய் வந்தது
ஏதம்மா இதுசொல்லாய்

அநுபல்லவி.

தத்துவமாகஉந்தன் புத்தியெல்லாம்வெள்ளை
தருமத்தில்சிறந்தது பொருமைகேளெந்தன்சொல்லை()

சரணங்கள்.

1 ஆதியில்ருக்மாங்கதன் கோரியவிரதந்தனை
சோதிக்கமோகினி தாவியதறிந்தும்
பாதியில்ருக்மாங்கதன் பாலன்தலையறுக்க
மேதினியில்மாயவன் மேவியதைநீயறிந்தும் (இ)

2 சக்கரவர்த்திசிபி தன்னைச்சோதிக்க
விப்பிரனாகிவந்து ஒப்பும்விருந்தளிக்க
தக்கமகனைக்கொன்று சமைத்தகறிபுசிக்க
செப்பியபடிநடந்த சேதிதெரிந்திருக்க (இத்)

3 பொய்சொல்லாவிரதம் பூண்டஅரிச்சந்திரனை
காய்ச்சினகௌசிகன்செய்த கபட்டைநீகேட்டிருந்தும்
மெய்யுளமாதர்கற்பை மேதினியில்நிறுத்தவந்த
தையல்சாவித்திரி சரித்திரம்தெரிந்திருந்தும்()

4 செந்தமிழ்ராமசாமி சிந்திக்கும்சிவகாமி
சுந்தரிமனோஹரன் வந்தருள்செய்குவான்
பைங்கொடியேயுன்மனதில் பாவும்விசாரத்தால்
நொந்திடவேண்டாமம்மா நொடியில்வருவார்தொண்டர்()

வசனம்:—கேளும் தாயே நான் சொன்னவர்கள் அவரவர்கள் விரதம்முடிய அடைந்ததை கணையரிகப் பெரியோர்கள் எடுத்

தோழியது எதற்காக உம்மைப்போலொத்தவர்கள் மனம்தளர்ந் தால் எடுத்தோதி பொருமையாயிருக்கத்தானே. பொருமையாயி ருப்பாயம்மணி நாதன் சீக்கிரம் வருவார்.

## போது விருத்தம்.

இந்தவிதம் நங்கைதாமும் இருந்த சந்தனத்தாளோடு
சிந்தையும் நொந்துசொல்லி தேற்றியே யிருக்கும்போது
சுந்தர தொண்டனும் பரங்களைத்தேடியே காணமல்சோர்ந்து
விந்தையாய் வீதிதோரும் விளம்புவார் மனங்கலங்கி புலம்புவாரே

## ப[illegible]ள்வாய் [illegible]முது என்ற காவடிச்சிந்து வர்னமெட்டு.

கண்டீரோசொல்லுங்கள் நீல கண்டனு ரடியார்தன்னை
எண்டிசைதனிலுமதேடி வந்தேனே இந்த
மண்டலம்தனி[illegible]வாழ நொந்தேனே

காவிவ[illegible]திரம[illegible]த்து கமண்டலமும்கையில்கொண்டு
கூவிய[illegible]னம்தாவென் போரைக் காட்டுங்கள் நான்
மேவி[illegible]சய்யும் அறத்தைதிலே நாட்டுங்கள்

தம்பிமாரேயண்ணமாரே தொண்டரைகாட்டுவீரானல்
செம்பொன்மிகத்தாரேன்நாழி யாகுதே இப்போ
அம்புவியில்தேடிப்பாதம் நோகுதே

அன்னையரே அன்னமிடுஎன்று கேட்கும்பெரியவரை
இன்னிலத்தில்கண்டதானல் சொல்லுங்கள் அடியார்க்கு
அன்னமிடத்தேடுகிறேன் விள்ளுங்கள்

அய்யனே அரவணிந்த அம்பிகைபாகனேயின்று
துய்யநீரணிந்தவரை காணேனே அதற்கு
செய்யும்வகையின்னதென தோணேனே

யானைமேயும்காட்டில்தழை ஆட்டிற்கிலையென்பதுபோல்
சேனைபரம்வந்ததும் முன்னமே போக
ஈனலைந்துவசமேனிப்போ இன்னமே.

## வேறு மார்க்கண்ட நாடகபூஜை தரு.

### தேவர் முனிவர் என்ற வர்னமெட்டு.

1 சங்காஹரா சந்திரசேகரா ஓம்மகாதேவா
சாம்புசங்கா கௌரிபாகனே

2 பொங்கரவணி மங்கைபாகனே ஓம்மகாதேவா
போற்றுமடியாரைக் காண்கிலேனே

3 சாதம்கறிக ளாறிப்போகுமே ஓம்மகாதேவா
தவமுனிகளை யாரும் காண்கிலேனே

4 பேதங்கள்நா னென்ன செய்தேனோ ஓம்மகாதேவா
பெரியோர்கள் வர காண்கிலேனே

5 எந்தன்மடத்தில் வந்திடும்பாங்கள் ஓம்மகாதேவா
இன்றையதினம் ஒருவரையும் காணேனே

6 உந்தனடியார் தன்னைத்தேடியே ஓம்மகாதேவா
உருகி எந்தன் மனமும்வாடுதே

7 ஆலகால விஷத்தையுண்டவா ஓம்மகாதேவா
அடியார் மடத்தில் வருவாரில்லையே

8 இந்தவேளைவந் தெனைகார்க்கவேணுமே தேவதேவ
இல்லையானாலுயி ரேகச்செய்வேனே.

வசனம்:—நானென்ன செய்குவேன் ஈசா வெகுதூரம் சுற்றிப் பார்த்தேன். பாங்கள் எங்கும் கிடைக்கவில்லை. யாரைக்கேட்டாலும் எனக்கு சொல்லமாட்டேனென்கிறார்களே. இதுவெல்லாமுன்னருளேயாம். இப்போது நாம் இப்படி அலைவதில் லாபமில்லை. நம்முடைய மடத்தில்சென்று நம்முடைய பாரியாளிடமும் பாங்கள் வாராவிடில் நாம் உயிரை விட்டுவிடவேண்டியது. உயிரோடு நம்விரதம் தவறலாகாது. வீட்டுக்குச்செல்வோம்.

## தொண்டர் மனைவியை கண்டுரைத்தல்.

### விருத்தம்.

அன்னமேமாதே எந்தனறிவையே சொல்லக்கேளாய்
இன்னகர் தன்னிலேயான் எங்கெங்கும் சுற்றிவந்தேன்
கண்ணினால் பார்க்கநாமும் சுருதுமடியாரைக் காணேன்
எண்ணியிச்சென்மம் வைக்கேன் எடுத்துவா வாளாயுதமே.

இராகம்-சௌந்தவீ-தாளம்-திரிபுடை
முகாரி இராகத்திலும், ரூபக தாளத்திலும் பாடலாம்.

பல்லவி.

இனிநானிருக்கலாமோ மாதே

அனுபல்லவி.

அநியாயமாயடியார்க் கன்னமளிக்காமல் போய் (இனி)

சரணங்கள்.

1 மருவில்லாவரம்கொண்டேன் நானே அடியார்வர
வழிபார்த்துபார்த்தெந்தன் விழியும்பூத்தேனே;
சிறுத்தொண்டரெனபேர்எடுத்தேனே பரத்தைக்காணமல்;
சிறகுபிரிகொடுத்தபறவை போலானேனே (இனி)

2 வருத்தமென்னசெய்தோமோ கொஞ்சம் இல்லையானல்
வாராதிருப்பாரோ அடியார் நமக்குதஞ்சம்
நெருக்குதே கவலைப்பிர பஞ்சம் என்னை
நெருப்பிலேபோட்டாலும் வேகுமோயென்னெஞ்சம் (இ)

3 அரனுக்குப்ரீதியாயமுது கொடுத்தேன் அதற்கு
அன்னீதமாய்படியார்க் கிய்யாமல்கெடுத்தேன்
தருமத்தைநடுக்காட்டிலே விடுத்தேன் இனி
சங்கரதுரோகியென எங்கும்பேரெடுத்தேன் (இனி)

4 அப்யன்கணபதீசன்சொல்படி நடக்காமல் என்றும்
அளித்தன்னதானம்திருவுளத்துக் காகாமல்
செய்தேன்பலகுற்றமடியார்க் கியாமல் பல
தீட்டுக்கொருமுழுக்காயென் னுயிரைகொய்யாமல் (இனி)

வசனம்:—பெண்ணே இந்த திருச்செங்காட்டாங்குடியில் உள்ள தெருக்கள், வீடுகள், கோவில், குளம், தண்ணீர்ப்பந்தல்கள், சாலைகள், நீரோடைகள், சத்திரம், சாவடி முழுமையும் சுற்றிப்பார்த்து வந்தேன். ஒரு பரங்கள்கூட கண்ணுக்குத் தோற்றவில்லை. எத்தனையோ பேர்களைக்கேட்டேன், அவர்களும் சொல்லவில்லை. கணபதீசுரனளித்த வரப்படி செய்து வந்த அன்னதானம் இன்றோடு தீர்ந்து முடிந்துவிட்டது. இனி என் உயிரை வைக்கேன். எடுத்துவா வாளாயுதத்தை என்னுயிரைப் போக்குவேன்.

## நங்கை பரதேசி வந்துபோனதை கணவருக்குறைத்தல்.

விருத்தம்.

போக்குவேனென்றுசொன்ன புண்ணிய சுவாமிகேளும்
யோக்கிய மமைந்த பரதேசி யொருவரிங்கே வந்தார்

ஆக்கின சாதம்கறி அடியார்க்கன்புடன் படைக்கக்கேட்டேன் ஏறகவே யும்மையன்றுன்ன இசையாமல் போய்விட்டாரே.

வையகத்தில் சிவன்செய்யும் தவசை நாத பிராணநாத
என்ற வர்ணமெட்டு.

1 இந்தநயாம்வந்ததேதநசுவாமி நாதா பிராணநாதா ஒரு
கசனைப்போல்பரதேசியும்வந்தார் பிராணநேசனே

2 சுந்தரமுகமும்தந்தபுன்னகையோடும் நாதா பிராணநாதா
எந்தனைப்பிட்சைசவெனக்கேட்டார் பிராணநேசனே

3 அன்னமுண்ணவரை அழைத்தவுடன் நாதா - பிராணநாதா [உன்
அன்பரெங்கேயென இன்பமாய்மொழிந்தார் பிராணநேசனே

4 அடியாரைத்தேடி அழைக்கச்சென்றரெனநாதாபிராணநாதா
படியிலுண்பதில்லைபசிதீரேனென்றார் பிராணநேசனே

5 அந்தபாத்திறகன்னமீந்தாலே நாதா பிராணநாதா நித்தியம்
ஆயிரம்பேருக்கன்னமீந்தபலனாகும் பிராணநேசனே

6 கண்டவுடனவரைநம்பினனின்றுவிடுமே நாதாபிராணநாதா
கண்டத்தில்கறைகொண்டவனேற்பாரே பிராணநேசனே

வசனம்:—சுவாமி தாங்கள் மடத்தை விட்டுப்போய் சற்று நேரத்திற்கெல்லாம் மிருந்த தள்ளாதவயதுடையவராய் வைரவ சொரூபமாய் பிச்சை எடுத்துக்கொண்டு வீதியில் வரும்போது சந்தனத்தாளும் நானும்சென்றவரை உபசரித்து மடத்திற்கழைத்தோம். உம் நாதனின்றி நீ தனியாயழைக்க நேர்ந்ததென்னவென நேர்ந்த காரியங்களை தெரிவித்தேன். ஆளனில்லா வீட்டில் அமுதுபுசியேனென எத்தனைவிதமான நீதிகளைச் சொல்லியும் கேளாமல் கணபதீச்சரமிருக்கும் காட்டாத்திமரத்தடியில் வீற்றிருப்பதாயும் தாங்கள் வந்தவுடனே வருவதாயும் பசியோடு சென்றார். வாலாயமாயக்கிருப்பார். தாக்கம்வேண்டாம். சீக்கிரம்சென்று அழைத்துவருவீர் சுவாமி என்நாதா.

## சிறுத்தொண்டருக்கும் நங்கைக்கும் வந்த வயிரவரைப் பற்றி தர்க்கம்.

திருப்புகழ் மலடிவயிற்று மகன்போல என்ற வர்ணமெட்டு.

தொண்டர் வந்தபரதேசிபேர்யாதோ அவர்
சொந்தஇருப்பிடம்ஊர்யேதோ அவர்
எத்திசையிருந்துவந்தாரோ இதம்தந்தாரோ

நங்கை சொந்தபேரவர்க்குகிடையாதாம் அவர்க்கு
சந்ததியில்லையூரடைவதாம் அவரை
வந்தவரடியார்க்கடியராம் ஏனமொழிவராம்

தொண்டர் அத்தனுருவமிலையாது அந்த
சுத்தனுரைத்தவகையேது அவர்
எத்தனைநாழியிங்கிருந்தாரோ எப்போமறைந்தாரோ

நங்கை சித்தியனுருவம்வைரவராம் சுத்த
சத்தியனிருந்ததுவுத்திரமாம் அவர்
மெத்தபசியாலிங்குவந்தாராம் உமைக்காணுநொந்தா

தொண்டர் இந்தமொழிகேட்கவந்தேனே நானந்த [ராம்
மந்திரன்பழிகேட்டுநொந்தேனே ஏன்
சுந்தரிஉனைப்பார்க்கநோகுதே மனம்வேகுதே

நங்கை விந்தையாயென்னைவெறுக்காதீர் நீர்
சந்தேகமாயென்சொல்மறுக்காதீர் சுவாமி
எந்தனுலானமட்டும்பார்த்தேனே விரதம்காத்தேனே

## வைரவரை போகவிட்டதற்காக தொண்டர் நங்கையை கோபித்தல்.

இராகம்-மோகனம். ஆதிதாளம்.

பல்லவி.

இத்தனைமோடியாகுமா பெரியவர்வருந்திபோக உனக்
கித்தனைமோடியாகுமோ

அனுபல்லவி.

எத்தனையோநீதிகள் கறறிந்திருந்தாயே
அத்தனையும்மறந்து கர்த்தனைவிடுத்தாயே உனக் (இத்த)

சரணங்கள்.

1 பத்திவினையத்துடன் முத்தன்வந்ததுகண்டு
சித்தம்கனிவுகொள்ள உத்தமனுக்குத்தொண்டு
நத்தியடிபணிந்து சித்தமகிழக்கொண்டு
கர்த்தாமுதன்னை சத்தியில்லாகுறைபூண்டு
அன்னமருந்த எண்ணிவந்த பெரியோரை
கன்னல்கொள்ள அன்னிதம்செய்த வுனக் (இத்தனை)

2 பார்த்தமுகமெல்லாம் வேர்த்துமுகமாயிருந்து
பட்டணத்தைச்சேர்ந்த வட்டமெலாம்திரிந்து
எத்த அடியார்கள் எங்குமில்லாமலலைந்து
ஏங்கிவந்தேனிங்கு தாங்கமுடியாமல்நொந்து
கருமவினைகள்தீர்க்க உருகிவந்தபெரியோரை
பெருமையுடன்புசிக்க திருகுசெய்த உனக் (கித்தனை)

3 உன்னைப்போல்பெண்மணைநான் உலகத்திற்கண்டதில்லை
உற்றபெரியோரென்ன உரைத்தாரோசாபச்சொல்லை
என்னையிகழ்ந்துபேசி ஏகினரோஎன்னதொல்லை
இன்றுனாய்செய்த அறம் உன்றுலேபோச்சேகொள்ளை
என்மனைவந்த தன்யனைதுறந்து
நன்முகத்தோடு கன்யமாய்பேச வுனக் (கித்தனை)

4 கணபதீசுரமிருக்கும் காட்டாத்திமரத்தைதேடி
கர்த்தனிருக்குமிடம் காணலாமோகாடி
மனமிகநொந்து வருந்திபசியால்வாடி
சினமதுகொண்டு சென்றுவிட்டாரோமோடி
எண்ணிப்பார்க்கமனம் புண்ணாகும்படிசெய்த
பெண்ணேநீயெந்தன் முன்னால்நில்லாதேபோபோ (உனக்)

5 ஆளனில்லாமடத்தில் அமுதுபுசியேனென்றால்
அந்தக்ஷணத்திலே அழைப்பேனென்றவர்முன்னால்
காளாவயதில்மூத்த நங்கையைவரச்சொன்னால்
நான்வந்திருப்பேனடி நாயகியவள்பின்னால்
வேலைக்குதக்கனு கூலம்செய்யாமல்
காலனைப்போலவந்து ஜாலம்செய்யு முனக் (கித்தனை)

வசனம்:—நாம் உண்மை சொல்வதில் பயனில்லை. நாம் பிறந்த காலத்தையும், செய்த தவத்தையும், பூர்வ ஊழ்வினையும் எண்ணிப்பார்க்கவேண்டும். நல்ல புண்ணியத்தை முன்னாள் செய்திருந்தாலல்லவா நல்ல பெண்மணி கிடைக்கும். என் செய்வோம்.

## சிறுத்தொண்டரைச் சந்தனத்தாள் தடுத்துரைத்த

### விருத்தம்.

என்னதான் சாமிநீரு மிப்படி மொழிந்திட்டீரே
கன்னியபெண்பதை கைகழுவ விட்டீரோ தாமும்

புண்ணிய நங்கைதன்னை புரம்பாக மொழியலாமோ
உண்மையின் விபரத்தை நானும் உரைக்கிறேன் நீதி நிரைக்கிறேனே.

இராகம்-மோகனம். ஆதிதாளம்.

பல்லவி.

இப்படிச்சொல்லலாகுமா நங்கைமேல்வர்மம்
எடுத்துக்கூறுதல் கூடுமா

அனுபல்லவி.

செப்பியபுராணமுறை ஒப்பியேநடந்தும்
தப்பிலாநங்கைமேல் கப்பும் அருளிருந்தும் (இப்படி)

சரணங்கள்.

1 அடுத்தபெரியோரை தடுத்தனுப்பினாளோமூடி
அறிந்தும் அறியாமலே அறவதேதாயவளோசாடி
வீடத்தில்வந்தபெரியோர்க்கு நடத்தியஉபசாரம்கோடி
கொடுத்தமுதைமறுத்து தடுத்துபோனாரேமோடி
எத்தனைவிதமாக கற்றதுபுரிந்தும்
சித்தமிறங்காமல் கர்த்தன்போனவி (இப்படி)

2 உடுத்தபுடவைதானே பாம்பாய்கடிக்குமென்றும்
உலகவார்த்தையை உறுதியாகச்செய்தும்
நடத்தும் அறத்துக்கு மாறுசெய்வாளோவென்றும்
நத்திபாராமல்மனம் வத்திபோகும்படிவைதும்
ஒப்பச்சொல்லுதல் தப்பிதமல்லவோ
மைப்படியாள்மனம் எப்படித்தவிக்கும் (இப்படி)

3 வண்டெனமைக்கண்கள் மாயவலைவீசி
செண்டெனயிருதனம் கண்டவர்க்குக்காட்டிகூசி
அண்டையில்சென்று அமர்தம்போல்மொழிபேசி
கண்டதைபறிக்கும் கணிகைமாரெனும்வேசி
வல்லபொய்யைச் சொல்லுதல்போல்சொல்லி
மெள்ளகர்த்தரை கள்ளத்தனம்செய்ய (இப்படி)

4 ஆதிமூர்த்திபைரவர் ஆகிவந்தாரெனக்கண்டு
அந்திஒடுங்கினார்கள் அபயம்கேட்டோமனங்கொண்டு
நீதியுள்ளபெரியோர் ஓதியதைக்கேட்டுண்டு
நீர்வருமளவுமங்கே மாறலாகாதெனத்தொண்டு
பத்திபாய்நடந்ததை சித்தமகிழ்ந்துமோடு
நத்திவருவேனென்று சத்தியம்செய்துபோக (இப்ப)

வசனம்:—கோபத்தை விட்டிடும். தொண்டு புரிபவர்களுக்கு கோபம் வரலாமோ. கோபம் சண்டாளத்தை யுண்டுபண்ணுமே. உத்தம கற்புடைய அருந்ததி, அனுசூயை, முதலாக உமது பெண்டீரை ஒப்புவார்களே. அதிருக்கட்டும். உமது பெண்டு ஆணைக்கு கீழ் வந்தபெரியோர் கணபதீசுரமிருக்கும் காட்டாத்திநிழலில் உம்மைக்காண காத்திருப்பார். சீக்கிரம் சென்று அழைத்து கோரியவிரதத்தை முடியும் எழுந்திரும். துக்கமும் கோபமும் கொள்ளாதிர் சுவாமி.

## நங்கை சிறுத்தொண்டருக்கு தன்னற்றுமை கூறல்.

### திருப்புகழ் கருவினுருவாகி என்ற வர்னமெட்டு.

கருவினுருவாகிவந்து வயதளவில் வளர்ந்துதன் தந்தை
கருத்துக்கிசைந்தும்மை மணம் புரிந்தேன்
கருதும்சருதிப்படி வருத்தமதில்லாமலே
கர்த்தாடிபணிந்து அறம் சிறந்தேன்
தருமந்த இன்பவீட்டை பெருகமனம்கொண்டன்ன
தானமதுபுரிய நா ணிசைந்தேன்
உருதிமிகக்கொண்டு வருமந்த அடியாருக்கு
உண்ணக்குறைவில்லாமல் மன மிகுந்தேன்
பெருநாளாய்யும்மைமணம் புரிந்தாரி துவரையில்
பொருந்தும்வாசனைப்பூ போ லிருந்தேன்
இருமனமுமொன்றாயிருந்தது போகயிப்போ
மருமனதாய்வெருக்க சிந்தை துறந்தேன்
பருவத்தில்பிராணபதி அருஞ்சொல்லைக்கேட்டுமனம்
பதரும்படி உடல் மெலிந்து இளைத்தேன்
அருமறையாகமத்தின் உருவமெனவந்தவரை
அழைத்துவாருமமுதூட்டியுடல் வெருப்பேன்

வசனம்:—சுவாமி நான் என் மாதாவயிற்றில் கருவாகி பிறந்து வளர்ந்து என் பிதா கருத்துப்படியும்மை மணந்து பூவும் வாசமும்போலிருந்து வேதவிதிப்படி கர்த்தாடிபணிந்து இன்ப வீட்டையடைய அன்னதானமியற்றி வருமந்த அடியார்க்கு எவ்வித குறைவின்றி உண்டியுதவி வருநாளில் தேவரீர் முன்னால் என்னை நிற்காதே போவெனச்சொன்ன வாக்கை பரிபாலிக்கவேண்

டுமென்றாலும் அருமறை முதல்வர்போல் வந்த பெரியோருக்கு என் நாதன் வந்தவுடனழைத் தமுதூட்டிவைக்கிறேனென்று நான் உறுதிபுகன்றதை அவரும் ஒப்பியெனக்கு சத்தியம் கூறி யிருப்பதால் தேவரீர் தயைச்செய்து என்மேலுள்ள கோபத்தை பொருத்து சிக்கிரமெழுந்து அவரை அழைத்து வருவீராகில் என் உடல் பொருளாவி மூன்றையும் அவருக்கமுதாக்கிப்படைத்து இவ்வுலக இச்சைநீங்கி அரனடி அடைவேன். எத்தனை விதமாக பூமியில் புருஷர் மனம்படி பத்தினிநடந்தாலும் குற்றம் வாராமல்கார்க்க கடவுள்கிருபையும் பூர்வ ஜென்மபாக்கியமும் ஒத்திருக்கவேண்டும். தேவரீர் வந்தவுடன் வைரவமூர்த்தி வரச்சொல்லியிருக்கிறார் எழுந்தருளவேணும் சுவாமி.

## சிறுத்தொண்டர் மனமுருவுதல்.

### விருத்தம்.

என்னவே வெண்காட்டுநங்கை இயம்பிட சந்தனத்தாளும் நின்றாள், சொன்னதை சிறுத்தொண்டரும்கேட்டு சொக்கி கண்களில் நீர்சொரிய, அன்னையாம் கர்ப்பத்தில்வந்து அழுந்தழன்ற பாவி, என்னையும் வரச்சொன்னாரோவென எழுகின்றார் கைகூப்பி தொழுகின்றாரே.

இராகம்-ஆனந்தபைரவி. தாளம்-ரூபகம்.

### பல்லவி.

என்னையும்வரச்சொன்னாரோ வைரவமூர்த்தி
தன்பசிகொண்டுபோனாரோ

### அநுபல்லவி

நன்னயமடமடுத்து உண்ணமுதமறுத்து நீ
சொன்னதை தடுத்து யெந்தனைவெறுத்து (என்னையும்)

### சரணங்கள்.

செஞ்சிற்கிருபை தருவரோ அவரைக்கண்டு
கெஞ்சியழைத்தால் வருவரோ பாவம்செய்ய
அஞ்சினவனென அறிவரோ அடிமைகொள்ள
பஞ்சையென குறிவரோ அடியாருக்கு
தஞ்சமென எண்ணுவாரோ
வஞ்சனென மொழிவாரோ

நஞ்சமென தெரிவாரோ
கொஞ்சமென சொல்வாரோ (என்னையும்)

மந்திர கிரியாலே குழம்பிக்கடல்
தந்ததமுதம் முன்னாலே என்னசெய்தாலும்பெரியோர்
சிந்தனைசெய்பவர் அதுபோல மடத்திலில்லாயெனை
நிந்தனைசெய்யார் முறையாலே பெரியோரைக்கண்டால்
வந்தபிறவிதீரும்
பந்தபாசமாறும்
முந்தமுத்திசேரும்
சந்தேகமில்லைபாரும் (என்னையும்)

கண்ணீராய் பெருகுதே அவர்சொல்கேட்க
எண்ணிமனம் பருகுதே மயிர்க்கூச்சிட்டு
வெண்ணெய்போல் உருகுதே சிறமேல்கைகூப்பி
பண்ணும்இசை தருகுதே இராமஸாமி
சொன்ன துதிக்கேட்டு
மண்ணில் பிறவிவிட்டு
புண்ணியர் மனம்தொட்டு
உன்னையும் என்னோடுமீட்டு (என்னையும்)

பக்திகாண்டம் முற்றிற்று.

---

செந்தமிழுலகில் வந்திட்ட என்ற வர்ணமெட்டு.

1 புத்தியிலறிந்தமட்டில் தித்திக்க பக்திகாண்டம்
புகழ்படச்சொன்னேன் நானுமே பெரியோர்கேட்டு
பெருமைபடச்சொல்ல வேணுமே
புண்ணியநூலின் வண்மையறிந்து மண்ணினிலறம் எண்
[ணுமேயோர்க்க
நன்னயமாய்ச்சொன்னேன் காணுமே பிழையறிந்தால்
கண்ணியமாய்த்திருத்த தோணுமே

2 கல்லாதாரொன் நூலில் கண்டு பிழைச்சொல்ல
கற்றபடிப்பிராது பாருமே கற்றவர்காணும் பிழை
பற்றிவெளியிடார் யாருமே
கருத்துடனுனும் சிறுத்தொண்டநாயனார் சரித்திரம்தன்னை
[பொருத்தமாய்ச்சொல்ல
குற்றமெவர்சொல்வார் கூறுமே பெருமைப்பட
வெற்றிமகிழ்தருவீர் நீருமே



# முக்திகாண்டம்.

---

## விருத்தம்.

ஆதியாய் நடுவாகி முடிவுமாகி யண்டபகிரெண்டத்திற் கப்பலாகிய
சோதியேயடியாரைப் பதம்சேர்க்க தொல்லுலகில் வைரவராகத்தோற்றி
ஓதியபடி கணபதீசுரம் உற்றவாத்தியடி வீற்றிருக்கும் பெரியோரை
சேதியேநங்கை சொன்னபடி தேடிச்சிறுதொண்டரும் செல்கின்றாரே.

மார்கழிமாதம் திருவாதிரைநாள் என்ற நந்தன் சரித்திர வர்ணமெட்டு

## கண்ணிகள்.

கர்த்தனேயும்மை காணாமலுலகில் கலங்கி தவித்தேனையா இப்போ
கணபதீசுரமிருக்கும் காட்டாத்தி மரத்தடியில் காணவாரேனையா 1
தோத்திரம் செய்தும்மை நேர்த்தியாய்மடத்தில் சுகமாயமுதீயாமல் நீர்
எற்கவே சொன்ன வார்த்தையைக்கேட்டுசும்மா இருந்தா னறியாமல் 2
திருச்செங்காட்டாங்குடி தெருவீதிதனில் திக்குதிக்கா தேடினேனே என்
திருஷ்டிக்கு தோற்றாமல் தேவரீர் வந்ததால் திகைத்துவாடினேனே 3
பருவமழையின்றி பயிர்கள் வாடும்போது பரிந்த மேகம்போல இந்த
தருணத்திலெனைக்காக்க தயவுடன் வந்தீர் தம்பிரானே முன்னாலே 4
உம்மைப்போல் பரங்களை உடன்வைத்துக்கொண்டு உண்ணும்விரதப்படி
தம்மைக்கொண்டுபோய் தாமுண்ணச்செய்து தாங்குவேனுறுதிப்படி 5
எத்திசையுமிருக்கும் ஈசனல்லாமல் சத்திக்க ஞாயமுண்டோ உலகில்
பத்தியோடுன்னை பணிவோர்க்கிவ்வுலகில் பலிக்காதெதுவுமுண்டோ. 6
உள்ளங்காலில் வெள்ளெலும்புநோக யிந்த ஊரைச்சுற்றிவந்தேன் சுவாமி
தெள்ளியஞானிநீ ரென்னில்லத்தில் வந்தது தெரியாமலே நொந்தேன் 7

கேசமாச்சுதென்று கிஷ்டேசம்பேசி நில்லாமல் விறட்டுவீரோ
தாராதரமறிந்து தமியேனுக்கருள்சுரந்து தந்தெனை பாராட்டுவீரோ 8
காட்டாத்தி மரத்தாச்சி கீரணைக்கண்களில் கரைந்து நீர்வருகுதே
கரைதண்டனடியாரை கருத்தில்நினைக்க மனம் களிப்புபெருகுதே 9
மரத்தடியில்காணும் வைரவரை நோக்கயென் மனமுமுருகுதே அந்த
மாமறையடியோரை நான்பொய்மைக்கயென் வாயும்குளருதே 10

## காட்டாத்திமரத்தடியிலிருக்கும் வைரவரை சிறுத்தொண்டர் தரிசித்தல்.

### பொது விருத்தம்.

அத்திமரத்திலே தொத்தியகனிபோல அண்டக்கனிகளை அளித்தஈசன்
தொத்தியகனியொன்றில் ஜெனித்தபுழுப்போல தொல்லுலகடியாரை
நத்தியேகார்க்க நரைப்போலுருவம்தாங்கி நாடிவந்தோரை
சித்திக்க சிறுத்தொண்டரும் மாயையகல தெளிகின்றார் கைகூப்பி தொ
[ழுகின்றாரே.

வசனம்:—நங்கை சொன்ன வார்த்தையைக்கேட்டு புளகாங்கிதமாய் ஒன்றும் தோற்றாமல் சித்தப்பிரமை கொண்டவர்போல சிறுத்தொண்டர் தானே வாய்விட்டு பாடிக்கொண்டு காட்டாத்தி மரத்தைத்தேடி வைரவரைக் கண்டமாத்திரத்தில் காதிலணிந்த இரண்டு குண்டலங்களும் சூரியர் சந்திரர்களைப்போலவும், நெற்றியில்தரித்த செந்தூரம் அக்கினியைப்போலவும், கைகளிலும் திரேகத்தில் மாலைகளாய் தரித்திருக்கிற ருத்திராக்ஷங்கள் ஆதிசேஷன்போலவும், சிவந்த திரேகத்தில் பூசியிருக்கும் வெண்ணீரானது மாலை ஆகாயத்திற்கொப்பாகவும் மனதிற்தோன்றி மயிர் கூச்சலிட்டு மனம்நடுங்கி வாய்குளறி இருகரங்களையும்கூப்பி சிறமேல் கை வைத்துக்கொண்டு ஒன்றும்பேசாமல் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய் பெருக தேம்பி தேம்பிக்கொண்டு அஞ்சலிபந்தனாய் நிற்பதை அறிவீராக.

இராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

துரியாதீதம் தாண்டிவந்த சுத்தனைக்கண்டார்
தொண்டர் பக்தியாய் நின்றார்

அநுபல்லவி.

அரியமறையாகமம் யாவுக்குமேல்மோன
கரியுரித்தோனை கணபதீச்சுரம்தானே (துரியாதீத)

சரணங்கள்.

1 நந்திப்ரிங்குசிவ கணங்களும்கூட
நாரதர்தும்புரர் கீதங்கள்பாட
பந்திபந்தியா யமரர்கொண்டாட
பார்வதியம்மனும் கூடயிருந்திட
சந்திரர்மூவரும் தோத்திரம்செய்திட
தொண்டருக்காப் பூ மண்டலம்வந்திட (துரியாதீதம்)

2 ஆனைமுகத்துமகன் தாளினைபூசிக்க
அருகில்நாரண ரமர்ந்துபூரிக்க
சேனைதலைமுகன் நான்மறைவாசிக்க
தெய்வகுஞ்சரித்தாதை திருவாசல்காத்திருக்க
மானைத்தரித்தோனிடம் மலைமகள்சேர்ந்திருக்க
மாய்கைபைரவராய் மானிலம்வந்திருக்க (துரியாதீத)

3 மலரயன்வாடி வானோர்பலரும்கூடி
சிலைமதனைக்காய்ந்த தேவாதிதேவனை ஓடி
பலநாளும்தேடி பார்க்கவொண்ணுமோடி
கபடமாய்த்தொண்டருக்கருள் பெறவேநாடி
வளமிகுமரியலூரில் வார்கொன்றைமதிசூடி
இளகுமாரசாமிபதத்தி னிசையைக்கொண்டாடி (துரியா)

## பைரவரைச் சிறுத்தொண்டர் அமுதுண்ணயழைத்தல்

விருத்தம்.

அய்யனே அரனருள்கொண்ட மெய்யனே அன்பர்க்குகந்த துய்யனே
பையரவணிந்தோ னடியராக பாரில்வந்த பழுத்தசெங் கையனே
ஐயவே உடல்மெலிந்துமை யழைக்கவந்த நாயேன் தன்னை
உய்யவே யுன்னடி தந்துண்ண உளம்கொள்வீர் எனையேற்று நலம்கொண்
[வீரே.

இராகம்-சங்கராபரணம்-தாளம் ரூபகம்.

பல்லவி.

செப்புதற்கரிய சிவனருள்கொண்டபெரிய
தேவனேயமுதுண்ண சுவாமிநீர் வரவேணும்

அநுபல்லவி.

கப்பியபசியால்வாடும் கர்த்தனேயுமைகாணுமலலைந்து
ஒப்பாருமில்லாமல் உள்ளுடைந்தேன் மனம்நொந்து ()

சரணங்கள்.

| | |
|---|---|
| 1 அய்யரேகைலைவாசன் | அவரிடசேர்தனையோ |
| மைப்படிபார்வதிதன் | மாய்கையின்வேதனையோ |
| வையகம்தனில்பிறந்த | மன்னர்கள்சூழ்வினையோ |
| அப்பனேயுனைக்காணும | லலைந்ததென்ஊழ்வினையோ () |
| 2 இப்பாரிலெலனைப்போ | லிருந்தார்களுண்டோசாமி |
| ஒப்பிலேயுனைப்போற்ற | வுவந்துவந்தேன்கார்மேமி |
| தப்பிதங்களென்மேலே | சாற்றுதிருக்கவாமி |
| குப்புறயுன்பாதத்திலே | கொள்ளவிழுந்தேன்பூமி (செ) |
| 3 நங்கையென்பாரியாள் | நாயகாயுமைத்துறந்து |
| அங்கம்மெலிந்துருகி | வழுகுறுளுடல்மறந்து |
| பொங்கரவணிந்தோனருள் | பூண்டநின்கருணைசுறந்து |
| தங்கிமடத்திலுண்ண | தாம்வரகிருபை புரிந்து(செப்பு) |

வசனம்:—அரகரா சிவசிவ சம்போ சங்கரனருள்கொண்டு எனக்கு தேவனுய் தோன்றிய ஐயனே! தேவரீர் பசியால் வாடி வருந்த தம்மைப்போல் அடியார்களைக்காணமலலைந்து மனம் சொந்துவந்த என் ஊழ்வினைநொய்ய மடத்திற்கு எழுந்தருளி அமுதுண்ணவேண்டுமையனே.

## மடத்திலில்லா குறைபூண்ட தொண்டரை பைரவர் கோபித்தல்.

விருத்தம்.

அண்டையில் வந்துநின்று ஆர்பரிக்கும் பெரியடம்ப
தொண்டரென்பது நீர்தானோ சோறிடுமன்பர்தாமோ
கண்டோமுமது கபட்டு வேஷத்தைக்காண அருவருக்கும்
சண்டாளரு மிச்சதிசெய்ய தானுமே தரைதனிலே.

இராகம்-அடாணு-ஆதிதாளம்.

பல்லவி.

இதுதானே யுன் ஞராட்சி அன்னக்கொடிஎனும் சூழ்ச்சி()

அனுபல்லவி.

| | |
|---|---|
| மது குடியர்கள்கூட | மாரிடக்காரத்காட்சி |
| மடமெனகட்டிப்பசி | வந்தவர்க்குதவாமல்தாழ்ச்சி(இது) |

சரணங்கள்.

உத்திரத்தேசத்திலும்மை ஓதினர்புகழ்கொண்டாடி.
உண்மையென்றுநாமும் ஓடிவந்தோம்திண்டாடி
சத்துவகுணமுள்ள தாமின்றிகொண்டாடி
சுத்தப்பட்டினியால்சீவன் சோருதுடல்துண்டாடி (இ)

இத்தரையில்முன்ன மெத்தனைப்பேர்சிலம்காட்டி
முத்தியடைந்தார் முற்றதவராக்கீர்த்திநாட்டி
அத்தகைப்போலநாமும் ஆவோமெனப்பேர்சூட்டி
வித்தகையாநம்முன் வேஷம்காட்டாதேபுகழோ
ட்டி. (இது)

உந்தன்மனைவிதானும் உத்தமிபோலபேசி
எந்தன்பசியறிந் தெக்குமிறக்காமல்நேசி
சொந்தநாதனையிப்போ சுருக்கிலனுப்புவேனெனக்கூசி
இந்தநோம்காக்கவைத்த எண்ணமற்றவிசுவாசி (இது)

வசனம்:—நம் அண்டையில்வந்து நம்மை இன்னாரென்றறியாமல் உலக வேஷதாரியாய் அன்னமளிக்கும் சிறுத்தொண்டரென யாவருமதிசயிக்க பெருமைபூணும் உமது கபட்டுகுணத்தையறிந்தோம். நீர்தானோ பெரிய தொண்டரென்பது. அன்னக்கொடி அதின்மேலொரு ஆராட்சிமணி கட்டிவிட்டீர். இதனுலகம் கண்டவரையில் அன்னதானப்பிரபு சிறுத்தொண்டரென உத்தரதேசமுழுதும் புகழ்கொண்டாடுவதைகேழ்வியுற்று இங்ஙனம் வந்துபார்க்க அழகிய வும்பெண்ணை சொத்துக்களை பிறர் கொள்ளாமல் காவல் வைத்துவிட்டு தலைமறைவாயிருந்து கொண்டு சதிசெய்வதையறிந்தோம். தவிர நம்மை வெகுபேரழைத்தார்கள். என் கணவரிப்போதே வருவார். உடனேயழைத்து அமுது செய்விப்பேனென்று அந்தரங்கமில்லா விசுவாசம் காட்டியதை நாம் நம்பிவந்து வெகுநேரம் காத்திருந்தும் நீர்வராமல் ஸ்திரீ புருஷர்கள் உலகசம்பிரதாயப்படியிருந்து ஊர்மெய்க்க அன்னமளிப்பதாய் பகட்டுக்காட்ட வந்திருக்கிறீர். நம்முடைய பசியறிந்தமுதளிக்கமாட்டீர். நம்பசியால் உமக்கற்பணமாக உயிரைவிடப்போகிறேன். நீர்போம் உம்மைப்போல சனி சண்டாளர்கூட செய்யார். வீண் மனஸ்தாபம் கொள்ளாதீர்.

## தொண்டர் பைரவரை மடத்திலமுதுண்ண அழைக்க தர்க்கம்.

சேந்தமிழுலகினில் என்ற வர்னமெட்டு.

தொண்டர் குறைகொண்ட நாயேனைப் பெரியதொண்டரென நீர்
கூறநான்ஒப்புவேனோ மறுத்துச்சொல்ல
வேறுநானறிவேனோ
குறவனார்தம் திருவருளடியார்
வரவதைதேடி பெருமனம்கொண்டு
சென்றேன் பொருக்கவேணுமே என்குறைதீர
வந்துண்ண அருள்பூணுமே

வைரவர். எந்தன் பசியைத்தீர்க்க உந்தனாலாகாது நீர்
எண்ணுவதகாதுசெல்வாயே வேறெங்கேனுமடியார்
இருந்தால்பார்த்துக்கொள்வாயே
என்பசிக்கேற்ற வண்ணமறிந்து
நன்மையையுடைய பண்ண வுமக்கு
இஷ்டம்வராதுபாருமே அதோடும்கூட
ஏற்கையிராதுவேறுமே

தொண்டர் உந்தனருளிருக்க எந்தனுக்கில்லாதொன்று
இல்லைநீர்வரவேணுமே திருவுளத்தில்
உற்றதைக்கேட்கத்தோணுமே
அருளுடன்தாமும் அறைந்ததையிப்போ
சிறுகொடியிலமைத்து தெரிவிப்பேனெந்தன்
திராணியைபார்க்கக்காணுமே அருள்கொடுக்கும்
தேவாநீர்வரபூணுமே

வைரவர். உந்தன்மடந்தனில் வந்தவர் களித்துண்ண நீர்
என்னசித்தம்செய்தீரோ எனக்குத்தெரிய
எடுத்துரைசெய்வீரோ
என்பசியடக்க வன்பதைசையுள்ள
உன்னதகறிகள் பண்ணியிருந்தால்
இப்போதேவருவேன்தேருமே இல்லையாகில்
செப்பாமல்வேறேபாருமே

## பைரவருக்கு தொண்டர்மடத்தில் சமைத்த கரிவகை எடுத்துக்கூறல்.

### விருத்தம்.

அய்யனே சுவாமி யெந்த னன்புள்ள குருவே போற்றி
மெய்யனே யடியாருண்ண மேவிய யெந்தன் மடத்தில்
வையவே யுபசரித்தன்புடன் படைக்கவே கரியமுதுகள்
செய்துமே யிருப்பதை நான்சொல்கிறேன் கேளும்சுவாமி.

### இராகம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

### பல்லவி.

அடியேன்மடத்தில் அமைத்தக்கரியமுது
அறைகுவேன்கேளும் சுவாமி

### அநுபல்லவி.

படிமிசையோர்மெச்சும் பச்சரிசிவடியலும்
பண்பானசர்க்கரைபொங்கல் பலசித்திரவன்னங்களும் (அ)

### சரணங்கள்.

ஆவின்புத்துருக்குநெய் அவித்தபருப்புமசியலும்
நாவிற்கு ருசிகொடுக்கும் நற்கதலிக்காய்கரிகளும்
பாவற்காய்பச்சடியும் பாங்குபுடலைபீர்க்கைமுள்ளி
நோவற்றபூசனிநெல்லி நினைக்கவாயூருமவரை துவட்டல்களும்

கருணைசேப்பன்வள்ளி கதலிஉருளைமுள்ளங்கி
கிழங்குகள்பருப்புச்சேர்த்து கொத்தவரைக் கூட்டுகரிகளும்
திருகத்தரிப்புளிக்கொழம்பு திகட்டாதமுருங்கைசாம்பார்
தித்திக்குமோர்க்குழம்பும் பச்சைமிளகுரசங்களும் (அடி)

முன்னைமுஷ்டைகாரை முளைக்கீரைமசியல்களும்
முருங்கையகத்திதூதுவிளா முளைப்பருப்போடுபிரட்டல்களும்
சின்னசுண்டக்காய்விலாங்காயோடு சேர்த்திடித்ததொக்குகளும்
இன்னுமநேகதுவையல்களும் இளவாழைதண்டுகோசுகளும் ()

இந்துநிறம்போல்சொந்த இளம்பிறைஆவின் தயிரும்
சுந்திரராயும்நாவிற்கு தொட்டுக்கொள்ளஅமிச்சை இஞ்சி
விந்தையானநார்த்தைகொலுஞ்சி வெந்தியமாஙூருகாய்களும் (அடி)
விதம்விதமானவத்தல்வடகம் விலாம்பழபச்சடிசெஞ்சு

சோலையில்பழுத்துதிர்ந்த வாழைப்பலாமாங்கனியும்
சொல்லரிதானஜிலேபி சோமாசிபூந்திலாடும்
வல்லமைசூர்பாகுஅல்வா வடைசுய்யமோதகதிரசமும்
கொள்ளக்குடிக்கஜினி கோதுமைப்பால்பாயாசத்தோடும்()

வசனம்:—தேவரீர் அடிமைகொள்ள அடியேன் மடத்தில் சமைத்து தயாராக உமது சித்தத்திற்குதவ வைத்திருக்கும் கரிவகைகளைச் சொன்னேன். இன்னும் தேவரீரிச்சையைத் தெரிவித்தால் உடனே தயாரித்து போஜனம் செய்துவைக்கிறேன் சுவாமி.

## தொண்டருரைத்த கரிவகைகளுக்கு பைரவர் தோஷம் கற்பித்தல்.

### விருத்தம்.

உம்மை போலிவ்வுலகில் லொருவரையும் கண்டதில்லை
செம்மையி லறஞ்செய்து சிவனடி யானபேரை
மும்மலந் தாண்டிய ஜோதி முக்கண்ணனருளை நீக்கி
திம்மையில் சேர்க்கவந்தச் சிறுத்தொண்டரென்பர் நீர்தானே.

### கொஞ்சம் சங்கடமா என்ற வர்ணமெட்டு.

### பல்லவி.

தொண்டர்நீராகுமா இந்ததொல்லுலகிலும்மை
நல்லவரென்றுசொல்ல தொண்டர்நீராகுமா

### அனுபல்லவி.

எண்டிசைஉலகோரும் கண்டிப்படிச்சதி
அண்டிஅடியாரைஏமாற்றி மிண்டுசெய்யாரிக்கதி (தொ)

### சரணங்கள்.

கத்தரியின்புகைப்பட்டு கலங்கினர்கந்திருவர்
அத்தன்சடைமுருக்கை அடியார்கள்புசிப்பாரோ
சத்திலாபுடலைபீர்க்கை சர்ப்பத்தையொப்பிடுவார்
உத்தமவாழையானுக் குகந்தகனியன்றிருசிப்பாரோ
அத்தன்நியமன சுத்தவிரோதி
எத்தகையிலும்நீர் குத்தமுள்ளபாவி (தொண்)
பறங்கிப்பூசனிசிவன் பெருத்தவங்கமென்றே
பலரும்பேசுவாரும் முளம்நீரறியாதோ

குரவனர்க்குரியநெல்லிமுள்ளி கூடாதகாரியம்சேர்ப்பார்
கொம்புபாவை அவரை கொள்ளுருத்திராட்சகோடாகாதோ
நேசமாயடியாரை பாசமதாயழைத்து
மோசம்செய்யுமும்மைபோல் காசினியில்கண்டதில்லை ()

மண்ணைத்தோண்டிக்கிழங்கு பன்றிநரிதின்பதல்லால்
உன்னைப்போல்தொண்டர்கள் உண்பார்களோநத்தி
என்னைநீமோமாத்தியும் ஙில்லத்தில்கொண்டுபோய்
என்னசதிசெய்வீரோ யிப்போதநிந்தோம்புக்தி
உண்டிக்குதவாதகரி பண்டிதாநீர்செய்ததால்
கண்டிப்பாய்சொன்னேநம் அண்டையில்நில்லாதே. போ
போ (தொண்)

## இதுவுமது.

காட்சி கண்காட்சியே என்ற வர்ணமெட்டு.

### பல்லவி.

நொந்தோமுன்னாலேயே நோக்காதேன்முன்னாலேயே

### அனுபல்லவி

சந்தேகமில்லையினி சேருன்னிலையிலேயே (நொந்)

### சரணங்கள்.

நந்தேசடியார்பெரு நன்மைக்கினிக்கினம்
நாடோரும்சொல்லபாப நேசமாகும்தந்திரம்
மும்மலம்தாண்டிப்போக மூாண்படும்தொந்திரம்
மூவுலகுகொண்டாடுமென் சிலம்தாமும்சுதந்திரம்
சடில்லாமகாரிஷியின்வாக்கும் மற்றும்
கூடியவேதத்தின்பலன்போக்கும்
நாடியஉன்சதிவச மாக்கும் இப்போ
தேடியசிவபக்திநீக்கும்
நாவினிக்ககூறும்
நமக்குபாபம்சேரும்
பாவிஎன்முன்நீரும்
பகராதீர்போய்வாரும் (நொந்)

வசனம்:—தொண்டனே நீருரைத்தகரிவகைகள் சாக்ஷாத் பரமசிவத்தின் அங்க வடையாளங்களாகும். அதையடியார்கள்

புசிப்பார்களோ உம்முடைய பெருமையைக் கேழ்விப்பட்டு பசி யோடுவந்து பந்தியிலுட்கார்ந்து நீர் படைக்கும் பாவக்கறிகளை பார்த்து ஒன்றும் சொல்லமார்க்கமில்லாமல் ஒருவரையொருவர் பார்த்து மனங்கசந்து எல்லாம் ஈசன் செயலென்று பசியாறிப் போவார்கள். நீர் வில்வல்லவன் வாதாபியைப்போல் மடம் கட்டிவைத்து அடியார்க்கீவதாய் வருந்தியழைத்து பந்தியிலுட் காரச்செய்து சாப்பிடவைத்து பாவத்திற்காளாக்கும் தொண் டரை உம்மைப்போலிவ்வுலகில் கண்டதில்லை என்னையுமப்படியே கொண்டுபோக வந்திருக்கிறீர். நம்முடைய நல்லகாலம் உம்மு டைய சதியைத் தெரிந்துகொண்டோம். நீர் பண்டித விப்பிர குலத்தில் பிறந்து அடியார்க்கிப்படி சதிசெய்வதால் நம்முன் நில்லாதே, நாம் மனம் நொந்தோம், வேதத்தினுசைக்கி வித்தி யாசமானவரே. போம். போம்.

## தொண்டர் தடுத்துரைக்க பைரவரோடு தொண்டர் தர்க்கம்.

### விருத்தம்.

மன்ன நரசிம்மராஜன் வாக்கு தவாமலே யான்
கன்னய கணபதிசனளித்த நற்கருணை அருள்மேலோங்க
இன்னாள யடியார்க்கமுது இன்பமாயளித்து வந்தேன்
பின்னமாய் குறையென்றவரும்பேச நான் காண்கிலேனே.

மலடிவயற்றுமகன்போல என்ற திருப்புகழ் வர்ணமெட்டு.

இத்தனைநாளாயடியாரே தவரா நித்தமமுதுண்டுவருவாரே. அவர்
குத்தமொன்றுமொழியாரே. ஆனந்தம் . பொழிவாரே
அத்தனுன்திருவுளக்குறிப்பேதோ தேவா சுத்தாநீருண்ணும்விருப்பேதோ
சித்தமகிழநீருமுரைப்பீரே மனம் கரைப்பீரே. [அலை

### வைரவர்.

ஏனோநீரதைகேட்பதே உமக்கு வீணாநானதைச்சொல்வதே நல்ல
மானுடன்னலாகாதே சும்மா சோகாதே
அடியார்பசிக்குதவுமானே இப்படியில்நீரேயென்றமொழிதானேகேட்டு
வடதிசையிலிருந்துவந்தேனே பசியால் நொந்தேனே.

### தொண்டர்.

அப்படிசொல்லவும்கூடாதே நீர் எப்படிசொன்னாலும்தட்டாதே நான்
ஒப்பியேயும்பசிதீர்ப்பேனே விரதம் காப்பேனே
இப்படிதனில்வந்தயடியாரே யாரும் எப்போதும்மனம்நொந்ததடியாரே
கப்பியபசியால்மனம்வாடாதீர் துயர் நாடாதீர். [உம்மை

வைரவர்.

எந்தன் கருத்தைச்சொன்னாலாருமே-மனம் எங்கிதவிப்பாரதைப்பாருமே
பந்தமுடையோர்க்குச் சொல்லலாகாதே அது தகாதே. [வினை
இன்னேரமாயிங்கிருந்தீரே நீர் எண்ணிய காரியம்துறந்தீரே இனி
பண்ணும்வகையைபார்ப்பீரே விரதம் கார்ப்பீரே.

வேறு-நீலாம்புரிராகம்-ஆதிதாளம்.

1 இந்தஅலங்கோலமும் இந்தகொடுமையும்நீர்
ஏன்காட்டுரீர்சாமி தம்பிரானே உம்
சிந்தையில்நினைந்ததை எந்தனுக்கருள்சுறந்து
தெரியசொல்வீர்சாமி தம்பிரானே

2 எந்தன்பசிதீரவெண்ணி உந்தன்மடம்வந்தேனிப்போ
என்னசொல்வேன்நான் தொண்டனாரே நீர்
சொந்தமடத்தில்முன்னம் செய்தகரியமுதல்லால்
சொன்னால்செய்துதருவீரோ தொண்டனாரே

3 சந்தேகம்கொள்ளவேண்டாம் சாமியுமதடிமையான்
தம்முரைதவராமலீவேன் தம்பிரானே
விந்தையாயேதானாலும் விரும்பியப்போதேசெய்வேன்
வெருக்காமல்சொல்லவேணும் தம்பிரானே

4 உற்றதுசொன்னாலல்லோ அற்றதுபொருந்தும் நான்
உள்ளதைச்சொல்லுகிறேன் தொண்டனாரே
மற்றொன்றுமில்லையாரு மாதத்திற்கொருமுறை
மாபசுவீழ்த்திட்டுண்பேன் தொண்டனாரே

5 நித்தியமடியார்நினைவின்படி படைப்பதேயென்
நியமனவிரதம்சுவாமி தம்பிரானே
முத்திக்குவித்தான மூலகாரணாநீருரைத்த
மொழிதவராமலீவேன் தம்பிரானே

6 சத்தியமாயெனக்கிதைசெய்ய உம்மால் காளாதெனமனதில்
சந்தேகம்கொண்டேன் தொண்டனாரே
பத்தியாய்நான்சொன்னபடி படைத்தென்பசிதீர்த்தால்
பரமபதமடைவீர் தொண்டனாரே

7 சித்தத்தில்நினைத்தபசுசேனை என்னிடமிருக்கதின்
சீரதைசொல்லவேணும் தம்பிரானே

மெத்தப்பசியினால்மெலிந்துடல் வாடாமல்விரைவில்
வெளியிட்டால்செய்குவேன் தம்பிரானே
8 உத்தமவடியார் உளம்போல்படைப்பதேயும்
உருதியெனகேழ்விபட்டேன் தொண்டனாரே
இத்ததிநான்சொல்ல ஈவாரோமாட்டாரோ அதை
எடுத்துச்சொல்லுகிறேன்கேள் தொண்டனாரே

## வைரவர்த்தொண்டர்க்கு தாமுண்ணும் பசுவிவரம்கூறல்

### விருத்தம்.

உண்மையாய் நாமுறைத்த உணவதை யளிப்பேனென்ற
நண்பனே நாமுண்ணும்பசு நரப்பசு வதுவாம்கண்டீர்
வண்மையில் வடிவுளனாய் மாசிலாவய தைந்துளனாயவனை
கன்னலில்லாமல்பெற்றோர் சமைத்த கரியதை புசிப்பேன்யானே

வசனம்:—கேளும் தொண்டனாரே நாம் ஓர்விரதம் அனுஷ்டித்து வருகிறோம். அது ஓர் அயனம் சுத்தபட்டினியாயிருந்து வருஷாரம்பமேஷத்தில் சூரியசந்திரர்கள் ஒன்றுகூடிய அஸ்வதி பரணி கார்த்திகையில் கால்ஆக இரண்டேகால் நக்ஷத்திரத்தில் முன்பின்னுள்ள நக்ஷத்திரங்களை தள்ளி நடுநக்ஷத்திரமான பரணியில் சூரியன் உச்சஸ்தானத்தில் சார்ந்த ராஜதவேளையில் உதயம்நீக்கி உச்சிதாண்டமுன்னம் பரிபூரணமாக களைப்படங்க ஆயாசம்நீங்கக்கொழுமையுண்டாகபுசித்து விரதம்செய்யவேண்டியதால் அப்படி அடியார்க்குதவும் அன்பரை விசாரித்ததில் உத்திரத்திலும்மை எல்லாரும் புகழ்கொண்டாடி சொன்னதறிந்தும்மைக்காண விரதஇளைப்பால் களையோடு வந்தும்மைக் காணாது வருந்தி உம்மனையாளைக்கண்டு கண்டவர்களழைக்க விண்டு கருத்துக்கிசைந்த உம்சொல்கொண்டு ஆனந்தமடைந்தோம். நாமுண்ணும்பசு நரப்பசுவதுவாகும். அந்த நரப்பசுவும் ஐந்து வயது பாலனாய் அங்கவீனமில்லானாய் பெற்றோர் கவலையின்றி கொடுக்கும் மாமிசத்தோடுண்போம். இது உம்மாலாகக்கூடியதோ அதற்காக வருத்தம்வேண்டாம் இல்லையெனத் தெரிவித்தால் வேறெங்கேனும்சென்று நவ்விரதம் முடித்துக்கொள்ளுகிறோம் பதில் சொல்வீர் தொண்டனாரே.

தொண்டர் வசனம்:—அதுவும் அரிதல்ல, அப்படியே செய்குவேன். கருணைக்கடலாகிய கணபதீசனளித்த கட்டளை தவறேன். சீக்கிரம் முடித்துவருகிறேன் சுவாமி.

## வைரவர் தோண்டருக்கு மறுபடியுரைத்தல்.

### விருத்தம்.

பெரிய புராண செய்யுள்.

அதுவுமரிதல்ல வென்ற அன்பனே சொல்லக்கேளீர்
உதவுவோன்தானும் குடிக்கோர் மகனுமாய் உன்னதமானனாய்
தாதையருக்க தாய்பிடிக்க தம்மூவர் மனமுவந்தே தான்
பேதமற சமைத்த கறிபெருவோமல்லால் மருப்போமோ.

வசனம்:— அதுவுமரிதல்லவென்றுசொன்ன அன்பரே கேளும் நாமுண்ணும் கறிக்குதவுவோன் ஓர்குடிக்கோர்மகனாய் உயர்கல்வி கற்றவனாய் உயர்ந்தமானனாய் தாய்பிடிக்க தந்தையறுக்க மூவர் மனமும் கலங்காசித்தமுடைய அதிதீவிர பக்குவம்வாய்த்த கறியை புசிப்போமல்லாமல் பாசபந்தம்கொண்டு மரியை மூடிய மாமிசத்தை உண்ணோம். அதை நன்றாய் அறிந்துக்கொள்ளும் பின்னால் நம்மேல் பழிசுமத்தாதே தொண்டனே.

## வைரவரை தோண்டர் விடைகேட்குதல்.

### விருத்தம்.

அதுவுமோரரியதல்ல அன்பரே அடியேனும் அருள்பெற
உதவவே உன்னைப்பெற்ற உயர்வதே மேன்மையாகும்
இதமுடனும் பசிதீர எண்ணியே போற்றியானும்
கதிபெற கறிசமைக்கவென் கர்த்தனே விடையளிப்பீர்சுவாமி.

இராகம்-பைரவி-ரூபகதாளம்.

பெருமை பெருகக்காலம் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

ஆரூரைக்கிலவாசன் அருளானமூர்த்தியே எனக்கு
அன்பாகவிடைதாரும்

அநுபல்லவி.

மோகாந்தகாரம்தன்னில் மூழ்கியபந்தம்விட்டு
தாழுநின்பதம்பணிந்து தமதுவிடையருளக்கொட்டு (ஆ)

சரணங்கள்.

முன்னம்மென்வினையொரு மூவாசைதுறந்தவுருவாய்
இன்னிலம்பிறவியறுக்க இசைந்துவந்தீர்குருவாய்
பின்னமில்லாபதம்சேர்க்க பிள்ளைகறிகொடுக்கப்பெருவாய்

நன்னயமாய்நான்போய் நாடிவரவிடைதருவாய் (ஆகா)
விரதம்பலிக்கயின்று விந்தையாய்முளைத்திரே
விரும்பிபிள்ளைகரிபுசிக்கும் வேதத்தின்முடிவோரே
சுரர்முனிவர்யாரும் துதித்திடும்பெரியோரே
சுதனைகரிசமைத்து சுருக்காவரகாப்பீரே (ஆகா)
எந்தன்ஜன்மமது ஈடேறஒருக்காலே
சந்தேகமினியொன்றும் தானதுவாராமலே
சொந்தமலைமகள்பாகன் துணையதுதவராமலே
மைந்தன்ராமசாமிமனம் மகிழ்வதுகுறையாமலே (ஆகா)

## வைரவர் தொண்டருக்கு பின்னும் தெரிவித்தல்.

விடையது கேட்டுநிற்கும் மேலான தொண்டனாரேகேளும்
தடையின்றி போய்வர சந்தோஷமாகச் சொன்னேன்
படியதில் நீர்படைக்கும் பட்சமாம் கரிவகைகள்
முடியதில் கதிரோனுச்சி முடிகிடி லுண்ணேமறிவாய்

வசனம்:—சந்தோஷமாய் போய்வாரும். ஆனால் நீர் விஸ்வாசமாய் படைக்குமமுது கரிகள் சாத்விகம் ராஜதம் தாமதம் என்ற மூவ்வேளைகளில் இராஜஸ வேளையாகிய கதிரோன் உச்சி தாண்டாமுன்னம் வந்தாலல்லாது பூஜைக்குதவாது. ஆகையால் உச்சியில் சூரியன் ஓரடி தாண்டிடில் உம் மடம்வந்து உண்ணேன் கண்டிப்பாய் அறிவாய் தொண்டனாரே

சிறுத்தொண்டர் வசனம்:—சுவாமி அடியேனும் அறிவேன். தேவரீருடைய பூஜாகாலமாகிய சூரியன் உச்சிதாண்டாமுன்னம் சமையல் தயார்செய்து அழைக்க வருகிறேன். விடைதா அருள் புரியவேணும் சுவாமி.

## வைரவர் தொண்டரை உருதிகேட்டல்.

### விருத்தம்.

உருதியாய் வருவேனென்று உண்மையாய் சொல்லிப்போயும்
கருதிய மனையாள்கேட்டு கடிந்துமே பேசிநின்றால்
வருந்திய மனத்தால்நீரும் வராம லிருந்துவிட்டால்
திருந்திய வேறோரிடம்செல்ல தெரியாமல் திகைப்பேன்யானே.

வசனம்:—கேளும் தொண்டனாரே நீர் ஏதோ மகா உத்தமனெனவே தோற்றுகிறது. ஆனால் நாமிச்சித்தபடி எனக்கு

அமுதுசெய்விக்க உம்மால்மட்டில் முடியக்கூடியதில்லையே. உம் பெண்சாதி பிள்ளைகள் உதவி வேண்டியதல்லவா? உம் குடும்பத்தார்கள் நீர் ஒப்புக்கொண்டவமுது வகைகள் அவர்களுக்கு கொடுக்க திருப்தியில்லாவிடில் அவர்கள்மேல் நீர்மனம்நொந்து என்னைப்பார்க்க அஞ்சி நீர் வாராமலிருந்துவிட்டால் நீர் வருவீர் வருவீரென்று நம்பியிருந்து என்விரதம் கெடும். ஆதலால் நீர் வருவீர் வரமாட்டீரென நான் நம்பும்படி சொல்லிவிடும். நீர் வருவது சந்தேகமிருந்தால் வேறிடம்செல்வேன்.

## வைரவருக்கு தொண்டர் உறுதிகூறல்.

### விருத்தம்.

கர்த்தரே யுமக்கன்னம் கருதியே யளிப்பேனென்று
திருத்தமாய் சொல்லிவிட்டு தெரியாமல் நிற்பேனோநான்
வருத்தமு முமக்குதர வராமலிருப்பேனாகில்
பெருத்தபாவங்களடையும்பேற்றை நானடைவேன்சுவாமி.

இராகம்-சாவேரி-அடதாளசாப்பு.

பல்லவி.

சேரும்கதியில்சேருவேன்சுவாமி உமக்குத்துரோகம்
செய்தாலனுபவிக்கிறேன் சுவாமி

அனுபல்லவி.

வாராதபெரியோர் வந்துண்ண தடுத்தவன்
வழக்கழிவால்பொருள் வாங்கிப்பழிதொடுத்தவன்
பொருக்காத்துயரை பிறருக்குக்கொடுத்தவன்
புண்ணியம்செய்வோரை முன்னேநின்றுகெடுத்தவன் (சே)

சரணங்கள்.

1 தந்தைதாய்குருவை நிந்தனைசெய்தவன்
தாசிமேல்மகிழ்ந்து தாரத்தைவைதவன்
மைந்தருக்கியாமல் மனமாரவுண்டவன்
மயக்கும்கள்ளைக்குடித்து மரியாதைவிண்டவன் (சேரும்)

2 வந்தவர்பசிக்க மகிழ்ந்துப்புசித்தவன்
வாழும்குடியைக்கண்டு பாழ்செய்துருசித்தவன்
பந்தமற்றடியாரை பாரில்பழித்தவன்
பருவமங்கைகள் கற்பை பற்றியழித்தவன் (சேரும்)

3 அந்தணர்பசு    மைந்தரைக்கொன்றவன்
அடியார்மனம்நோக    அசட்டையாய்சென்றவன்
தந்தபொருளைவாங்கி    சதிசெய்தொழித்தவன்
தருமபொருளையபகரித்து    தானுண்டுசெழித்தவன் (சே)

வைரவர் சொல் வசனம்:—சந்தோஷமானோம் தொண்டனாரே உம்முருதிக்குமெச்சினோம். போய் அமுது கரிகள் சித்தம்செய்து வருவாயாக. பூரணாசீர்வாதம்.

### பொது வசனம்.

இவ்விதமாக வைரவரிடம் விடைபெற்றுவரும் தொண்டனார்தான் வாக்களித்தவண்ணம் மனைவியொத்துநடப்பாளோ என்று துயரத்துடன் கடவுளை துதித்துக்கொண்டு மடத்துக்கு வருகிற விதங்காண்க.

இராகம்-நாதநாமக்கிரியை-திரிபுடைதாளம்.

### கண்ணிகள்.

சிவனேநானென்னசெய்குவேன்    திக்குவேறில்லைத் தானே
பவனேஅடியார்க் கமுதூட்ட    பரிந்துவாக்களித்தேன் நானே
தவமே வோர்வுருவாக    தான்வந்த பெரியோரே
அவனியில்பிள்ளைகறியும்    அளிக்ககேட்டார் உரியோரே
நினைவுக் குகந்தபொருளை    நேர்மையாய் தந்திட்டாலும்
மனமதுநிலைபொருந்தி    மனையிவாரோ கேட்டாலும்
கனமான கற்புவாய்ந்த    காரிகைநங்கை தானும்
குணமானமகனைக்கொய்ய    கூறவேளுப்பநான் வேணும்
திருவருள் சோதனையோ    ஜென்மம்வந்தஊழ் வினையோ
அருமைமகனைவிட்டு    அன்னியஊர்பார்க்க பிணையோ
தரும முறைதவறாமல்    சங்காரின் அடியார்க்கு
உறுதியாயளிப்பேனென்று    உகந்துசொன்னேன் பெரியோர்க்கு
சந்தனத்தாள்வார்த்தைதனை    தட்டாமலொப்புமென்மாது
சிந்தையிலிருவோரும்    சேர்ந்தளிக்கசுவாமிஓது
மைந்தன்சீராளன்தேகம்    மாமறையோர்கறுப்பேனோ
எந்தன்விரதம்தப்பி    இன்னிலமுயிர்தரிப்பேனோ

போது வசனம்.

இவ்விதமாக சிறுத்தொண்டர் கடவுளைநாடி வருந்தி வாய்விட்டு புலம்பிவா மடத்திலிருந்த நங்கை சந்தனத்தாளோடு நாதனைக்காணுமென்று விசாரப்படுகிற விதங்காண்க.

## தொண்டரைக்காணாது நங்கை வருந்துதல்.

### விருத்தம்.

அரனடியாரைத் தேடிச்சென்ற அன்பனார் வரவுங்காணேன்
பரனடியாருமங்கு பலித்தாரோ இல்லை பரிந்திட்டாரோ
திரமானமன்னர் தெரியாமல் திகைத்துமே அலைகின்றாரோ
சிரமதில் சடைதரித்த சிவனடியைக் காணாமல் திகைத்துமே
[யலைகின்றாரோ.

இராகம்-சஹானா-தாளம் ரூபகம்.

### பல்லவி.

ஜங்கமரையழைக்க	தான்சென்ற நாதன்வற
தாமத மின்னுமேனோ	தன்னருளிது நானோ.

### அனுபல்லவி.

அங்கவரைக்காணாது	அலைந்து திரிகிறாரோ
ஆகாரிதம்செய்ய	அரண்செயலெவ்வாரோ	(ஜங்)

### சரணங்கள்.

1. வந்த அடியாரைநான் வண்ணங்கிப் பணிந்திட்டேனே
வாராகாதென்றதால் வருந்தி யிருந்திட்டேனே
முந்திமொழிந் திட்டபடி முதியோ ருருதிகேட்டேனே
சந்தேககம் தெளியயென் சாமிவற காத்திட்டேனே	(ஜங்)

2. பார்த்த பெரியோர்வேதம் எற்றவர் சீலம்தானே
பரிந்து வேறூரிடம் பற்றார் நிஜம்காணே
வார்த்தை புரட்டுச்சொல்லி வாரா திருக்கார் மானே
மன்னர்மே லென்னகோபம் வைத்தாரோ யறியேனே	(ஜ)

3. எண்ணிப்பார்க்க மனம் புண்ணாகச் செய்யுதே
கண்ணில் நாதனைக்காண கருத்துமிகத் தெய்யுதே
மண்ணிலடியார்க் கமுது வழங்கினதும் பொய்யுதே	(ஜங்)
என்னநாம் செய்வதென்று எங்கிகண்ணீர் வடியுதே

வசனம்:—மாதே சந்தனத்தாளே அடியாரை யழைத்துவரச் சென்ற நாதன் இன்னும் வறக்காணேன் அந்த பரதேசியாரங்கிருந்தாரோ, வேறெங்கேனும் சென்றாரோ. அறியேன் எங்கு அலைந்து உடல் மெலிகின்றாரோ என்செய்வேனடி பாங்கி.

## போது விருத்தம்.

இந்தவிதம் மடந்தனி லிருந்திடும் நங்கைமுன்னே
சந்திரன் வார்த்தைக்கொண்டு துலங்கிய தொண்டர்தாமும்
பந்தமற வந்தபாலனை படைத்திட சமைப்போமென
சொந்ததன்மனைவிகாணதோன்றினார் மடத்தில்வந் தூன்றினரே

## ஐயாபழனிமலைவேலா என்ற வர்ணமெட்டு.

### நங்கைக்கும் தொண்டருக்கும் தர்க்கம்.

நங்: சரணம்சரணம்எற்பீர்சிலா — உம்மிட
தான்பணிந்தேன் மணவாளா
அறம்தாங்கவந்தவனுகூலா — அந்த
அடியாரைக்கண்டீரோசொல்மேலா

தொ: அருந்துதிமெச்சுகற்புமானே — உனக்
காசிர்வாதம்சொன்னேன் நானே
அருமறையருளடியோனே — கண்டு
அன்பாய்பதம்பணிந்தேனே

நங்: எனழைத்துக்கொண்டுவரவில்லை — அவர்
என்னசொன்னார்சொல்லந்தசொல்லை
நான் கேட்டுமகிழ என்னதொல்லை — அந்த
நாதனுரைத்த மனதி னெல்லை.

தொ: அன்னமுண்ணமன மிசைந்தார் — ஆனால்
அருமைமொழியொன் றிழைத்தார்
உன்னை பிள்ளைக்கறியென மொழிந்தார் — நானும்
உறுதிகொடுக்க மனமகிழ்ந்தார்.

நங்: பிள்ளைகறியென்றா லதென்ன — எனக்கு
புரியும்படிக்கருளும் மன்னா
நல்லதிதென் றவர் சொன்ன — வைரவ
நாதன் கருத்துக்கிசைந்துண்ண.

தொ:-ஓர்குடிக் கோர்மகனாய் வந்தோனும் — அது
உருவில் குறைபாடின்றி காணும்
பெருவய தைந்தாயிருக்க வேணும் — அதை
பெற்றோராறுத்து சமைக்கவேணும்.

## நங்கைக்ரும் தொண்டருக்ரும் சம்வாதம்.

பொன்னுலவு சென்னிகுளநன்னகர் அண்ணுமலைதன்னென்றமெட்டு

பொன்னிநதி மண்ணில்பாய்ந்து செந்நெல்விளை செங்காட்டாங்குடி
தன்னில்வந்து அன்னமது கேட்டவர் உமை
கண்ணில்கண்டுகன்னலதை பூட்டவர் இப்போ
பிள்ளைகறி கொள்வேனென்று வல்லமையாய் சொல்லியும்
எண்ணத்தைசோதிக்க புறப் பட்டவர் என
என்னுகிறேனுலக மாயை விட்டவர்

### நங்கைக்கு தொண்டருரைத்தல்.

அன்னமேகேள் இன்னிலத்தில் என்னவந் திரந்தவர்கள்
என்னகேட்டாலும் கொடுக்க வேண்டுமே அதை
இன்னுள்வரைசெய்து கை யாண்டுமே நின்ற
என்னைக்கண்டு வன்பசிதீர கண்ணியமாய் உண்ணுவேனென
நன்னயபிள்ளைகறி கேட்க கண்டுமே அதை
முன்னமேகொடுக்கமுறை உண்டுமே

### நங்கை.

மன்னுஅந்த கண்ணியர்மனம் உண்ணவந்த பிள்ளைநமக்கு
இன்னிலத்தில்யார்கொடுப்பார் சொல்லுமே அதற்கு
என்னசெய்யலாமதை வின்னுமே. அதுவும்
இந்நேரத்தில் மண்ணில்யாரை கண்ணில்கண்டு உண்ணச்செய்ய
என்னமாய்முடியுமதை தள்ளுமே நாம்
எங்கிதவிக்கமனம் கொள்ளுமே

### தொண்டர்

நினைவுநிறைய மனதிற்குரிய கனகநிதி யை யளித்தால்
தனையன் தனைஉளமகிழ்ந்து தாராரோ அதை
வினையமாய்கறிசமைக்கிங்கு வாராரோ அப்படி
இல்லையானல் உள்ளபடி செல்வமதாய் கொள்ளுநம்
பிள்ளைசீராளனைசமைத்தா லோரோ உன்
செல்லமகனைத்தா புகழ் பாராரோ

### நங்கை.

அன்னமடம் தன்னைக்கட்டி மண்ணிலறம் செய்ததெல்லாம்
கண்மணிசீராளனைப்பெற நாடியே இப்போநீர்
சொன்னவார்த்தையால் மாயை மூடியே என்
கண்ணிருண்டும் காதடைத்தும் எண்ணிமன நடுங்கிகுலை
பெண்புத்தியால்சோகம்வந்து கூடியே உயிர்
இந்நிலத்தைவிட்டுப்போக தேடியே

### தொண்டர்.

எந்தன்மாதே செந்திருவே சிந்தைமிக நோகவேண்டாம்
பந்தவினையென்றநீயும் எண்ணுவாய் மாயை
வெந்தருகசெய்ய அறம் பண்ணுவாய் இந்த
காயமாமிது மாயுமுன்னமே நோயதாம்பிறவி தீயும்படிசெய்ய
கந்தனைபெற்றோனருள் உண்ணுவாய் வேறு
மைந்தன்ராம சாமிசிந்தை நண்ணுவாய்

வசனம்:—பெண்மணே! எதுக்கிந்த விசாரம். உலகமாயை இதிலொன்றுமில்லையென்றும், பெண்டுபிள்ளை சொந்தமில்லையென்றும், பரகதியடைய கொண்டகாரியத்தை சாதிக்கவேண்டுமல்லவா? தவமிருந்து குழந்தையைப்பெற்று அருமையாய் வளர்த்து என்ன பலனடைய கருதுவோம். நம்மை ஆதரிக்கவும், பரமபதம் சேர்க்கத்தானே. ஆதியில் ருக்மாங்கதன், சிபி முதலிய சக்கரவர்த்திகள் குழந்தைகளை அறுத்து தாங்கள் கோரிய விரதங்களை முடித்துக்கொள்ளவில்லையா? நீ அறியாதவளா? குழந்தை ஜாதகத்தில் சந்திரதிசையில் மாதா, பிதா, தனயன் இவர்களுக்கு ஓர் கண்டம் உண்டென்று சோதிடர்கள் சொன்னார்களே. இப்போது சந்திரதிசை அந்தியமல்லவா. ஆதலால் எல்லாம்சேர்ந்து அவன் தலையில் நிற்பதாக தெரிகிறது. இல்லையானால் பசியாய் வந்தவர் பிள்ளையை கறிசமைத்து தாவென கேட்பாரா? இப்போது நாம் ஒப்புக்கொண்டுவந்தபடி அடியாருண்ணக்கொடாவிடில் இயல்பாகவே சீராளன் இறந்துவிட்டால் மனம்துணிந்து கட்டையில்வைத்து தீமூட்டி வேகும்படிதானே செய்குவோம் அப்போது மனம் ஒப்பத்தானேச்செய்யும். இப்போது அடியாருண்ணக்கொடுத்தால் பிறவி அறுந்துபோனதொழிய உன் குழந்தை உன் கர்ப்பத்தையே யடையும். பிறவி தீர்ந்தால் நம்மையுமப்பதவி சேர்த்துக்கொள்வான் கலங்காதே. யோஜித்து சொல்லுவாய் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சீராளனை அழைத்துவருவோம் சொல்வாய்.

நங்கை வசனம்:—கற்புடைமைவாய்ந்தபெண்கள் கணவன் கருத்துமாறி நடப்பார்களோ, தேவரீர் திருவுளமெதுவோ, அதின்படி நடக்க சித்தமா யிருக்கிறேன் ஆனால் தேவரீரிடம் பயிரவராகவந்த பரமமூர்த்தி தாமுண்ணும் பிள்ளைக்கு ஐந்து வயதா யிருக்கவேண்டுமென் றுரைத்ததாக சொன்னீர்களே நம்

மைக்கார்க்கவந்த நன்மணிக்கு ஐந்துவயது பூர்த்தியாக வில்லையே எப்படி அடியார் ஒப்புக்கொள்வார். குழந்தையை அறுத்து கறிசமைத்தபிறகு அடியாரும் ஒப்புக்கொள்ளாமல் நாம் குழந்தையையுமிழந்துவிட்டால் விரதம் தக்கினபலனுமில்லை சுகம் தக்கினபலனுமில்லை என்பதுபோலாகுமே சுவாமி.

தொண்டர் வசனம்:— நீ சொல்வது வாஸ்தவமே நம்முடைய பாலன் நந்தனவ௵ தைமீ 17உ பிறந்ததால் இப்போது கூடிய வருஷம் நாலு, மாதம் இரண்டு, நாள் இருபத்தாறாகிறது எந்த உயிரும் பிண்டஉற்பத்திகாலமேயல்லால் பிறந்தது காலமாகாது கெற்பத்தில் பத்து மாதம் சென்றிருப்பதால் வயது ஐந்து பூரணமாகிறது ஆதலால் ஐந்துவயதுக்கு குறைந்தவனாக கருதப்படாது என் மங்கையே.

நங்கை வசனம்:—சந்தோஷம் எல்லாம் ஒத்திருப்பதாகத் தெரிகிறது ஆனால் என்னுடைய குட்சியிலிருத்தி பத்துமாதம் சுமந்து கஷ்டத்துடன் பிரசவித்து அருமையாய் வளர்க்கப்பட்ட என் கண்மணியை கட்டிக்கரும்பை கனிரசத்தை என்கையால் பிடித்தறுத்து மசாலைக்கூட்டி கறிசமைத்து வந்த பெரியோர்க்கமுதாக்கி உண்ணச்செய்வேன் தேவரீரை மணந்திந்தநாளாய் தேவரீர் திருவாக்குக்கு மறுவின்றி நடந்துவந்தேன் இப்போதும் தவறாமல் துணிந்தேன் நான் உத்தமியாய் கற்பு காத்தவளாய் அந்த கடவுளறிவாரானால் இவ்வுலகத்தோரெனைப்பார்த்து பிள்ளையைக்கொன்ற பெரும்பாவி யென்று சொல்லும் சத்தம் என் காதில்கேட்காமுன்னம் கைலாசபதி கதிசேர்த்துக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

தொண்டர் வசனம்:—உன்னுடைய வார்த்தையைக் கேட்கயிருந்த ஆச்சரியமாயிருக்கிறது. எத்தனைகோடி கற்புவாய்ந்தவர்களானாலும் ஊழ்வினை அனுபவித்துத்தானே தீரவேண்டும் உனக்குத்தெரியாதா?

நங்கை வசனம்:—என் சுவாமி! காலதாமதம் செய்குதீர் காலம் அகாலமாய்விடும். அடியார் பூஜாகாலம் தவறிவிடும். சீக்கிரம் பள்ளிக்கூடத்திற்குச்சென்று என்னருமை கண்மணியை அழைத்துவாரும் சுவாமி.

தொண்டர் வசனம்:—இதோ போய்வருகிறேன். வெளியில் ஒருவருக்கும் சொல்லவேண்டாம். ஆ? பரமசிவமே. பாக்கியமளிக்கும் தவமே. வந்த அடியாரமுது புசிக்க என் கன்றை காதலாற்பெற்ற என்சிந்தை துணிந்து பள்ளியிலிருக்கும் பாலனையழைக்கப்போகிறேன் என்னவென்று அவனைப்பார்த்து வாவென அழைப்பேன் ஏனழைக்கிறீரென்றால் என்னசொல்வேன் பொய்ச்சொல்லியழைப்பேனு பொய் பேசலாகாதென நீதிநூல் கூறுகிறதே. உலகத்திற்கு கற்பிக்க அரிச்சந்திரன் சரித்திரத்தை எடுத்து கூறியுள்ளரே. நான் என் மனதை எவ்வளவு தைரியப்படுத்தி பிள்ளை பெண்டு நித்தியமல்லவென்றும், ஊழ்வினைத்தீர்த்து கொண்டவிரதம்முடித்து அரனடிசேர்வதே நித்தியமென்று தெரிந்தும் மாயைமூடி என்கையுங்காலும் சோருதே என் கண்களில் நீர் ததும்புதே, ஆ! என்னறிவிழந்த சிந்தையே. மனத்திடனெத்து தைரியமாயிரு எனக்குத்துணையாக என்கூடவா ஒருவருமில்லையே என் செய்வேன். அந்த அருட்பெருஞ்சோதியை எனக்குத் துணையாகவழைப்பேன் வரமாட்டாரோ. குளத்திலழுத குழந்தைக்கு அன்புகூர்ந்து உமாகேஸ்வரியால் கிண்ணம்கொண்டு பால்தந்த அடியார்க்கடியர் என்னுடன் துணையாக ஒரு அடியார்க்கமுது செய்விக்க வரமாட்டாரோ அழைப்பேன்.

இராகம்-தேசிகதோடி, தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்று ளாடியவா ஈசா இன்று காத்திடவா

அனுபல்லவி.

அன்று மார்க்கண்டரை காத்திட
சென்று கடையூரிலுதித்திட்ட (மன்று)

1 காலைபள்ளியிலோதியிருக்க
வேலைவராமுன்னே வேண்டியழைக்க
ஞாலத்திற்காரியமேதென உரைக்க அந்த
சீலனுக்கென்சொல்வே னவன்சீவன்துடிக்க (மன்)

2 பண்டுசோழன்தேர்க்காலில்
கன்றுக்காமகனைக்காட்டியநாளில்
கொண்டுகாத்தகுருவேயிப்பாரில்
இன்றுகாத்திடக்கேட்டேன் ஈசாவருவாயென்நேரில்(மன்)

3 கணபதிசாவுன்கட்டளையிதோ
கடையேன்ஜென்மவைழ்வினையாதோ
குணமாம்கனையடியார்க்கிதோ
கொல்லத்துணிந்து வல்லமைகொண்டும்வாதோ (மன்று)

4 வாடியநாரைக்குமுத்தியை தந்தவா
வந்தஜெனகர்க்கு சின்மயம் புகன்றவா
பாடும்ராமசாமி பதத்திற் சுகந்தவா
பண்ணும்விண்ணவர்போற்றிடசென்னில்கங்கையை சுமந்தவா (மன்று)

பொது வசனம்.

இவ்விதமாக சிறுத்தொண்டர் சிவனை துதித்துக்கொண்டு பள்ளிக்கூடத்துக்குச் சென்றபோது நங்கை சந்தனத்தாளோடு துக்கிக்கிற விதம்காண்க.

## நங்கை சந்தனத்தாளிடம் தன் துயரமாற்றுதல்.

விருத்தம்.

பந்தமாம் கணவர்தாமும் பரிந்துமே சொல்லக்கேட்டு
வந்ததோர்க் கடியார்க்கன்னம் வருந்தாமல் செய்யவேண்டும்
சொந்தமா மெண்மகனை துனிவேனே மனம்துணிந்து
சந்ததமு மெனைக்காத்த சந்தனத்தாளே யென்செய்வேன்.

எங்களாலாகாது எங்களாலாகாது ஐயா என்ற வர்ணமெட்டு
தாளம்-ரூபகம்.

நங். என்னநான்செய்குவேனேந்திழைசந்தனத்தாளே இப்போ
எந்தன்பிள்ளைவந்தா லெப்படியறுப்பேன்கை யாலே

சங். பண்ணும்வேதயன்முன்பாங்காயெழுதியப்போதே அந்த
நண்ணும்விதியைமாற்ற நாமென்னசெய்வோமிப்போதே

நங். மன்னவர்வார்த்தைக்கு மாறிச்சொல்லலாமோ நாமே மகிழ
சொன்ன அடியாரென்னவண்ணம்குறித்தாறறியோமே

சங். சங்கையேன்கொள்கிறாய்நங்கைவெண்காட்டம்மைமாதே
சங்கரன்நமக்குபங்கம்செய்வாரோசொல் கோதே. [அருள்

நங்கை வசனம்:—எல்லாம் ஈசன்செயல்தா னறிவோம் ஆனால் சீராளன் என்மகன் சதங்கைகொஞ்ச, குதம்பைகுலுங்க

அசைந்துவரும் பாலனை கண்டு சந்தோஷமடையு மென்னெஞ்சம் அவனை யறுக்க குலைகலங்கி கண் சோருதே என்செய்வேன்

சந்தனம் வசனம்:— பொருப்பாயம்மணி கடவுள் சோதனை பின்னால் தெரியும்.

---

## சிறுத்தொண்டர் பள்ளிக்கூடம் சென்று மகனோடு தர்க்கித்தல்.

### போது விருத்தம்.

இந்தவிதம் நங்கைநோக இருந்தசந் தனத்தாள்தேற்ற
சுந்தரசீராளன் பள்ளியில் சுகமதாய் பாடம்படிக்க
சிந்தையில் கனிவுகொண்டு சிருத்தொண்டரும் சென்றபோது
மைந்தனும் பாதம்பணிந்து வணங்கியே உரைசெய்வானே.

### வண்ணத்தினைமாலை தெள்ளியே என்ற காவடிசிந்து மெட்டு.

### சீராளன் சொல்.

இன்னேரம் வந்ததேன் 'தந்தையே எனை
என்னாளும் காத்திடும் சிந்தையே நான்
இயல்பாய் வருவதன் முந்தியே நீர்
எதற்க்காகவே வந்தீர் சுருக்காயதைச் சொல்லும்
என்னநினைக்குது விந்தையே முகம்
இறங்கி இங்கேன்வற நொந்தையே.

### சிருத்தொண்டர்.

பண்ணும் கிளிமொழி யென்னவே உன்
படிப்பைப்பார்த்து மகிழ் பண்ணவே உன்னை
பயின்ற மாதாவும் நீ யுண்ணவே
பள்ளிக்குப்போய் சீராளப்பாலனை யழைத்துவாவென
பரிந்துவந்தேன் நான் முன்னவே வெயில்
பரிசத்தா லென்மனம் குன்னவே.

### சீராளன்.

ஒருநாளுமிப்படிக் காணேனே அதின்
உண்மை யின்னதென தோணேனே நான்
வரும்போதே மனக்குறையானேனே அங்கே

மடத்திலுன்ன அடியார்கள் அடர்ச்சியாய் வந்தார்களோ
கருத்தறியாமல் நான் போனேனே கேட்க
கழறுவாய் பதம் பணியலானேனே.

தொண்டர்.

தேடக்கிடைக்காத சொர்ணமே பிர்மன்
செய்திட்ட உயிர்தேக வர்ணமே இந்த
தேசத்தோர் புகழ்ந்திடும் பூர்ணமே உன்
தீர்க்கதரிசி புத்திக்கும் வாக்குசாதுர்ய குணத்திற்கும்
திராத்தவம் செய்தோ முன்னமே அடியார்
சொல்படி வந்தேதண்டா அன்னமே.

சீராளன்.

ஏனழைத்துவரச் சொன்னார் அங்கே
இரந்திடுமடியாரென்னை இன்னார் என்று
எப்படித்தெரியுமேன் உன்னார்
தப்பிதம் நீர்சொல்லும் வார்த்தை ஒப்பிடிலந்த கற்பனைபார்க்க
இப்படியிலிருக்கவர் எண்ணார் பூர்வம்
கப்பியவினைமாறி பண்ணார்.

தொண்டர்.

கன்னலேன் கொள்கிறாய் பாலா அந்த
கருத்துமடியார்மேல் சீலா நீ
கபடாயென்னாதே லோலா
கார்த்திகேயனைப்பெற்ற களைகண்ட னருளுற்ற
கருணையிலவர்வெகு மேலா நம்மை
காக்கவந்தாரானு கூலா.

சீராளன் வசனம்:—தந்தையே நான் ஒருவரையும் கபடாக நினைக்கிலேன். தேவரீர் திருவாக்குக்கு பதிலுரையேன். மாயையாமிவ்வுலகில் பிரார்த்தவினை தீர்க்கவந்த இத்தேகம், உலகத்தோடொத்து மனுநீதி தவராமல் நடக்கவேண்டுமென்பதை யறிவேன். தந்தை சொல்மிக்க மந்திரமொன்றில்லை என்பதை உணர்வேன். உலகத்தில் மனுதர்ம சாஸ்திரத்தைக்கடவாமல் நடக்க அவதார புருஷனாய்வந்த ஸ்ரீராமபிரான் தந்தை வாக்கை பரிபாலிக்க வனத்திற்சென்று எவ்வளவோ கஷ்டப்பட்டு வந்தான் இப்பவுமவர் இப்பூமியில் எங்கும் உலாவிக்கொண்டிருக்கி

ரூர் அதுபோல நானும் தங்கள் சித்தப்படி நடப்பேனுகில் இவ்வுலகு அழியும்வரை அழியா புகழடைவேன். நான் நடக்க வேண்டியதை அருள்புரிவீராக.

தொண்டர் வசனம்:—உன் குருவாகிய வாத்தியாயரிடம் அடியாரமுதுண்ண காத்திருக்கிறாரென்றும், என் தந்தையழைக்கிறாரென்றும் உததிரவு வாங்கி வருவாய் பாலா.

சீராளன் வசனம்:—அப்படியே மகாபாக்கியம் தந்தையே.

## சீராளன் வாத்தியாயரிடம் மடம்செல்ல விடைபெறல்.

### விருத்தம்.

சித்திதரும் புத்திதரும் செந்திருவைச் சேர்வைக்கும்
பத்திதரும் மெய்ஞான பாலிக்கவந்த உத்தமரே
நத்தியென் தந்தைவந்து நாதரீ யழைக்கிறார்நான்
மத்தியான மாகாமல்போக மலரடி வணங்கினேனே.

அம்பலத்தை நாடிவந்தேனே அருள்நடேசா என்ற வர்ணமெட்டு.

### பல்லவி.

அடியாரைத்தேடிப்போரேனே அருட்குருவே
விடையது புரியவேணுமே

### அனுபல்லவி.

படியிலெணிக்கார்க்கும் பட்சமுள்ள தந்தைவந்து சடை
முடியோனழைத்தாரென்று முகம்சோர்ந்துநிற்கயின்று ()

### சரணங்கள்.

1 பாசபந்தமதையறுக்கும் பரமனடிவந்தா ரங்கே
நேசமாயவரிடம்சேர்க்க நிற்கிறாரென் தந்தையிங்கே ()
2 கைலைதனைப்பிரிந்து கல்லாலின்கீழிருந்து
ஐவிரலால்சின்காட்டிய அரனடியார்சொல்லநிந்து(அ)
3 காலிங்ககிர்த்தனம்செய்த கர்த்தனடிமனமகிழ
பாலன்ராம சாமிசொன்ன பதத்தைபுலவோர்புகழ(அடி)

வசனம்;—சுவாமி குருவே நமஸ்காரம். எந்தன் தந்தை கோரிய விரதம் இன்று தேவகற்பனையால் தடைபடும்காலம் வந்தடியார் உண்ண என்னை அழைக்கிறாராம். என் தந்தைமுகம் சோர்ந்துவந்து நிற்கிறார். விடை தருவீர் நான் போகிறேன்.

## வாத்தியார் மனம் நொந்து சீராளனுக்கு விடை யீதல்.

அடியாரைத் தேடிப்போரேன் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

வாடிமனம் நோகுதே பாலா மாமறை சீலா.

சரணங்கள்.

1. நாடி அடியாருன்னை — கூடியுன் னைக்கழைக்க
பாடிய யுனையனுப்ப பதருதெந்தன்மனமிளைக்க [வாடி]
2. கூடியவயது மூன்றில் கோரிபள்ளி கற்கவந்தாய்
நாடிய வயதந்தில் நான்களைக்கும் சொல்லைதந்தாய் [வா]
3. போய்வருவே னென்னுஞ்சொல்லை புண்ணியா இன்றுதள்ளி
நாயகா போறேனென்று நவின்றதாலென்மனதுதுள்ளி []
4. சந்தோஷமாக எந்தன் சற்குணா போய்வருக
வந்தடியார் மனமகிழ சுந்தரமே நீபுகழ்பெருக [வாடி]

வசனம்:— அப்பா மாணு நான் போய்வருகிறேன்; என்ற சொல்லைத் தள்ளி அடியாருன்னைப் போறேன் என்ற வார்த்தையைக்கேட்டு என் மனம் துடிக்குது ஆனாலும் குற்றமில்லை எல்லாம் செய்யவல்லவர் உம் மனம்போல் கூட்டிவைப்பார் சந்தோஷமாய் போய்வருக.

சீராளன் வசனம்: தந்தையே செல்வோம் வருவீர்.

காவடிச்சிந்து சந்தம்.

தொண்டர்:

வர்ணகிளிமொழிபாலா தவசீலா சீராளா நீ
வந்தேறென்தோள் மேலா
வந்தடியார் சொன்னபடி சிந்தைமகிழ எண்ணபடி
வாதில்லாமல் நான் நடப்பேன் வெய்யல்
சூடில்லாமலே எடுப்பேன்.

சீராளன்

என்னையழைக்கவந்த தந்தை உன்சிந்தை வெகுவிந்தை நீர்
ஏனிந்தப்படிசொன்னீர் நிந்தை
எவரு மேற்காமொழி தவரா கார்க்கும்பழி
எடுத்துவந்தேனே சோகம் உம்முடன்
அடுத்துவருவேனே வேகம்.

தொண்டர்.

வைரவர் சொன்ன நேரமாகி அதிகமாகி களைப்பாகி அவர்
வைரங்கொள்ளுவாரர் கோபமாகி
வாக்குப்படி அமுதுண்ண மாட்டார் நோக்கிபங்கிருக்க கூட்டார்
மாரசயென் சொல் தடுக்காதே பெற்றவர்
வார்த்தைக்கெதிர் தொடுக்காதே

சீராளன்.

தந்தையே ஈதென்ன வாதம் வீண்விரோதம் சொல்கிறேதம் நான்
சாருவேன் தோள்மேலுன் போதம் [தம் நான்
சற்றேதா மதமில்லாமலே குற்றமெவரும் சொல்லாமலே
சாமியே நீர்செல்ல வேணும் ராம
சாமிபேர் சொல்லவே காணும்

பொது வசனம்.

இவ்விதமாக சிருத்தொண்டர் குழந்தையை யன்பாக தோள்மேலேற்றி மடத்திற்கு வரும் கணவரை நங்கை எதிர்சென்று குழந்தையை வாங்கி மடியில்வைத்து உச்சிமுகந்து முத்தமிட்டு துக்கிக்கிற விதம்காண்க

விருத்தம்.

பள்ளியிலோதி யிருந்த பாலனைத் தோள்மேலேற்றி
தெள்ளிய சிவனடியார்க்கு செய்யமு தண்ணுவிக்க
கள்ளமின்றி கொண்டுவந்த கணவரின் பாதத்தைப்போற்றி
கொள்ளவேபாலனைவாங்கி கோதை கதருவாள்பதருவாளே

இந்துஸ்தானி காப்பி, தாளம்-ரூபகம்.

புத்திரசிகாமணியே என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1. புத்திரனே கண்மணியே அப்பா கைத்துணையா யெனக்குவந்த
மித்திரனே தவமணியே இப்போ பெத்தவயி றெரியுதடா
2. அப்பனே நீ யெனக்குகண்ணே அருமதலையான உன்னை
எப்பிறப்பிலேபார்ப்பேனுன் எப்போதுனைப்பெருவேன்
3. துன்னிக்கை கெட்டின தெனக் குண்ண வாய்கெட்டாமல்போக
என்னபாவஞ்செய்தேனோ யிந்த மண்ணில் வந்து பெண்பிறந்தேன்
4. கண்ணேயமுதே கருணை பாற் கடலே மனக்காவலனே
எண்ணிக்கதி சேர்க்கவந்த பொன் தன்மணியே செழும்பாகே

5. மார்போடணைத்துன்னை நான் மருவி விளையாடிவந்தேன் இப்போ
பேர்சொல்லியழைக்க சீராளா பிள்ளையில்லா பாவியானேன்
6. மையலரு மிவ்வுலகவாழ்வை நீ பொய்யெனவே தள்ளிப்போக
வையகத்தில் வந்தெங்கள் மன ஐயம் தீர்க்கவுவந்தவனே
7. பையரவணிந்தோனரு ளடிபாதத்திலே சேர்க்கவுந்தன்
ஐயர் மனமுவந்து வந்தென் கைதனில் கொடுத்தாரிப்போ
8. மன்னன் தசரதன் பிள்ளைகாட்டில் செல்லக்கேட்டுயிர் துறந்தார்
உன்னையென் கையால் கொன் றென் னுயிர்தரிக்கு மிரிசியானேன்
9. முத்துக்கண்ணு வாத்தியாருனை இத்திசையோர் கொண்டாடிவர
நந்தி ராமசாமியிட மிதை நாடகமாய் பாடக்கேட்டார்
10. புத்தியிலுனை மறவாவந்த புண்ணியர் வந்தென்னைக்கேட்டால்
பத்தியாய் பள்ளிக்கனும்ப இந்தபாதகி என் சொல்வேனப்பா.

## சீராளன் நங்கையை விபரம் கேட்டல்.

### விருத்தம்.

அம்மணியென்ன ஆச்சரிப வார்த்தைச்சொன்னீர்
செம்மையா யெனக்கதை செப்பிட வேண்டுமம்மா
உம்மையே விட்டொனும் உகந்துமே போவேனோ நான்
தம்மனக் கவலைநீக்கி தான்சொல்ல வேணும் தாயே.

வசனம்:—அம்மணியென்ன ஆச்சரியம். நானுங்களைவிட்டு எங்கு செல்வேன். நீங்கள் துக்கிக்கிற விபரத்தை துயர்நீக்கி சொல்வாய்தாயே.

### நங்கைசொல் அகவல்.

என்னுருயிரே எனது கண்மணியே
அன்னாளிலுன் தந்தை யானையேறறத்தில்சிறந்து
நன்னகர்காஞ்சி நாட்டதையாண்ட
மன்னாநரசிம்ம மகராஜனிடத்தில்
உன்னதசேனுபதியாய் உகந்திடும்நாளில்
புண்ணியசிவதொண்டு புரிந்துமேவந்தார் 1
குந்தளநாட்டின் கோமான்புலிகேசி
வந்தகன்னேசிநாட்டின் மன்னனைமுறியடித்து
சிந்தையில்தனக்கெதிரி சீமையிலில்லையென்று
விந்தையாம்கெர்வம் மேன்மைபடைத்ததாலுன்
தந்தையாமறிந்து தானேபோருக்கேகி
அந்தரத்தோர்கொண்டாட அமரில்ஜெயித்தார் 2

பல்லவர்கள் குலம் பாரில்செழித்தோங்க
எல்லையிலாநிதிக்குவியல் எடுத்துவந்ததை
சொல்லால்மன்னன் துரையேயுன்தந்தையை
வள்ளலார்கிருபையால் வாரிவந்தபொருளை
நல்லதோரறம்செய்ய நாடியேகொள்ளென
அல்லெனமறுத்தும் அடைந்திங்குவந்தோம் 3
அப்பனேமகனே அருந்தவக்கனியே
செப்பியசிவதொண்டு செய்திடும்நாளில்
ஒப்பவேமகன் உதவவேண்டுமென
கப்பியபாசத்தால் கணபதீசனைக்கேட்க
தப்பிலாதசரீரி தந்தவாக்கின்படி
இப்படிமடம்கட்டி இயற்றினோமன்னதானம் 4
பரசிவஅடியார் பந்திபந்தியாய்தினம்
அரகராவென்று ஆயிரம்பேர்வருவார்
குரவனருள்கொண்ட கூட்டமின்றைக்கு
ஒருவருமவாராததால் உள்ளம்கறைந்தோம்
பெருமனம்கொண்டு பெரியவரொருவர்வா
சிரமதுதாழ்ந்தமுது செய்யவேண்டினோம் 5
அயனத்திற்கொருமுறை அமுதுபுசிப்பாராம் அவர்
நயமானபிள்ளைகறி நாடியேயுண்பாராம்
பயமின்றியுன்தந்தை படைக்கிறேனென்றாராம்
இயல்பதாய்பிள்ளை எங்கும்கிடைக்கிலயாம்
உயர்கவிகற்று முன்னை என்கைகொடுத்தாரந்த
செயலதைச்சொல்ல தேங்குதேஎன்மனம் 6

சீராளன் வசனம்:—கவலைகொள்ளாதேயம்மா. உரைப்பாயம்மணி.

அடியவர்க்கின்று அமுதுசெய்விக்க
மடியினிலிருக்கும் மதலையாமுன்னை நான்
பிடித்திடயுன்தந்தை பிள்ளையாமுனையறுத்து
படைத்திடசமைக்க பதருதேயென்மனம் 7
மலைமகள்பாகன் மனமதுயிதுவோ
நிலையினிலென்குலை நில்லாதுதுடிக்குதே
அலைவாய்துரும்பென அலையுதேயென்மனம்
கொலையதுபுரிய கொடும்பாவியானேனே 8

கண்ணினில்காணவுனை கர்த்தருமெனக்கீந்து
மண்ணிலோரேச மகனைபடைப்பேனோ
பன்னகபூஷணான் பாவனையறியேன்
கண்மணியேயென்மனம் கலங்குதேயென்செய்வேன்

## சீராளன் தாயாருக்கு திடம் கூறுதல்.

விருத்தம்.

அம்மணி சொல்லக்கேளாய் அழுவதை நிருத்திவிடும்
நம்மை காத்திடுமந்த நாதனே வந்தாரென்று
செம்மையாயெந்தன் திருஉளத்தில் தோன்றுதிப்போ
இம்மையில் நாமீடேறக்கருதி எந்தை ஈவாயம்மா.

இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

ஏனழுகிறாயம்மா நீர் இனம்தெரியாமல் சும்மா

அனுபல்லவி.

அன்பாய் பெரியவர் அடியேனை புசிப்பாரென்றாய்
முன்னம்நாம் செய்ததவம் முத்திவிளைந்ததுநன்றாய் (ஏன)

சரணங்கள்.

1. மண்ணிலடியார்கள் மறக்கறி இன்பதுண்டு
புண்புலால்புசிக்க பெருவாரோமனம்கொண்டு
உண்மையாயென் னானை உற்றவர்புசிக்கப்பண்டு
நன்மையிதென்றறியாமல் நலிவதேனினம்கண்டு (ஏன)

2. வந்தவைரவர் மனதில் பொருமைவென்று
சொந்தஉன்பிள்ளையை துணிவாய் கையாலென்று
சிந்தைதளராமல் சொன்னவின்னதென்று
எந்தந்தையறியாமல் சவாரோ எனைக்கொன்று (ஏன)

3. மனமதில் கவலைவிடு மாதாவேசொல்லக்கேளாய்
சினமதடியாருக்கு சேராமலமுதமேலாய்
க்ஷணமும் தவராமல் சடுதியில்பண்ணுவாய்
குணமதறிந்துநம்மை கொள்வோனென்றெண்ணுவாய் (ஏ)

4. அட்டிநீ செய்யாதே அரனடியென்றெண்ணாதே
சுட்டிவைரவர் சொன்ன சொல்லுக்கெதிர்பண்ணாதே
கட்டினமார்க்கண்டனுக்கன்று கடையூரினுதித்தோனே
கெட்டியாய்நம்மைக்கொள்ள பட்டினியாய்குதித்தானே (ஏ)

வசனம்:— அம்மாதாயே நீரினம்தெரியாம லேனமுழுகுரால் நாம் முன்னம் செய்தவினை முத்தி பழுத்ததாய் தோற்றுகிறது அதனாலடியார் நம்மை புசிக்க கேட்கிறார், அடியார் அன்னம், காய், கனி, கிழங்கு புசிப்பார்கள் புலால் புசிப்பார்களோ? அப்படி புசிப்பதிலும் நரமாமிச மிச்சிப்பார்களோ? அதிலும் சிசுவை கொலைசெய்யத்துணிவார்களோ? அதுவும் உங்கள் பிள்ளையென்று சொல்லாமல் உன் பிள்ளையை சுட்டி சொல்வாரோ என் தந்தை யறியாமல் எனை ஈவாரோ, உமக்குள்ளகவலை யென் தந்தைக்கில்லையோ, கவலையை விட்டிடு எப்போதும் வந்த ஈசனடியென்றெண்ணாதே அன்று மார்க்கண்டனை காத்த மகேஸ்வரனென்றெண்ணுவாய் அவர் தம்முன் நம்மை யடக்கச்செய்ய வந்திருக்கிறார் அவருக்கு கோபமில்லாமல் எனை ஈய்ந்து அருள்பெருவாயம்மணி தாயே.

## நங்கைக்கும் சீராளனுக்கும் சம்வாதம்.

### விருத்தம்

அப்பனே மகனேஎந்தன் அருந்தவச் செல்வமேநீ
செப்பிய மதலைவார்த்தை திக்கிக்க கேட்டேன்யானே
ஒப்பியே யிருக்கவெந்தன் உள்ளமும் நடுங்கிமாயை
கப்பிய பாசம்வந்தென் கண்ணையு மறைக்குதிப்போ.

### பூமாந்தும் வண்டேனநின் என்ற வர்ணமெட்டு.

நங்: கண்ணேஉன் சொல்லைக்கேட்க கலங்குது எந்தன்மனம் அப்பா
காசினியி லுன்னைவிட்டு காதகினா னிருக்கலாமோ.

சீரா: என்னைப்பெரிதா நினைத்து எண்ணிஎண்ணி புலம்புகிறீர் அம்மா
மண்ணிலெனைப் பெற்ற மாதா வெல்லாமென்னசெய்தார்.

நங்: உன்னைநான் பெற்றதல்லால் உலகில்யார் பெற்றார்கள் நீ
சொன்னவார்த்தை தன்னைக்கேட்க சோருதென்னுடலும் பாலா

சீரா: முன்னேஎத்தனை ஜென்மம் முறைமுறையாய் பிறந்தேனம்மா அப்
அன்னையாய் என்னைப்பெற்றோர் அல்லாதாரிவ்வுலகிலுண்டோ.[போ

நங்: அப்படிநீ சொன்னாலும் சீராளா அந்தமெந்தன் குரியதல்லால் முன்
இப்படியோருருவைநீ எடுத்ததுண்டோ சொல்மகனே.

சீரா: செப்பியயிந்த மேனியது சீராளனாய் வந்தபடி முன்னவர்கள்
ஒப்பியவுரு வெடுத்துவந்து உலகைவிட்டுபோனேனம்மா.

நங்: மைப்படியும் மங்கையெல்லாம் மகனைப்பெற்று மகிழ்வார்கள் நான்
எப்படியுன்னைவிட்டு இருந்திடுவேனிப் புவிதனிலே.

சீரா: கைப்பிடிநாதனும் பெற்ற காதல் மதலை பொருளெல்லாம்
முப்பிறவி வினை தீர்ந்தால் ஒருமுகூர்த்தநாழி நில்லாதம்மா.

நங்: அப்பாமகனே யென்றன் அருமைமணியே தவக்கனியே
இப்போநீ சொல்லும்வார்த்தை ஏற்குமோ இவ்வுலகத்திற்கே.

சீரா: தப்பிதமாய் நினைக்கும்பேர்கள் சாஸ்திரமறியாப் பேய்கள் நீ
ஒப்பவுனக்கேன்வாதம் நம் உண்மைராமசாமி சொல்ல.

நங்: நம்மைத் துதிக்கவந்த ராமசாமிசொல் உண்மையானால்
வம்பாக ஊணிலுயிர் வருவதற்கு ஞாயமென்ன.

சீரா: செம்மைபுரி வினைகள்வந்து சேருமூணி லுயிராய்நின்று
தம்மைதாமறியாதாரை தாரணியில் மயக்கம்செய்யும்.

நங்: மயக்கம்நீக்கி மண்ணில் வாழ்ந்தவரிவ் வுலகிலுண்டோ
வியக்கநீ பேசவது மேவுமோ இந்த மண்பூமிக்கே.

சீரா: அயமதை காந்தமது அருகிழுப்பதை யொப்பாதார்
மயக்கமதில் கட்டுண்டு மறலிகை பட்டுழல்வார்.

நங்: எத்தனைவிதமாநீ யெனக்கெடுத்துரைத்தாலும் கண்ணே
புத்திரனே உன்னைவிட பிரியமனம் கூடவில்லை.

சீரா: சத்துசித்தானந்த சதாசிவ நிலையறிந்தால் நீர்
புத்தியிலடியார்க்கென்னை புசிக்கமனம் கொள்வீரம்மா.

சீராளன் வசனம்:—தாயே நான் எத்தனைவிதம் எடுத்துச் சொன்னாலும் உன் மனமறியவில்லையே. பசி, தாகம், நித்திரை மைதுனம் என்ற நான்கறிவைப்படைத்த சகல ஜீவராசிகளுக்கும் பகுத்தறிவைப்படைத்த மானிடப்பிறவிக்குள்ள மகாத்மியத்தை அறியவில்லையே தாயே. இத்தேகம் என்றுமழியக் கூடியதே. அப்போதிந்த தேகத்தை மண் எனக்கென்றும், தீ எனக்கென்றும், நரி, கழுகு, நாய், காக்கை எனக்கென்றும், புசிக்க காத்திருக்கும் அதுகளைவிட அடியராய் வந்தவர் புசிக்க உனக்கு திருப்தியடையக்கூடவில்லையா? உலகத்தில் அடியார், அந்தணர் யாசகருக்கன்னமளித்தால் அந்த உணவு அவர்கள் குட்சியிலடைந்த மாத்திரத்தில் அளித்தவர்களுக்கு புண்ணியம் கிட்டி பரமபதம் கிடைக்குமென்று நினைத்தமுதளிக்கிறார்களே. அப்படி நினைத்துதானே தாங்களும் மடம்கட்டி அன்னமளித்து வந்தீர்கள். என்னை கணபதீசுரன் கோவிலுக்கு அழைத்துப் போனபோது சுவாமி என்னையும் என்பெற்றோர்களையும் உன் பதம் சேர்த்துக்கொள்ள நல்ல புண்ணியத்தைச்செய்ய அறிவு கொடுவென்று கும்பிடச்சொன்னீர்களே. அது உலகம் மெய்க்கவோ, நேரே அடியவர் ரூபமாக சாக்ஷாத் கடவுள்வந்து தன் பதம்சேர்க்க உன்னைக்கேட்டால் நீ கன்னல்பட காரணமேன்.

ஆனால் இன்னம் கொஞ்சம்நாள் இந்தபூமியில் என்னைவைத்து
கொஞ்சிவிளையாடி உலகமெய்க்க தானம்செய்ய நினைக்கிறீரோ.
அருமை பிள்ளையாய் நினைக்குமென்னை உனக்கு கொடுத்தவரார்.
இப்போது கேட்பவரார். பழுத்தபழம் கொம்பில் தரிக்குமோ.
அடியாராக வந்தென்னை கேட்டபோது கொடாமல் அவர் தானே
மறைத்துக்கொண்டால் அப்போ என்ன செய்வீர்கள். விரத
மும்கெட்டு சுகமும்கெட்டு இன்னும் பிறவி பிறக்க நேரிடுமே.
அனுபவித்த சுகம் துக்கம் உனக்கு போதாதோ. இத்தேக
மழிவதற்குமுன் பரமபதமடைய வழிதேட அன்னதானம்செய்த
உங்கள் பக்திக்குமெச்சி பரமன் உன் புத்திரனை என்னைக்கேட்
டாலுன் மனதில் தடை சங்கடம் நினைக்கலாகுமோ அந்த அடி
யார் சொன்ன வார்த்தையைக் கேட்டமாத்திரத்திலேயே உலக
பற்றும் உங்கள்பற்றும் நானற்றேன். அவரைக்கண்டு தெரி
சித்த உங்களுக்கின்னம் பாசமகலவில்லையா? உன்னுடைய பாச
மடியார் புசிக்கும் மாமிசத்தில் கலந்தால் அதை நஞ்சாய் எண்
ணிப்புசியாரே. நீ பேரறிவடையக்கூடாத பெண்ஜன்மமாதலால்
பாசம் பற்றுதோ. விடுவிடு காலதாமதம் செய்யாமல் கர்த்தி
னுன்னை களிப்புடனறுத்து பாகம் செய்தமுதளிப்பாய். என்னை
யுன்னுமடியார் உகந்தமுது செய்விக்குமுன்னையும் கொள்வார்.
காலதாமதம் செய்யாதே. காட்டிபெரும் காலமிதுவே. கரிச
மைத்து கர்த்தன் புசிக்கவொண்ணா காதலை கலந்துவிடாதே.
முன்னால் ராஜாங்கம்செய்த தர்மாங்கதனை ஓர் தாசிக்காக தனை
யன் விரதத்தை காக்க தலையறுத்து கொடுத்த கதையைக்கேட்
டதில்லையா. ஐந்துவயதுடைய பாலனை அடியார்க்கமுது செய்
விக்க மாறுபடில் எப்படி பதமும் புகழும் கிடைக்கும். அடியா
ருரைத்த நாழிகைதவறாமல் சீக்கிரம் அடியேனை யறுத்து
சமைத்து அமுது செய்விப்பாயம்மணி.

நங்கை வசனம்:— கண்ணே என்செய்வேன் அப்படியே
செய்ய ஒப்பினேன் பாலா.

## நங்கை வந்த அடியார்க் கமுதுசெய்விக்க சீராளனை ஸ்நானம் செய்வித்தல்.

### விருத்தம்.

அப்பனே யுந்தனருஞ் சொல்லை கேட்டியானுஞ்
ஒப்பியே யெந்தனுள்ளம் உருதியும் கொண்டுமுன்னை
மெப்பியே யமுதுசெய்ய மேன்மையாய் நீராட்டி வந்த
அப்பிலா தடியாருண்ண தான்செய்ய துணிந்திட்டேனே

காசி நாதா இதுவுன்னருளோ என்ற வர்ணமெட்டு.

1. கணபதீசா இதுவுன் னருளோ
காசினி லடியார் யாசித்தபடி நான்
தோசி யமுதளிக்க பாசமகனருக்க.

2 கூடநீ யிருக்கவேணும் ஈசா.
குவலயத்தோ ரென்னை அவலமாய்ப்பேசாமல்
பவனே அருகிருந்து கவலைவாராமல்செய்ய.

3. பார்த்துநீ கார்க்கவேணும் தேவா
பாதச்சிலம்புகளும் காதுகடுக்கன்களும்
நிதன்றியாவையும் சூதின்றிகழட்டுவேன்.

4. தோகை சந்தனத்தாளே யம்மா
தொல்லுலகிலுள்ள நல்லவ ரறியாமல்
எள்ளெண்ணெய்கூட்டி கள்ளமில்லாமலாட்ட.

5. எடுத்து வருவா யம்மா தோழி
ஏந்திழைமாதே சாந்தமாய்வென்னீர்
கூந்தல்தலைமீது பாந்தமாய்விடுவாய்.

6. அபிஷேகம் செய்துவைப்பேன் நானே
அஞ்செண்ணையோடு செஞ்சாந்துபூசித்திரு
மஞ்சனமாட்டி கொஞ்சிமுத்தமிடாமல்.

7. வஞ்சியே உலர்ந்தாடை தருவாய்
வருத்தமில்லாமல் விருத்தர்புசிக்குமேனி
உருத்தவில்லாமல் பொருத்தமாய்துடைப்பேன்.

8. இந்தாரும் எந்தன்பிராண நாதா உன்
இனியமகனைநீரும் துணிவாகவேபாரும்
முனிவர்க்குமுதுசெய்ய கனிந்தறுத்துத்தாரும்.

9. கேட்டே னுமைப்பணிந்தே நானும்
கொற்றவாவுமக்கு பத்தியாய்ப்பணிந்தது
சத்தியமாகிடில் நத்திமகனோடென்னை.

10 கூட்டியே போகவேணும் சாமி
குளத்தில் முதலைபண்டு வளர்த்தமகனையுண்டு
ஜலத்தையழைத்துவிண்டு நிலத்தில்மாதுக்கிந்த [அவகாசி]

(கணபதீசா இதுவுன் னருளோ)

## சிறுத்தொண்டர் மகனைவாங்கி பிரலாபித்தல்.

### பொது விருத்தம்.

சிந்தையில் ஐயம்நீங்க சிறுவனின் வார்த்தைக்கேட்டு
சந்ததமும் கணவர்பாதம் தான்மறவா நங்கைமாது
மைந்தனைசீராட்டி தன் மன்னன்கைகொடுத்தபோது [னே
தந்தையு மகனைவாங்கி சாற்றுவான் மையயகலபோற்றவா.

தாயைவிட்டு வந்துகாட்டில் தனியாய் மாண்டாயே என்ற மெட்டு.

### கண்ணிகள்.

1. எந்தன் தவம்பலிக்கவந்த இன்பனேவாராய் அப்பா கண்பனேபாராய்
வந்தஅடியாருண்ணப்பெற்ற மாதவப்பாலா ஈசன் சோதனைகேளாய்
2. சொந்தமகனை தந்தையறுக்க துணிவேனோனாலும் இந்தபணியில்தன்
[தோனும்
முந்தநான்செய்தவினை முடிக்கதாய்காணும் இன்றுகடந்தேனனும்
3 புத்தெனும்நரகம்தாண்ட பெற்றேமேயுன்னை அறம்கற்றேமேமுன்னே
அத்தனடியாருண்ணப்பெற்ற அன்பனேஎன்னை பாவிஎன்பனோகண்ணே
4 இத்தரையிலுன்னைவிட்டு இருப்பேனோஇத்தேகம் கூடவருவேனேவே
பத்திநெறிதவராயீசன் பதமானபோகம் சேரஇதமானயோகம் [கம்
5 இத்திசையோர்புகழடியார்க்கேவேனோமகனே பிறகுமாய்வேனோசுதனே
நித்தியமாய்நீயிருக்க நேர்வாரோசிவனே உன்னைகார்வாரோபவனே
6 எத்திசையும்நம்மைபுகழ எடுத்தாரேஉடலை துயர்விடுத்தாரேபவக்கடலை
சத்தியமாய்ராமசாமி சாற்றுமித்தமிழை எங்கும்போற்றும்நம்புகழை

தொண்டர் வசனம்:—பெண்ணே என்னசெய்ய கதிரோன உதயமாகி நாழி பதினைந்தாகப்போகிறது.

நங்கை வசனம்:—விசாரமேன்சுவாமி வந்த அடியார் உண்ணப்பெறுவது நமது பாக்கியமாகும் மண் பொருள் மக்கள் சம்பாதிப்பது எதற்காக சமையம்வந்தபோது கொண்டகாரியம் முடித்துக்கொள்ளத்தானே சீக்கிரம் சேதனம் செய்துகொடுப்பீர் சுவாமி.

தொண்டர் வசனம்:— சந்தோஷம் மடிமீது குழந்தையை இறுத்திக்கொள்வாய் ஒருவருமறியாமலிருக்கவேண்டும்.

நங்கை வசனம்:— அப்படியே மடிமீது குழந்தையை யிறுத்திக்கொண்டேன் சேதனஞ்செய்வீர் சுவாமி.

## சீராளன் தலையை சிருதொண்டர் நங்கைமீதிருத்தி கொய்தல்.

### பெரியபுராணச் செய்யுள்.

இனியமகனை தாயார் இரண்டுகாலும் மடியிலிடுக்கி
கனிவாய் மைந்தன் கையிரண்டும் கையால்பிடிக்க காதலனும்
நனிநீடு வகையுரு இன்றென்று மகிழ்ந்து நகைசெய்ய
தனிமாமகனை தந்தையார் கருவிகொண்டு தலையறிவார்.

### அகவல்

1. ஆதிவிநாயகனே ஆறுமுகத்தேசிகனே
பாதியுடலைப்பெற்ற பார்வதிதாயாரே
சோதிதிருவுருவே ஜொலித்திடும்மெய்ப்பொருளே
வேதகுலமுதித்து விப்பிரனாய்யானும்வந்து
பேதமில்லாதடியார்க்கு பெருத்தன்னதானம்செய்தேன்

2. நாதனினடியார் நற்பசிதீரவவர்
ஓதியபிள்ளைக்கரி உதலவேவேண்டுமென
வேதனையின்றியானும் விரும்பியமனையாளோடு
சாதனம்கார்க்கயிப்போ தனையனையருப்பேன்

3. நீதியாம்காஞ்சி நிருபன்நரசிம்மவர்மன்
வாதனையின்றிவாழ வாதாபிகோனைக்கொன்றேன்
நீதின்றிசேனாதிபதி செய்தொழில்புரிந்தேனானும்
நாதனின் திருவருளால் நானன்னதானம்செய்தேன்

4. குந்தளநாட்டானை கொன்றுமகிழ்ந்தேனப்போ
எந்தன்மகனை இப்போ இனிதாகவேயருப்பேன்
சொந்தமெனக்கு சோதியேயல்லால்வேறு
இந்தஉலகில்நான் எதையும்விரும்பேனே

5. கந்தனைஈன்ற கைலாசபதியே
விந்தையாயென்னை வேடிக்கைசெய்யாதே
சந்ததமுன்பதம் தனையனகலாதிருக்க
எந்தையேயருள்புரிய ஈசாவணங்கினேன்

6. சுந்தரமகன்கழுத்தை துணியதேவா வாவா
நிந்தையாயெனைப்பேச நிலத்தினில்வைக்காதே
அந்தரத்தேயுள்ள அமரரேவா வாவா

மந்திரதாளா மாமறைதேவா வாவா
முந்திமகனை தந்த முக்கண்ணா வாவா
இந்தாசிராளனை ஏற்பாய் அறுத்தேன் காற்பாயே.

## சிறுத்தொண்டர் நங்கைக்கு சீராளன் தலையை மறைக்கச்சொல்லுதல்.

### விருத்தம்.

என்னருமாதே இன்பமாம் மகனை இனியமுதாக்கி
தன்னருமடியா ருண்ண சாதிக்க தலையறிந்தோம்
இன்னிலம் தனிலிருப்பவர் எவருமறியாமல் செய்தோம்
கண்மணிசிரசை கறிக்காகாததால் கணத்தினில்மறைப்பாயே.

வசனம்:-எனது இன்பமுள்ள மாதே நம் அறம் காக்கவந்த அடியார் கோரியபடி அமுதாக்க ஒருவருமறியாமல் பாலன் தலையறிந்தோம் சீக்கிரம் உணவு சித்தப்செய்வாயாக. பாலன் சிரசு நன்மையான கறியாகாததால் சீக்கிரம் மறைக்க செய்வாய்மாதே

## நங்கை சந்தனத்தாளிடம் தலையை மறைக்கசொல்லுதல்.

### விருத்தம்.

சொன்னசொல் தட்டா தோகை, சந்தனத்தாளே கேளாய்
கண்மணி சிரசையெவர்க்கும் காட்டாமல் நீயேயம்மா
மண்ணதைத் தோண்டியுள்ளே மறைக்கவே செய்வாய்தாயே
உன்னதவடியார்க் கமுது உகந்துமே செய்யப்போறேன்.

வசனம்:-அம்மா சந்தனத்தாளே என்மகன் சிரசை எவருமறியாமல் மண்ணைத்தோண்டி புதைத்துவிடு நான் அடியார் புசிக்க பாலன் கறிசமைக்கப் போகிறேன்.

குறிப்பு:— இவ்விடத்தில் சந்தனத்தாளிடம் நங்கை சிரசை கொடுத்துவிட்டு சமையல்செய்ய புகுந்தபோது சந்தனத்தாள் சிரசைவாங்கி சென்றவள் நங்கைக்கு புலப்படாமல் தனியே தலைக்கறிச் செய்துகொண்டிருக்கிராளென்றும், தொண்டர் வாசிஷ்ட முதலிய நூல்களை ஆராய்ச்சி செய்துக்கொண்டிருக்கிராரென்றும், நங்கை தனியே சமையல் செய்துக்கொண்டு ஒருவரையொருவர் பார்க்காமல் தனித்தனியே சிவனைத்துதித்துக்கொண்டிருக்கிறார்களென்றறிக.

## நங்கை பாலன் கறிசமைத்தல்.

தரு

1. பொன்னார்மேனியனே புலித் தோலையரைக்கிசைந்து
மின்னார்செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தோனே
சொன்ன அடியாரே அவர் எண்ணம்குறையாமலே என்
கண்ணேசீராளனே நான் கறியாய்சமைப்பேனே.

2. பாலன் வயிரதனை இப்போ பாங்காய்கிழித்தேனே
தோலதனுள்ளிருக்கும் குடலை துணிவாய்யெடுப்பேனே
வாலவயதோனே மார்பில் மருவும்ஈரலானே அதை
தாழஎடுத்துவைத்தே அதை தனிக்கறியாசெய்வேனே.

3. நெஞ்சுஎலும்பதையே தனியா நீக்கிஅரிந்தேனே
பஞ்சைமனம்துணிந்து நானும் பதாரமல்நறுக்குவேனே
கொஞ்சும்சதங்கணியும் கணுக் காலையும்முறித்தேனே.
அஞ்சாம விருதொடையு மறிவா மணையிலறிவேனே.

4. துண்டுதுண்டாகவே கறிகளை சோதித்தறுத்தேனே
கண்ட ஈறல்குண்டி காய்களை கறியாய்வருத்தேனே
கொண்டபாண்டமதில் அடுப்பேற்றி கொதிக்கசெய்தேனே
அண்டும்மசாலைக்கூட்டி ஆவின் நெய்யால்தாளித்தேனே.

5. மலைமகள்பார்வதியே உன்னைப்போல் மண்ணில்நான்பெண்
[ணல்லவோ
நிலையாம்விரதம்கொள்ள அடியார் நியமப்படி செய்தேன்
அலைவாய்துரும்பெனவே எங்களை அலையாமல்புவிதனிலே
துலையாப்பிறவிநீக்கி மகனோடு சேர்க்கத்துதித்தேனே.

## நங்கை தொண்டரிடம் வைரவரை உண்ண அழைக்கக் கோறல்.

விருத்தம்.

அய்யரேசுவாமி யெந்தனன்புள்ள பிராணநாதா
அய்யரும்புசிக்க வருங்கறி சித்தம்செய்தேன்
வையகம்புகழும்வேத வைரவமூர்த்தி யுண்ண
ஐயமேயின்றிநீரும் அழைத்துமே வருவீர் சுவாமி.

இராகம்-ஆனந்தபைரவி தாளம்-ரூபகம்.

பல்லவி.

அடியார்புசிக்கமுது ஆயத்தமாயிற்று அழைத்துவருவீர் சுவாமி

அனுபல்லவி.

படியினில்நம்மைக்காக்கும் பாலனையறுத்தமுது
பாங்காய்சமைத்துவைத்தேன் பரிந்துசெல்லுவீர்நகர்ந்து()

சரணங்கள்.

1 கொண்டவிரதமது எண்டிசைபோற்றிட
கண்டஅடியார்வர விண்ணோரதையேற்றிட
வண்டகசாலையில் உண்டிகள்செய்திட
மண்டலம்புகழடியார் பண்டுபசிதீர்ந்திட (அடியார்)

2 ஆதிருக்மாங்கதன்சிபி அரசர்கள்செய்தபடி
ருதின்றிவரவர் சொன்னநியமப்படி
வாதின்றிமகன்கறி வருத்தேன் குழம்புங்கூடி
பாதிமதிசூடிய பரமனருளைக்கொண்டாடி ()

3 இன்னம்காமதமாமோ இறைவனடி கோபிப்பாரே
தன்னயமகன்கறி நாடிபுசிக்கப்பார்ப்பாரே
உண்மையுடையோரை உருதிவைத்துக்காப்போரே
முன்னமும்சொல்லின் மொழிகொண்டிருப்பாரே()

வசனம்:—சுவாமி! சமையல் சித்தமாயிற்று. அடியாரை புசிக்க அழைத்துவருவீர் சுவாமி.

## அடியாரை அழைத்துவருவேனென்று நங்கைக்கு தொண்டர் கூறல்.

விருத்தம்.

அன்னமே சொல்லக்கேளாய் அரனடி தன்னைத்தேடி
பின்னமில்லாமல் சென்று பெரியோரை யழைத்துவாரேன்
இன்னில மடியார்கள் ஏவர் வந்தாலு மவரை
உன்னத உபசாரஞ்செய்து ஒப்பவே யிருக்கச்செய்வாய்.

மார்கழிமாதம் திருவாய்திருநாள் என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

ஆதிச்சிதம்பரத்தில் ஆடியநடேசன் ஆனந்தசபேசன்
அருட்பெருஞ்ஜோதி யடியாரைக்கண்டு அழைத்துமேவாரேன்

பாதிமதியும் பனியுங்கொன்றை பரிவுடனணிந்த
கோதைமலைமகள் கொற்றவனடியை கூப்பிடபோமேனிந்தா
மாயப்பிரபஞ்ச வாழ்வுபொய்யென்று மகனைகறிசமைத்து
பேயாய்வந்தாட்டும் பாசபந்தமது பிணையைவிடநினைத்து
நோயாம்பிறவி மாயமருந்துபெற நூமேலானையழைத்து
காயம்நெகிழாமுன் கண்களிருளாமுன் கர்த்தனைக்காணபிழைத்து
அறஞ்செயவிரும்பெண் ஆத்திச்சூடியில் ஔவைசொன்னதறிந்து
உறங்கொண்டுநாளும் உற்றமகன்கறி உதவப்போமேறன்தெரிந்து
தாழுடன்குரவனுர் தம்மைச்சார்ந்திட சாற்றும்முறைபுரிந்து
சிரமதுவணங்கி சிலன்ராமசாமி சொல்ல மனம்கரைந்து (ஆதி)

## வைரவனர கண்டேன்ன தோண்டரழைத்தல்.

### விருத்தம்.

ஆதியாம் அரனின் அருள்தன்னை பெற்றகோவே
நீதியே உலகுதங்க நிரூபிக்க வந்ததேவே
சாதியும் மதமும்விட்ட சற்குண பெருவாழ்வே முன்.
ஓதிய சிறுத்தொண்டன் வந்தேன் உன்னவே வாரும்குருவே.

## திருவாத்திமரத்தை வலம்வந்து கால் மண்டியிட்டு கைகூப்பி வணங்கி கோறல்.

### ஸ்ரீராமச்சந்திரனை சீதாமனோகரனை என்ற வர்ணமெட்டு.

திங்களைத்தரித்தசிவன் பொங்கியயருளைபூண்ட மங்களாசுகுணயெனை
பார் பார் பார்
தேவா நீருரைத்த எவல்படிதிருத்தி கூவியழைத்தேன் மெய்யனே
சந்தோஷமாகநீரும் வந்தஎன்குறைதீரும் எந்தனேறுவோரும் நீர் நீர் நீர்
தங்கியமாதமாரு திங்காமலிருந்தசோரு பங்கமில்லாமலுண்ண வா வா வா
தேடியுந்தனை நாடிவந்தேனே வாடியயெனையாளும் தூய்யனே
சித்தமிரங்கியிந்த பத்தனீடேறவந்த உத்தமாயமுதுண்ண வா வா வா
சத்துவகாலம்போயி மத்தியானமாகி சித்தர்புசிக்கும்நேரம் சீர் சீர் சீர்
செப்பியவேதமும் ஒப்பியபுராணமும் இப்புவிதெரியவந்த அய்யனே
செய்யமுதுண்ண வையகம்புகழ்பண்ண ஐயனேவந்தெனை கார் கார் கார்
ஐந்துவயதுபாலன் பயந்தவரனுகூலன் நயந்தமனமேலாவன் கேள்கேள்கேள்
ஆலத்தையுண்டசிவன் கோலத்தைகண்டபவன் நீளாராட்சியுடையநேயன்
செல்வன்தனையறுத்து பல்விதகறிவருத்து கொள்ளஅழைக்கவந்தேன்
மீள் மீள் மீள்
கண்ணவில்லாமாது உன்னைமனதிலோதி உண்ணஅழைக்கசொன் ஞான்
ஞான் ஞான்

கண்ணிலுமைக்கண்டு பெண்ணியசிவதொண்டு நன்னயம்கொண்டபூமானே
எண்ணியயவன்மனம் நன்னயமாககுணம் பண்ணநுதித்தேனானுன் தான்
தான் தான்

## வைரவர் சிறுத்தொண்டரை உச்சிகாலம் தப்பினதாக கோபித்தல்.

### விருத்தம்.

நிச்சயமாக உண்ணநாம் நியமித்த நாழிதப்பி
அச்சமில்லாமலென்னை அழைப்பதேன் தொண்டனாரே
பச்சமாய் கறிவகைகள் படைத்திட சமைத்திட்டாலும்
உச்சியில் பொழுதுதாண்டி உண்ணநான் வரவுமாட்டேன்.

### இராகம்-மோகனம்- ஆதிதாளம்.

போம் போம் இதுவும் கனமா என்ற அரிச்சந்திரநாடக மெட்டு.

### பல்லவி.

போம் போம் என்முன்னில்லாதே எனக்கன்னமிட
புகன்ற பொழுதிதுவோ செல்லாதே

### அனுபல்லவி.

நாம்பசியினால் நலிந்ததுதானறிந்தும் சொன்ன
நாழிதப்பியென்னை நலமாயழைக்கவந்தீர் (போம்)

### சரணங்கள்.

அயனத்திற்கொருமுறை அமுதுபுசிப்பேனென்றும்
அதுவேயிந்தநாளென்று சொன்னேன்சொன்னேன்
உயர்ரவிஉச்சியில் ஓடிசாய்ந்தால்
உம்மிடமடந்தனில் உண்ணேன்உண்ணேன் என்று
பயம்வரவுமக்கு பத்துதரமாய்ச்சொல்லியும்
பதிதனென்றென்னைப் பரிகாசம்செய்யவந்தீர் (போ)

ஊரிலுள்ளோர்கள் பேறுபெறுமென்னை
உகந்தமுதுசெய்விக்க அழைத்தார் அழைத்தார்
சீரியாளும்மனைவி வீரியமாயென்னை
செய்யமுதுண்ணவா இழைத்தாள் இழைத்தாள்
காரியக்காரன்நீர் கபடம்நினைந்தே
கடவுள் பூஜை கழிந்தபின்னழைக்கவந்தீர் ()

ஊரிலுள்ளோர்கள் பேறுபேறுயென்னை
உகந்தமுது செய்ய அழைத்தார் அழைத்தார்
சீரியாளும்மனைவி வீரியமாயென்னை
செய்யமுதுண்ணவா இழைத்தாள் இழைத்தாள்
காரியக்காரன்நீர் கபடம்நினைந்தே
கடவுள்பூஜை கழிந்தபின்னழைக்கவந்தீர் (போம்)

அன்றொருநாள் மாபலி சொன்னவார்த்தைதனைக்காக்க
மன்னன்முடிமூழுந்தசிரசை தந்தான் தந்தான்
முன்றொருநாளிகிபிதன் மகனைகறிசமைத்து
உண்ணமனமிசைந்து வந்தான்வந்தான்
என்னமோநீயொரு சனமார்க்கனைப்போல
அன்னமிடுவேனென்று ஆராட்சிகட்டிவைத்தீர் (போ)

தாஸன்ராசமசாமி நேசத்துடன்துதிக்கும்
சங்கரானருள்கொண்டநான் முத்தன்முத்தன்
பாசமதனில்சிக்கி மோசத்திற்குள்ளாகும்
பரதேசிவேடமென்றெண்ணாதே யான் சுத்தன்சுத்தன்
தேசந்தனிலுந்தனைப்போ லாசைகாட்டிமோசம்செய்யும்
தொண்டரானபேர்களைநான் கண்டதில்லைவையகத்தில் ()

வசனம்:— சபாஷ் நன்றாயிருக்கிறது நீர்தானோ பெரியத்தொண்டரென்பது அன்னமடம்கட்டி ஆராட்சிமணிநாட்டி அன்னமிடுவதாய் வெரும் டம்பம்காட்டியவர். நாம் ஆருமாதமாய் விரதமிருந்து இன்று விரதம்செய்ய தடைபடாமல் உச்சிப்பொழுது தாண்டாமுன்னம் இஷ்டான்னபோஜனம் செய்துவைப்பதாய் சத்தியம் செய்துபோனவர் யாருமற்றவனென்று இகழ்ந்திருந்தவர் என்முன் நில்லாதீர் போம்போம் உம் வேஷம் நம்மிடம் செல்லாது.

## வைரவருக்கு சிருத்தொண்டர் ஞாயம் சொல்லிகேட்டல்

### விருத்தம்

அய்யரே அரசேயெந்த னன்புள்ள குருவேபோற்றி
பைபட்ரவமணிந்த பரமனருள் கொண்ட ப்ரிசுத்தகுருவே
வையகமதனில் கதிரோன் வாடாத உச்சிபூஜை
செய்யவே தகுந்ததென்று தெரிந்துமே யழைக்கவந்தேனையா.

இராகம் எதுகுலகாம்போதி தாளம்-ரூபகம்.
ஒருக்கால் சிவசிதம்பரமென்று சொன்னால் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

எத்தனை விதமாக பத்தியாய் நடந்தாலும்
சித்தமேன் கோகுரீர் சுவாமி.

அனுபல்லவி.

மத்தியான கதிரோன் மாலையாய் போகாமுன்னம்
பத்தியாயழைத்து படைக்கவந்தே னன்னம். (எத்த)

சரணங்கள்.

1. எத்தனையோபரங்கள் நித்தமமுதுண்டு
சித்தமகிழ்ந்துபோனார் குத்தம்குறைகளில்லை
தத்துவஞானமெல்லாம் மெத்தத்திரண்டுருண்டு
சித்தருருவாய்வந்த தேவாநின்னருளில்லை
முத்தியளித்திடும் நித்யநீயன்றிவேறென்
சித்தத்தில்நினைந்ததில்லை சத்தியம்கேளெனதுசொல்லை (எ)

2. கானகவேடன் கண்ணப்பன் தின்றுபார்த்து
உண்ணக்கொடுத்தகறி திண்ணவுமில்லையா
மானசுந்தரர்க்காய் தூது வந்துபரவையிடம்
கோணலைதிருத்தி குணம்செய்யவுமில்லையா
நான்செய்யும்தொண்டு நலமில்லையென்றுநவ
கோள்கள்மாறிகாட்டினாலும் கொண்டணைக்கவேண்டுமையா

3. சங்குசூடயோன்தாமரையோன்தான்காணு அடிமுடியோன்
பொங்கிமனம்கூவினால் மங்களமாய்தான்வருவார் என்
அங்கம்மனமும்கூடி அடிபணிந்தேன்பெரியோரே
சங்கையேன் செய்குரீர் தாமதம்செய்யாமல் வருவீர்
பொங்கமுடநீர் வராவிடில் புண்ணியரே உமதடியில் என்
அங்கத்தைவிட்டுவிட்டு ஆவியைபோக்கிடுவேனறிவீர்(எத்)

4. பிள்ளைராமசாமி சொல்லுதுதிக்கிறங்கும்
வெள்ளைவிடையோனருள் கொள்ளைகொண்டதேவா
நல்லகாலைமாலைதள்ளி நடுவுச்சிராஜதத்தில்
கொள்ளபூஜை தருமென்று கூவியழைத்தேன் மூவா
வள்ளலேயுமதிஷ்டபடி பிள்ளைகறிசமைத்துவந்தேன்
உள்ளம்தயைபூண்டு கொள்ளஎழுந்தெனைகாவா (எத்தனை)

வசனம்:—சுவாமி நான் எத்தனைவிதமாக என் பூர்வமர்க எவ்வித குறைவின்றி தேவரீர் கட்டளை தவராமல் நடந்துமென் இவ்வளவு கோபம் செய்தீர் சுவாமி கோபம்வேண்டாம் குரு வே காலம்தவராது அழைக்கவந்தேன் அருள்பூண்டென்னவா வேணும்சுவாமி.

## வைரவர் தொண்டருக்கு ஞாயம் கற்பித்தல்.

### விருத்தம்

நித்தியம் கொள்ளநாமும் நியமித்த விரதமதை
சத்தியம் தவராமல்நீரும் சாதிப்பேனென்றுசொல்லி
பத்தியாய் செய்யும்பூஜை பதினைந்து நாழிதப்பி
இத்தறி வந்தழைக்கநாம் எப்படி வறலாம்சொல்வீர்.

இராகம்-காம்போதி. தாளம்-ரூபகம்.

### பல்லவி.

சொல்லும் சொல்லும் தொண்டனரே நீர்
செல்லும் செல்லுமே.

### அனுபல்லவி.

நல்லதினமென்விரம் முடிக்க
நான்பார்த்து கார்த்தேன் நான் துடிக்க
கொல்லும்பசிஎனை கடக்க நீர்
கோரியழைத்தால் மனம் வருமோ நடக்க. (சொல்)

1. விரம்பேசிக்கொண் டெழுந்த சேவகன்
வெட்டும்படைக்கஞ்சி முதுகிடல் ஆமோ
யாரும்காணவே தபசிபென் றுவந்து
ஆண்பூஜைக்கழித் தமுதுண்ண லாமோ
வாருமென் றுநீ ரழைக்கஎன்விரதம்
மறந்துன் அன்னத்தைதொட லாமோ
பாரோறறிய தொடுத்தவிரதத்தை
பாதியிலேவிட்டு பாபத்தைசேற லாமோ. (சொ)

2. உலகிலேயொரு நன்மைசெய்ய இடை
யூருமெத்தவருமதையி ஞலே
பலருமறிய உச்சிதாண்டா முன்னம்
படைக்கிறேனென்று சொன்னயுன்வா யாலே

நிலைத்தயென் விரதத்தை கெடுக்கவேவந்தீர்
நீரென்னசெப்பீரென் காலபேதத் தாலே
மலைவிழுந்தாலும் தலையேதாங்கவேணும்
மலைத்தவர்க்குபலன் கிடைக்குமோபுவி மேலே (சொ)

3. பிள்ளைராமசாமி உள்ளத்திலேதுதிக்கும்
வள்ளலடியென்றெனை மனதிலேமறந் தீரோ
கள்ளமில்லாநங்கை கற்புபாசத்தாலெனை
கட்டிவிட்டோமென கர்வம்பிறந் தீரோ
பிள்ளைகறிசமைத்த பெருபூண்டுடன்
புத்தியிலெனை அற்பமாய் அறிந் தீரோ
நல்லவரென்றுமை சொள்ளபேசியதால்
நாழிதப்பியழைத்தாலும் வருவேனென்றிருந்தீரோ (சொ)

வசனம்:— நீர் உலகிலில்லாத இஷ்டான்னபோஜனம் செய் தோமென கர்வங்கொண்டு நீர்படித்த புராணகதைகளை நமக்கு உபமானம் சொல்லி அழைத்தால் காலம்தவரி விரதம் செய்யலா மோ சொல்வீர் தொண்டனாரே.

## வைரவமூர்த்திக்கு சிறுதொண்டர் பூஜைசெய்ய ஞாயம் சொல்லல்.

### விருத்தம்.

மண்ணிலே பிறந்திந்த மானிடப்பிறவி ஒழித்துமேதான்
விண்ணிலே சேரநானும் வேண்டியிப் பணியேகொண்டேன்
கண்ணிலே ஈசர்போல் காணுமும் விரதத்துக்குயான்
பின்னமாய் நடக்கவில்லை பேதமின்றி வருவீர்சுவாமி.

இராகம்-சுருட்டி, தாளம்-சாப்பு

பல்லவி.

ஆணவம்கர்வம்கொண்டு அடியேனிருக்கவில்லை
அமுதுண்ணவாரும் சுவாமி.

அனுபல்லவி.

ஞானவர்தவத்தோர்கள் தான்புசிக்கும்நேரம்தேடி
தமியேன்வர்தழைத்தேனே சாஸ்திரமுறைநாடி. [ஆண]

சரணங்கள்.

தேவரீரைகண்டபோது சென்றநாழிஒன்பதாச்சு
செல்லவிடைபெற்றபோது சேர்ந்தமிதுனம்கடந்துபோச்சு
பாவமில்லா பிள்ளைபற்ற பானுபகல் பாதியாச்சு
படைக்கமுது செய்தழைக்க பதினேழு கடிகையாச்சு. [ஆண]

பகலவனுதியந்தம் பரிந்தநாழிமுப்பதிலே
பகர்ந்தகாலமூன்றில் பத்துமேலுச்சிருபதிலே
இகபரமடையபூஜை இருபதுசெல்லாமலதிலே
அகமகிழசெயவழைத்தேன் அட்டிசொல்லாதீர்பதிலே [ஆண]

காலைஉச்சிமாலைகுறித்து காலம்மூன்றாய்பிரித்து
காலைநாழிபத்துகழித்து மாலைபத்துவாராதொழித்து
வேளைதவராமலறிந்து விரும்புமுச்சிதான்தெரிந்து
சிலனேநீருண்ணவிருந்து செய்தழைத்தேன்மனம்புரிந்து [ஆ]

அம்பரீஷன் விரதமுண்ண அடுத்ததூருவாசர்போல
தம்பிரானேஎன்மேல்பழி சாட்டாதீர்மேன்மேலே
நம்பியும் வார்த்தைகொண்டு நற்பிள்ளைகறிசமைத்ததாலே
கெம்பீரமாய்வந்துண்ண கேட்டேன்வருவீர்தயவாலே [ஆ]

அல்லும்பகலுமீசன் அருள்பதம்தனைநினைத்து
பிள்ளைராமசாமி சொல்சுருட்டியாவிழைத்தேன்
கள்ளமிலாமனத்தால் கடாட்சித்தருள்புரிந்து
நல்லபிள்ளைகறியுண்ண. நாடிவந்துமையழைத்தேன் [ஆண]

சிறுத்தொண்டர் வசனம்:—சுவாமி உலகில் பெரும்பொழுதென்றும் சிறுபொழுதென்றும் இருவகைப்படும் அதில் பெரும்பொழுது வருஷத்து ஆரு ரிதுக்களாகவும் சிறுபொழுதென்பது நாள் 1-க்கு ஆருகாலமாகவும் குறிக்கப்பட்டிருக்கிறது அது இரவில் மூன்றுகாலங்களாயும் பகலில் மூன்றுகாலங்களாயும் பிரிக்கப்பட்டிருக்கிறது. மாலை யாமம் வைகறை இரவிலும், விடியல் நண்பகல் எற்பாடு பகலிலும் வருகிறது. விடியலே காலையாகவும் நண்பகலே உச்சியாகவும் எற்பாடே மாலையாகவும் வழங்கிவருகிறது சிறுபொழுது ஒவ்வொன்றுக்கும் பத்துநாழிகையேகாலம், எற்சாமி நடுப்பகலான உச்சி காலை பத்துநாழிகைக்குமேலும், சாமி இப்பொழுது பாடான இருபதுநாழிகைக்கு முன்னமே

நாழி பதினேழே உச்சிப்பொழுது தாண்டவில்லை உன்னை வற வேணும் சுவாமி.

வைரவர் வசனம்:—சபாஷ் தொண்டனாரே நீர் மிக கெட்டிக்காரரென்பதை அறிந்தேன் நீர் படித்த புராணகதைகளைக் கொண்டு மிக நயமாகச்சொல்லிக்காட்டி பின்னால் நான் பயப்படும்படியான உபமானங்களை காட்டி மிறட்டுகிறீர்போலும், அம்பரீஷன் விரதமுண்ணவந்த தூருவாஸமகாமுனிக்கு விஷ்ணுசக்கிரம் வந்து துன்பப்படுத்தினதுபோல சிவபக்தனான உம்மனம்போல் நாம் நடக்கவில்லையென்று அந்த சிவசங்கர மூர்த்தியால் தோஷமுண்டாகுமென்றல்லோ பயமுருத்தி ஏமாற்றப்பார்க்கிறீர் அந்த சிவமூர்த்தி ஆக்கினையில்லாது நாம் வற முடியாது செல்வீர்.

## வைரவர் வற மருத்ததால் சிருத்தோண்டர் பரமசிவனை நினைத்துப் புலம்பல்.

### விருத்தம்.

அய்யனே கைலைநாதா அரனடியார் சொன்னவண்ணம்
பையனைக் கறிசமைத்து படைத்திட அழைக்கவந்தேன்
மெய்யனும் மனங்குறைந்து மேவியே மறுக்கிறார்நான்
உய்யவே யமுதுசெய்ய உளமகிழ்ந் தனுப்புவீரே.

அதிபதி அரிச்சந்திர ரளித்த மகனைதேடி என்ற மெட்டு.

1. அதிபதி நரசிம்ம னளித்தப்பொருளைக்கொண்டு
அன்னதானம் செய்தேன் — நானே
2. பதியில் தினமாயிரம் பரங்கள்வந்துண்ண
பார்த்து மனமகிழ்ந்தேன் — தானே
3. சதியோ என்விதியோ சந்ததம் வந்தவரின்று
தான்வராதேடிமிக நொந் — தேனே
4. மதியைதரித்த சிவ னருளை பரித்தடியார்வற
மனமுங் களித்து குளிர் — தேனே
5. வைரவரும் சொன்ன வசனம்பிசகாமலே
மகனைச் சமைத்தழைத் — தேனே
6. வைரங் கொண்டடியார் வரவும் மறுக்கிறார்
மனமும் களைத்துக் குறைந் — தேனே

7. கைலைவாசா மனதிறங்கி கர்த்தனடி வறநீரும்
கருணைபுரிய கேட் டேனே

8. நிலையாய் எனைசேர்க்க மலைகள் பாகா இந்த
நேசம் மனமிறங்க பிழைப் பேனே.

வைரவர் சொல் வசனம்:—அய்யா தொண்டனாரே என்ன பெரிய படோடம்பம் செய்து அந்த கைலாசபதியை நேரே தெரிசித்தவர்போல் புலம்புகிறீர் ஆனால் உம்முடைய உறுதி நிலையானதா? நம்மை ஏமாற்றும் சதியை அறிவோம் உம்மிடம் வந்த பிறகு உம்மிட இஷ்டம் என்ன ஆக்கினைசெய்வீரோ அறிவோம் நாம் உம்மிட மடத்திற்குவற இந்த ஊரை வலமாய்வறவேண்டும் நீர் நம்முன்பாக முன்னே சென்று ஒவ்வொரு தெருவின் பெயரும் அதன் மகத்துவங்களும் ஒளிக்காமல் சொல்லிக்கொண்டு செல்வீர் உமது பின்னோடு நாமும் கூடவருகிறோம்.

குறிப்பு:—கணபதீசுரத்தில் காட்டாத்தி மறத்தடியில் சிறுதொண்டரும் வைரவரும் வாதாடிக்கொண்டிருக்கும்போது மடத்திலிருந்த நங்கை நாதனைக் காணோமென்று கடவுளை பிராத்திக்கிறவிதங் காண்க.

விருத்தம்

ஆதியே யமரர்போற்று மடியருக்கடிய ரானதேவே
சோதியேயுருவமாய்வந்தோர் சொல்படி செய்தமைத்த
நீதியாம் மகன்கறியை நியமித்த படியேயுன்னை
வாதனை யின்றடியாரோடு மன்னன்வறக்காணேனே.

கண்ணிகள்.

1. அரவாபரணனே அடியாரை தேடிச்சென்ற
அன்பர் வறக்கா ணேனே.

2. குரவனாரடியார் குறித்தபடிச் செய்தும்
கோதைமகிழ தோ ணேனே.

3. தருமநிறையவர் அருந்தவம் முடிக்க
தாமதமறி யேனே.

4. பருவத்தில் சிவன்தந்த பாலனை சமைத்தும்
பசிதீர வாரா தேனோ

5. தப்பாமல் தினம்வந்த சாதுக்களின்று வாரா
சந்தேகம்யா னறி யேனே.
6. சுந்தரமுகமலர்ந்து வந்தடியார் வாராவிடில்
தோகைநான் மடி வேனே
7. நஞ்சையுண்டவா பிஞ்ஞகன்பித்தனே
தஞ்சமடைந் தேனே
8. அஞ்சுமென்னெஞ்சம் மிஞ்சிசந்தோஷமாக
அடியார்வற வேணுமை யனே.
9. நேமமாய்பார்வதிக்கு வாமபாகமளித்தவா இந்
நேரம்வந்து காருமெய் யனே.
10 ராமசாமிதுதி எந் நாளும் கேட்டுமகிழ்ந்தவா
நாதாவந்துகாப்பீரிங் கனே.

## வெண்காட்டுநங்கையை சந்தனத்தாள் தேற்றல்.

### விருத்தம்.

அம்மணி தாயேயெந்தன் அரிவையே சொல்லக்கேளீர்
செம்மையில் செய்தவினை சிந்தித்து தானுமோங்க
மும்மலம் தாண்டிச்சென்ற முதியவர் வருவாரிப்போ,
கம்மலாய் மனதிலொன்றும் கருதவே வேண்டாமம்மா.

செந்தூர்வளர் முருகநாதா என்ற காவடிச்சிந்து வர்னமெட்டு.

1 வெண்காட்டு நங்கையெனும் மாதே சத்தி
வேல்விழி மதிமுக கோதே நீர்
வீணாக துக்கிப்பது தோணுமையாகுமே
வேண்டி வருவாரிப் போதே மனதில்
விசாரமென்பதைக் கொள் ளாதே.

2 நல்ல காரியங்கள் கொள்ளும் போது எந்
நாளும் விக்கினம்வரும் தப் பாது அதனால்
நல்லவர்கள் உள்ளத்திலே
கள்ளமதைக் கொள்ளார்களே
நளன்பாரி தமையந்தி மாது சிற்றன்னையிடம்
நற்றுதி கதைகேட்டேன் வாது

3 என்னசொல்லுவேனு னுனக்கு பாரில்
எத்தனைபேர் கஷ்டப்பட்டார் கணக்கு அதில்

எடுத்தோதிய கதைகளில்
தொடுத்த நளாகினி பெருமை
எட்டிலொரு பங்குதெரியா தெனக்கு அதை
எடுத்துச்சொன்னால்கோபம்வரும் தனக்கு

4 எண்டிசை புகழ்கொண்டாட விந்தை புராணப்படி
எடுத்துச்சொன்ன ராமசாமி சிந்தை சற்று
எண்ணிப்பார்க்கவே மனதில்
கன்னலும் கூடவருமோ
எல்லாம்செய் வல்லசித்தர் முந்தை வினையால்
ஏற்றதை செய்யவந்த மாயை சந்தை

5 தத்துவ சாஸ்திரங்கள் படித்தும் பெண்புத்தியால்
சஞ்சலம் விடாமலிப்படி துடித்தும் பேதை
தன்னைப்போலவே எண்ணி
மண்ணில் தயாரானால்
என்னமாய் பிரார்த்தத்தை முடித்தும் அந்த
ஈசன்பத மடையகாபருள் பிடித்தும்

வசனம்:—அம்மணி! உனக்கெத்தனைவிதம் சொன்னாலும் அடிக்கடி ஏன் மனக்கவலை கொள்ளுகிறீர். விசாரம் கொள்ளாதே. கோரிய வைரவர் நாதனுடன் வருவார். மாயப்பிரபஞ்ச வாழ்க்கையின் குணமிப்படித்தா னம்மணி அறிவீர்.—

## வைரவருக்கு தொண்டர் வழிகாட்டி மடத்துக்கு செல்லல்.

### விருத்தம்.

அய்யரே கைலைவாசன் அடியாராய் வந்தகுருவே
மெய்யரே நீர்சொன்ன மொழிப்படி நடப்பேன்சுவாமி
பய்யவே யெழுந்துநீரும் பற்றவே என்பின்னோடு
துய்யரே வருவீர்போற்றி செல்கிறேன் நானும்முன்னே.

பூமிமெச்சிடும் அண்ணாமலைக்கோர் துணை யானவன் என்றமெட்டு.

1 பூமிமெச்சும் திருச்செங்காட்டாங்குடி வந்தவா
அருள் தந்தவா எனக்கு கந்தவா எனை
புனிதனுக்க அமுது கனிந்துபுசிக்க ம கிழ்ந்தவா

2 நேசமுற்ற உந்தன் யோஜனைப்படி நான் செல்வனே
பெருமைபுல்வனே வருவீர் நல்வனே நமக்கு
நேரிலிந்திரவீதி பாரில்வேதியர் வாசம் சொல்வனே

3 ஆகமவேத புராண மனு தினம் படிப்பவர்
யாகம்முடிப்பவர் பாவம் இடிப்பவர் எந்த
அருந்தவமானாலும் திருந்தகாரியம் தொடுப்பவர்

4 தங்கள்வரவைக்காண சமபிரதாயத்துடன் வருகிறார்
புகழ்தருகிறார் மனம் உருகுறார் அவர்
சாமி அரகராவென பூமியில்சாஷ்டாங்கமாய் தொழுகிறார்

வைரவர் வசனம்:—மிகுந்த சந்தோஷம் என்றும், வேதம் ஓங்கி வாழ்க.

5 தெக்ஷணவீதிமெச்சி கீர்த்திபெற்ற வணிகரே
மெத்த தனிகரே பிர்மத்தை பணிவரே பெரும்
செட்டுகளில் கொஞ்சம்லாபம்வைத்து
செட்டியாய் வசியம்செய்ய துணிவரே

6 செட்டிப்பெண்கள் பூமியில் மட்டில்லாஜலம் வார்க்கிறார்
உம்மைபார்க்கிறார் விரதம் காக்கிறார் பணிய
சந்தன சாம்பிராணி புகைபோட்டு தம்பணி ஏற்கிறார்

வைரவர் வசனம்:— தீர்க்கமங்கல்யபா என்னாளும் வியாபார விர்த்தி உண்டாகுக.

7 தெற்குவீதியில் மேற்கேயிருக்கும் குடி சூத்திரர்
நல்லபாத்திரர் மேழி கோத்திரர் காலம்
தெரிந்து வளம்கண்டு சிறந்து பயிர்செய்யும் சாத்திரர்

8 சூத்திரவேளாளர் சாத்திர முறைப்படி தொழுகிறார்
கண்டுமகிழ்கிறார் அண்டி கமிழ்கிறார் நல்ல
சிந்தனை வழிபாட்டுடன் தம்தம் சிரமேல் கைகூப்பி புகழ்கி
[றார்

வை. வ-ம்:—மாதம் மும்மாரிபெய்து தேசம் செழித்து விளைவோங்க வாழி.

9 மேலவீதியிது சாலவன்ய க்ஷத்ரிய விலாசமே
வெகுஉல்லாசமே தரும்வில் வாசமே போரில்
வெற்றிமருவுகீர்த்தி சுற்றியபடியாளைக்காக்கும் நேசமே

10 இந்தராஜமக்கள் முந்த நமக்குமுன்னால் நாடுறார்
பந்தல்போடுறார் உம்மை கூடுறார்
விந்தையாய்வாழைகட்டி சொந்ததெருவலங்காரம் தேடுறார்

வை. வ-ம்.—ராஜபட்டம் நிலையோங்கி ஜெயப்பிரதாபம் கொண்டாட வாழி.

11 சங்கராஜாதி தங்கும் வடவீதி நாடினோம்
வந்துகூடினோம் அருள் தேடினோம்
எங்கும்புகழ்கொள்ளும் உங்களை கண்டொளிக்க வாடினோம்
12 நாடியவடக்குவீதியில் கூடிமக்களைவீட்டில் மூடுறார்
கண்டுவாடுறார் சண்டை போடுறார் இவரே
நல்லபிள்ளை இன்னும் பொல்லாஆண்டியெனபழி சாடுறார்

வை. வ-ம்.—சங்கராஜாதி நாஸ்தி ஆருக. இத்தெரு மண் மாரியால் மூடுக.

13 ஈசான்யதிக்கில் இருக்குமடமென தென்பாரே
அன்னம்தின்பாரே அடியார் உண்பாரே வெகு
நேசமாயுமைக்காண ஆசையுடனக்கைநிற்கவீர் காண்பீரே

வைராவர் சொல்.

14 தேசதேசமெங்கும் பூசனைபுரிந்து விளங்கவே
அறம்வழங்கவே மனம் துலங்கவே பூமியில்
தேடியுன் அன்னதானம் சீமைகொண்டாடதந்தேன் குலுங்கவே.

## மடத்துக்கு உண்ண சிறுத்தொண்டரோடு வந்த வைரவரை வெண்காட்டுநங்கை உபசரித்தல்.

பெரிய புராணச் செய்யுள்.

வந்துபுகுந்து திருமனையின் மனைவியார்தம் மாதவரை
முந்தினதிர் சென்றடிவணங்கி முழுதுமழகு செய்தமனை
சந்தமலர் மாலைகள் முத்தின்றாம்நாற்றி தவசடுத்த
கந்தமலராசனம் காட்டி கமழ்நீர் காமெடுத்தேந்த.

71-வது செய்யுள்

தூயநீரார் சிறுத்தொண்டர் சேதியார் தங்கழல்விளக்கி
யாயபுனிதப் புனறங்கடலை மேலாரத் தெளித்தின்ப
மேயவில்ல மெம்மருங்கும் விசிவிளா மென்மலர்சாந்த
மேயும் தூபதீபங் கண்முதல் பூசனைசெய் திளைக்குறுவார்.

போது வசனம்.

கேளுங்கள் சபையோர்களே! இவ்விதமாக வைரவர் தொண்டருடன் மனைக்குவர நங்கை எதிர்சென்றடிபணிந்து மெழுகி கோலமிட்டி அழகுபொருந்திய வீட்டிற்குள்ளழைத்துப்போய் புஷ்பங்களாலலங்கரித்த ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து பன்னீரால் பாதங்கழுவி புஷ்பாரங்கள்சாற்றி தூபதீபம்காட்டி போற்றி சந்தனத்தாதியால் கொடுக்கப்பெற்ற தலைவாழையிலையைக் கழுவி தரைமெழுகி சாப்பிட இலைபோட சாமியாரை நங்கை மெத்த பயபக்தி உருதியுடன் அஞ்சி கேட்கிற விதம் காண்க.

கருவினுருவாகி வந்து என்ற திருப்புகழ் வர்னமெட்டு.

1 அருமறையாகம புராணமெல்லாம் விரித்துரைக்கும்
அருங்கனியே சிவக்கொழுந்தே அடியாரே
2 பெருக்கருணைக் கடவுளது திருமனதில் குறிகொண்ட
பேரின்ப வாருதியே பெருவாழ்வே
3 உருதியா யுன்பதத்தை கருதுமிந்த அடியாளைத்தன்
உள்ளத்தில் வைத்துகார்க்க வந்தோரே
4 பெருமையுருமாதவராய் நிறைதவசு பூண்டுவந்து
பிள்ளைகறி தின்ன எழுந்தோரே
5 நிறைமதி முகவிலாசா பருவமதி லெனைக்கார்க்க
நேரில்வந்த சற்குருவே பணிந்தேனே
6 சரணம்செய்த அடியானை கிருபையுடனே பார்த்து
சாப்பிட வேணுமென தொழுதேனே
7 நரசிம்ம வர்மராஜன் புரியசொன்ன அன்னதானம்
நாட்டில் செழித்தோங்க வரம் அருள்வீரே
8 அருமையான கறிவகைகள் பறிமாறும் முறைமதனை
அருள் செய்யக்கேட்டேன் தயை புரிவீரே.

வசனம்:—சுவாமி நமஸ்காரம்! எங்களையாட்கொள்ள வந்த குருவே. காலமாருமாதமாய் கடுந்தவசடுத்தக் கருணைக்கடலே. அண்டிய பெங்களை கார்க்கவந்த அண்ணலே. தேவரீர் திருவுளமகிழ அமுதுசெய்விக்க பரிமாரும் விதத்தை அருள்செய்யக்கோரினேன். அடியாளறிய தெரிவிக்கவேணுங்குருவே.

## வைரவர் நங்கைக்கு பரிமாறும் விதம் தெரிவித்தல்.

### விருத்தம்.

மன்னன் பாதமடிமறவா மங்கையே சொல்லக்கேளீர்
முன்னதாய் மூன்றிலைகள் முறைப்படி போடவேணும்
பண்ணிய கறியனைத்தும் படைத்திட வேணுமதை
இன்னின்ன அங்கமென் றெடுத்துரை செய்வாய்தாயே.

### மலடிவயிற்று மகன்போல என்ற வர்ணமெட்டு.

அம்மணிநங்கையேதாயே எனை அமுதுபடைக்க கேட்டீர்நீயே இப்போ
செம்மையாய் மூன்றிலைபோடுவீரே அருள்நாடுவீரே
ஆக்கினகறியமுதெல்லாமே சிவன் பார்க்கவளிப்பாய் நில்லாமே அதை
தேக்கியில்லத்தில் வைக்கலாகாதே அதுதகாதே
ஒவ்வொருகறியுருப்பின்பேரே நீர் செவ்வையாயெடுத்துசொல்லுவீரே
நவ்வென்றும்பதத்தைபோய்சேருமே சொல்லதேருமே [அவை
இவ்விதம்சொன்னேனுனிப்போதே வைரவன் ஒவ்வியமொழியொன்
றும் தப்பாதே சொன்ன
அவ்விதம்செய்தால்பதம்அடைவாயே கேள்திடமாயே.

## நங்கை வைரவருக்கு அமுது படைத்தல்.

### விருத்தம்.

ஆதிசிவன் போலொத்த அலங்காரமுள்ள தேவே
சோதித்து காக்கவந்த சோதியே போற்றிசெய்தேன்
வாதனையின்றி யானும் வருந்திட்ட கறியமுதை
மேதினிபோற்றநீரும் மெல்லுவீர் உண்டுசுகம் சொல்லுவீரே.

இராகம் சங்கராபரணம். தாளம்-ரூபகம்.

பல்லவி.

அமுதுகொண்டிடுமையனே உம்பசிதீர
அடியோமீடேற மெய்யனே

அனுபல்லவி.

அமுதுகொண்டிடும்தேவா அன்பர்க்குகந்தபாவா
தாமதமில்லாமல் வா வா தம்பசி தீரவா (அமுதுகொ)

சரணங்கள்.

1 மடமென்பதில்லாத மதனை தனைப்பிடித்து
படபடப்பின்றியே பத்தாவுடனடுத்து

குடல்களிலுள்ள குற்றமெலாமெடுத்து
உடல்பலருசியுள்ள உணவெல்லாம்வருத்த (அமு)

2 இனியவிராலையொத்த தனியாகண்டைகால்தானே
கனியநெய்யால்மிளகு கறியதாய்செய்தேனே
தனியாய்தொண்டைகறி சமைத்தேன்வருத்துநானே
பணியபேசும்நாவை பால்கறியாபடைத்தேனே ()

3 கொழுமையானநெஞ்சம் கோலமானதோளும்
பழுதில்லாகழுத்தும் பக்கவிலாவெலும்புகளும்
குழம்புகறியாகவதை கூட்டிமசாலைதனும்
பழுதில்லாபசுநெய்யால் பாகம்செய்தேனின்றுநும் ()

4 பாசமற்றமாமிச வாசனையறிந்துபற்றி
நேசமுடன்சிறு தூள்களாகவேகொத்தி
ஆசையுடனேபொடி மாஸ்செய்யவெருநேத்தி
அசலாரறிந்தா லாசைபடுவாரிக்கீர்த்தி (அ)

5 முதுகுகாலெலும்பை முறையேபுளிகொழும்பாக்கி
பதிவிரல்நுரையீரல் பாங்காய்நெய்யில்தாக்கி
கதிகேட்கநீட்டும் கைகளைதயிர்கறியாக்கி
மதியில்நீர்விரும்பிய மகன்கறியின்னபாக்கி (அமு)

நங்கை வசனம்:—சுவாமி! தேவரீர் கட்டளையின்படி ஒவ்வொரு அவயவங்களின் பேர்சொல்லி முவிலைகளிலும் முழுதும் படைத்தேன். பசிதீர உண்ண பிரார்த்திக்கிறேன் சுவாமி.

வைரவர் வசனம்:—சரி எல்லா அவயவங்களின் கறி யாவத்தும் படைத்துவிட்டீர்களோ?

நங்கை வசனம்:—ஆம் சுவாமி!

வைரவர் வசனம்:—பிரதானமானதை நீங்களுண்ண வைத்துக்கொண்டு சத்தில்லா கறிகளை எனக்கு வைத்தீர்கள்போல் தோற்றுகிறது.

நங்கை வசனம்:—இல்லை சுவாமி! வஞ்சனையுமில்லை, தவருதலுமில்லை எல்லா அவயவ கறிகளையும் விடாமல் சமைத்து முழுதும் படைத்துவிட்டேன் சுவாமி!

வைரவர் வசனம்:—அம்மணி! பொய் பேசலாகாது. ஓர் பொய்சொல்ல பயந்து அரிச்சந்திரமகாராஜன் பட்ட கதையைக்

கூட கேட்டதில்லையா? அம்மணி நீரோ பெண்பால் உம்மிடம் நாம்பேசினுல் நம்மை லட்சியம் செய்யமாட்டீர். நான் சிலகாலை க்குமுன் கிரகஸ்தனுயிருந்தபோது என் பெண்சாதியிடம் பா தேசியாய் போகப்போவதாய் சொன்னேன். அப்போதென் பெண்சாதி என்னைவிட்டு நீர்பரதேசியாய் போவீரானுல் உத்தம ஸ்திரீகளிடம் உம்கோபத்தை காட்டாதே. பதிவிரதைகளுக்கு தன் புருஷனன்றி தேவர்களான மூவர்களையும் மதியார்களென்று சொல்லியிருப்பது என் ஞாபகத்தை பற்றுகிறது. என் கோப த்தையடக்கி பார்த்தும் பசியால் மீள்கிறது. சரி உம் நாயகரி டம் பேசிக்கொள்ளுகிறேன். சற்று நிதானிப்பாயம்மணி.

தொண்டனுரே நாம்முன்னமே சொன்னபடி செய்துவிட்டீரோ.

தோண். வ-ம்:—சுவாமி! எவ்வித அபசாரமும் மனமாச செய்யவில்லை குருவே.

வைர. வ-ம்:—என்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம். தலைக்கறி எங்கே?

தோண். வ-ம்:—சுவாமி! கோபம்வேண்டாம். தலைக்கறி அமுதுக்காகவாதென மறைத்துவிட்டோம். பொறுப்பீர் சுவாமி

வைர. வ-ம்:—இப்போதுதான் என்ன? நாம் ஏதாவது பொருள் கொடுத்தோமா? நாம் போய்வருகிறோம். நாம் தலைக் கறியில்லாது புசியோம். இப்படி சதிசெய்வீரென்றறியோம்.

தோண். வ-ம்:—சுவாமி! அப்படி சொல்லலாகாது. என்ன வேணும் சுவாமி!

எழுந்துபோன வைரவரைத்தடுத்த சிறுத்தொண்டரை வைரவர் கோபித்தல் சம்வாதம்.

விருத்தம்.

என்னையும் போகவொண்ணு விருந்துமை தடுத்தவனீர்
முன்னமே எனக்குசொன்ன மொழிப்படி செய்யாமல்நீரும்
பண்ணிய தலைக்கறியை பரிந்துண்ண வையாமல்
கண்ணிய குறைவுசெய்தீர் கபடத்தைய நிந்தோம் செல்வீர்.

மகனே மகனே என்று ஜெகஜாலிஎன்ற அரிச்சந்திரநாடக மெட்டு

வைர. தின்னு தின்னுவென்று என்னை தடுக்கிறீர்
என்ன மதியாலெனை அழைத்தீர்
உன்னைப் பிள்ளைக் கறியென் றுரைத்தீர்
வண்ணமாய் தனிதனி பண்ணியிருக்குதென்று
முன்னே தலைக்கறியை மறைத்தீர்

தொண். தலைக்கறி யமுதாக்க கலக்கமுண்டாகுமென
நிலத்தில் புதைக்கச் சொன் னேனே
நலமாய் புசிக்க எண் ணேனே
பலமான தலைக்கறி வளமாயுண்பீரென
உளவறியாமல் நான் போ னேனே

வைர. அறியே னறியேனென பிரியமாகப் பேசி
பரிகாசம் செய்யவே வந்தீர்
மறியாதை குறைவையே தந்தீர்
சிறிய தொண்டரென பெரிய பேரைவைத்து
குறைசெய்ய பூமியி லுகந்தீர்

தொண். பூமியில் நானுமே சாமியே பிறந்து
காமியர்ம் பிள்ளையை அருத் தேனே
நேமி நீருண்ணச் சமைத் தேனே
நாமுன்ன தலைக்கறியை க்ஷேமமா வைக்கவில்லை
வாமபாகன் சாக்ஷி உரைத் தேனே

வைர. உரைத்தகடவுளை நெருக்கமாய் கண்டதுபோல்
விருத்தமா யென்னிடம் சொல்லாதே
குறித்த தலைக்கறியல்லால் செல்லாதே
சிரத்தையாய் நாமுண்ணும் உரைத்த தலைக்கறியை
மறைத்தாலுண்ணேம் தடுத்து நில்லாதே

தொண்டர் வசனம்:— ஆ பரமசிவமே! அடியார் பசிதீர அருமை மகனை அறுத்து சமைத்தும் அடியார் சிரத்தையாயுண்ணும் தலைக்கறி அமுதுக்காகாதென ஒழிக்க அறிவைக்கொடுத்த சிவமே! உண்மையில் உனை பக்தியாய் நினைத்து அறஞ்செய்தது சத்தியமானால் இத்ததி அடியாருண்ண அருள் பூணவேணும் ஆதியந்தமில்லா அரனே.

## சந்தனத்தாள் நங்கையிடம் தலைக்கறி கொடுத்தல்.

### விருத்தம்.

மனமதில் கவலைவேண்டாம் மாதாவே சொல்லக்கேளீர்
கனமான அடியார்தலைக்கறி கருதியே கேட்பாரென்று
இனமதாய் கறிசமைத்து இங்குமே வைத்தேன்தாயே
சினமின்றி பெரியோருண்ண தேவியே படைப்பாய்நீயே.

ஸ்ரீராமச்சந்திரனை சீதாமனோகரனை என்ற வர்ணமெட்டு.

சந். மங்கையே உன்மனம் சங்கடம்வேண்டாம்
தங்கியதலைக்கறியை நேர் நேர் நேர்.
மாதே சாதுவிடம் வாதுபுரியாதே
வந்தவர்மனது சந்தோஷமாக பைந்தொடியேபடைத்து கார் கார் கார்

தங். எப்போதுசெய்தாயோது தப்பியதலைமீது
கப்பியமனமேது சொல் சொல் சொல்
என்னைபிரியாதே முன்னேகாத்தாயே
புண்ணியர்தனக்கு அன்னமதூட்டும் நன்னயமுனக்கே தா தா தா

தொ. சீலனே உன்மனம் தாழவருந்தாதீர்
பாலன்தலைக்கறியைப் பார் பார் பார்
ஆலத்தையுண்டோன் கோலத்தால் தாதிசெய்த
பாலன்தலைக்கறியை வேளைதவக்காமலே காலத்திலேபுசிப்பீர் சீர் சீர் சீர்

வை. முன்னமேநானும் சொன்னபடியே
உண்மைவெளியாச்சு பேஷ் பேஷ் பேஷ்
முட்டாளாய்நானுமே சுட்டிகேளாவிடில் [நேர் நேர்
அட்டியில்லாமலே கெட்டியாய் பின்னாலே கொட்டிக்கொள்வீரதை நேர்

தொ. அப்படிஒருவனும் இப்படியிதுநாளும்
தப்பிதமறியோம்வினை தீர் தீர் தீர்
அன்பனேயுமக்கொளித்த தின்பேனோ மனம்களித்து
என்னையிப்படிக்கு குன்னமாசொல்லாமல் அன்னமதுண்ணும் தீர் தீர் தீர்

வசனம்:—சுவாமி! காலதாமதமின்றி அமுதுண்ணவேணும். அருள்கொடுக்கும் ஆண்டவா.

வைரவர் வசனம்:—மிகுந்த சந்தோஷம். என்னாலும் பசிதாள முடியவில்லை. கதிரேசன் உதையமாகி கடந்த நாழி பத்தொன்பதுமாச்சுது. கடவுள் பூஜைக்குகந்தபடி உம்முடைய சொல்படி காலம் தவறாமலுண்ண அடியார்களை அழைப்பீர் தொண்டனே.

தொண்டர் வசனம்:—சுவாமி! என்ன ஆச்சரியம். இன்று என்னுடனுண்ண பாலர்கள் கிடையாமல் உழைதயமுதல் தேடிக் கிட்டாமல் தவித்துயிர்விட நினைத்த தருவாயில் தேவலோகக் கற்பகத்தருவைப்போல கிடைத்த தேவரீரை தெரிசித்து அமுது செய்விக்க கிடைத்த பாக்கியம் நான் பூர்வம்செய்த புண்ணியமோ என் பெரியோர்கள் செய்த தவமோ. இந்த மடம்செய்த நலமோ. நரசிம்மராஜனது உன்னத குணமோ. அப்படி கிடைத்த தேவரீரைவிட இன்னேரவேளையில் இலையில் பரிமாறிய அன்னத்தைப்புசிக்க எங்கு அடியாரைத்தேடுவேன். எங்கு செல்லுவேன். தம்மை தேவரீரது இஷ்டப்படி அமுதூட்டி வைப்பதே என் பெரும் பாக்கியமானதால் தேவரீர் மேலும் மேலும் என்னை சோதித்து என்னுவிதுபருகாமல் உண்டு எங்கள் விரதம் பூர்த்தி செய்விக்கவேண்டும் தேவா.

### வைரவர் சொல் வசனம்.

தொண்டனுரே! உமது அன்புக்கும், பக்திக்கும் மெச்சினேம். தங்கக்கத்தியென்று கழுத்தையறுத்துக்கொள்ளலாமோ. நீர் நல்ல பெரிய சிறுத்தொண்டரென உமக்காக நம் விரதத்தை கெடுத்துக்கொள்ளலாமோ. நாம் அடியாரை கூடவைத்துண்ணுவதல்லால் பேய் பூதம்போல் தனியே சாப்பிடமாட்டோம். நம்மிட நியமனத்துக்கு விரோதமாக உண்டேனும் பகுத்தறியற்ற காகமும் தன்னினமின்றி உண்ணாது. உடனுண்ண அடியாரிருந்தாலழையும் இல்லையேல் புண்ணியவடியாருண்ணும்பந்தி படைக்கும் பரமதொண்டர்களைத்தேடி புசிக்கச்செல்லுவோம். என்னைத்தடுக்காதே. போய்வருகிறோம்.

தொண். வ-ம். அப்படி சொல்லலாகாது சுவாமி.

வைர. வ-ம். நமக்கும் அப்படித்தான் தோற்றுகிறது. என் செய்வோம். போய்வாரோம்.

### தொண்டர் வைரவர் சொல்கேட்டு சிவனைக்கோரி துக்கித்தல்.

### விருத்தம்.

அய்யனே கைலைவாசா அன்பருக் குகந்தநேசா
மெய்யனே உம்மையன்றி மேவிட இடமுங்காணேன்

அய்யனே அடியாருண்ண அறவினைய கோருறுர்நான்
உய்யவே எனைக்காத்தேற்க உகந்தருள் புரிகுவீரே.

மெத்தபசியாகுதம்மா மெய்வருந்து தேன்செய்வேன் என்றமெட்டு

கண்ணிகள்.

என்னசெய்வேனீஸ்வரனே நாணிக்கெதிக்கேஆளா னேனே
தன்மம்துறக்தேனேபெற்ற தனையனையுந்துறந் தேனே
பண்ணியபயரில்லேலா புண்ணியம்தெரியுமென் பார்
பாவமென்னசெய்தேனோநான் பாரில்வந்துபிறந்த சிர்
பாண்டியனுமைப்பெண்ணை பரிந்துபேசவைத்த சிவமே
ஆண்டெனைக்காசினியில் ஆவியையிழப்பேன் நிசமே
வந்தவடியாருண்ணுமல் வருந்திமனம்சோரு கிறேர்
எந்தனையோரடியாரக ஏற்றுக்கொள்ளச்செய் வீரே
கார்த்திகைப்பெண்களாரை பார்த்துபதமிருத்தி வேலன்
பூர்த்தியாயமுதுண்ண கார்த்தராட்சித்த லோலன்
சீக்கிரமாய்வைரவர் நோக்கியெனைஏற்றுக் கொண்டு
ஆக்கினைசாதம்கறியை அமுதுண்ணசெய்வீ நின்று
காமனுக்குயிர்கொடுத்து கன்னிரதிமகிழ் வாசா
சோமனைதரித்தசசா தோன்றியெனைகாப்பீர் நேசா
தாமதம்செய்யாமல்நீரும் க்ஷேமமாயெனைக்காக்க வா
ராமசாமிதுதியைபாரில் நான்புகலஏற்க வா

வசனம்:—சாக்ஷாத்கார அகண்ட பரிபூரண சச்சிதானந்த சின்மயானந்த இன்பவெளியே இம்மையில் உம்மைக்கோரி அன்னதானம்செய்ய முன்வந்து இதுவரை இடையூறின்றி நடந்து இன்று எங்குமடியாரைக்காணுமல் நொந்து தேவரீர் கிருபையால் கிடைத்த அடியார் மனமகிழ உன்னருளால் கிடைத்து கொஞ்சிமகிழும் பள்ளி சிராளனை பதைக்கக்கொன்று செய்த கறியமுதை புசிக்க பரிமாறிய இலையிலுட்கார்ந்து சூரியன் உதையமாகி பத்தொன்பதுநாழிகைக்குமேலாகியும் உடனுண்ண அடியாரை அழைக்கிறூர் எங்குசெல்வேன். இத்தருணம் வைரவரோடுண்ண எனையன்றி எவரும் காணேன். எனை அவரிஷ்டப்படி உடன் வைத்துண்ண அருள்புரியவேணும் அடியாருக்கடியரான தேவா.

## வைரவரை தொண்டர் தன்னை உடன் வைத்துண்ணக் கேட்டல்.

இந்துஸ்தானி காபி.

1 தேசந்தனில்களித்து பாசமதையொழித்து
நேசமாய்வந்தயோகா எனைக்காக்க பூசனைஏற்கும்வாகா

2 கங்குல்விடியுமுன்னே தங்குமடியாரைக்கண்ணில்
எங்குங்காணாது தேடினேனே உமைக்கண்டு பொங்கிமகிழ்
கூடினேனே

3 திங்கள்சென்றாலும் உங்காமல்வந்தீரும்
மங்களமாயெனைப்பார்த்தீர் பின்னைகறிதங்காமல்தாக்காத்தீர்

4 உண்ணும்சமயமென்னை சொன்ன அடியாரைமுன்னே
இன்னேரம்எங்கழைப்பேன் திருவுளம் என்னவற்கான்
பிழைப்பேன்

5 நாணுமடியாரைப்போலே காணும்விபூதியாலே
தோணும்படி அணிந்தேன் உம்பாதமடி தாழவேயான்பணி

6 தாமதமின்றிசாமி நேமமாய்புசித்தால்நேமி [ந்தேன்
மாமறைபுகழும்பூமி அருள்பெற சாமசாமிபதமேசாமி.

வசனம்:—சுவாமி! எங்கும் அடியார்காணாமல் தேவரீரைக் கண்டு விரதமுடிக்கும் இத்தருணம் எனையன்றி வேறொருவரும் இல்லை. நானுமடியார்போல விபூதி தரித்திருக்கிறேனாதலால் என்னை உடன்வைத்து தேவரீர்கொண்ட விரதம் முடிக்கவேண்டும் சுவாமி.

வைரவர் வசனம்:—வாஸ்தவம் உம்மைப்போல் நீர் தரிக்கிறவனை நீர் உடன்வைத்து உண்ணுவீரோ. சொல்வீர் தொண்டனாரே.

அம்மணிதாயே! உம்மனது நோகும். உமது நாயகனுக்கு ஜலம்கொடுத்து நம்முடன் உண்ணச்செய்வீர் தாயே. என்செய்கிறது. காலத்தையும் கவனிக்கவேண்டுமல்லவா?

குறிப்பு:- இவ்விதம் வைரவருரைக்கக்கேட்டு அதன்படி தொண்டனாரும் வைரவரும் இலையிலுட்கார்ந்து வைரவர் மனம்கோணால் தொண்டர் சாதமும் கறியுமாகப்பிசைந்து உண்ண கையிலெடுத்த போது தொண்டர் தடுத்துரைத்தல்.

விருத்தம்.

ஆருமாதமாய் யாமமுதுண்ணு தொழித்தோம்
சோறுதினம் தின்னும் தொண்டரே யுமக்கேன்வேகம்
பாரதனில் மதலையில்லா பதியினில் நாமுமுண்ணோம்
சீருளஉன் குழந்தையை சீக்கிர மழைக்கச்செய்வாய்.

வசனம்:—பொருப்பீர் தொண்டனாரே. நாம் ஆருமாதமாய் அன்னமுண்ணாதவரிருக்கும்போது தினம் சோறுதின்னும் உமக்கேனிவ்வளவு வேகம். மூன்றிலைகள் வரிசையாய்போட்டு படைத்திருக்க நாமிரண்டுபேரும் இரண்டு இலையில் உட்கார்ந்து விட்டால் மற்றவோர் இலையிலும் உட்காரவைத்தல்லவோ உண்ணவேணும். இது உமக்குத் தெரியாதோ. எத்தவத்தை செய்தாலும் எந்த புண்ணியத்தைச்செய்தாலும் முத்தியடைவதற்கு புத்தென்னும் நரகக்கடலைத்தாண்டிப்போகவேண்டும். புத்தென்னும் நரகம்தாண்ட புத்திரபாக்கியம் வேண்டும். புத்திரனில்லார்க்குப் புண்ணிய உலகு கிட்டாது. பரமனடியார்கள் புண்ணியவான்கள் கிரகத்தில் புசிப்பார்களேயன்றி பாவிகளிடம் புசியார்கள். பூமியில் புண்ணிய பாவங்களைச்சோதிக்க புத்திரர் உடையவர்களை புண்ணியர்களென்று உண்பார்கள். அப்புத்திரரில்லார்களை பாபிகளென மதிப்பார்கள். ஆதலால் நீர் புண்ணியவானாகயிருந்தால் அவசியம் புத்திரனிருப்பான். பாவியானால் நாமுண்ணோம். உமது புத்திரனை சீக்கிரமழையும். இல்லையாகில் நமக்கு பாபம் சித்திக்கும். அழைப்பாய் தொண்டனாரே.

தொண்டனார் வசனம்:— சுவாமி! தேவரீர் அனுக்கிரகத்தால் நான் புத்திரபேற்றையடைந்த புனிதனே! தேவரீர் என் கிரகத்தில் உண்ணக்கூடும். ஆனால் எனது புத்திரன் நம்முடன் உண்ணவருவது முடியாத காரியமாகும். நாம் திருப்தியாயுண்டால் நம்முள்ளம் களிக்க நம்மைக்கூடி விளையாடுவான். இப்போதவன் வந்துதவமாட்டான் சுவாமி.

வைரவர் பிள்ளையில்லா வீட்டில் புசிக்கேனென்றெழல்.

விருத்தம்.

இல்லறம் தனைநடத்தும் இனியமக்க ளிலவரும்
பிள்ளையில்லா ரானால்பெரு நரகடைவர் தாமே

கள்ளமில்லா அன்பாலனை கணத்தினி லழைப்பீர்நீரே
இல்லையேல் நாமுண்ணேம் எழுந்துமே போவோம்பாரீர்.

இராகம் எதுகுலகாம்போதி. தாளம்-ரூபகம்.

தேடி தேடி திரிந்தேனே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பிள்ளையில்லாவீட்டில் புசிக்கோமொருநாளும்
பேதமைதனைநீக்கி நீதமதாய்கேளும்

அனுபல்லவி.

கள்ளமனத்தோடென்னை கருதிமொழியிழைத்தீர்
கண்டுதொண்டரைப்போல உண்ணென அழைத்தீர்(பிள்ளை)

சரணங்கள்.

1. பிள்ளையில்லாதாரே பெரும்பாவிஎன்பார்களே
பிழையின்றி அறமுள்ளோர் பிள்ளைகளைபெறுவார்களே
நல்லபுத்திரவானிடம் நாடியமுதுண்பார்களே
கொள்ளபுதல்வரில்லாமனையில் கூடியன்னம்புசியார்களே ()

2. செம்மைபுரிவினையே சேரும்மாணிடராய்
செய்த தானத்தின்பலன் ஜெனிக்கும்புத்திரராய்
இம்மையில்பிள்ளையது எற்றபுண்ணியம்பாராய்
இதைஎடுத்துசொன்னேன் இதோபோறேன்கேளாய் (பிள்)

3 சாத்திரமாரும்கற்று சாதுசங்கம்தனையடுத்தும்
பாத்திராபாத்திரமறிந்து பரிந்துண்ணவேதம்படித்தும்
சூத்திரமரியாமலுண்டு தொல்லுலகுவகைபிடித்தும்
காத்திருக்கமுடியாது கண்டெனைதடுக்காதடுத்தும் (பி)

வசனம்:—பிள்ளையில்லா மனையில் புசிக்கக்கூடாதென வேதம் முறையிடுகிறது பிள்ளையில்லா உம்மிடம் புசிக்கோம். இதோ போகிறோம் தடுக்காதே.

குறிப்பு:- வந்த அடியார் உண்ணாது வெளியேபோக எத்தனித்தல் புத்திரரில்லா பாவியென்ற அடியாருரைக்கக்கேட்ட தொண்டரும் மனைவியும் சிவனைநோக்கி புலம்பல்

## விருத்தம்.

மன்ன நரசிம்மராஜன் மகிழ்விடை தந்திந்நாளும்
அன்னதானமதை நாங்கள் அகலாமல் செய்துவந்தோம்
கண்ணினில் கண்டடியார் களைப்புறும் பசியைத்தீர்க்க
முன்னமே கொன்றமகனை என்னமா யிங்கழைப்பேன்.

இராகம்-ஆனந்தபைரவி. தாளம்-ரூபகம்.

ஆரென்று நீரென்னை எண்ணினீரோ அம்மா என்ற வர்ணமெட்டு.

## பல்லவி.

என்னகாலமிது இந்தகாலம்
எங்களுக்கேவந்த கோலம்

## அநுபல்லவி.

சொன்னவைரவர் சொல்படிமகனிருந்தும்
உண்ணமகனில்லா உற்றபாவிஎன்றதும் (என்னகால)

## சரணங்கள்.

1. அன்னாளேகணபதிசாதின் அருளாது இதுதானோ
மன்னன்நரசிம்மராஜன் மனமதுபொய்தானோ
கன்னல்கொண்டடியார் களைத்துபசியால்வாட
இந்திலமெங்கள் விரதம் ஈடேறாமல்துயர்கூட (என்ன)
2. அன்றுளில்நின்சன்னதி அசரீரிதந்தபிள்ளை
இன்றுளில்வந்தடியார் ஏற்கக்கொடுத்துமிசையவில்லை
பண்ணும்வேதயன்முன் பாரில்விட்டதொல்லை
உண்ணும்போதுவைரவர் உரைத்தமொழிசகிக்கவில்லை ()
3. இன்னுமென்உயிரைவைத்து இறந்தமகனையழைப்பேனோ
வன்பசியால்வைரவர் வாடிப்போகபார்ப்பேனோ
கண்மணிசிராளனந்த கர்த்தரடி அடுப்பானோ
பெண்ணே இனியென்னசெய்வேன் பெரும்பாவம்சுமப்பேனோ (என்ன)

வசனம்:—பெண்ணே நங்கை என்செய்வோம். நம்மகனைக்கொன்று கறிசமைத்தும் வந்தடியார் உண்ணுமலும் இகம் பாமுள்ளளவும் அழியாப்பழி ஏற்க அன்னாள் பிரமன் எழுதிய விதியோ! கர்த்தரின் சோதனையோ அறியோம். என்ன செய்யலாம் பெண்ணே!

## வைரவர் தொண்டரை குழந்தையை அழைக்கக்கூறல்.

### விருத்தம்.

தொண்டரே கவலைவேண்டாம் தோன்றவே யும்மகனை
உண்டிட யழைத்தோமென உறுதியாய் அழைப்பீரானால்
கண்டவும் சத்தம்கேட்டு கடுகியே வருவானிப்போ
கொண்டபெண் நங்கையுடன் கூசாமல் போயழைப்பீர்.

வசனம்:—நாம் உகைதியாயமாய் புத்திரரில்லாருக்கு மோக்ஷமில்லையென்றும், பிள்ளையில்லா வீட்டில் புசிப்பது பாபமென்றும், வேதம் உரைப்பதை உமக்கு நான்சொல்ல நீர் பெரும் வாதைப்பட்டு அந்த கணைதீசானை வருத்துகிறீர். அவிர உமக்கு ஏதோ மகனிருந்ததுபோலவும், அதை நமக்காக நம்சொல்படி அறுத்து கறிசமைத்துவிட்டதாயும், அதை நாம் உண்ணுதலைப் பற்றி பெருந்த வியாகூலமடைகிறீர்கள். நீர் உண்மையில் சிவ பக்தியுடைய தொண்டராயிருந்து நம்மை உண்மையில் மெய்யடியராய் நம்பி உண்மையில் பிள்ளையை மனம் நோகாமல் கறிசமைத்து உண்மையில் நாமுண்ண உமக்கு மனமிருக்குமானால் நாமும் உண்மையில் உம்மைத் தேடிவந்ததும் நிஜமானால் கற்புதவறா உன் பத்தினியுடன் உம்முடைய வீட்டுத்தெருவாசல் கடந்து உம்முடைய குழந்தை உமது பத்தினிவாக்கால் வாராய் சீராளா சீராளா சீராளாவென்று மூன்றுதரமழைத்தால் பள்ளியிலிருந்து வாரானோ பத்தினிவாக்குப் பலிக்காமல்போகுமா? நாம் உங்கள் பரிதாபத்தைக்கண்டு போகக்கூடவில்லை, பசியோ சகிக்கக்கூடவில்லை, நாம் கொண்டவிரதம் முடிக்க நாழிகையும் ஆகிவிட்டது சீக்கிரம் தெருவாசல் கடந்து நாம் சொல்லியபடி அழைத்தால் உங்கள் உண்மையான அறம் ஓங்கி வளர்ந்து உங்களைக் கதி சேர்க்கும் புத்திரனாய் பள்ளியிலிருந்து ஓடிவருவான் நம்வாக்கும் பொய்க்காது சீக்கிரமழையுங்கள் சிவகருணை உண்டாகும்.

தொண்டர் வசனம்:— தேவரீர் திருவாக்கை மாரி நடக்கிறோம் சுவாமி. பெண்ணே நங்கை சுவாமிகளின் திருவாக்கை கேட்டனையோ.

நங்கை வசனம்:—அப்படியே செய்வோம் எப்படியாவது உன்னைப்பெறுவதே நமதுபாக்கியமாகும்.

## தொண்டரும் மனைவியும் அடியார் சொல்படி மகனையழைத்தல்.

### விருத்தம்.

அப்பா மகனே சீராளா அருமைமணியே தவக்கனியே
செப்புமடியார் வாக்கின்படி சிறந்தே கூவியழைத்தேனுனை
தப்பது இல்லாமல்நீயும் சடுதியில்மகனே யெனைத்தேடி
ஒப்பிலியே பள்ளியிலிருந்து ஓடிநீவருவாய் பாலா.

### அரிச்சந்திர நாடக வர்ணமெட்டு.

### பல்லவி.

வா வா வா வென கூவியழைத்தேனோடிவருவாயே சுகம்தருவாயே
அருள்பெருவாயே அப்பா (வா வா வா வென)

### அனுபல்லவி.

கூ கூ வென நான் பாவியழைத்தகுரல் மேவியுந்தன்செவிக்
கேறலையோ அடியார்கூறலையோ நான்பெறலையோ மகனே (வா வா)

### சரணங்கள்.

1 பண்ணுமருமதன்ன உன்னை வைரவர்பரிந்து
அழைக்கிறார் பசியால்களைக்கிறார் உண்ணமலைக்கிறார் மகனே()
2 அஞ்சிஅறம்மிஞ்சி கொஞ்சமுனைக்கொன்று நெஞ்சு
பதைத்தேனே உண்ண சமைத்தேனே தெரிந்தழைத்தேனே மகனே
3 வந்தஅடியார் தந்த சிந்தை உண்மையானுலெந்தன்
மனமகிழ இந்தஉலகுபுகழ உனைக்கூடிநிகழ மகனே (வா)

வசனம்:—அப்பா சீராளா வாராய். மகனே சீராளா வாராய். கண்ணே சீராளா வாராய்.

## சீராளன் பள்ளியிலிருந்து தந்தை, தாய் முன்னோடி வருதல்.

### சாயங்கு சித்ராபனபீதமுயாரே என்ற இந்துஸ்தானி வர்ணமெட்டு

### பல்லவி.

வந்தேனம்மா இதோவாரேனம்மா அந்த
மாமறைமுடியோர் வதன்படி (வந்தேனம்மா)

1 சந்திர முகமும் தந்தபுன்னகையோடும்
சந்தனையழைத்துவந்த சந்திரசூடியோடும் (வந்தே)

2 பந்தவினைகளெல்லாம் சொந்துருகச்செய்தும்
சிந்தைதுயர்கொண்டு எந்தனையழைக்கவீரும் (வந்தே)

3 செந்திகண்ணனிடம்நான் சொந்தமாயிருக்கையில்
உந்தன்சூரவேல்சை சந்தடிபெருக்கையில் (வந்தே)

4 அந்தரத்தோர்யாரும் சொந்தமானதைத்தொட்டு
தந்தகொம்புடையோனையும் சரவணனையும்விட்டு (வ)

5 கற்பகக்கிழிருந்து காமதேனுவாலுண்டு
சொற்பனம்விழித்து தோற்றஉன்முன்கண்டு (வந்தே)

6 செந்தமிழ்ராமசாமி சிந்தைஉருக்கத்தாலும்
முந்ததருவனுக்கெதிர் வந்தகேசவன்போலும் (வந்)

## தொண்டர் நங்கைமுன்னே ஓடிவந்த சீராளனை நங்கை அழைத்து எடுத்துப்போற்றுதல்.

இராகம் புன்னாகவராளி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாடாயென் கண்ணின்மணியே வந்தொருமுத்தம்
தாடாயென் பொன்னின்மணியே

அனுபல்லவி.

ஏடா எங்கிருந்துவந்தாயோடா எனக்குகிடைத்ததேடா
அருமருந்தே சூடாமணிவிளக்கே (வாடா)

சரணங்கள்.

1 பெத்த வயர்குளிர்ந்துமெத்த பூரித்துடல் சித்த
மகிழவந்த குத்தம்பிலாசெழும்பாகே (வாடா)

2 குணத்தை நினைந்துனை அணைத்து மார்போடிருக்கி இணைத்து
இன்பம்பெருகி மணத்தேன்முத்தமிட்டு (வாடா)

3 பிள்ளை யில்லாபாவியென சொல்லும்வார்த்தைதனை தள்ளி
பதம்சேர்க்க பள்ளியிலிருந்துவந்தோனே (வாடா)

4 சிந்தை குளிரப்பண்ண வந்தகுலக்கொழுந்தேயுன் தந்தை
மனமகிழ இந்தாபோவாயப்பா (வாடா)

## மீண்டுவந்த சிறாளனை நங்கை கொடுக்க தொண்டர் வாங்கி உரைத்தல்.

கந்தார்த்தம்.

இராகம் மோகனம். ஆதிதாளம். சாவேரியிலும் பாடலாம்.

தேம்பாலும் பசும்பாலும் தேங்கின்றனிப்பாலும்
சேர்த்தொன்றாய் கூட்டியதில் தீம்பருப்புங்கிரவி
காம்பாலும் கனிந்தொழுமுக் கனிரசத்தைப்பிழிந்து
கற்கண்டின் பொடிமிகவே கலந்தடுப்பேற்றி
பூம்பாளின் தேன்பெய்யும் போதவே விட்டேல
பொடிதுனி பக்குவமாய் புசித்திடுந் தீஞ்சுவைக்கு
மேம்பாலாய் வந்தடியார் விருந்துண்ண வழைக்க
விந்தையாய் வந்தசிறு விளையாட்டுப்பாலா

வாராய்சிறாளக்கண்ணே - வந்தடியார்பசி
தீராய்கனிக்க வென்முன்னே

அனுபல்லவி.

பாரிலென்மனையில் பரிந்துண்ணவந்தகுருவே
பகர்ந்தபடிநானழைக்க பாலனாகவந்தவுருவே (வா)

சரணங்கள்

உன்னையமுதாக்கியடியார் உண்ணச்செய்யுமுன்னே
என்னையழைக்கச்சொல்ல எழுந்துவந்தகண்ணே
பின்னமில்லாவடியார் பெருமையுடன்சொன்ன
வண்ணமாயென்முன்றால் வந்ததிருவேயுன்னை (வா)

இல்லறம்நடத்துவோர்கள் ஏற்றபதம்பூண
இருக்கவேண்டுமக்களென இசைந்திடும்வேதங்காண
நல்லவரென்மனையில் நாடிபுசிக்கவான
நாட்டிலேநான்வாழ நலந்தருமகனாய்தோனே (வா

ஐந்துமுன்னமெட்டென அறியசாமசமியாலே சிவ
னருள்தறமுத்தமிழால் அமைத்தநம் சரிதைமேலே
செந்தமிழுலகெலாம் சிறப்படைந்ததுபோல என்
மைந்தனுன்னைக்காணநான் மகத்துவமடைந்ததாலே (வா)

வசனம்:—அப்பா அருமைக்கண்மணியே, தேடக்கிடைக்
காத செல்வமே, பசியால் உடல்மெலிந்து உயிர் மயிர்க்கூச்ச

ண்ட சம்விரதத்தை காக்கவந்த சிவஞானதேசிகன் அவனுடன் விருந்தமுது புசிக்க பரிமாரிய இலையில் உட்கார்ந்தனை எதிர் பார்த்திருக்கும் அடியாருண்ணவந்த அருமைத் தவமணியே. அப்பா வாவென் பெருமை குணக்குன்றே. அடியாருண்ண காத்திருக்கிறார். செல்வோம் சிறுவனே. நங்கைவருவாய்.

### சீராளனுடன் தொண்டரும் நங்கையும் மடத்தில் வந்துபார்க்க வைரவரைக்காணாது திகைத்தல்.

பெரிய புராணச் செய்யுள். 83-வது பாடல்

வந்தமகனை கடிதிற்கொண்டமுது செய்விப்பான் வந்தார்
முந்தவே யப்பயிரவர் முதல்வரங்கண் மறைந்தருள
சிந்தைகலங்கிக்காணாது திகைத்தார் வீழ்ந்தார் தெருமாந்தார்
வெந்தவிறைச்சியும் கறியமுதும் கலத்திற்காணார் வெருவுற்றார்.

வசனம்:—பெண்ணே! என்ன ஆச்சரியம். இவ்விடம் உண்ணவிருந்த வைரவரைக்காணோம். மடத்தில் எங்கு தேடிப் பார்த்தும் காணோம். நாம் பிள்ளைவந்த சந்தோஷத்தால் மெய் மறந்திருந்தபடியால் சென்றுவிட்டாரோ என் செய்வோம்.

நங்கை வசனம்:—சுவாமி! வந்தவரை வைரவராகக்கருத ஞாயமில்லை நம்மை சோதிக்கவந்த ஜோதி கடவுளென நினைக்கிறேன். அப்போதேயவர் பாதாரவிந்தத்தை பிடித்துக்கொள்ளாமல் விட்டுவிட்டோமே சுவாமி.

தொண்டர் வசனம்:—உண்மை அப்பா சீராளா கண்ணே. உன்னைக்கொன்று அறுத்து கறிசமைத்துவிட்டோமே நீ எங்கிருந்தாய். உனையாரழைத்தார். நீ எப்படி வந்தாய்.

சீராளன் வசனம்:—நான் பள்ளியில் தூங்கிக்கொண்டிருந்தேன். சொற்பனத்தில் கற்பகவிருக்ஷ நிழலிலிருந்து காமதேனுவாலமுர்தமுண்டு தேவாதிதேவனும் அங்குள்ள யாவராலும் பணியப்பட்ட ஓர் சீமானிடம் நான் பாதம் பணிந்துகொண்டிருக்கும்போது உங்கள் குரலோசையால் எனையழைக்க விழித்துக்கொண்டு பக்கத்திலிருந்த ஒரு வயோதிக சன்யாசி எனை விளையாட்டாக அழைத்துவந்தார். உங்களைக்கண்ட ஆசையால் ஓடிவந்தேன். பிறகவரைக்காணேன்.

தொண்டர் வசனம்:—பெண்மணே! நமக்கு தெரிசனங்கொடுத்த பெம்மான் நமக்கு முக்தியளிக்காமல் சோதித்து மோசம் செய்தாரே என் செய்வோம்.

## தொண்டர் சிவனைக்கோரி துக்கித்தல்.

### புத்திரசிகாமணியே என்ற வர்ணமெட்டு.

1. கன்னிகையே யென்செய்வேனடி என் துக்கமெல்லாம் சொருகிப்போச
 தங்கியமுதுண்ணவந்த அந்த சங்கரனை அறியாதிப்போ
2. இங்கனே தரித்தசிவன் மனம் பொங்கி அருள்கொடுக்க
 எங்கும்காணவைரவராய் நம்முன் இங்குவந்தார் விளையாடுக்க
3. தேடிக்காணவொண்ணுசிவன் நாம்காண ஆடிப்பாடி வந்தாரிங்கே
 கூடிக்கொள்ளாமலவரை நாம் வாடிப்போக மனதுசங்கே
4. நாடிஅவரருளைநாமும் உளம்கூடி பதம்சேராமலே
 ஓடிப்போகவிட்டோமே என் சேடியே நாமறியாமலே
5. மதிகெட்டு பேதைமையிந்த பொல்லா சதிக்கென்ன செய்வோமே
 விதிவந்து மறைத்ததையோ பாதகிசேரவொட்டாமே
6. பதியில்வந்த அரனேநமக்கு இரு நிதியையளிப்பார் பானே
 புதிதாயினிவருவாரோ அந்த எதியாய்வந்த வரனே
7. மலைமகள் களிக்கமணம் உருகி நிலையறிந்து வேடனுகி
 சிலைவிஜயன் அழகுகாட்டி அவன் உளமகிழ்ந்தோன் சோதாகி
8. அலைவாய் தரும்பெணவும் எரி உலைவாய் மெழுகுபோலும்
 குலைபதற தவிக்கும்நம் மாயை வலையறவருவாரோமேலும்
9. பிள்ளைக்குமாமுனிக்குகந்து பார்வதி பெண்ணுனைத் தள்ளிஅன்றுள்
 இரிபாதம் கொடுத்துசேர்த்த தேவன் சேர்ப்பானோஎனையின்றுள்
10. திருச்செங்கோட்டில் தவமிழைத்த கௌரி தேவிக்கருள்சுரந்தசோ [ளின்று
 அருணமாமசாமிபதம் கேட்டு ஆனந்தம்கொள்ள வருவாரோ இன்று

நங்கை வசனம்:—சுவாமி தேவரிப்படி கலங்கினல் நாளும் சோளனும் எப்படிப்பொறுப்போம். அடியருக்கடியரான அருளைசுரக்கும் பெருமானே நம்முன் காட்டி மறைந்து நம்மை பதைக்கச்செய்து மறைந்தால் மண்ணில் மாயாசத்தியாய் விளையாடும் அந்த உமாமகேஸ்வரி மனம் கருங்கல்லோ இரும்போ அவள் தன் நாயகரோடு மகிழ அவள் பாதாரவிந்தமேகதி

யென்று நம்பியிருக்கும் என்மனம் பதற வீற்றிருப்பாளோ அவள் தன்னாயகருடன் வந்து எனை ஆதரிக்காவிடில் என் உயிர் துறப்பேன் இது நிச்சயமே.

## நங்கை பார்வதியை தோத்தரித்தல்.

### விருத்தம்.

பாண்டியர் மகிழ்ந்துபெற்ற பார்வதி தாயேயும்மை
வேண்டியும் வரத்தைக்கொண்டு விரும்பிதம் பதத்தைச்சேர
ஆண்டிட்ட அறமேயோங்க அன்னையுமடியா ராகியென்முன்
பூண்டிட்ட வேடம்காட்டி போனுரோடு வருவீர்நீயே.

### அரிச்சந்திர நாடகத்தில் நீசில்லாக்கிணைரானேன் என்ற மெட்டு.

### கண்ணிகள்.

1. தாயேமலைமகளே உன் தாளடிபணிந்தேனம்மா
நாயானை பொருட்டாயென்னை ரட்சிக்கவேணுமம்மா
2. சம்மந்தர் குழந்தையாய் தானமுப்பால் தந்ததாயே
அம்மணி வந்தெனக்கு அருள்செய்வாய் நேரில்நீயே
3. சாவணப் பொய்கையிலே தங்கிய கருவுருவை
அருமுகமாய் பெற்ற அம்மணியென் முன்வருவாய்
4. குாவனுர்பாகம்பெற்ற கோமளியுனைத்தொழுதேன்
தருணத்திலெனை காக்க தான்வர உனைபணிந்தேன்
5. உன்னைத்தொழுவோர்க்கு உடன்பலன்கை கூடுமென்று
உன்னதவேதமெல்லாமுரைத்ததுபொய்போச்சோமின்று
6. அட்டிநீசெய்யாதே அணங்கேநீயென் முன்வருவாய்
கட்டிஉம்மோடுசேர்க்க கடாக்ஷித்தருள்புரிவாய்.

சீராளன் வசனம்:—அம்மணி தாயே எனிப்படி பமுகுரீர்கள் உண்மையான அறம் செய்து கண்ணில்கண்ட. அடியார் கருதிபடி நடந் தவர் உள்ளம் மகிழ்ந்திருந்தால் உடையவர் எங்கு செல்வார் என் வாரூர் உள்ளமகிழ உம்பர் பதமளிப்பார் பதாதேயம்மா.

### சீராளன் துதி. கருவிஞருவாகி என்ற திருப்புகழ் வர்ணமெட்டு.

பரஞ்சோதி எனதுதந்தை திருத்தொண்டரெனவிளித்து
பாரிலன்னதானம்செய்ய மகிழ்ந்தோனே

சித்தையுடனெனையறுத்து பொருத்தமாயளிக்கீரும்
வருத்தமுறவேசென் றெழுந்தோனே
தரைதனிலுனைக்கோரி நிறைதவஞ்செய்வோர்மனம்
குறைகொண்டாலுலகமது பழியாதோ
திரைதனிலேபடகிலேற்றி கரைதள்ளிநடுவிலேபோய்
உரியவனில்லாவிடி லழியாதோ
பெருமனம்கொண்டெனை உரியவனுக்கிப்பின்னும்
வருவதற்கென்னதடை சொல்வீரே
அருமறைக்கெட்டாதசிவ திருவுருவேநொடிப்பொழுதில்
கருமவினைதீர்த்துக்கொள்ள வருவீரே
சரணகமலாலயத்தே பிரியமுடனெனைச்சேர்த்து
தாணிவாச்செய்த வேத முடிவோரே
அருமையாயிப்புகழை பாவிஉலகோர்மகிழ
பெருமைராமசாமிசொல்லும் வடிவோரே.

## போது வசனம்.

இவ்விதமாய் தொண்டர், மனைவி, பாலன், சந்தனத்தாளோடு புலம்பிக்கொண்டிருக்கும்போது வைரவராகவந்த கைலாசபதி யதாஸ்தானம் செல்லல்.

## பெரிய புராணச் செய்யுள் 84-வது பாடல்.

செய்யமேனி கருங்குஞ்சி செழுங்கத்தப் பயிரவராம்
முய்யவமுது செய்யாதே யொளித்தபெங்கே யெனத்தேடி.
மையல்கொண்டு புறத்தணைய மறைந்தவர்தா மலைப்பயின்ற
தையலோடும் சாவணத்துத் தனையனோடும் தாமணைவார்.

## போது வசனம்.

மேல்சொல்லியபடி வைரவாகவந்த பரமமூர்த்தி கைலாசமடைந்தவுடன் பார்வதாதேவி நமஸ்கரித்து பரமசிவத்தைக் கேட்கிற விதங்காண்க.

செந்தமிழுலகினில் வந்திட்ட. கந்தனே என்ற வர்ணமெட்டு.

பார்வதி

செங்காட்டாங்குடி தன்னிலடியார்க்கன்னம்
செய்திட்டபரஞ்சோதியே கண்டுசோதிக்க சென்றிட்டமூலஜோதியே

சாதுதொண்டரும் மாதுநங்கையும் ஓதுபாலனும் தாதிசந்தனமும்
சகமனைத்கேட்காணுமே ஆசைகொண்டேன் தேவாநீர்சொல்லவேணுமே

பரமசிவன்

தருமத்திற்சிறந்தபாண்டி பருவதராஜன்மகளே
க்ஷேமத்தில்மேன்மைகாணுமே உலகுபுகழும் நாமத்திலவரேதானுமே
தேவிநங்கையும் காவலனுடன்பட மூவர்களையும் தேவர்கள்புகழும்
செல்வச்சிறப்புடையோர்மானே அவர்கள்கொண்ட வல்லமைக்குநீ
யென்னானே

பார்வதி

அப்படித்தாங்கள்சொல்ல எப்படிமுடிந்ததந்த
அதிசயம்சொல்லவேணுமே அங்கேநடந்த ஆச்சரியம்கேட்கத்தோணுமே
அடியாராய்த்தாமும் படியினில்போய் வடிவுடைநங்கை உடையவரிடம்செய்த
அற்புதமென்னவோதேவா அடையாமகிழ்கொள்ள கற்பித்ததென்னவோ
சர்வா

பரமசிவன்

பெண்ணே அந்தநங்கை மன்னனைப்பிரியச்செய்தவன்
கண்ணில்காணசென்றேனே அடியாராக்கூறு கலக்கமறப்போனேனே
கண்டுதாதியால் பண்டுவினைதீர உண்டுலக கொண்டுபோக
முன்னேதாதிவந்தாளே கண்டுமறுக்க கண்ணேயவளும்நொந்தாளே

பார்வதி

சின்னம்சிறுமியந்த பெண்ணாள்வெளிவரச்
எண்ணமும்கொண்டீரோ உம்முன்வர கன்னிகுறைபூண்டீரோ
எந்தனையவன் சிந்தையில்நினைத்து வெந்துமேமனம் நொந்துருகி
என்னமாய்த்துடித்தேதோ ஆவி அவள்மனம்பதறி என்னைவைதாளோகடவி

பரமசிவன்

முன்னமவனைக்கண்டேன் மன்னனின்றிதனியான்
உண்ணமாட்டேனென்றேனே அதற்கு சொன்னதென்னவென்பேனே
அரிஅயன்சிவன் ஒருவருமெனக்கு தரிசனம்தர பரிவுடன்வந்திர்
என்றுசொல்லபயந்தேன் அவன்கற்புக்கஞ்சி வென்றுமொழியயர்ந்தேன்

பார்வதி

மன்றுஅந்தப்பெண்ணாள் சொன்னதைத்தடுத்து
என்னசெய்திரோபாவம் அவள்கலங்கி கண்ணீர்சயித்தாளோகோபம்
பெண்மணிதனியே என்னையும்நொந்து முன்னில்கணவன் தன்னையும்கூடி
பின்னம்கூறினளோயென கற்புடைமைநோக என்னவாகுமோவினை

பரமசிவன்

மெத்தபயந்தநீ சித்தத்தில்ஐயம்
சற்றும்வேண்டாமாதே நங்கைமகிழ உற்றதைபுரிந்தேன்கோதே
செப்பியவேதம் கற்பித்தமொழி ஒப்பஅவனை மெய்ப்பித்தானாலும்
சென்றேனத்தியடி அவன்மகிழவுனக்கு இன்றேன்துயாத்தடி

பார்வதி

ஆத்திமறத்தடியில் வீற்றிருக்கச்சென்றீரே
அப்புரம்நடந்ததென்ன எனக்குத்தெரிய அறைகுவீரெந்தன்மன்னா
அரணடிதேடி உரமுடன்சென்ற சிறுதொண்டரவரும் திரும்பிவந்தும்மை
அழைத்துசென்றாரோவேகம் நங்கைதுயர் கொளுத்துதேஎந்தன்தேகம்

பரமசிவன் வசனம்:—ஆத்தியடி வீற்றிருந்து நம்மைக்காண வந்த சிறுத்தொண்டரை பலவிதத்தாலும் சோதித்து பிறகு அவர் பிள்ளையை மனம்நோக அறுத்து கறிசமைத்து போடச்செய்து உண்ணும்சமயம் பண்முறைசோதித்து இழந்த குழந்தையை அழைக்கச்செய்து அவர்கைக்கு கிட்டச்செய்து நாம் மறைந்து உன்னைக்காண இங்கு வந்தோம் பெண்ணே.

பார்வதி வசனம்:—சுவாமி! இப்போது அவர்கள் என்ன நிலைமையிலென்னசெய்து கொண்டிருக்கிறார்கள்.

பர. வ-ம் — அவர்கள் நம்மைக்கோரி மனம் பதைத்து புலம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

பார். வம்:—சுவாமி! அவர்களுக்கு நேரில் காட்சிகொடுத்து மகிழச்செய்து என் அவர்களை நம்பதிக்கு அழைத்துவரவில்லை.

பர. வ-ம்:— கௌரி நீ நம்மைக்கோரியபடி உன்னுடன் நமது பூதப்படைகளுடன்சென்று காட்சிகொடுத்து மகிழ உன்னை அழைத்துப்போக இங்கு வந்தோம்.

பார். வ-ம்:—சரி அப்படியே செல்வோம் சுவாமி.

பர. வ-ம்:—அப்படியே நந்தி தயாராகுக.

 

நந். வ-ம்:—அப்படியே மகாபாக்கியம் சுவாமி.

## பரமசிவன் பார்வதி சமேதராய் ரிஷபவாகனாரூடராய் தொண்டர் நங்கை சீராளன் சந்தனத்தாதி இவர்களுக்கு தெரிசனம் தரல்.

பெரிய புராணச் செய்யுள். 85-வது பாடல்.

*தனிவெள் விடைமே னெடுவிசும்பின் றலைவர் பூத கணநாதர்*
*முனிவரமரர் விஞ்ஞையர்கண் முதலாயுள்ளோர் போற்றிசைப்ப*
*இனியகறியும் திருவமுது மமைத்தார்காண வெழுந்தருளி*
*பனிவெண்டிங்கள் முடிதுலங்க பரந்தகருணை நோக்களித்தார்.*



### தொண்டர் சொல் தரு.

கோஞ்சம் சங்கடமா என்கிற வர்னமேட்டு.

பல்லவி.

மாதே கண்டாயோடி . வெண்
மாட்டின்மேல்பெரு மாட்டியும்சிவனையும் மாதே

அனுபல்லவி.

வாதேன்நமக்குபாடு மனதில்மகிழ்ச்சிநாடு
பாதிமதியணிந்தோனுடை பார்வதிதாயும்கூட (மாதே)

சரணங்கள்.

ஆனைமுகத்தோனும் ஆறுமுகத்தோனும்
அஞ்சுமுகத்தோனுடன் கொஞ்சிவிளையாடுவதும்
மானைதரித்தோன்மலை மகளின்மேல்பட்சம்
மகிழ்ந்திருப்பதும் மாய்கைஅகன்றோடுவதும்
காணும்சன்னைநாடி கறவைவந்ததுபோல்கூடி
தோணும்நம்மைத்தேடி தோன்றல்வந்தார்மதிசூடி ()

இதுவுமது

காட்சி கண்காட்சியே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

வந்தார்பார்நங்கையே மனமதிலேன்சங்கையே

அனுபல்லவி.

அந்தரத்தோர்கொண்டாட சொந்தமென்றுகரம்கூட (வந்)

சரணங்கள்.

மூவருக்கு முதல்வன் முச்சுடராயுள்ளவன்
பாவலர்கள் நாவலர்கள் பற்றிபோற்ற நல்லவன்
தேவர்கள் பணிந்தேற்ற தேரிக்கொள்ள வல்லவன்
யாவரும் புகழ்கின்ற சாதுமனத் துள்ளவன்

பாவைபார்வதிதாய் கூட அவர்
பாலிருவர்களும் நாட
தேவர்கள்களித்துகூத் தாட கின்
சித்திவித்தியாதார்பூ போட

ராமசாமி கோற
நாமுமங்கே சேற
நாடிபதமேற
நாட்டில்புகழ்கூற (வந்தார்பார்)

குறிப்பு:—இவ்விதமாக ஸ்ரீ பரமமூர்த்தி ரிஷபவாகனரூடராய் பார்வதி சமேதராய் சிறுத்தொண்டர், நங்கை, சீராளன், சந்தனத்தாள், கண்ணுக்குத்தோற்றி தரிசனந்தர பார்த்த தொண்டர், முதலானவர்கள் திடுக்கிட்டு திப்பிரமைகொண்டு ஒன்றும் தோன்றுமல் மதிமயங்கி பாசமகன்றுதேறி சிவசங்கரமூர்த்தியை தரிசித்து தோத்தரிக்கிறுர்களென்றறிக.

இராமலிங்கசுவாமி திருஅருட்பா. இராகம் சுருட்டி ரூபகதாளம்.

மாற்றறியாதசெழும்பசும்பொன்னே மாணிக்கமேசுடர்வண்ணக்கொழுங்
கூற்றறியாதபெருந்தவருள்ளம் கோவிலிருந்தகுணப்பெருக்குன்றே [தே
வேற்றறியாதசிற்றம்பலக்கனியே விச்சையில்வல்லவர்மெச்சும்விருந்தே
சாற்றறியாதவென்சாற்றுங்களித்த தனிநடராஜவென்சற்குருமணியே.

இராகம் காம்போதி. தாளம்=ரூபகம்.

பல்லவி.

பார்க்க பார்க்க இகட்டுமோவுந்தன் பாததரிசனம் (பார்க்க)

அனுபல்லவி.

யார்க்குமானந்தம் பொழியுமுந்தன்
அருட்பெருஞ்ஜோதி திருப்பெருங்கருணை (பார்க்க)

சரணங்கள்.

1 காளிக்கா இல்லையிவிடக் காலெடுத்தாடிய பாதம்
கடம்பவனத்தோர் களிக்க கால்மாறுடிய பாதம்
நாளும்புகழ செங்காட்டாங்குடி நான்தெரிசித்த பாதம்
நாரணனயன் முதலோர் தேடிக்கிட்டா பாதம் (பார்க்க)

2 ராவணன் மமதைகெட நாடியமுந்திய பாதம்
நாராயணியணைக்க தேகம் குளிர்ந்த பாதம்
தேவர்களிடுக்கங்கொள்ள தவம் தேடிசென்றிட்ட பாதம்
செங்காட்டாங்குடி வந்தெனக்கு தெரிசனந்தந்த பாதம் ()

3 மார்க்கண்டரை காத்திட மறலியையுதைத்த பாதம்
மாமனைகொண்டாட பிருங்கு மாமுனிக்குகந்த பாதம்
சேர்த்து யெங்களைக்காக்க செங்காட்டாங்குடி வந்த பாதம்
சிலன்ராமசாமிமன சிந்தை குளிரப்பாடும் பாதம் (பார்க்க)

இதுவுமது வேறு வர்ணமெட்டு.

பல்லவி.

பாதெதெரிசனமே பாபவிமோசனமே

அனுபல்லவி

சாதக ராமசாமி சாற்றுமிந்த வாசகமே (பாதெதரிச)

சரணங்கள்

1 எத்தனைவிதமாகநீர் என்தனை சோதித்தீரோ
அத்தனையும்பார்த்துமகிழ் முத்திதரவந்தீரோ (பாதரி)

2 மண்ணிலடியாரைப்போல கண்ணின்முன்னே நின்றீரே
எண்ணிபதம்சேர்க்கயென் கண்மணியை அழைத்தீரே (பா)

3 பாலனோடுநங்கைநாளும் பரிந்துவரக்காணுமே
சீலனேயும்மகிமை தெரிந்தால்நாங்கள்போகோமே()

4 இப்போதுமைநாங்கள்காண ஏங்கிமனம்நோணுமே
தப்பாதும்திருவடியை தந்தருளவேணுமே (பாததரிச)

5 நேமமாயும்மைவிட்டு நாமிருக்கமாட்டோமே
ராமசாமிபதம்பாடி க்ஷேமத்தைக்கேட்டோமே ()

## தாயுமானசுவாமி பராபரக்கண்ணி.

1 சீராரும்தெய்வ திருவருளாம் பூமிமுதல்
யாராதியாண்டபதியே பராபரமே

2 எண்ணாதவெண்ணமெல்லாம்எண்ணிஎண்ணிஏழைநெஞ்சம்
புண்ணாக செய்ததினி போதும் பராபரமே

3 ஓயாதவென்கவலை உள்ளேயானந்தவெள்ளம்
பாயாதோ வையாபதியே பராபரமே

4 பாராயோவென்னைமுகம் பார்த்தொருக்காலென்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.

## விருத்தம்.

ஒருமையுட நாங்கள்நின் திருமலரடிக்கீழ்
உகந்திருந்தும் பணியேற்க உதவவே வேண்டும்
உலகத்திலென் னன்னதானம் உருதியாய் செய்வோர்
உம்பர்பதம் தானேகி உற்றிருக்க வேண்டும்
பெருமைமிகு அறமது புரிவோரை மதமான
பேய்பிடித் தாட்டி பிதற்றாமை வேண்டும்
பொல்லாத நரகத்திற் போய்ச்சேரும் கள்குடி
போதையர்கள் நேசமது பொருந்தாமை வேண்டும்
தருமமிகுங் காஞ்சி நரசிம்மவர்மன் நின்னடி
தான்சேர கடாக்ஷம் தந்தருள வேண்டும்
சாதுக்கள் தான்மகிழ அமுதூட்டி இல்லறத்தார்
தானுண்டு பதமேற தயைபுரிய வேண்டும்
அருமறை ஆகமமும் அறியாத நின்புகழை
ஆசையுடன் ராமசாமி அறைந்ததை யேற்கவேண்டும்
அவனியிலுனை துதிப்போர் அடைவினைகள் தீர்ந்து
அஷ்டலட்சுமிகளு மகலாது வாழ அருள்செய்வீரே

வசனம்:—அருட்பெருஞ்ஜோதியண்ணலே! இனி சோதிக்கத் தாளோம் ஆட்கொள்ளவேணும் சுவாமி.

பொதுவிருத்தம். பெரியபுராணம் 86-வது செய்யுள்.

அன்பின்வென்ற தொண்டரவர்க்கமைந்த மனைவியார் மைந்தர்
முன்புதோன்றும் பெருவாழ்வை முழுதுங்கண்டு பரவசமாய்
யென்புமனமுங் கரைந்துருக விழுந்தாரெழுந்தா ரேற்றினார்
பின்புபரமர் தகுதியினாற் பெரியோரவருக் கருள்புரிவார்.

## ஸ்ரீ கைலாயபதி அபயமீதல்.

விருத்தம்.

தொண்டரே அஞ்சவேண்டாம் தோன்றவே கைலைதந்தோம்
எண்டிசை யுலகம்போற்ற ஏற்றிட்டோம் நம்மோடேக
அண்டிய நங்கைமாதும் அருமைசீராளன் சந்தனத்தாளையுமான்
கொண்டிட இங்குவந்தோம் குவலயம் புகழத்தானே.

வசனம்:—தொண்டனே! நீரும் உமதுபத்தினியும் பாலன் சீராளனும் தாதிசந்தனத்தாளும் நீங்கள் ஒற்றுமையாய் இல்லறத்தில் வல்லறம் காட்டியதால் நாமும் தேவர்களும்மெச்சி இந்த பூமி உள்ளளவும் உங்கள் கீர்த்தி பிரதாபம்ஓங்க உங்களால்செய்த அன்னதானத்தை அவரவர்கள் சக்திக்குத்தக்கபடி இன்றைய நாளை கணக்கிட்டு வருஷம்தோறும் வழங்கிவரவும் அவர்களுக்கு நம் அனுக்கிரகம் வந்துகூடுமென்றும் நீங்கள் என்றும் சிரஞ்சீவியாய் கைலாயத்தில் சதா நம் தரிசனம்பெற்றுய்ய அருள் தந்தோம்

தொண்டர் வசனம்:—சுவாமி! கிருதார்த்தரானோம். ஆனாலோர் சங்கை காஞ்சியையாளும் நரசிம்மவர்ம மகாராஜன் தர்மத்துக்கு அனுக்கிரகம் செய்யவேணும் தேவா.

பரமசிவன் வசனம்:—நாம் நீர்சொன்ன பக்தனை என்றும் மறவோம் இன்றைய இருபத்தியோராம்நாள் அவருக்கு முக்தியளிப்போம். கவலைவேண்டாம்.

தொண்டர் வசனம்:—சந்தோஷம் கதியடைந்தோம். ஸ்ரீ பார்வதிபதயே. அரகர மகாதேவா.

பொதுவிருத்தம். பெரியபுராணம் 87-வது செய்யுள்

கொன்றைவேணியார் தாமும் பாகங்கொண்ட குலக்கொடியும்
வென்றிநெடுவேல் மைந்தரும் விரைப்பூங்கமல சேவடிக்கீழ்
நின்றதொண்டர் மனைவியார் நீடுமகனார் தாதியார
சென்றும்பிரியாதே இறைஞ்சியிருக்க கொண்டேகினாரே.

வாழி விருத்தம்.

அரியலூர் விஜய ஒப்பிலா மழவராயர் வாழி
அரசு நிலையிட்ட விக்கினேஸ்வரரும் வாழி
ஆலந்துறையார் அருந்தவநாயகி அசுரரைவென்ற
சேனைகோன் வள்ளி தெய்வானை வாழி
கோரிய வரமீயும் கோதண்டராமரும் மற்ற
குலதேவதை ஒப்பிலா தாயும் வாழி
கொண்ட சிறுத்தொண்டரும் குலமங்கைநங்கையும்
குற்றமிலாச் சீராளன் சந்தனத்தாள் வாழி
கோரியிதைப் படிப்போர் கேட்போர் குறித்தபடி
குவலயத்தில் நாடகமா யாடுவோர் வாழி
கொன்றுமறை யாகமம் கொண்டமுறை நடந்துய்ய
குறைவிலா மாரிபெய்து கொழுத்துலகம் வாழி
பாரினில் புராணப்படி பாடக்கேட்டு மகிழ்ந்த
பக்தன் முத்துக்கண்ணு வாத்தியார் வாழி
பலநூலாராட்சியுடன் சிவபதம்போற்றி பணிந்து
பக்தியோடு ராமசாமி சொன்ன பாடலும் வாழிமாதோ.

நூற்பயன்.

விருத்தம்.

ஞானநாயகன் கதையை நாடக இசைமேலோங்க
கானப்படித்தோர் கேட்டோர் கவியில் நாடகமாயாடினோர்
தானத்தில் உலகிலுள்ள சகலபாக்கியமும் பெற்றுபின்
வானநாட்டரசனாக வாழ்வதை பெறுவர்தாமே.

மங்கள விருத்தம்.

மூவருக்கும் தேவியர்க்கும் தேவரோடு
முனிவருக்கும் முன்னிதைச் சொன்ன
நாவலர்க்கும் நற்புகழ் சேக்கிழாரக்கும்
நல்லாசான் தஞ்சை சீனிவாசம்பிள்ளைக்கும்

ஆவலர்க்கும் அறிகவிஞர் அடியாருக்கும்
ஆசையுடன் நாடகமாய் பாடுவோர்க்கும்
நாவதனால் படிப்போர் கேட்போர்க்கும்
நற்றமிழ் ராமசாமிக்கும் மங்களமே.

இராகம்-சுருட்டி. ஆதிதாளம்.

பல்லவி.

மங்களம் மங்களமே ஜெய மங்களம் மங்களமே.

அனுபல்லவி.

திங்களைத்தரித்தசிவ செல்வகுமாரனுக்கும்
மங்கைவல்லபைஎன் மாதா அவர்களுக்கும் (மங்க

சரணங்கள்.

சரவணர்க்கும்வள்ளி தாய்தேவகுஞ்சரிக்கும்
மறைகளுரைத் தயனுக்கும் மலராசனிவாணிக்கும்
தரைதனையளந்தோனுக்கும் சாரும் அஷ்டலட்சுமிக்கும்
பிறைகங்கைதரித்தோனுக்கும் பெண்ணாள் பார்வதி தாயுக்கும்
(மங்களம்)

நங்கைவெண்காட்டம்மைக்கும் நாயகன்பரஞ்சோதிக்கும்
திங்களைத்தரித்தோனுண்ட செல்வகுமாரனுக்கும்
பங்கமில்லாதலைக்கறி பண்ணியசந்தனத்தாளுக்கும்
சங்கரனடியார்க்கும் தானவர்வானவர்க்கும்
(மங்களம்)

பெரியபுராணம்சொன்ன பெருமைசேக்கிழார்க்கும்
அரியதமிழ்வரலாறு அமைந்தசிவிவாசனுக்கும்
உரியறம்செய்ய உறைத்த நரசிம்மனுக்கும்
தெரிந்திசைபாடிய சீலன்ராமசாமிக்கும்
(மங்களம்)

பிரியமுடனிதை படிப்போர்க்கும் பிறர்சொல்ல கேட்போர்க்கும்
தண்ணிதனி [illegible]னம் சந்தோஷமாய்ப் படைப்போர்க்கும்
சிறுத்தொண்டர்நாடகத்தை ஜெகம்தனிலாடுவோர்க்கும்
உரையுடன்வேதபுராணம் உரைக்கும்மாதவர்க்கும்
(மங்களம்)

சுபம். சுபம். சுபம்.

சிறுத்தொண்ட நாயனார் நாடகம்
முற்றுப்பெற்றது

ஆரியன் பிரஸ், கும்பகோணம், 4—27. 179.

7680